NATIONAL CHRISTIAN EVANGELICAL ALLIANCE
SRI LANKA



# இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலை

## ஆண்டறிக்கை 2024

# இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலை

## ஆண்டறிக்கை 2024

இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம்

2025

இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலை | ஆண்டறிக்கை அறிக்கை 2024

© 2025 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் (NCEASL)

URL: www.nceasl.org

All rights reserved.

இந்த வெளியீட்டின் பதிப்புரிமை இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்திற்கே (NCEASL) சொந்தமானது, இந்த அறிக்கைக்கான முழு அறிவுசார் சொத்துரிமை மற்றும் விநியோக உரிமைகளையும் அது தக்க வைத்துக் கொண்டுள்ளது.

இந்த ஆய்வை ஜோவிதா அருளானந்தம் மற்றும் யனித்ரா குமரகுரு எழுதியுள்ளனர். அம்மாரா நிலாப்தீன் ஆய்வின் ஊடாக பங்களித்தார்.

NATIONAL CHRISTIAN EVANGELICAL ALLIANCE SRI LANKA

## ஒப்புதல்

தேவாலயத்தை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி நிலையம் (Centre for Church-Based Development) மற்றும் ஃபிரடெரிக்ஸ்பெர்க் இன்டிகிரேஷன்ஸ் ஃபோரெனிங் (Frederiksberg Integrations Forening) ஆகியவற்றின் தாராளமான ஆதரவு மற்றும் பங்களிப்பின் மூலம் இந்த அறிக்கையின் ஆய்வு மற்றும் வெளியீடு சாத்தியமானது.

இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலை

# பொருளடக்கம்


அறிமுகம் 01

கண்ணோட்டம் 07

ஆராய்ச்சி முறை 11

01

## சட்டம் மற்றும் கொள்கை

மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரத்திற்கான முக்கிய உள்ளூர் மற்றும் சர்வதேசப் பாதுகாப்புகள் 18

FoRBயும் பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கிற்கு எதிரான அச்சுறுத்தல்களும் 21

FoRB மற்றும் கருத்தை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் (FoE) 28

FoRB ஐப் பாதிக்கும் ஏனைய சட்டங்கள்/ கொள்கைகள் 34

பாலினமும் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரமும் 43

மதிப்பெண் மற்றும் ராக் (RAG) கணிப்பீடு 47

02

## சமூக - அரசியல் மற்றும் நிர்வாகம்

சமய மரபுகளைப் பாதுகாத்தல் 52

பாரம்பரியம் தொடர்பான சவால்களில் மத சுதந்திரம் (FoRB) 55

பௌத்தமும் சட்டம் ஒழுங்கும் 60

பிராந்திய பெரும்பான்மைவாதம், சட்ட அமலாக்கம் மற்றும் FoRB 63

கடும்போக்குவாத அரசியல் - மத அமைப்புகள் 69

இஸ்லாமோபோபியா மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான மனப்பான்மை 72

மதப் பசப்புரையும் சின்னங்களும் 75

மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரத்தை ஊக்குவிப்பதற்கான அரசாங்கத்தின் தலையீடுகள் 78

மதிப்பெண் மற்றும் RAG கணிப்பீடு 84

# 03

## சமூகம் மற்றும் கலாசாரம்


பிராந்திய பெரும்பான்மைவாதம், வகுப்புவாத உறவுகள் மற்றும் FoRB 93

பிரச்சனைக்குரிய வழியில் மதத்தைப் பரப்புதல் 93

சமூகங்களுக்கு உள்ளேயும் அவற்றுக்கு இடையேயுமான மதப் போக்குகள் மற்றும் மோதல்கள் 95

வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளாமை 103

தங்களைத் தாங்களே மத ஆசிரியர்கள் மற்றும் போதகர்கள் என்று அழைப்பவர்கள் 104

இன - மத சகவாழ்வு மற்றும் ஒத்துழைப்பு 106

மதிப்பெண் மற்றும் RAG கணிப்பீடு 109


# 04

## பொது மக்களும் ஊடக உணர்வும்


இன மத சமூகங்கள் மற்றும் நம்பிக்கை மற்றும் மத சுதந்திரத்தை (FoRB) பாதிக்கும் வெறுப்புப் பேச்சு 117

இஸ்லாமிய வெறுப்பு மற்றும் முஸ்லிம் எதிர்ப்பு உள்ளடக்கங்கள் 119

கிறிஸ்தவ எதிர்ப்புக் கதைகள் 122

இந்து - பௌத்த பாரம்பரியம் தொடர்பான மோதல் 125

புதிய பௌத்த ஆசிரியர்களும் பௌத்தத்தின் திரிபும் 126

அரசியல் மற்றும் தேர்தல் பசப்புரை 127

ஊடகங்களில் இன - மதக் குழுக்களின் பிரதிநிதித்துவமும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளும் 131

மதிப்பெண் மற்றும் RAG கணிப்பீடு 137

## முக்கிய பரிந்துரைகள் 139

## பின்னிணைப்பு 1 145

# அறிமுகம்

இலங்கை பல்வேறு இன, மத மற்றும் மொழியியல் குழுக்களின் தாயகமாகும். பௌத்தம், இஸ்லாம், இந்து மற்றும் கிறிஸ்தவம் ஆகியவை உத்தியோகப்பூர்வ மதங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.[1] அரசியலமைப்பு பௌத்த மதத்திற்கு "முதன்மையான இடத்தை" வழங்கி, அதைப் பாதுகாக்கும் பொறுப்பை அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளது.[2] பௌத்த மதத்திற்கு முக்கிய இடம் வழங்கப்பட்டாலும், இலங்கை பல வழிகளில் அதன் இன, மத[3] சிறுபான்மையினருக்கு இடமளித்து வருகின்றது.

முக்கிய இந்து, இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ பண்டிகைகளுக்கான பொது விடுமுறைகள், நம்பிக்கை சார்ந்த தனியார் பாடசாலைகளின் சுதந்திரமான செயல்பாடு மற்றும் மத ஆடையில் தற்போது எந்த சட்ட வரம்புகளும் இல்லாதது அனைவரையும் உள்ளடக்கிய சூழலைக் குறிக்கின்றது. அரசாங்கம் ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட மதத்திற்கும் தனித்தனி திணைக்களங்களைப் பராமரிக்கின்றது, முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் 1950களில் இருந்து செயல்படுகின்றது.[4] முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தைத் சீர்திருத்துவதில் தாமதம் ஏற்படுவது குறித்து கவலைகள் இருந்தாலும், முஸ்லிம்கள், கண்டிச் சிங்களவர்கள்[5] மற்றும் வடக்கு தமிழர்களுக்கான பாரம்பரியச் சட்டங்கள் இருப்பது கலாசார ரீதியாக உள்ளடக்கிய சட்ட அமைப்புக்கான சாத்தியக்கூறுகளைக் காட்டுகின்றது.

| மதக் குழு | விகிதம் | விபரம் | புவியியல் பகுதி (மாகாணம்) |
|---|---|---|---|
| பௌத்தர்கள் | 70.2% | அநேகமாக அனைத்து பௌத்தர்களும் சிங்களவர்களாக உள்ளதுடன் தேரவாத பௌத்தத்தைப் பின்பற்றுகின்றார்கள். | மத்திய, வட - மத்திய, வடமேற்கு, சப்ரகமுவ, தெற்கு, ஊவா மற்றும் மேற்கு மாகாணங்களில் பெரும்பான்மையான பௌத்தர்கள் வாழ்கின்றனர். |
| இந்துக்கள் | 12.6% | இந்துக்கள் என்பவர்கள் "இலங்கைத் தமிழர்கள்" [பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவிலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் பேசும் குழுக்களின் சந்ததியினர்] அல்லது "மலையகத் தமிழர்கள்" [சமீபத்திய இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழர்கள்]. | "இலங்கைத் தமிழர்கள்" பெரும்பாலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்றனர், அதே நேரம் "மலையகத் தமிழர்கள்" மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் வாழ்கின்றனர். |

1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
மக்கள் தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு - 2012, (தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்), 2012 https://www.statistics.gov.lk/pophousat/cph2012visualization/htdocs/index.php?usecase=indicator&action=Data&indId=10

2 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978, உறுப்புரை 9

3 இந்த அறிக்கை 'மத' சமூகங்களுக்குப் பதிலாக 'இன மத' சமூகங்களில் கவனம் செலுத்துகின்றது. இலங்கையில் உள்ள மத சமூகங்களிடையே பகிரப்படும் வேறுபாடுகளைக் குறிக்க இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகின்றது மற்றும் இது குறித்து இலங்கையில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறையின் போக்கு பகுப்பாய்வு அறிக்கையில் கூடுதலாக விவாதிக்கப்பட்டுள்ளது (இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசே'க் கூட்டணி ரூ வெரிட்டே ரிசேர்ச், அக்டோபர், 2023) https://minormatters.org/wp-content/uploads/2024/08/Trend-Analysis-of-Violence-Against-Christians-in-Sri-Lanka-November-2022-October-2023.pdf, 35

4 கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம், "எங்களைப் பற்றி", (கொழும்பு, கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் 2020) https://www.christian.gov.lk/aboutus.php ; சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு, இந்து சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம், செயல்திறன் மற்றும் முன்னேற்ற அறிக்கை, 2015, (கொழும்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு, 2015), https://www.parliament.lk/uploads/documents/paperspresented/performance-report-department-of-hindu-religious-2015.pdf,4; முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், "வரலாறு", (கொழும்பு, முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், 2015), https://muslimaffairs.gov.lk/history/

5 ப்ரிட்டிஷ் காலனித்துவத்திற்கு முன்னர் இலங்கையில் இருந்த கடைசி சுதந்திர இராச்சியமான கண்டி இராச்சியத்துடன் தொடர்புடைய வம்சாவளியைக் கொண்ட சிங்களவர்கள், மத்திய மாகாணத்தில் வாழ்கின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| முஸ்லிம்கள் | 9.7% | முஸ்லிம்கள் ஒரு தனி இன - மதக் குழுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலானவர்கள் மூர் அல்லது மலாயர். பெரும்பான்மையானவர்கள் சுன்னி இஸ்லாத்தைப் பின்பற்றுகின்றார்கள். | பெரும்பான்மையான முஸ்லிம்கள் கிழக்கில் வாழ்கின்றனர். ஆனாலும் மத்திய, வட மத்திய, வடமேற்கு, சப்ரகமுவ, ஊவா மற்றும் மேற்கு மாகாணங்களிலும் குறிப்பிடத்தக்க இருப்பைக் கொண்டுள்ளனர். |
| கிறிஸ்தவர்கள் | 7.4% | முதன்மையாக சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் பறங்கியர்களை [ஒல்லாந்து அல்லது போர்த்துக்கேய வழித்தோன்றல்கள்] உள்ளடக்கியது.<br><br>பெரும்பாலானோர் ரோமன் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றுகின்றார்கள். ஏனையவர்கள் அங்கிலிக்கன் மற்றும் மெதடிசம் போன்ற பிரதான புராட்டஸ்டன்ட் குழுக்களைச் சேர்ந்தவர்கள்.<br><br>சமீப ஆண்டுகளில் சுவிசேஷ மற்றும் சுயாதீன குழுக்களில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இருப்பினும் எண்ணிக்கை தெரியவில்லை. | கிறிஸ்தவர்கள் நாடு முழுவதும் பரவலாகக் காணப்படுகின்றனர். ஆனாலும் கிழக்கு, வடக்கு, வட மேற்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் அதிக அளவில் உள்ளனர். |

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2012 மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் சர்வதேச மத சுதந்திரம்: இலங்கை குறித்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் 2022 அறிக்கை ஆகியவற்றில் வெளியான தரவுகளை அடிப்படையாகக் கொண்டது

மிக முக்கியமாக அனைத்து இன மதக் குழுக்களின் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தை (FoRB) பாதுகாப்பதற்கான குறிப்பிடத்தக்க அரசியலமைப்பு மற்றும் சட்டக் கட்டமைப்பை இலங்கை கொண்டுள்ளது. "ஒரு மதத்தைக் கொண்டிருக்க அல்லது ஏற்றுக் கொள்ள" உள்ள சுதந்திரமும் "வழிபாடு, அனுசரிப்பு, நடைமுறை மற்றும் கற்பித்தல்" மூலம் மதத்தை வெளிப்படுத்தும் சுதந்திரமும் இதில் அடங்கும்.[6] இதற்கு மேலதிகமாக, சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (ICCPR)[7] போன்ற சர்வதேச ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்ட நாடாக, FoRB இற்கான இலங்கையின் அர்ப்பணிப்பு வலுப்படுத்தப்படுகின்றது.

எனினும், பல நாடுகளில் உத்தியோகப்பூர்வ அல்லது விருப்பத்திற்குரிய[8] மதம் இருப்பது போல அரசாங்கத்திற்கு ஒரு மதத்துடன் நெருங்கிய தொடர்பு இருக்கும்போது தவிர்க்க முடியாமல் அதற்கு சிறப்பு அந்தஸ்து ஏற்படுகின்றது. இது ஏனைய மதங்களை இரண்டாம் நிலை

6 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978, உறுப்புரை 10 ரூ 14

7 சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை பிரிவு. 18(1), டிசம்பர் 19, 1966, அன்று கைச்சாத்திடுவதற்காக தொடங்கப்பட்டது 999 U.N.T.S. 171, 6 I.L.M. 30 (மார்ச் 23, 1976 அன்று நடைமுறைக்கு வந்தது)

8 பியூ ஆராய்ச்சி நிலையம், பல நாடுகள் உத்தியோகபூர்வமாகவோ உத்தியோகப்பூர்வமற்றதாகவோ குறிப்பிட்ட மதங்களுக்கு பக்கச்சார்பாக செயற்படுகின்றன, (பியூ ஆராய்ச்சி நிலையம், 2017) https://www.pewresearch.org/religion/2017/10/03/many-countries-favor-specific-religions-officially-or-unofficially/

அந்தஸ்துக்குத் தள்ளுகின்றது. குறியீட்டு மற்றும் ஒப்பீட்டளவில் தீங்கற்ற மட்டத்தில், இது அரச அடையாளங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் பௌத்தத்திற்கு மரியாதை செலுத்துவதற்கும், பௌத்த விடுமுறை நாட்கள் மற்றும் கலாசார நிகழ்வுகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கும் வழிவகுத்துள்ளது. இருப்பினும், பௌத்தத்திற்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து குறியீட்டுக்கு அப்பாற்பட்டது. அரசியலமைப்பில் பௌத்தத்தின் மேலாதிக்கம் மற்றும் பெரும்பான்மை பௌத்த சமூகத்தின் நலன்களுக்கு மதிப்பளித்தல் ஆகியவை சட்டக் கட்டமைப்பிலும் அரசியல், வகுப்புவாத மற்றும் தனியார் துறைகளின் சிந்தனையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இது பெரும்பாலும் பிற இன மதக் குழுக்களின் அந்தஸ்தையும், FoRB இற்கான அவர்களின் உரிமையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தியுள்ளது.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதிலிருந்து, தங்களை வெளிப்படையாகப் பௌத்தர்கள் என்று அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் மட்டுமே ஜனாதிபதி மற்றும் பிரதமர்[9] பதவிகளை வகிக்க வேண்டும் என்ற எழுதப்படாத விதி உள்ளது. அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்தில், நாட்டின் சிங்கள - பௌத்த அடையாளத்தை வெவ்வேறு அளவுகளில் ஆதரித்துள்ளனர். எனினும், 2024 இல் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தேர்ந்தெடுக்கப்பட்டமையும் புதிய பாராளுமன்றமும் இந்தப் போக்கில் ஒரு மாற்றத்தை சமிக்ஞை செய்கின்றன.

இராணுவ அதிகாரியாக இருந்து பின்னர் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ பொருளாதாரத்தை தவறாக நிர்வகித்ததற்காக, 'அரகலய'[10] என்று அழைக்கப்படும் வெகுஜன போராட்டங்களால் ஜூலை 2022 இல் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிறகு, 2024 ஆம் ஆண்டு முதன்முதலில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. பிரதமராகப் பணியாற்றிய அவரது சகோதரர் மஹிந்த ராஜபகஷவும் பதவி விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர்கள் வெளியேறியதைத் தொடர்ந்து, ஆறு முறை பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தின் பதவிக் காலம் முடிந்து 2024[11] ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறும் வரை ஜனாதிபதியாகப் பணியாற்றுவதற்காக சக பாராளுமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ராஜபக்ஷ சகோதரர்கள் 2005 - 2015 மற்றும் 2019 - 2022 இற்கு இடைப்பட்ட காலங்களில் ஜனாதிபதிகளாகக் கடமையாற்றியதுடன், பௌத்தர்களின் அச்சங்கள் மற்றும் கவலைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் ஆதரவைப் பெற்றனர். அரசியல் ஆதாயத்திற்காக[12] முஸ்லிம், இந்து மற்றும் கிறிஸ்தவ மக்களின் பிரிவுகளைப் பழிவாங்கும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த அவர்கள் தங்கள் அரசியல் மற்றும் இராணுவ தளங்களைப் பயன்படுத்தினர். 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் முஸ்லிம் எதிர்ப்பு பழிவாங்கல்களைத் தொடர்ந்து

9 "இலங்கை: புதிய சாசனத்தில் பௌத்த மதம் தொடர்ந்தும் உன்னதமான நிலையில் இருக்கும்", அல்ஜசீரா, ஜூலை, 12 2017, https://www.aljazeera.com/news/2017/7/12/sri-lanka-buddhism-to-remain-paramount-in-new-charter

10 'போராட்டம்' என்பதற்கான சிங்களச் சொல். 2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கும் அதன் பொருளாதாரக் கையாள்கைக்கும் எதிரான தொடர்ச்சியான வெகுஜனப் போராட்டங்கள்.

11 மீரா ஸ்ரீனிவாசன், "கோட்டாபய ராஜபகஷ ராஜினாமா செய்தார், ரணில் விக்ரமசிங்க இலங்கையின் தற்காலிக ஜனாதிபதியாகப் பதவியேற்றார்", தி இந்து, ஜூலை, 15 2022. ,https://www.thehindu.com/news/international/sri-lanka-crisis-president-gotabaya-rajapaksas-resignation-confirmed/article65642804.ece ;ஆயிஷியா பெரேரா ரூ சைமன் ஃப்ரேசர், "இலங்கை நெருக்கடி: கோட்டாபய ராஜபகஷ மூத்த அரசியல்வாதியைப் பிரதமராக நியமித்தார்", பிபிசி செய்திகள், மே, 13, 2022. https://www.bbc.com/news/world-asia-61417972

12 சுஹைர், ஆயிஷா, போருக்குப் பிந்தைய இலங்கையில் சிங்கள - பௌத்த இன - தேசியவாதத்தின் இயக்கவியல், (மாற்று கொள்கைகளுக்கான நிலையம், 2016), https://www.cpalanka.org/wp-content/uploads/2016/04/Dynamics-of-Sinhala-Buddhist-Ethno-Nationalism-in-Post-War-Sri-Lanka.pdf> 20-28

தேர்ந்தெடுக்கப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ, தேசிய பாதுகாப்பில்[13] வலுவான தலைமையை வழங்குவதை தனது பிரச்சாரத்தின் அடிப்படையாகக் கொண்டார். இலங்கையில் 250க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட ஒருங்கிணைந்த தற்கொலை குண்டுவெடிப்புகள் ஒரு தீவிரவாத முஸ்லிம் குழுவுடன் தொடர்புடையவை என்றும் அதில் உள்ளூர் அரசியல் சக்திகளுக்கு[14] தொடர்பு இருப்பதாகவும் பரவலாக நம்பப்படுகின்றது.

ராஜபக்ஷ நிர்வாகத்தின் போது தீவிரவாத பௌத்தம் தலைதூக்கியது. பொது பல சேனா (பௌத்த சக்தியின் இராணுவம் - BBS) போன்ற தீவிரவாத பௌத்த அமைப்புகள் முஸ்லிம்களுக்கும், ஓரளவுக்கு கிறிஸ்தவர்களுக்கும் எதிராக கும்பல்களையும் கலவரங்களையும் வழிநடத்துவதில் முக்கிய பங்கு வகித்தன. கோட்டாபய ராஜபஷ இந்தக் குழுவை மீண்டும் மீண்டும் ஆதரிப்பதாகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் சிறுபான்மையினரின்[15] பாரம்பரியச் சட்டங்கள் அனைத்தையும் ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட சட்டத் சீர்திருத்தங்களுக்கான ஜனாதிபதி செயலணிக்குத் தலைமை தாங்க இதன் தலைவரை நியமித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கில் ராஜபக்ஷக்கள் தொல்பொருள் திணைக்களம், பௌத்த மதகுருமார்கள் மற்றும் இராணுவத்தினரை இணைத்து திட்டங்களை வழிநடத்தினர். இந்தப் பகுதிகளில் இந்துக்களின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பௌத்த தளங்களாகக் குறிப்பிட்டு வழிபாட்டுக்கான அணுகலைக் கட்டுப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

ஊழல் எதிர்ப்பு மற்றும் வறுமை எதிர்ப்பு தளத்தில் பிரச்சாரம் செய்த திசாநாயக்க ஒரு தீவிர இடதுசாரி. பௌத்தத்தின் மீதான வழக்கமான அதிகப்படியான கவனத்தைக் கைவிட்டு, அதற்கு பதிலாக அரசியலில் இருந்து மதத்தை விலக்கி வைக்க வேண்டும் என்று வாதிட்டார். பௌத்த மதத்தை ஆதரிக்காத அவரது நிலைப்பாட்டிற்காக சில விமர்சனங்கள் இருந்தபோதிலும், அவர் செப்டெம்பரில் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பழைய அரசியல் தலைவர்களால் சோர்வடைந்த வாக்காளர்கள், ராஜபகஷ குடும்பத்துடன் நெருக்கமாகத் தொடர்புடைய ஊழல் மற்றும் குடும்ப ஆட்சிக்கு எதிரான அவரது நிலைப்பாட்டால் ஈர்க்கப்பட்டனர். மேலதிகமாக[16], செல்வாக்கிழந்த ராஜபக்ஷக்களுடன் தொடர்புடைய மற்றொரு அரசியல் உத்தியான பிளவுபடுத்தும் மதச் சொல்லாட்சி அதன் கவர்ச்சியை இழந்துவிட்டது. "இனவெறிக்கு இடமளிக்கக்கூடாது" என்ற திசாநாயக்கவின் முடிவை மேலும் கவர்ச்சிகரமானதாக[17] மாற்றியது.

இன மத சமூகங்கள், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர்கள் திசாநாயக்கவை ஆதரிக்கத் தயங்கினர். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் (LTTE) இலங்கை அரசாங்கத்திற்கும்

---

13 சர்வதேச நெருக்கடி குழு, இலங்கையின் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகளுக்குப் பிறகு எதிர்கால வன்முறை அபாயங்களைக் குறைத்தல், (சர்வதேச நெருக்கடி குழுக்கள், 2019), https://www.crisisgroup.org/asia/south-asia/sri-lanka/302-after-sri-lankas-easter-bombings-reducing-risks-future-violence,18-20

14 வெரிடே ரிசேர்ச், சிண்டிகேட் சர்வே: உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், அக்டோபர் 2023, (வெரிட்டே ரிசேர்ச், நவம்பர் 2023), https://archive.veriteresearch.org/handle/456/6419

15 "சர்ச்சைக்குரிய ஒரு நாடு ஒரே சட்டம் செயலணியின் பதவிக் காலத்தை இலங்கை ஜனாதிபதி நீட்டிக்கின்றார்", எகானமி நெக்ஸ்ட் , ஜூன் 2, 2022 , https://economynext.com/sri-lanka-president-extends-tenure-of-controversial-one-country-one-law-task-force-95065/

16 ஜோயல் குயின்டோ ரூ ஆயிீயா பெரேரா, "இடதுசாரி கருத்துகளை ஆதரிக்கும் புதிய ஜனாதிபதியை இலங்கை தேர்ந்தெடுக்கின்றது", பிபிசி செய்தி, செப்டம்பர் 23, 2024 https://www.bbc.com/news/articles/cqxr03x4dvzo; தேசிய மக்கள் சக்தியின் (NPP இலங்கை) தேர்தல் அறிக்கை, ஒரு செழிப்பான தேசம், ஓர் அழகான வாழ்க்கை, (NPP இலங்கை, ஆகஸ்ட் 2024), https://www.npp.lk/up/policies/en/npppolicystatement.pdf, செப்டம்பர் 1, 2024 அன்று அணுகப்பட்டது.

17 மீரா ஸ்ரீனிவாசன், "இலங்கையின் பொருளாதாரத்தைச் சரிசெய்தல், இனவெறியை முற்றிலுமாக ஒழித்தல் என்பனவே முதன்மையானது என்று ஜேவிபி தலைவர் அநுர குமார திசாநாயக்க கூறுகின்றார்", தி இந்து, செப்டம்பர் 3, 2024, https://www.thehindu.com/news/international/fixing-sri-lankas-economy-wiping-out-racism-top-priority-says-jvp-leader-anura-kumara-dissanayake/article68601908.ece

இடையிலான ஆயுத மோதலில் அவரது கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (JVP) வகித்த வரலாற்றுப் பங்கை அவர்கள் நினைவு கூர்ந்தனர். அங்கு ஜேவிபி பெரும்பாலும் ராஜபக்ஷக்கள் உட்பட சிங்கள - பௌத்த தேசியவாதிகளுடன் இணைந்திருந்தது.[18] ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வடக்கு மற்றும் கிழக்கில்[19] அதிக வாக்குகளைப் பெற்றார். இருப்பினும், பாராளுமன்றத் தேர்தலில் தமிழர்கள் ஜனாதிபதியின் கூட்டணியான தேசிய மக்கள் சக்திக்கு (NPP) அதிக எண்ணிக்கையில் வாக்களித்தனர். வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள அநேக தேர்தல் மாவட்டங்களிலும் NPP அதிக இடங்களை வென்றது. இன அரசியல் மற்றும் அதன் தமிழ் தேசியவாத பிரதிநிதிகள் மீதான சோர்வு[20], சாத்தியமான மாற்று வழிகள் இல்லாமை மற்றும் வளர்ச்சிக்கான தேவை ஆகியவை இந்த மாற்றத்திற்கு[21] வழிவகுத்திருக்கலாம்.

இந்த அறிக்கையில் விவாதிக்கப்பட்டபடி, 2024 ஆம் ஆண்டில் திசாநாயக்கவும் விக்கிரமசிங்கவும், இன - மத சிறுபான்மையினரை ஓரங்கட்டிய அவர்களின் முன்னோடிகளின் கொள்கைகளிலிருந்து தங்களைத் தூர விலக்கிக் கொண்டனர். நிபுணர்களின் கருத்துக்களுக்கும் முஸ்லிம் நம்பிக்கைகளுக்கும் முரணான மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து முஸ்லிம் எதிர்ப்பு உணர்வின் நீட்சியாகக் கருதப்பட்ட, கோவிட் – 19 தொற்றுநோய் பரவலின் போது முன்னெடுக்கப்பட்ட கட்டாயத் தகனக் கொள்கைக்காக விக்ரமசிங்க மன்னிப்பு கேட்டது குறிப்பிடத்தக்கது. மேலும், திசாநாயக்கவின் தேர்தல் பிரச்சாரங்களும், பதவியேற்ற ஆரம்ப மாதங்களும் ஊக்கமளிப்பதாக உள்ளன. இவை மத சிறுபான்மையினருக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. பௌத்த மதத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பதிலிருந்து விலகிச் செல்கின்றன.

இருப்பினும், மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தை அச்சுறுத்தும் நீண்டகாலப் பிரச்சினைகள் இன்னும் உள்ளன, அவை சட்டங்களையும் அரசாங்க நடவடிக்கைகளையும் பாதிக்கின்றன. மேலும் சமூக மட்டத்தில் நிலவும் கவலைகள் மற்றும் மதப் போக்குகளைப் பயன்படுத்தும் சில அரசியல் - மத கடும்போக்கு குழுக்கள் FoRB மற்றும் பன்மைத்துவத்திற்கு தீங்கு விளைவிக்கின்றன.

---

18 நிருபமா சுப்ரமணியம், "ஜனதா விமுக்தி பெரமுன ' விளக்கப்படுகின்றது", தி இந்து, மார்ச் 8, 2024 https://www.thehindu.com/news/international/on-the-janatha-vimukthi-peramuna-explained/article67926353.ece; அம்பிகை அகிலன், "மாறிவரும் இலங்கையில் தமிழர் கேள்வி: திசாநாயக்கவின் இடதுசாரி நிகழ்ச்சி நிரலின் வரம்புகள்", தி டிப்ளமேட், நவம்பர் 13, 2024, https://thediplomat.com/2024/11/the-tamil-question-in-a-changing-sri-lanka-the-limits-of-dissanayakes-leftist-agenda/

19 இலங்கை தேர்தல் ஆணைக்குழு, "பாராளுமன்றத் தேர்தல் 2024 - அகில இலங்கை முடிவுகள்", https://results.elections.gov.lk/pre2024/index.php

20 இலங்கை தேர்தல் ஆணைக்குழு, "பாராளுமன்றத் தேர்தல் 2024 - அகில இலங்கை முடிவுகள்", https://results.elections.gov.lk/

21 அமித் பருவா, "இலங்கை அதன் இன அரசியலில் மாற்றத்தைக் காண்கிறதா?", ∴ப்ரண்ட்லைன், நவம்பர் 12, 2024, https://frontline.thehindu.com/world-affairs/sri-lanka-parliamentary-elections-2024-dissanayake-srilankan-tamils-jaffna-voters-economic-crisis/article68860523.ece

# கண்ணோட்டம்

இந்த அறிக்கை மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தை (FoRB) ஆதரிப்பதன் மூலம் அல்லது பலவீனப்படுத்துவதன் மூலம் அதைப் பாதிக்கும் முக்கியமான போக்குகளைச் சுட்டிக்காட்டுகின்றது. இதை விளக்குவதற்கு 2024 ஆம் ஆண்டு அரசு மற்றும் அரசு சாரா குழுக்கள் இரண்டும் உள்ளடங்கலான சம்பவங்களையும், முன்னேற்றங்களையும் பயன்படுத்துகின்றது. ஒவ்வொரு அத்தியாயமும் இந்தச் சம்பவங்களையும் முன்னேற்றங்களையும் மதிப்பிட உதவும் குறிகாட்டிகள் மற்றும் மதிப்பெண் அட்டையைக் கொண்டுள்ளது.

மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் (FoRB) தொடர்பான சட்டங்கள் மற்றும் கொள்கைகளையும், அதைப் பாதிக்கும் சமீபத்திய நிகழ்வுகளையும் அத்தியாயம் 1 ஆராய்கின்றது. இது “மத உணர்வுகளைச் சீற்றப்படுத்தும்” மற்றும் மத சிறுபான்மையினரை நியாயமற்ற முறையில் குறிவைக்கும் அறிக்கைகளைத் தண்டிக்கும் நிகழ்நிலைப் காப்பு சட்டம் (Online Safety Act - OSA) குறித்து விவாதிக்கின்றது. இன மதக் குழுக்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட சட்டத்தை (ICCPR, 2007 ஆம் ஆண்டின் இல.56 சட்டம்) ஒத்த சட்டங்கள் சிறுபான்மையினரை குறிவைப்பதற்காக மத விமர்சனங்களுக்காக மக்களைத் தண்டிக்கும் சட்டம் போன்று எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குகின்றது. போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் இந்துக் கோயிலில் முன்னெடுக்கப்பட்ட சடங்குகளுக்காக திருகோணமலையில் நான்கு தமிழர்கள் ICCPR சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டது இந்தக் கவலையை எடுத்துக் காட்டுகின்றது. FoRB ஐப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட சட்டங்கள் எவ்வாறு தவறாகப் பயன்படுத்தப்பட்டு ஏனைய உரிமைகளை மீற முடியும் என்பதை பாலின சமத்துவ சட்டமூலத்திற்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பு விளக்குகின்றது. மேலும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பதிவு மற்றும் மேற்பார்வை சட்டமூலத்தை அறிமுகப்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்படுகின்றது. இதற்கு கடுமையான விதிமுறைகள் தேவைப்படுவதால், அது நம்பிக்கை சார்ந்த அமைப்புகளைப் பாதிக்கலாம்.

அரசாங்கம் மற்றும் அரசியல் கட்சிகளைப் பாதிக்கும் முக்கிய போக்குகள் மற்றும் வடிவங்களை அத்தியாயம் 2 ஆராய்கின்றது. மேலும் பெரும்பாலான மோதல்களில் பௌத்த பெரும்பான்மையினரின் நலன்களுக்கும், இன - மத சிறுபான்மையினர் இடையேயான மோதல்களில் பிராந்திய பெரும்பான்மையினரின் நலன்களுக்கும் அதிகாரிகள் எவ்வாறு முன்னுரிமை அளிக்கின்றார்கள் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. மத வழிபாட்டுத் தலங்கள் மீதான சட்டங்களை அமுல்படுத்துவதிலும், சமூக மோதல்களைக் கையாள்வதிலும் இது தெளிவாகத் தெரிகின்றது. இதேபோன்று, வவுனியாவில் உள்ள வெடுக்குநாறி மலை மற்றும் முல்லைத்தீவில் உள்ள குருந்தூர் மலை உள்ளிட்ட சர்ச்சைக்குரிய மதத் தலங்களில் இடம்பெறும் நிகழ்வுகள், மத பாரம்பரிய தளங்களைப் பாதுகாப்பதில் சிங்கள - பௌத்த நலன்களுக்கு ஆதரவான சார்பை வெளிப்படுத்துகின்றன. கடந்த ஆண்டு நடந்த பல சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு, இந்துத்துவாவால் ஈர்க்கப்பட்ட அரசியல் - மதக் குழுக்களிடையே கிறிஸ்தவ எதிர்ப்பு மற்றும் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வை ஊக்குவிப்பதில் அதிகரித்த செயல்பாடுகளையும், அதே நேரத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கையில் செல்வாக்கு செலுத்த முயற்சிப்பதையும் இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது. மேலும், இந்த ஆண்டு முஸ்லிம்கள் தலையை மூடும் ஆடை அணிவது தொடர்பான வழிகாட்டுதல்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டதன் மூலம், சில அரச அதிகாரிகளிடையே முஸ்லிம் எதிர்ப்பு உணர்வு தொடர்ந்து நிலவுவதையும் இந்த அறிக்கை


எடுத்துக்காட்டுகின்றது.

சமூக உறுப்பினர்களால் தூண்டப்படும் மற்றும் பன்மைதுவத்துக்கான சூழலை அச்சடுத்துகின்ற சம்பவங்களின் தன்மையை அத்தியாயம் 3 எடுத்துக்காட்டுகின்றது. சம்பவங்கள் பெரும்பான்மை ஆதிக்க உணர்வைப் பிரதிபலிப்பதுடன், அவற்றில் பல சுவிசேஷ அல்லது சுயாதீன திருச்சபைகளை குறி வைக்கின்றன. மதமாற்றப் பயம் தான் அவற்றுக்கு பின்னால் உள்ள முக்கிய காரணம் என்பதை இந்த சம்பவங்கள் காட்டுகின்றன. மற்றும் இவை எவ்வாறு தங்கள் நம்பிக்கைகளை பகிர்ந்து கொள்ள வேண்டிய குழுக்களை பாதிக்கின்றன என்பதை இந்த அத்தியாயம் விளக்குகின்றது. சுவிசேஷ குழுக்கள் தங்கள் நம்பிக்கைகளை எவ்வாறு பரப்புகின்றன என்பதையும்,இந்து மற்றும் இஸ்லாமிய சமூகங்களுக்குள் உள்ள மத போக்குகள் சமூகங்களுக்கு உள்ளேயும் அவற்றிற்கு இடையேயும் எவ்வாறு மோதல்களை தூண்டுகின்றன என்பதை ஆராய்கின்றது. LGBTIQ+ பற்றிய நபர்களை பாதிக்கும் சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதுடன் பாரம்பரிய நம்பிக்கைகளுக்கு சவால் விடும் புதிய மதக் குழுக்களையும் நிராகரிப்பதற்கும் வழி வகுத்த முக்கிய மத நிறுவனங்களின் பாரபட்சமான நிலைப்பாடுகளையும் ஆராய்கின்றது.

இன - மதக் குழுக்களைப் பற்றிய வெறுப்புப் பேச்சு மற்றும் சமூக ஊடகக் கருத்துகளின் கண்ணோட்டத்தை அத்தியாயம் 4 வழங்குகின்றது. இது பன்முகத்தன்மை மற்றும் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் (FoRB) பற்றி மக்கள் எப்படி உணருகிறார்கள் என்பதைக் காட்டுகின்றது. இந்தக் கருத்துக்கள் பெரும்பாலும் சமூக மற்றும் அரசியல் நிகழ்வுகளுடன் தொடர்புடையவை என்பதைக் காட்டுகிறது. சிறுபான்மையினரை குறிவைக்கும் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கம் குறைந்துவிட்டாலும், சில கவலைக்குரிய வடிவங்கள் இன்னும் தொடர்கின்றன. 2024 இல் சமூக ஊடகங்கள் வன்முறையை ஏற்படுத்தியதற்கான எந்த ஆதாரமும் இல்லை, ஆனால் அது வெடுக்குநாறி உட்பட மத தளங்கள் தொடர்பான மோதல்களை மோசமாக்கியிருக்கலாம். மக்கள்தொகை மாற்றங்கள் குறித்த அச்சங்களை அடிப்படையாகக் கொண்ட கதைகள், இஸ்லாமிய பழக்கவழக்கங்களை எதிர்மறையாகச் சித்தரித்தல் மற்றும் இஸ்லாத்தை பயங்கரவாதத்துடன் இணைக்கும் கதைகளுடன் முஸ்லிம்கள் தற்போதும் மிகவும் இலக்கு வைக்கப்பட்ட குழுவாக உள்ளனர். பாரம்பரிய ஊடகங்கள் பொது மக்களிடையே தொடர்ந்தும் செல்வாக்கு செலுத்துவதால், ஊடக உரிமை, ஊடகப் பிரிவினை, இனம் மற்றும் மதத்தின் அடிப்படையில் பக்கச்சார்பான அறிக்கையிடல் ஆகியவற்றை இந்த அத்தியாயம் ஆராய்கின்றது.

இந்த அறிக்கை, இந்த ஆண்டு நிகழ்ந்த சில நேர்மறையான மாற்றங்களையும் எடுத்துக்காட்டுகின்றது. மத மொழி மற்றும் தீங்கு விளைவிக்கும் பேச்சின் பயன்பாட்டில் தெளிவான வீழ்ச்சி காணப்பட்டது, இது 2024 தேர்தல் பிரச்சாரங்களிலும் பிரதிபலித்தது. அரசியல் நடவடிக்கைகள் மற்றும் சின்னங்கள் எவ்வாறு மிகவும் உள்ளடக்கிய மற்றும் வரவேற்கத்தக்க சமூகத்தை நோக்கி நகர்வதைக் காட்டுகின்றன என்பதுடன், மதத்தால் மக்களைப் பிரிக்க முயற்சிக்கும் குழுக்களுக்கு எதிராகப் பின்வாங்குகின்றன என்பதையும் அத்தியாயம் 2 விளக்குகின்றது. மத நம்பிக்கைகளுக்காக இலக்கு வைக்கப்பட்ட சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் திறன்பட நிவர்த்தி செய்ததற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவையும் (HRCSL) அறிக்கை பாராட்டுகின்றது. மத சுதந்திரம் அல்லது நம்பிக்கையை (FoRB) மேம்படுத்துவதற்கான கூடுதல் வழிகளைப் பற்றி அத்தியாயம் 3

பேசுகின்றது. புதிய சட்டங்களை விட சர்வ மதக் குழுக்கள் மற்றும் விவாதங்களின் மதிப்பை அது வலியுறுத்துகின்றது. இறுதியாக, இந்த வாய்ப்புகளை முன்னோக்கி நகர்த்துவதற்கு உதவ மதத் தலைவர்கள், மதக் குழுக்கள், அரசாங்க அதிகாரிகள், சர்வதேச சமூகம் மற்றும் சிவில் சமூகத்திற்கான விரிவான பரிந்துரைகளை அறிக்கை வழங்குகின்றது.



# ஆராய்ச்சி முறை

## 1. தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு

இந்த ஆராய்ச்சி ஒரு கலப்பு அணுகுமுறையைப் பயன்படுத்தியது. முதன்மை மற்றும் இரண்டாம் நிலை மூலங்களிலிருந்து பண்புசார் தரவு சேகரிக்கப்பட்டது. அதே நேரத்தில் அளவுத்திறன் தரவு இரண்டாம் நிலை மூலங்களிலிருந்து மட்டுமே பெறப்பட்டது.

முக்கிய தகவலறிந்த நேர்காணல்கள் மற்றும் கவனக் குழு விவாதங்கள் மூலம் முதன்மை பண்புசார் தரவு சேகரிக்கப்பட்டது. மத குருமார்கள், நம்பிக்கை சார்ந்த அமைப்புகளின் பிரதிநிதிகள், சட்ட வல்லுநர்கள், ஊடக ஆய்வாளர்கள், மத சகவாழ்வை ஊக்குவிக்கும் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அடையாள அரசியலில் நிபுணத்துவம் பெற்ற ஆராய்ச்சியாளர்கள்.·.கல்வியாளர்கள் ஆகியோருடன் 28 முக்கிய தகவல் அளிப்பவர் நேர்காணல்கள் நடத்தப்பட்டன. கொழும்பிற்கு வெளியே உள்ள பங்கேற்பாளர்களைக் கொண்ட நேர்காணல்கள் உட்பட, குறைந்தது 50% நேர்காணல்கள் தொலைதூரத்தில் நடத்தப்பட்டன. அக்டோபர் 2024 முதல் மார்ச் 2025 வரை இரண்டு கட்டங்களாக அவை நடத்தப்பட்டன.

தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி (NCEASL), மாற்று கொள்கைகளுக்கான நிலையம் (CPA) மற்றும் வெரிட்டே ரிசேர்ச் உள்ளிட்ட அமைப்புகளால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் தரமான இரண்டாம் நிலைத் தரவுகளின் பெரும் பகுதியை உருவாக்கின. 2024 ஆம் ஆண்டின் சம்பவங்கள் மற்றும் முன்னேற்றங்கள், கடந்த ஆண்டுகளில் காணப்பட்ட FoRB இன் போக்குகள் மற்றும் வடிவங்களுடன் ஒப்பிடப்பட்டு, இந்த அறிக்கைகளில் வழங்கப்பட்ட பகுப்பாய்வுகளுடன் ஒப்பிடப்பட்டன. ஏனைய இரண்டாம் நிலை தரவுகளில் ஐ.நா. அமைப்புகள் மற்றும் உள்ளூர் அரச நிறுவனங்களால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் மற்றும் செய்தி கட்டுரைகள் அடங்கும்.

இரண்டாம் நிலை அளவுத்திறன் தரவு பெரும்பாலும் NCEASL, ஹாஷ்டாக் ஜெனெரேஷன் மற்றும் தேசிய சமாதானப் பேரவை (NPC) ஆகியவற்றின் வெளியிடப்படாத அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது. இதில் இன மதக் குழுக்களை குறிவைத்து வன்முறை, மிரட்டல் மற்றும் வெறுப்பு பேச்சு சம்பவங்கள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் FoRB தொடர்பான விடயங்களில் பொதுமக்களின் கருத்துக் கணிப்புகள் என்பன அடங்கும்.

## 2. குறிகாட்டிகள் மற்றும் மதிப்பெண்கள்

ஒவ்வொரு அத்தியாயத்திலும் 2–6 குறிகாட்டிகளும் FoRB தொடர்பான சம்பவங்களை அளவிடுவதற்கும் காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணிக்க உதவுவதற்கும் மதிப்பெண் அட்டை ஒன்றும் உள்ளன.

இந்தக் குறிகாட்டிகள், FoRB இல் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய உள்நாட்டுச் சட்டம் மற்றும் சர்வதேச உறுதிமொழிகள் (பிணைப்பு மற்றும் பிணைப்பு அல்லாதவை), மத நிறுவனங்கள் மற்றும் மதகுருமார்களின் பயன்பாட்டிற்காக நம்பிக்கை சார்ந்த நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட வழிகாட்டுதல்/சிறந்த நடைமுறைகள் மற்றும் இலங்கையில் காணப்பட்ட முக்கிய போக்குகள் மற்றும் வடிவங்களை அடிப்படையாகக் கொண்டவை. அரசாங்கம் மற்றும் அரச அமைப்புகளின் மீது சட்ட விதிகள் அமுல்படுத்தக்கூடியவை என்பது புரிந்து கொள்ளப்பட்டாலும், அரச மற்றும் சமூக மட்டத்தில் FoRB இன் சூழல் குறித்த குறிகாட்டிகள் மற்றும் ஆதரவு பகுப்பாய்வை உருவாக்க இது இங்கு பயன்படுத்தப்படுகின்றது. மனித உரிமைகள்

உயர்ஸ்தானிகர் அலுவலகம்[22] மற்றும் ∴பிரீடம் ஹவுஸ்[23] என்பவற்றால் உருவாக்கப்பட்ட குறிகாட்டி கட்டமைப்புகளிலிருந்து விபரங்கள் பெறப்பட்டன.

ஒவ்வொரு குறிகாட்டியும் பல துணைக் கேள்விகளை உள்ளடக்கியது. ஒவ்வொரு குறிகாட்டியையும் உருவாக்குவதில் பண்புசார் தரவு (அதாவது, FoRB இற்கான சூழல் குறித்த நிபுணர் கருத்துகள் மற்றும் மதிப்பீடுகள்) மற்றும் அளவுத் திறன் தரவு (அதாவது, மதக் குழுக்களுக்கு எதிரான மிரட்டல் மற்றும் வன்முறை சம்பவங்களின் அவதானிக்கக்கூடிய எண்ணிக்கை) ஆகிய இரண்டும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

ஒவ்வொரு துணைக் குறிகாட்டியும் பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் 1 - 10 என்ற அளவுகோலில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது:

| மதிப்பெண் | Rag தரவரிசை | அளவுகோல்கள் |
|---|---|---|
| 0-2 | | FoRB மற்றும் பன்மைத்துவத்தை ஆதரிக்கும் உத்தரவாதங்கள் மற்றும் உறுதிமொழிகளைக் கடைப்பிடிக்காத மிகவும் மோசமான செயல்திறன். |
| 3-4 | | FoRB மற்றும் பன்மைத்துவத்தை ஆதரிக்கும் உத்தரவாதங்கள் மற்றும் உறுதிமொழிகளைக் குறைவாகக் கடைப்பிடிக்கும் மோசமான செயல்திறன். |
| 5-6 | | FoRB மற்றும் பன்மைத்துவத்தை ஆதரிப்பதற்கான உறுதிமொழிகள் எவ்வளவு சிறப்பாகப் பின்பற்றப்படுகின்றன என்பதில் சிறிய முன்னேற்றம் அல்லது தெளிவு இல்லா ஒட்டுமொத்தச் செயல்திறன் பெரும்பாலும் நடுநிலையாகவே உள்ளது. |
| 7-8 | | FoRB மற்றும் பன்மைத்துவத்தை ஆதரிக்கும் உத்தரவாதங்கள் மற்றும் உறுதிமொழிகளைக் கடைப்பிடிப்பதில் நல்ல செயல்திறன் உள்ளது. |
| 9-10 | | FoRB மற்றும் பன்மைத்துவத்தை ஆதரிக்கும் உத்தரவாதங்கள் மற்றும் உறுதிமொழிகளைக் கடைப்பிடிப்பதில் மிகச் சிறந்த செயல்திறன் உள்ளது. |

ஒவ்வொரு துணைக் குறிகாட்டியும், தொடர்புடைய அத்தியாயத்தில் வழங்கப்பட்ட குறிகாட்டியுடன் தொடர்புடைய பண்புசார் தரவு மற்றும் அளவுத்திறன் தரவு மற்றும் பகுப்பாய்வின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது. வழங்கப்பட்ட மதிப்பெண்ணை நியாயப்படுத்தும் வகையில் இந்த விபரத்தின் சுருக்கம் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு துணைக் குறிகாட்டியின் திரட்டப்பட்ட மதிப்பெண்களின் சராசரி அந்த குறிகாட்டிக்கான மதிப்பெண்ணைத் தீர்மானிக்கின்றது.

ஒவ்வொரு குறிகாட்டிக்குமான மதிப்பெண் அறிக்கையின் ஆசிரியர்களாலும், சட்டம், சமூக விஞ்ஞானம் மற்றும் ஆராய்ச்சியில் பின்னணி கொண்ட NCEASL இன் மதிப்பாய்வாளர்கள் குழுவாலும் மதிப்பிடப்படும்.

22 ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம், மனித உரிமைகள் குறிகாட்டிகள்: அளவீடு மற்றும் செயல்படுத்தலுக்கான வழிகாட்டி, (ஐக்கிய நாடுகள் சபை, 2012) ) https://www.ohchr.org/en/publications/policy-and-methodological-publications/human-rights-indicators-guide-measurement-and

23 ∴பிரீடம் ஹவுஸ், உலகில் சுதந்திரம் 2024 வழிமுறை கேள்வி, (வாஷிங்டன் டிசி: ∴பிரீடம் ஹவுஸ், 2024) பிப்ரவரி 2024, https://freedomhouse.org/sites/default/files/2024-02/FIW_2024%20MethodologyPDF.pdf

## 3. வரம்புகள்

இந்த அறிக்கையில் கலந்துரையாடப்படும் சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகளின் முன்னேற்றம் என்பன ஒரு முழுமையான பட்டியல் அல்ல. ஆனால் 2024 ஆம் ஆண்டில் FoRB தொடர்பான முக்கிய பிரச்சினைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டது.

மத சமூகங்கள் அல்லது வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட நோக்கம் தெளிவாகத் தெரியாத சம்பவங்கள் இங்கு சேர்க்கப்படவில்லை. வடக்கு மற்றும் கிழக்கின் சில பகுதிகளில் உள்ள இந்து கோயில்களில் நடக்கும் திருட்டுச் சம்பவங்கள் குற்றத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படுவதால் அவை இந்த வகையில் அடங்கும்[24].

இந்த அறிக்கையில் பரந்த போக்குகளைப் பிரதிபலிக்காத தனிமைப்படுத்தப்பட்ட சம்பவங்கள் சேர்க்கப்படவில்லை. உதாரணமாக, பொலன்னறுவை (வட - மத்திய) கதுருவெலவில் உள்ள முஸ்லிம் வர்த்தகர்கள் பல ஆண்டுகளாக போயா[25] நாட்களில் கடைகளை மூடும்படியாகக் கேட்கப்படுகின்றனர். ஆனால் இலங்கையின் பிற பகுதிகளில் இது நடப்பதாக எந்த அறிக்கையும் இல்லை, எனவே இது ஒரு பரந்த பிரச்சினையா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இதுபோன்று, மே மாதம் குருநாகல் (சப்ரகமுவ) மாவனல்லையில் தன்சல்களில்[26] பங்கேற்றதற்காக முஸ்லிம் இளைஞர்கள் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்களால் தடுக்கப்பட்ட அல்லது கண்டிக்கப்பட்ட/துஷ்பிரயோகம் செய்யப்பட்ட இரண்டு சம்பவங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன. இந்தச் சம்பவம் சமூகத்திற்குள் சகிப்புத்தன்மை இன்மையையும், முஸ்லிம் - பௌத்த பதட்டங்கள் இருப்பதையும் குறிக்கின்றது என்றாலும், இவை போன்ற வேறு எந்தச் சம்பவங்களும் பதிவாகவில்லை[27].

தரவு கிடைக்கும் தன்மை மற்றும் தரவு பகுப்பாய்விற்கான திட்டத்தின் திறன் தொடர்பான சில வரம்புகளைக் கருத்தில்கொண்டால், இந்த அறிக்கையில் வழங்கப்பட்ட குறிகாட்டி கட்டமைப்பு வலுவானதாக இல்லை. இந்தக் கட்டமைப்பு எதிர்காலப் பதிப்புகளுக்கு மேலும் முன்னேற்றகரமானதாக்கக் கூடிய ஒரு முன்மாதிரியாகச் செயல்படும் நோக்கத்தைக் கொண்டது.

அறிக்கையின் 4 ஆவது அத்தியாயம், இன - மதக் குழுக்கள் குறித்த வெறுப்புப் பேச்சு மற்றும் சமூக ஊடக வர்ணனைகளை ஆராய்கின்றது. மேலும் பிரதான ஊடகங்களில் இன - மத சமூகங்களின் பிரதிநிதித்துவத்தையும் கருத்தில் கொள்கின்றது. FoRB தொடர்பான விடயங்களில் ஊடக அறிக்கையிடல் குறித்து பொது வெளியில் தரவுகள் குறைவாகவே கிடைத்தன. எனவே கிடைக்கும் தரவுகள், ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் ஊடக நிபுணர்களின் அவதானிப்புகள் ஆகியவற்றை இந்த ஆய்வு பயன்படுத்தியுள்ளது.

---

24 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி (NCEASL), இந்துக்களுக்கு எதிரான வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள் 2024, வெளியிடப்படாத அறிக்கை, டிசம்பர் 2024, NCEASL

25 புத்த பெருமானின் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளை நினைவுகூரும் முழு நிலவுடன் இணைந்து வரும் மாதாந்த பௌத்த (மற்றும் பொது) விடுமுறை.

26 இலங்கை பௌத்த நாட்காட்டியில் மிகவும் குறிப்பிடத்தக்க நாளான வெசாக் பண்டிகையின் போது பெரும்பாலும் பௌத்தர்களால் அமைக்கப்படும் தற்காலிக உணவுக் கடை. தானம் என்பது தாராள மனப்பான்மை மற்றும் தர்மத்தைக் குறிக்கின்றது. மேலும் பல இலங்கையர்கள் இன - மத பின்னணியைப் பொருட்படுத்தாமல் உணவைப் பரிமாறுவதிலும் பெற்றுக்கொள்வதிலும் ஆர்வத்துடன் பங்கேற்பர்.

27 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசே‘க் கூட்டணி (NCEASL), முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள் 2024, வெளியிடப்படாத அறிக்கை, டிசம்பர் 2024, NCEASL

இந்த விடயத்தில் கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட தரவுகளைக் கொண்டு, “பிரதான ஊடகங்களில் இன - மதக் குழுக்களின் பிரதிநிதித்துவம் மற்றும் கவலைகள்” தொடர்பான குறிகாட்டிக்கான மதிப்பீடு அல்லது மதிப்பெண்ணை இந்த அறிக்கை வழங்கவில்லை (அத்தியாயம் 4, “மதிப்பெண் மற்றும் ரேக் மதிப்பீடு” பிரிவைப் பார்க்கவும்).

இந்து மற்றும் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான வன்முறையைக் கண்காணிக்கும் NCEASL இன் தொடர்பு வலையமைப்புகள் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. எனினும் அவை கிறிஸ்தவ எதிர்ப்பு வன்முறையைக் கண்காணிக்க நடைமுறையில் உள்ள தரவு சேகரிப்பு வழிமுறைகளைப் போல வலுவாக இருக்காது. எனவே, இந்து மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு எதிரான மிரட்டல் மற்றும் வன்முறை பற்றிய தரவு முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்தப்படாமல் போகலாம்.

இதேபோன்று, சிறிய பௌத்தப் பிரிவுகள் உட்பட பௌத்தர்களுக்கு எதிரான மிரட்டல் மற்றும் வன்முறை சம்பவங்களை முறையாகக் கண்காணிக்கும் எந்த வழிமுறைகளையும் அடையாளம் காண முடியவில்லை. இது தொடர்பான பகுப்பாய்வு, பத்திரிகைகளில் ஆவணப்படுத்தப்பட்ட அல்லது அறிக்கையிடப்பட்ட வெறுப்புப் பேச்சு சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டது. எனவே நிலைமையை முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்தாமல் போகலாம்.

இந்த ஆய்வின் போது, மலையகத் தமிழ் சமூகம், சுவிசேஷ கிறிஸ்தவ அமைப்புகள் மற்றும் இந்து தேசியவாத குழுக்கள் சம்பந்தப்பட்ட இன - மத பதட்டங்கள் மத்திய மாகாணத்தில் இருப்பதை சில உரையாடல்கள் சுட்டிக்காட்டின. எனினும், ஆசிரியர்களுக்குக் கிடைத்த சம்பவங்கள் மற்றும் அதன் முன்னேற்றங்கள் இந்த வடிவங்களைச் சுட்டிக்காட்டவில்லை.



## அத்தியாயம் 1:

# சட்டம் மற்றும் கொள்கை

இலங்கையில் மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரத்தில் தாக்கங்களைக் கொண்ட சட்டங்கள் மற்றும் கொள்கை கட்டமைப்பு மற்றும் அவற்றின் முன்னேற்றங்கள்

## முக்கிய அவதானிப்புகள்

- இலங்கையில் FoRB அரசியலமைப்பு விதிகளால் பாதுகாக்கப்படுகின்றது மற்றும் தண்டனைச் சட்டக்கோவை, தனிநபர் சட்டங்கள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் போன்ற பல உள்நாட்டுச் சட்டங்களால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்படுகின்றது.
- ICCPR சட்டம் மற்றும் தொல்பொருள் கட்டளைச் சட்டம் போன்ற FoRB ஐ மேம்படுத்தும் சட்டங்களில் உள்ள பல விதிகள், சிறுபான்மை சமூகங்களைக் குறிவைக்க அதிகாரிகளால் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில சமயங்களில் அவை FoRB ஐ நேரடியாக மீறியுள்ளன. இந்த விதிகள் பரந்தவையாக இருப்பதால் அவை தவறாகப் பயன்படுத்தப்படுவது எளிதாக இருக்கின்றது. 2024 நிகழ்நிலை காப்பு சட்டமும் அதே ஆபத்தைக் கொண்டுள்ளது.
- FoRB ஐ மேம்படுத்துவதற்கான விதிகளும் கொள்கைகளும் சில நேரங்களில் கருத்துச் சுதந்திரம் மற்றும் பாலின சமத்துவம் போன்ற ஏனைய உரிமைகளை மீறுவதற்குப் பங்களித்துள்ளன.
- மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தைப் பாதுகாப்பது வலுவான சட்டங்கள் மற்றும் கொள்கைகளைச் சார்ந்துள்ளது. இந்தச் சட்டங்கள் உரிமையை வரையறுக்கின்றன, மீறல்களைத் தடுக்க உதவுகின்றன, மேலும் அவை நிகழும்போது அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிகளை வழங்குகின்றன. எனவே, இலங்கையில் குழசுடீ எவ்வளவு சிறப்பாகப் பாதுகாக்கப்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்ள சட்டக் கட்டமைப்பை மதிப்பாய்வு செய்வது முக்கியம் ஆகும். இருப்பினும், FoRB ஐ முழுமையாக உறுதிப்படுத்த சட்டங்கள் மட்டும் போதாது.[28]

# 1. மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரத்திற்கான முக்கிய உள்ளூர் மற்றும் சர்வதேசப் பாதுகாப்புகள்

## 1.1 சர்வதேச தரநிலைகள் மற்றும் உறுதிமொழிகள்

மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தில்[29] FoRB ஒரு உரிமையாகப் பதியப்பட்டுள்ளது. சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையின் (இனிமேல் ICCPR என அழைக்கப்படும்) பிரிவு 18 அதே உரிமையை எதிரொலித்து பின்வருமாறு கூறுகின்றது.

“ஒவ்வொருவருக்கும் சிந்தனை, மனசாட்சி மற்றும் மத சுதந்திரத்திற்கான உரிமை உண்டு. இந்த உரிமையில் தனக்கு விருப்பமான ஒரு மதம் அல்லது நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கான அல்லது ஏற்றுக்கொள்வதற்கான சுதந்திரம், மற்றும் தனியாக அல்லது மற்றவர்களுடன்

28 பவானி பொன்சேகா (மனித உரிமைகள் சட்ட நிபுணர்) உடனான யனித்ரா குமரகுருவின் நேர்காணல், பிப்ரவரி 18, 2025, கொழும்பு ஜே. எம். சுவாமிநாதன் (சட்ட நிபுணர்) உடனான யனித்ரா குமரகுருவின் தொலைபேசி மூலமான நேர்காணல், ஜனவரி 16, 2025.

29 மனித உரிமைகளுக்கான சர்வதேச பிரகடனம், பிரிவு. 18, G.A Res. 217A(III), U.N. Doc. A/RES/217 (III) (டிசம்பர் 10, 1948)

சமூகத்தில், பொதுவில் அல்லது தனிப்பட்ட முறையில், வழிபாடு, அனுசரிப்பு, நடைமுறை மற்றும் கற்பித்தல்[30] ஆகியவற்றில் தனது மதம் அல்லது நம்பிக்கையை வெளிப்படுத்தும் சுதந்திரம் ஆகியவை அடங்கும்".

பிரிவு 18 வழங்கும் பாதுகாப்பு, கடவுள் நம்பிக்கை, கடவுள் நம்பிக்கையற்ற மற்றும் எந்த மதம் அல்லது நம்பிக்கையையும் கடைப்பிடிக்காத உரிமைக்கும் நீட்டிக்கப்படுகின்றது[31]. கூடுதலாக, சிந்தனை சுதந்திரம் மற்றும் மனசாட்சி சுதந்திரம், அத்துடன் ஒருவர் விரும்பும் மதம் அல்லது நம்பிக்கையைக் கொண்டிருக்க அல்லது ஏற்றுக்கொள்ளும் சுதந்திரம் ஆகியவை முழுமையான மற்றும் நிபந்தனையற்ற பாதுகாப்பை[32] வழங்குகின்றன. இருப்பினும், ICCPR இன் பிரிவு 18(3) இன் பிரகாரம், ஒருவரின் மதம் மற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்தும் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படலாம். இந்தச் சுதந்திரம் சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளுக்கு உட்பட்டது மற்றும் தேசியப் பாதுகாப்பு, ஒழுங்கு, சுகாதாரம் அல்லது ஒழுக்கம் அல்லது மற்றவர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாக்க அவசியமானது.[33]

மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையிலான அனைத்து வகையான சகிப்புத்தன்மை மற்றும் பாகுபாட்டை நீக்குவது குறித்த 1981 பிரகடனம் சுதந்திரத்தை இதேபோன்று விபரிக்கின்றது.

இலங்கை ICCPR இல் கைச்சாத்திட்டதன் மூலம் சர்வதேச மனித உரிமைகளுக்கு உறுதியளித்துள்ளது. அத்துடன், இலங்கையின் சட்டங்களில் அதுவரை உள்ளடக்கப்படாத மனித உரிமைகள் தொடர்பான ICCPR இன் சில பிரிவுகளை நடைமுறைப்படுத்துவதற்காக, இலங்கை அரசாங்கம் 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இல. ICCPR சட்டத்தை இயற்றியது[34].

## 1.2 அரசியலமைப்பு உத்தரவாதங்கள்

இலங்கை அரசியலமைப்பின் 10 ஆவது உறுப்புரை, ஒவ்வொரு நபருக்கும் மத சுதந்திரத்திற்கான உரிமை உண்டு என்று குறிப்பிடுகின்றது. இதில் ஒருவர் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கான[35] அல்லது ஏற்றுக்கொள்வதற்கான சுதந்திரமும் அடங்கும். ஒருவரின் மதத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம் அரசியலமைப்பின் உறுப்புரை 14 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து பகிரங்கமாகவேனும் தனியாகவேனும் தனது மதத்தையோ நம்பிக்கையையோ வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், சாதனையிலும், போதனையிலும் வெளிப்படுத்த சுதந்திரம் உள்ளது.[36]

மேலே கூறப்பட்டுள்ள மத சுதந்திரம் அரசியலமைப்பின் 12 ஆவது உறுப்புரை மூலம் மேலும்

30 சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை பிரிவு. 18(1), டிசம்பர் 19, 1966, 999 அன்று கைச்சாத்திடுவதற்காக தொடங்கப்பட்டது U.N.T.S. 171, 6 I.L.M. 30 (மார்ச் 23, 1976 அன்று நடைமுறைக்கு வந்தது)

31 ஐ.நா. மனித உரிமைகள் குழு (HRC), CCPR பொது கருத்து இல. 22: பிரிவு 18 (சிந்தனை, மனசாட்சி அல்லது மத சுதந்திரம்), CCPR/C/21/Rev.1/Add.4, 30 ஜூலை 1993, https://www.refworld.org/legal/general/hrc/1993/en/13375

32 மேலே குறிப்பிடப்பட்டது

33 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை. பிரிவு 18(3)

34 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இல. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டம்

35 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978, உறுப்புரை 10

36 மேலே குறிப்பிடப்பட்டது, உறுப்புரை 14

உறுதிப்படுத்தப்படுகின்றது. "சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள் மற்றும் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கு உரிமை உண்டு"[37] என்று கூறுகின்றது. எந்தவொரு குடிமகனுக்கும் மதத்தின் அடிப்படையில்[38] பாகுபாடு காட்டப்படக்கூடாது என்பதை உறுப்புரை 12(2) மேலும் அங்கீகரிக்கின்றது. உறுப்புரை 12(3)[39] பொது இடங்களை அணுகுவதில் ஒரு நபரின் மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படக்கூடாது என்பதை உறுதி செய்கின்றது. அதே நேரம் இனம், சாதி, பாலினம் போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டாமல், ஒருவரின் சொந்த மதத்தின் பொது வழிபாட்டுத் தலங்களுக்கான அணுகலை உறுதி செய்கின்றது.

உச்ச நீதிமன்றத்தில் பிரேமலால் பெரேரா எதிர் வீரசூரிய (1985)[40] வழக்கில் மத சுதந்திரம் ஒரு முழுமையான உரிமையாக அடையாளம் காணப்பட்டது. ஒரு மத நம்பிக்கை பாதுகாக்கப்படுவதற்கு[41] அது தர்க்கரீதியானதாகவோ, ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவோ, நிலையானதாகவோ அல்லது புரிந்துகொள்ளக்கூடியதாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை என்றும், நீதிமன்றங்கள் மத நம்பிக்கைகளைப் பகுப்பாய்வு செய்யக் கூடாது[42] என்றும் நீதிமன்றம் மத நம்பிக்கைக்கு வழங்கிய பரந்த விளக்கத்தில் குறிப்பிடப்பட்டது.

ஒருவரின் மதத்தைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் மற்றும் சமத்துவத்திற்கான உரிமை சில வரம்புகளைக் கொண்டிருக்கலாம் என்று அரசியலமைப்புச் சட்டம் கூறுகின்றது. இந்த வரம்புகள் ICCPR இல் உள்ளதைப் போன்றவை. உறுப்புரை 15(7) சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் மற்றும் தேசியப் பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு, பொதுமக்கள் சுகாதாரம் அல்லது ஒழுக்கம், மற்றவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாத்தல் அல்லது ஒரு ஜனநாயக சமூகத்தின்[43] தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமானால் கட்டுப்பாடுகளை அனுமதிக்கின்றது.

மேலும், உறுப்புரை 27(5) இன் பிரகாரம், மதக் குழுக்கள் உட்பட அனைத்துப் பிரிவுகளிடையேயும் ஒத்துழைப்பையும் பரஸ்பர நம்பிக்கையையும் ஊக்குவிப்பதன் மூலம் தேசிய ஒற்றுமையை வலுப்படுத்துவது அரசின் கடமையாகும். இது பாகுபாடு மற்றும் தப்பெண்ணத்தை[44] அகற்றக் கற்பித்தல், கல்வி ஊட்டல் மற்றும் தகவலறிவிப்பு ஆகிய துறைகளில் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகின்றது. உறுப்புரை 27(6) மதம்[45] போன்ற காரணங்களால் ஏற்படும் இயலாமையை நீக்குவதற்கும், குடிமக்களுக்கு சம வாய்ப்புகளை உறுதி செய்வதற்கும் அரசாங்கத்தை

37 மேலே குறிப்பிடப்பட்டது, உறுப்புரை 12(1)

38 மேலே குறிப்பிடப்பட்டது, உறுப்புரை 12 (2)

39 "எந்தவொரு நபரும் இனம், மதம், மொழி, சாதி, பால் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும், கடைகள், பொது உணவுச்சாலைகள், விடுதிகள், பொதுக் களியாட்டங்கள், தனது மதத்திற்குரிய பொது வழிபாட்டிடங்கள் என்பவற்றுக்குச் செல்லுதல் தொடர்பில் ஏதேனும் தகுதியீனத்திற்கு, பொறுப்புக்கு, மட்டுப்பாட்டுக்கு அல்லது நிபந்தனைக்கு உட்பட்டவர் ஆதலாகாது."

40 பிரேமலால் பெரேரா எதிர் வீரசூரிய (1985) 2 ஞசை டு சு 177

41 "இந்தக் கூற்று வினோதமாகவும், மத ரீதியான உந்துதலற்றதாகவும் இல்லாவிட்டால், பாதுகாப்பு கோரும் நபர் தனது குறிப்பிட்ட நம்பிக்கையின் கட்டளைகளைச் சரியாக உணர்ந்துள்ளாரா என்பதை விசாரிப்பது நீதித்துறை செயல்பாடு மற்றும் நீதித்துறை திறனுக்குள் இல்லை" என்று நீதிமன்றம் கூறியது.

42 பிரேமலால் பெரேரா எதிர் வீரசூரிய. பக்கம் 192

43 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978, உறுப்புரை 15(7)

44 மேற்சொன்னபடி, உறுப்புரை 27(5)

45 மேற்சொன்னபடி, உறுப்புரை 27(6)

நம்புகின்றது. இறுதியாக, உறுப்புரை 27(11) அனைத்து மதக் குழுக்களுக்கும்[46] சாதகமான பொருளாதார மற்றும் சமூகச் சூழலை ஏற்படுத்த அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்துகின்றது.

## 2. FoRBயும் பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கிற்கு எதிரான அச்சுறுத்தல்களும்

பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதற்கும் தேசியப் பாதுகாப்பை நிலைநிறுத்துவதற்கும் இயற்றப்படும் சட்டம் மத சுதந்திரம் மற்றும் நம்பிக்கையுடன் ஒன்று அல்லது இரண்டு வழிகளில் குறுக்கிடலாம்:

1. **பாதுகாப்பை வழங்குவதன் மூலம்** FoRB **ஐ எளிதாக்குதல் வன்முறையின் பயம் மற்றும் ஆபத்து இன்றி அல்லது அமைதி மீறலை அனுபவிக்காமல், மதத்தைப் பின்பற்றவும், நம்பிக்கையைக் கொண்டிருக்கவும், அவர்களின் மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரத்தை வெளிப்படுத்தவும் முடியும் என்பதை உறுதி செய்தல்.**
2. **மதம் அல்லது நம்பிக்கையின் வெளிப்பாடு அமைதியை மீறுவதாகவோ அச்சுறுத்துவதாகவோ இருக்காது என்பதை உறுதி செய்தல்.**

பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதற்கான சட்டத்தின் விதிகளால் FoRB வெளிப்படையாகப் பாதிக்கப்படும் பல சட்டங்கள் இலங்கையில் காணப்படுகின்றன. தண்டனைச் சட்டக்கோவை, 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இல. ICCPR சட்டம், 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இல. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இல. நிகழ்நிலை காப்பு சட்டம் போன்றவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

### 2.1 தண்டனைச் சட்டக்கோவை

தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 290 இன்படி, ஒரு மதம் அல்லது எந்தவொரு வகுப்பினரையும் அவமதிக்கும் நோக்கத்துடன் வழிபாட்டுத் தலத்தையோ அல்லது எந்தப் புனிதமான பொருளையோ வேண்டுமென்றே சேதப்படுத்தினாலோ அல்லது அவமதித்தாலோ அல்லது அது அவமதிப்பாகக் கருதப்படும் என்றே தெரிந்து செய்தாலோ அது குற்றமாகக் கருதப்படுகின்றது[47]. பிரிவு 291, மத வழிபாடு அல்லது மதச் சடங்குகளில் சட்டபூர்வமாக ஈடுபடும் எந்தவொரு கூட்டத்திற்கும் தாமாக முன்வந்து இடையூறு செய்பவர்களுக்கு தண்டனைகளை[48] நிர்ணயிக்கின்றது. எந்தவொரு நபரின் உணர்வுகளைக் காயப்படுத்தும் நோக்கத்துடன் அல்லது அவர்களின் மதத்தை அவமதிக்கும் நோக்கத்துடன் கல்லறை அல்லது இறுதிச்சடங்குகளை நடத்தும் இடங்களில் அத்துமீறி நுழைவதையும் இறுதிச் சடங்குகளுக்காக கூடியிருப்பவர்களுக்கு

46 மேற்சொன்னபடி, உறுப்புரை 27(11)

47 இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவை (1883 ஆம் ஆண்டின் கட்டளை எண் 2), பிரிவு 290

48 மேலே குறிப்பிடப்பட்டது - பிரிவு 291

இடையூறு விளைவிப்பதும் பிரிவு 292 இன் கீழ் வருகின்றது.[49]

## 2.2 தொல்பொருள் கட்டளைச் சட்டம்

தொல்பொருள் கட்டளைச் சட்டம், "இலங்கையின் தொல்பொருட்களையும், இலங்கையில் வரலாற்று அல்லது தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த தளங்கள் மற்றும் கட்டடங்களையும் சிறப்பாகப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது[50]." குறிப்பாக, பழங்காலப் பொருட்களைத் திருடுவதை அவசரச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாக பிரிவு 15A கருதுகின்றது. பிரிவு 15B இன் பிரகாரம் எந்தவொரு பழங்காலப் பொருளையும் வேண்டுமென்றே அழிப்பது, காயப்படுத்துவது, சிதைப்பது அல்லது அதன் எந்தப் பகுதியையும் வேண்டுமென்றே சேதப்படுத்துவது[51] குற்றமாகும். பிரிவு 15C இன் கீழ், இந்த சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் பிணையில்[52] விடுவிக்கப்பட மாட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சட்டமும் மத முக்கியத்துவம் வாய்ந்த தளங்கள் மற்றும் கட்டடங்களைப் பாதுகாப்பதாகவும், அதனால் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் பாதுகாப்பிற்கு பங்களிப்பதாகவும் தோன்றினாலும், சட்டத்தின் விதிகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை உன்னிப்பாகப் பார்ப்பது அதன் சுரண்டலுக்கான சாத்தியக்கூறுகளை வெளிப்படுத்துகின்றது. (தேசியவாதத்தின் ஒரு வடிவத்தை மேலும் வளர்ப்பதில் தொல்பொருள் சட்டத்தின் பயன்பாடு குறித்த அத்தியாயம் 2, பிரிவு 2 ஐப் பார்க்கவும்).

## 2.3 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இல. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்

வன்முறைச் செயல்கள், மத, இன அல்லது வகுப்புவாத ஒற்றுமையின்மை, அல்லது வெவ்வேறு சமூகங்கள் அல்லது இன அல்லது மதக் குழுக்களிடையே வெறுப்பு அல்லது பகைமை உணர்வுகளை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்த விரும்பும் ஒருவர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 2(1)(h) பிரிவின் படி குற்றவாளியாகக்[53] கருதப்படுவார்.

குற்றம் எவ்வளவு பரந்த அளவில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதற்காக இந்தப் பிரிவு விமர்சிக்கப்பட்டாலும்[54], சிறுபான்மை சமூகங்களைக் குறிவைக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதையும், தேவையற்ற நீடித்த மற்றும்/அல்லது எதேச்சதிகார தடுப்புக்காவலுக்கு வசதி செய்தல் மற்றும் சித்திரவதையின்[55] கீழ் ஒப்புதல்

49 மேலே குறிப்பிடப்பட்டது - பிரிவு 292

50 தொல்பொருள் கட்டளைச் சட்டம் (திருத்தப்பட்டது)

51 தொல்பொருள் கட்டளைச் சட்டம் (திருத்தப்பட்டது) பிரிவு 15A மற்றும் 15B

52 தொல்பொருள் கட்டளைச் சட்டம் (திருத்தப்பட்டது) பிரிவு 15C

53 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இல. பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம், பிரிவு 2(1)(h)

54 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இலங்கையில் வெறுப்புப் பேச்சுக்கான பொறுப்புடைமையை எதிர்கொள்ளுதல்: சட்டக் கட்டமைப்பின் மீதான விமர்சனம், (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், CPA 3 செப்டம்பர் 2018), https://www.cpalanka.org/confronting-accountability-for-hate-speech-in-sri-lanka-a-critique-of-the-legal-framework/

55 "சட்டக் குழப்பத்தில் – பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை சீர்திருத்துவதில் இலங்கையின் தோல்வி," மனித உரிமைகள் கண்காணிப்பகம் (2022) பக்கம் 2, மிமி அல்போன்சஸ், "சமீபத்திய தடுப்புக்காவல்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்வது குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்த

வாக்குமூலங்களை வாங்க அனுமதித்தல் போன்ற மனித உரிமைகள் உத்தரவாதங்களை மீறும் சட்டத்தின் பிற முக்கிய அம்சங்களிலிருந்து இதைப் பிரிக்க முடியாது என்பதையும் கருத்தில் கொண்டு இது ஆராயப்பட வேண்டும்.

FoRB தொடர்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பயன்பாட்டின் தாக்கம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து நடந்த கைதுகளின் எண்ணிக்கையில் மிகத் தெளிவாகக் காணப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் குறித்த மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் 2022 ஆம் ஆண்டு அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டது, "மனித உரிமைகள் கண்காணிப்பகம் மதிப்பாய்வு செய்த நீதிமன்றத் தாக்கல்களின்படி, கைது செய்யப்பட்டதிலிருந்து 2 ஆண்டுகளுக்கும் மேலாக தடுப்புக்காவலில் இருக்கும் சந்தேக நபர்களில் சிலர், முஸ்லிம்கள் என்பதைத் தவிர வேறு எந்த வெளிப்படையான காரணத்திற்காகவும் கைது செய்யப்படவில்லை"[56].

இந்தக் கைதுகளில், தற்கொலை குண்டுதாரிக்கு உதவியதற்காக ஆரம்பத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வழக்கறிஞர் ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவும் ஒருவர். ஆனால் பின்னர் "வகுப்பு ஒற்றுமையைச் சீர்குலைத்ததாக"[57] குற்றஞ்சாட்டப்பட்டார். இந்தப் பிரிவுடன் தொடர்புடைய பிற முக்கிய கைதுகளில் கவிஞர் அஃனாப் ஜசீமும் ஒருவர். தனது கவிதைத் தொகுப்பின் மூலம் "மதத் தீவிரவாதத்தை" ஊக்குவித்ததாகவும், தனது மாணவர்களிடையே தீவிரவாதத்தை ஊக்குவித்ததாகவும்[58] அவர் கைது செய்யப்பட்டார். மேலும் ஷாரியா சட்டம் தொடர்பான அறிக்கையின் அடிப்படையில் வகுப்புவாத ஒற்றுமையைச் சீர்குலைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட அசாத் சாலியும் இதில் அடங்குவார். அசாத் சாலி உண்மையில் அத்தகைய கருத்தை[59] குறிப்பிடவில்லை என்று உயர் நீதிமன்றம் பின்னர் கண்டறிந்தது. மூன்று சம்பவங்களிலும் நடந்த கைதுகளுக்கு போதுமான நம்பகமான ஆதாரங்கள் இல்லை.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கு மாற்றாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மார்ச் 2023 வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இது மீளப் பெறப்பட்டு மீண்டும் செப்டம்பர் 2023 இல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. மேலும் ஜனவரி 2024 பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பயங்கரவாதத்தைச் சுற்றியுள்ள கேள்விகளை ஒழுங்குபடுத்துவதற்கான "மிகவும் மனிதாபிமான" சட்டமாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் முன்மொழியப்பட்ட போதிலும், பயங்கரவாதம் என்பதற்கான பரந்த விளக்கம், தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக்காவலுக்கு எதிரான பாதுகாப்புகள் இன்மை, விசாரணைக்கு முன்னர் தேவையற்ற நீண்ட தடுப்புக்காவலை அனுமதித்தல், தடுப்புக்காவலில் வைக்கப்படும் இடங்களை அணுகுவதில் காணப்படும் வரம்புகள் போன்றவைக்காக[60] கடும் விமர்சனங்களை எதிர்கொண்டது. பிப்ரவரி 2024 சிறப்புத்

கவலைகளை எழுப்புகின்றன" சன்டே டைம்ஸ், டிசம்பர் 8 2024, https://www.sundaytimes.lk/241208/news/recent-detentions-raise-concerns-over-govt-stance-on-repealing-pta-580163.html

56 மனித உரிமைகள் கண்காணிப்பகம். "சட்டக் குழப்பத்தில் – பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைச் சீர்திருத்துவதில் இலங்கையின் தோல்வி."40,41

57 மேற்சொன்னபடி 42

58 "பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் 18 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த கவிஞர் அஃனாப் விடுவிக்கப்பட்டார்", நியூஸ்வயர், டிசம்பர் 12, 2023, https://www.newswire.lk/2023/12/12/poet-ahnaf-detained-for-18-months-under-pta-acquitted/

59 "சட்டக் குழப்பத்தில் - பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைச் சீர்திருத்துவதில் இலங்கையின் தோல்வி." 38

60 ஆஸ்திரேலிய அரசாங்கம், வெளியுறவு மற்றும் வர்த்தகத் திணைக்களம், நாட்டுக்கான தகவல் அறிக்கை - இலங்கை (2 மே 2024) பிரிவு 4.42

தீர்மானத்தின் படி, இலங்கை அரசியலமைப்புடன் பொருந்துவதற்கு பல திருத்தங்கள் அவசியம் என்று குறிப்பிடப்பட்டது.

## 2.4 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இல. ICCPR

ICCPR சட்டத்தின் பிரிவு 3(1) "எந்தவொரு நபரும் போரைப் பரப்பவோ அல்லது பாகுபாடு, விரோதம் அல்லது வன்முறையைத் தூண்டும் தேசிய, இன அல்லது மத வெறுப்பை ஆதரிக்கவோ கூடாது" என்று கூறுகின்றது.

பாகுபாடு, விரோதம் மற்றும் வன்முறைக்கு எதிரான பாதுகாப்பிற்கு பங்களிப்பதாகத் தோன்றும் நேரடியான உரை இருந்தபோதிலும், இந்த விதி மனித உரிமைகளை நியாயமற்ற முறையில் கட்டுப்படுத்தும்[61] வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின்[62] உள்ளூர் சட்டங்களில் முன்னர் உள்ளடக்கப்படாத ICCPR இல் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ICCPR சட்டம் உருவாக்கப்பட்டது. எனவே இதன் விதிகளைப் பயன்படுத்துவது சட்டத்தின் தவறான பயன்பாடாகும். இந்தச் சட்டம் "அடக்குமுறையின் கருவியாக" செயல்படுவதாகவும், சிறுபான்மையினரைக் குறிவைப்பதாகவும், நடைமுறையில் தெய்வ நிந்தனைச் சட்டமாகச் செயல்படுவதாகவும் பெயர் பெற்றுள்ளது.[63]

இந்தப் பிரிவின் கீழ் செய்யப்பட்ட கைதுகள் மேலே குறிப்பிடப்பட்டவற்றை விளக்குகின்றது. (நகைச்சுவை நடிகர் நடாஷா எதிரிசூரிய, யூடியூபர் புருனோ திவாகரா மற்றும் சுவிசேஷ போதகர் ஜெரோம் பெர்னாண்டோ ஆகியோர் சம்பந்தப்பட்ட சமீபத்திய வழக்குகளில் ICCPR இன் பயன்பாடு குறித்து அத்தியாயம் 2, பிரிவு 3 ஐப் பார்க்கவும்.)

ICCPR ஐ தவறாகப் பயன்படுத்துவதைச் சுட்டிக்காட்டி, மனித உரிமைகள் குழுக்கள், அந்த மொழி "அதிர்ச்சியூட்டுவதாகவோ, புண்படுத்துவதாகவோ அல்லது தொந்தரவாகவோ இருந்தாலும், அது அரசாங்கத்தால் பாதுகாக்கப்பட வேண்டும்" என்றும், "மற்றவர்களிடம் பாகுபாடு காட்ட, விரோதமாக இருக்க அல்லது வன்முறையில் ஈடுபடத் தூண்டும் நோக்கத்தை" காட்டும் மொழிக்கு இடையில் வேறுபடுத்தப்பட வேண்டும்[64] என்றும் எடுத்துரைத்துள்ளன.

திருகோணமலையில் நினைவேந்தல் நிகழ்வில் ஈடுபட்டதற்காகவும், காவல்துறை அதிகாரி ஒருவரைத் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவத்திற்காகவும் நான்கு பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட சம்பவத்தில் பிரிவு 3 தவறாகப் பயன்படுத்தப்பட்டது தொடர்பாக பொலிஸ் மா அதிபருக்கு மே 2024 திகதியிட்ட கடிதத்தில், இந்தப் பிரிவு "பெரும்பாலும் நடைமுறையில் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது" என்பதை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும்

https://www.dfat.gov.au/sites/default/files/country-information-report-sri-lanka.pdf; ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகரின் செய்தித் தொடர்பாளர்: ரவினா ஷம்தாசனி, "பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தைத் திருத்த இலங்கைக்கு அழைப்பு",

61 கெஹான் குணதிலக்க, "இலங்கையில் மனித உரிமைகள் சட்டம் எவ்வாறு அடக்குமுறைக்கான கருவியாக மாறியது," ஹிமல் சவுத் ஏசியன், 07 பிப்ரவரி 2023, https://www.himalmag.com/politics/iccpr-human-rights-law-repression-blasphemy-sri-anka

62 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இல. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டம்

63 கெஹான் குணதிலக்க, "இலங்கையில் மனித உரிமைகள் சட்டம் எவ்வாறு அடக்குமுறைக்கான ஒரு கருவியாக மாறியது."

64 சர்வதேச மன்னிப்புச் சபை, தெற்காசியா, பிராந்திய அலுவலகம் (@amnestysasia), "...நேற்று மாலை நகைச்சுவை நடிகர் நடாஷா எதிரிசூரிய கைது செய்யப்பட்டது கவலையளிக்கின்றது. கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை அனைத்து வகையான தகவல்களுக்கும் கருத்துக்களுக்கும் பொருந்தும், இதில் ஆழமாக புண்படுத்தக்கூடியவையும் அடங்கும்...", ட்விட்டர், அக்டோபர் 22, 2024, https://twitter.com/amnestysasia/status/1663080845890969600.

(HRCSL) அங்கீகரித்துள்ளது. தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு பிணை வழங்கப்பட்டதை ஒப்புக்கொண்ட HRCSL, வழக்கு நடவடிக்கைகளில் இருந்து ICCPR இன் பிரிவு 3 நீக்கப்பட்டதன் காரணமாக மட்டுமே அத்தகைய பிணை சாத்தியமானது என்று மேலும் சுட்டிக்காட்டியது[65].

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் இந்தச் சட்டத்தை நியாயமற்ற முறையில் பயன்படுத்த முடிந்ததற்குப் பங்களிக்கும் இரண்டு அம்சங்களை கலாநிதி கெஹான் குணதிலக்க அடையாளம் கண்டுள்ளார். முதலாவதாக, பிரிவு 3, மூன்று வெவ்வேறு வகையான தூண்டுதல்களை (பாகுபாட்டைத் தூண்டுதல், விரோதத்தைத் தூண்டுதல் மற்றும் வன்முறையைத் தூண்டுதல்) உள்ளடக்கியிருந்தாலும், மூன்று வெவ்வேறு வடிவங்களுக்கும் ஒரேமாதிரியான தண்டனையே உள்ளது என்பதை அவர் எடுத்துக்காட்டுகின்றார். ஒவ்வொரு வகையான தூண்டுதலுக்கும் பொருத்தமான தண்டனையை வழங்குவதற்கான வாய்ப்பை அரசாங்கம் பயன்படுத்தவில்லை. உதாரணமாக, ஒளிபரப்பு உரிமத்தை இரத்து செய்வது அல்லது சமூக ஊடகக் கணக்கைக் கட்டுப்படுத்துவது பாகுபாட்டைத் தூண்டுவதற்கு அல்லது விரோதத்தைத் தூண்டுவதற்குப் பொருத்தமான தண்டனையாக இருந்திருக்கலாம்[66] என்று அவர் விளக்குகின்றார்.

இரண்டாவதாக, பிரிவு 3(4) இல் குற்றம் கட்டமைக்கப்பட்ட விதத்தை கலாநிதி குணதிலக்க எடுத்துக்காட்டுகின்றார். அதாவது குற்றம் "நீதிமன்ற உத்தரவு இன்றி கைது செய்யப்படக்கூடியதும், பிணை பெற முடியாததாகவும் இருக்கும். அவ்வாறான குற்றத்திற்காகச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட எந்தவொரு நபரும் விதிவிலக்கான சூழ்நிலைகளில்[67] உயர் நீதிமன்றத்தால் தவிர பிணையில் விடுவிக்கப்பட முடியாது. இந்தக் குற்றத்திற்காக கைது செய்யப் பிடியாணை தேவையில்லை என்பதும், பிணையில் விடுவிக்கப்பட முடியாது என்பதும் சம்பந்தப்பட்ட சந்தேக நபர் கைது செய்யப்படுவது மட்டுமல்லாமல், தகுந்த ஆதாரங்கள், வழக்கு விசாரணை அல்லது குற்றம் நிரூபிக்கப்படாமல் தடுத்து வைக்கப்படக்கூடிய நிலையை ஏற்படுத்துகின்றது[68].

ஆகஸ்ட் 2019 இல், வெறுப்புப் பேச்சுச் சட்டத்தின் பயன்பாடு குறித்த கவலைகளுக்கு பதிலளிக்கும் விதமாக, HRCSL அதன் சொந்த பகுப்பாய்வு மற்றும் வழிகாட்டுதலை[69] வகுத்தது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ரபாத் செயல் திட்டத்தை எடுத்துக்காட்டுவதுடன் ICCPR சட்டத்தின் பிரிவு 3 இன்[70] நோக்கத்தை தீர்மானிக்க இந்த சோதனையைப் பயன்படுத்த பரிந்துரைக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் (OHCHR)[71]

---

65 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் மா அதிபருக்கு, மே 20, 2024 அன்று எழுதிய கடிதம். https://www.hrcsl.lk/wp-content/uploads/2024/05/HRCSL-Letter-to-IGP-on-20-05-2024.pdf

66 கெஹான் குணதிலக்க, "இலங்கையில் மனித உரிமைகள் சட்டம் எவ்வாறு அடக்குமுறைக்கான ஒரு கருவியாக மாறியது."

67 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இல. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டம், பிரிவு 3(4)

68 கெஹான் குணதிலக்க, "இலங்கையில் மனித உரிமைகள் சட்டம் எவ்வாறு அடக்குமுறைக்கான ஒரு கருவியாக மாறியது."

69 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இல. ICCPR சட்டத்தின் பிரிவு 3 இன் நோக்கத்தின் சட்ட பகுப்பாய்வு மற்றும் உதவியாளர் பரிந்துரைகள், (இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, ஆகஸ்ட் 2019), https://www.hrcsl.lk/wp-content/uploads/2020/02/ICCPR-Act-s.-3-Guidelines-English.pdf. 1 அக்டோபர் 2024 அன்று அணுகப்பட்டது.

70 மேற்சொன்னபடி

71 தேசிய, இன அல்லது மத வெறுப்பைத் தூண்டுவதைத் தடை செய்வது தொடர்பான நிபுணர் பயிற்சி பட்டறைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகரின் அறிக்கை, (ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர், ஜனவரி 11, 2013) ஆகஸ்ட் 24, 2024 அன்று அணுகப்பட்டது, https://ohchr.org/sites/default/files/Rabat_draft_outcome.pdf.

முன்முயற்சியான ரபாத் செயல் திட்டம், சமூக மற்றும் அரசியல் **சூழல்**, பேச்சாளரின் **நிலை**, பார்வையாளர்களைத் தூண்டும் **நோக்கம்**, உரையின் **உள்ளடக்கம்** மற்றும் வடிவம், அதன் பரவலின் **அளவு** மற்றும் தீங்கு விளைவிக்கும் **சாத்தியக்கூறு** ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ICCPR இன் பிரிவு 20 ஐப் பயன்படுத்துவதற்கான உயர் வரம்பை பரிந்துரைக்கின்றது. ICCPR சட்டத்தின் பிரிவு 3, கருத்துச் சுதந்திரத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும், பிரிவு 3[72] தொடர்பான அரசாங்கத்தின் கடமைப்பாடுகளையும் வகுக்கின்றது என்றும் OHCHR அதன் பரிந்துரைகளில் கூறுகின்றது. இந்த வழிகாட்டுதல்களை உச்ச நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது[73].

HRCSL வழிகாட்டுதல்களின் விளைவாக, அனைத்துப் பொறுப்பாளர்களும் ICCPR சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் காவல்துறை பணிப்பாளர்/சட்டப் பிரிவின் ஆலோசனையின் பேரில் மட்டுமே விசாரணைகளை நடத்த வேண்டும் என்றும், காவல்துறை உத்தியோகத்தர் ஒருவர் இந்தச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்துவது ஒழுக்காற்று நடைமுறைக்கு[74] வழிவகுக்கும் என்றும் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, நடாஷா எதிரிசூரிய பற்றிய பிணை உத்தரவில் (ஜூலை 5, 2023) உயர் நீதிமன்ற நீதிபதி HRCSL வழங்கிய வழிகாட்டுதலை வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை என்றாலும், ICCPR சட்டத்தின் பின்னணியில் உள்ள நோக்கமாக பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்ட நோக்கத்தைக் கருத்தில் கொண்டார். அத்துடன் பிரிவு 3 இன் விளக்கத்தை கருத்து சுதந்திரத்துடன் இணைத்து, ரபாத் செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சோதனைகளுக்கு எதிராக நடந்த சம்பவம் மதிப்பீடு செய்யப்பட்டது. “ஒரு குறிப்பிட்ட தேசிய இனம், மதம் அல்லது குழுவின் உணர்வுகளைப் புண்படுத்தும் ஒரு அறிக்கையை வெளியிடுவது ICCPR சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் மட்டுமல்லாமல், தண்டனைச் சட்டக்கோவையின்[75] பிரிவு 291(a) இன் கீழும் நடவடிக்கை எடுக்க அனுமதிக்காது” என்று முடிவு செய்யப்பட்டது.

## 2.5 2024 ஆம் ஆண்டின் நிகழ்நிலை காப்பு சட்டம்

நிகழ்நிலை காப்புச் சட்டம் இயற்றப்பட்டது 2024 இல் நடந்த ஒரு முக்கியமான, ஆனால் சர்ச்சைக்குரிய, சட்ட முன்னேற்றமாகும். இந்தச் சட்டத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்களில் முதன்மையானது, அதன் விதிகள் கருத்து வெளிப்பாட்டை நியாயமற்ற முறையில் கட்டுப்படுத்துகின்றது என்பதாகும். இதனால் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்திற்கான உரிமை மீறப்படுவதுடன் கருத்து வேறுபாடுகளை அடக்குவதற்குப் பங்களிக்கின்றது. மேலும் மாறுபட்ட கருத்துகளை வெளிப்படுத்த விரும்புவோருக்கு மத்தியில் அச்சத்தை உருவாக்குகின்றது.[76] அவசர அவசரமாக சட்டம் நிறைவேற்றப்பட்ட விதம், சட்டமூலத்தை உருவாக்கும் போது

72 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இல. ICCPR சட்டத்தின் பிரிவு 3 இன் நோக்கத்தின் சட்ட பகுப்பாய்வு மற்றும் அதனுடன் தொடர்புடைய பரிந்துரைகள்.” (இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, ஆகஸ்ட் 2019)> https://www.hrcsl.lk/wp-content/uploads/2020/02/ICCPR-Act-s.-3-Guidelines-English.pdf. அணுகப்பட்டது 1 அக்டோபர் 2024.

73 SC (F.R) விண்ணப்ப இல. 135/2020

74 சுற்றறிக்கை இல. RTM 541

75 நடாஷா எதிரிசூரிய பிணை தீர்ப்பு, கொழும்பு உயர் நீதிமன்றம் வழக்கு இல: HCEBA/1335/2023

76 சுமுது சாமரா, “தி ஆன்லைன் (அன்)சே.ஃப்டி பில்”, தி மார்னிங், 05 அக்டோபர் 2023, கெஹான் குணதிலக மற்றும் எர்மிசா டெகல் மேற்கோள் காட்டப்பட்டது https://www.themorning.lk/articles/jRwvUbaNAi5mzPn5kz1m; மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இல. நிகழ்நிலை காப்பு சட்டம் குறித்த அறிக்கை, 07 பிப்ரவரி 2024 https://www.cpalanka.org/statement-on-the-online-safety-act-no-09-of-2024/

ரகசியமாக வைத்திருந்தது, சட்டமூலத்தைப் பெரும்பான்மையுடன் நிறைவேற்ற உச்சநீதிமன்றம் விதித்த தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யத் தவறியது ஆகியவை சட்டத்தின் ஆட்சி மற்றும் அதிகாரப் பிரிவினையில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தியது. அதே நேரம் சட்டத்தை நிறைவேற்றுவதில் அரசாங்கத்தின் நோக்கங்கள்[77] குறித்து சந்தேகத்தையும் எழுப்பியது.

இந்தச் சட்டத்தின் பிரிவு 16, மத உணர்வுகளை சீர்குலைக்கும் நோக்கத்துடன்[78], ஒரு வகுப்பினரின் மத நம்பிக்கைகளை அவமதிக்கும் அல்லது அவமதிக்க முயற்சிக்கும் ஒரு தவறான அறிக்கையை ஆன்லைனில் பகிர்வதைக் குற்றமாக வரையறுக்கின்றது. நிகழ்நிலை காப்பு சட்டத்தின் பிரிவு 15 இன் பிரகாரம் தண்டனைச் சட்டக்கோவையில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களை நிகழ்நிலை காப்பு சட்டமும் குற்றமாகக் கருதுகின்றது என்பதும் FoRB தொடர்பான கவலைகளில் ஒன்றாகும். உதாரணமாக, மத வழிபாடு அல்லது மதச் சடங்குகளில் சட்டபூர்வமாக ஈடுபடும் எந்தவொரு கூட்டத்திற்கும் தவறான அறிக்கையைத் தெரிவிப்பதன் மூலம் தாமாக முன்வந்து இடையூறு செய்வது ஒரு குற்றமாகும். அத்தகைய குற்றத்திற்கான தண்டனை மூன்று ஆண்டுகளுக்கு மிகைப்படாத சிறைத்தண்டனை, மூன்று லட்சம் ரூபாய்க்கு மிகைப்படாத அபராதம் அல்லது சிறைத்தண்டனை மற்றும் அபராதம் ஆகிய இரண்டும் ஆகும். இந்த ஏற்பாடு "இலங்கை அல்லது இலங்கைக்கு வெளியே"[79] குற்றவாளி இருந்தாலும் பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

தேவையில்லாமல் குற்றங்களை மீண்டும் குறிப்பிடுவதுடன், எந்தச் சட்டம் பொருந்தும் என்பதில் குழப்பத்தை ஏற்படுத்துவதுடன், OSA கடுமையான தண்டனைகளையும் வழங்குகின்றது. ஒரே மாதிரியான குற்றங்களுக்கு வெவ்வேறு சட்டங்களின் கீழ் வெவ்வேறு தண்டனைகள் இருக்கும்போது, காவல்துறையும் வழக்கைத் தீர்மானிக்கும் மற்றவர்களும் சந்தேக நபருக்கு எதிராக எந்தச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும்[80] என்பதைத் தெரிவு செய்கின்றார்கள் என்று எர்மிசா டெகல் விளக்குகின்றார்.

இந்தச் சட்டத்தை தனியாகப் பார்க்காமல், இலங்கை சமீபத்தில் இதே போன்ற சட்டங்களை எவ்வாறு பயன்படுத்தியது என்பதன் அடிப்படையில் புரிந்து கொள்ள வேண்டும் என்று விமர்சகர்கள் கூறுகின்றனர். இந்தச் சட்டம் சர்வதேச மனித உரிமைகளைப் பின்பற்றுவது போல் தோன்றினாலும், அது சில குழுக்கள் அல்லது மக்களுக்கு நியாயமற்ற முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது, பெரும்பாலும் அவர்களின் உரிமைகளைப் பாதிக்கின்றது.[81]

நவம்பர் 2024 பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, OSA வை மாற்றத் திட்டமிட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது.[82]

---

77 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இல. நிகழ்நிலைப் காப்பு சட்டம் குறித்த அறிக்கை.

78 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இல. நிகழ்நிலைப் காப்பு சட்டம், பிரிவு 16

79 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இல. நிகழ்நிலை காப்பு சட்டம், பிரிவு 15

80 சுமுது சாமரா, "தி ஒன்லைன் (அன்)சேப்டி பில்"

81 மேற்சொன்னபடி

82 "நிகழ்நிலை காப்பு சட்டமூலம்: அரசின் நிலைப்பாட்டை அறிவிக்கின்றது", நியூஸ்வயர், 06 நவம்பர் 2024 https://www.newswire.lk/2024/11/06/online-safety-bill-govt-announces-stance/

## 2.6 ஏனைய கருவிகள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் பாதுகாப்பு விடயங்களை விவாதிப்பதுடன், FoRB ஐ வெளிப்படையாகப் பாதிக்கின்றன. அதேநேரம் பாதுகாப்பு மற்றும் அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் பிரச்சினைகளைக் கையாளும் சட்டங்கள் FoRB ஐ மறைமுகமாகப் பாதிக்கலாம்.

தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 483, “குற்றவியல் மிரட்டலை”[83] குற்றமாகக் குறிப்பிடுகின்றது. 1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இல. பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 79(2) (திருத்தப்பட்டது) அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் சூழ்நிலைகளைக் கையாள்கின்றது.[84] 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இல. கணினி குற்றச் சட்டத்தின் பிரிவு 6(1) கணினியைப் பயன்படுத்தி[85] முன்னெடுக்கப்படும் தேசியப் பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கிற்கு எதிரான குற்றங்களை உள்ளடக்கியது. 1947 ஆம் ஆண்டின் 25 ஆம் இல. [86]பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படக்கூடிய அவசரகால விதிமுறைகள், அத்துடன் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இல.[87] குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 81 (திருத்தப்பட்டது) மற்றும் 1970 ஆம் ஆண்டின் 44 ஆம் இல. ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கை முறைச் சட்டத்தின் பிரிவு 66(1) (திருத்தப்பட்டது) ஆகியவை அமைதி மீறல்[88] ஏற்பட்டால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்பதை விபரிக்கின்றன. சில பாதுகாப்புச் சட்டங்கள், மதத்துடன் நேரடியாகத் தொடர்புறா விட்டாலும், FoRB உடன் தொடர்புடையவை. அவை மக்கள் தங்கள் மதத்தை அமைதியாகப் பின்பற்றும் உரிமையைப் பாதுகாக்க உதவுகின்றன, அதே நேரத்தில் யாரும் மதம் அல்லது நம்பிக்கையைப் பயன்படுத்தி பாதுகாப்பு அச்சுறுத்தல்களை உருவாக்க முடியாது என்பதையும் உறுதி செய்கின்றன.

# 3. FoRB மற்றும் கருத்தை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் (FoE)

மத சுதந்திரம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் (FoRB) பல வழிகளில் கருத்து சுதந்திரத்துடன் (FoE) நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. முதலாவதாக, ஒருவரின் மதத்தை முழுமையாக வெளிப்படுத்தவும் பின்பற்றவும் FoE அவசியம். இரண்டாவதாக, இலங்கை சட்டத்தில் மதத்தை அவமதிப்பதாகக் கருதப்படும் வெளிப்பாடு பெரும்பாலும் மத உணர்வுகளைப் பாதுகாப்பதற்காக மட்டுமே கட்டுப்படுத்தப்படுகின்றது. மூன்றாவதாக, மதம் அல்லது அதைப் பின்பற்றுபவர்கள் பற்றிய வெளிப்பாடு, பாகுபாடு அல்லது வன்முறையைத் தூண்டுவதைத் தடுப்பதற்காகவும் மட்டுப்படுத்தப்படலாம்.

---

83 இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவை, பிரிவு 483

84 1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இல. பொலிஸ் கட்டளை (திருத்தப்பட்டது), பிரிவு 79(2)

85 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இல. கணினி குற்றச் சட்டம், பிரிவு 6(1)

86 1947 ஆம் ஆண்டின் 25 ஆம் இல. பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டம்

87 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இல. குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்தப்பட்டது), பிரிவு 81

88 1970 ஆம் ஆண்டின் 44 ஆம் இல. ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கை முறைச் சட்டம் (திருத்தப்பட்டது), பிரிவு 66(1)

மேலே உள்ள அனைத்து உதாரணங்களும் வெவ்வேறு உரிமைகள் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன மற்றும் சமநிலையில் இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றன. சில நேரங்களில் அவை ஒன்றையொன்று ஆதரிக்கின்றன, மற்ற நேரங்களில் அவை ஒன்றோடொன்று மோதுகின்றன. சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் அரசியலமைப்பில் உள்ள இலங்கையின் அடிப்படை உரிமைகள் கட்டமைப்பின் கீழ், குறிப்பிட்ட காரணங்களுக்காக கருத்துச் சுதந்திரம் (FoE) மற்றும் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் (FoRB) இரண்டிலும் கட்டுப்பாடுகளை விதிக்க அனுமதிக்கப்படுகின்றது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இலங்கை அரசியலமைப்பின் பிரிவு 15(7) இன் பிரகாரம்," தேசியப் பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொது சுகாதாரம் அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாத்தல், மற்றவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கு மதிப்பளிப்பதை உறுதி செய்தல் அல்லது ஒரு ஜனநாயக சமூகத்தின்[89] தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்ற காரணங்களுக்காக சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்டால், FoE மற்றும் FoRB மீதான கட்டுப்பாடுகள் அனுமதிக்கப்படுகின்றன. மேலும், பிரிவு 15(2) இன் கீழ், இன மற்றும் மத நல்லிணக்கத்தைப் பேணுவதற்கும், அவதூறு அல்லது குற்றங்களைச் செய்யத் தூண்டுவதைத் தடுப்பதற்கும் FoE சட்டத்தால் கட்டுப்படுத்தப்படலாம்.[90]

## 3.1 மதத்தின் வெளிப்பாடு

ஒருவரின் மதம் அல்லது நம்பிக்கையை "வழிபாடு, அனுசரிப்பு, நடைமுறை மற்றும் கற்பித்தல் ஆகியவற்றில்"[91] வெளிப்படுத்தும் உரிமை கருத்து சுதந்திரத்தின் முக்கியமான அங்கமாக உள்ளது. எனினும், புதிய சட்டங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகள் இந்தத் திறனில் வரம்புகளை விதித்துள்ளன.

பொதுமக்களுக்குத் தொந்தரவை ஏற்படுத்தும் போது ஒலி அளவுகள் மீதான கட்டுப்பாடுகள், மத நடைமுறைகளை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பதற்கான ஓர் உதாரணம் ஆகும். பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 80, மக்களைப் பாதிக்கும் சத்தம் குறித்த விதிகளை வகுக்கின்றது. ஒலி அளவு மிகவும் அதிகமாக இருந்தால் அல்லது பொதுமக்களுக்கு தொந்தரவாக இருந்தால்[92] ஒலியைக் குறைக்க நடவடிக்கை எடுக்க அனுமதிக்கின்றது. தலைமை நீதிபதி சரத் சில்வாவால் ஒலி மாசுபாடு வழக்கில் (ஆஷிக் எதிர் பந்துல மற்றும் பிறர்) இது தெளிவாக விளக்கப்பட்டது. "மத நடைமுறையின் அடிப்படையில் சிலருக்கு ஏற்படும் வசதி அல்லது நன்மை என்பது, பொதுமக்களுக்கோ அல்லது சுற்றுப்புறத்தில்[93] வசிப்பவர்களுக்கோ எரிச்சலை ஏற்படுத்தும் பொதுத்தொல்லைக்கு ஒரு சாக்காக இருக்க முடியாது" என்று அவர் குறிப்பிட்டார். இதேபோன்று, 2016 ஆம் ஆண்டில் காலை 5 மணி முதல் காலை 6 மணி வரை[94] கோயில் ஒன்றில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவது தொடர்பாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

89 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978, உறுப்புரை 15(7)

90 மேற்சொன்னபடி பிரிவு 15 (2)

91 மேற்சொன்னபடி பிரிவு 14(e)

92 1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இல. பொலிஸ் கட்டளை (திருத்தப்பட்டது) சட்டம், பிரிவு 80

93 ஆஷிக் எதிர் பந்துல மற்றும் பிறர் (ஒலி மாசுபாடு வழக்கு) SC FR 38/2005

94 ஒலி மாசுபாடு வழக்கு MC 64172/6/1

## 3.2 மத உணர்வுகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு

இலங்கையில் ஒரு குறிப்பிட்ட மதத்தை அவமதிப்பதாகக் கருதக்கூடிய எதையும் வெளிப்படுத்துவதைக் குற்றமாக்குவதன் மூலம் சட்டக் கட்டமைப்பு மத உணர்வுகளுக்கு சிறப்புப் பாதுகாப்பை வழங்குகின்றது.

உதாரணமாக, எந்தவொரு வகுப்பினரின் மதத்தையும்[95] அவமதிக்கும் நோக்கத்துடன் வழிபாட்டுத் தலங்களுடன் தொடர்புடைய செயல்களை தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 290A குற்றமாக்குகின்றது. ஒரு நபரின் மத உணர்வுகளை வேண்டுமென்றே புண்படுத்தும் நோக்கத்துடன் ஏதேனும் வார்த்தையை உச்சரிப்பது அல்லது அந்த நபரின் செவிகளில் விழுமாறு ஏதேனும் ஒலியை உண்டாக்கினாலும், அந்த நபரின் பார்வையில் ஏதேனும் சைகை செய்தாலும் அல்லது அந்த நபரின் பார்வையில் ஏதேனும் பொருளை வைத்தாலும் 291A இன் பிரகாரம் குற்றமாகக் கருதப்படுகின்றது[96]. இறுதியாக, பிரிவு 291B, "எந்தவொரு வகுப்பினரின் மத உணர்வுகளையும் அவர்களின் மதம் அல்லது நம்பிக்கையை அவமதிப்பதன் மூலம் புண்படுத்தும் நோக்கிலான திட்டமிட்ட மற்றும் தீங்கிழைக்கும் நடவடிக்கைகளுக்கு" குற்றவாளியாக்குகின்றது. இது பேசப்பட்ட வார்த்தைகள், எழுதப்பட்ட வார்த்தைகள் அல்லது கண்ணுக்குத் தெரியும் பிரதிநிதித்துவங்கள்[97] மூலமாக இருக்கலாம். (மார்ச் 2024 இல் வண. ஞானசார தேரர் சம்பந்தப்பட்ட வழக்கில் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 291 (b) ஐப் பயன்படுத்துவது குறித்து அத்தியாயம் 2, பிரிவு 3 ஐப் பார்க்கவும்.) இந்த விதிகள் "நிந்தனை மீதான நடைமுறைத் தடை"[98] என்று விமர்சிக்கப்பட்டுள்ளன.

தண்டனைச் சட்டக்கோவைக்கு மேலதிகமாக, 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இல. இலங்கைப் பத்திரிகை பேரவை சட்டத்தின் (திருத்தப்பட்டது) பிரிவு 15 இன் பிரகாரம், தவறான விடயம் அல்லது இரத்துச் செய்யப்பட்டது அல்லது பொது ஒழுக்கத்தைக் காயப்படுத்தும் எந்தவொரு விளம்பரம் அல்லது ஏதேனும் அநாகரிகமான அல்லது ஆபாசமான விடயம் போன்றவற்றை எந்தவொரு பத்திரிகையில் பிரசுரிக்கும் அல்லது பிரசுரிப்பதற்குக் காரணமான ஒவ்வொரு நபரும் குற்றவாளியாகக் கருதப்படுவார். "தவறான விடயம்" என்பது எந்தவொரு மதம் அல்லது எந்தவொரு மதத்தின் ஸ்தாபகர், எந்தவொரு மதத்தையும் பின்பற்றுபவர்களால் வணங்கப்படும் தெய்வம் அல்லது துறவியையும் அவமதிக்கும் நோக்கம் கொண்ட எந்தவொரு விடயமாக வரையறுக்கப்படுகின்றது. "அநாகரிகமான அல்லது ஆபாசமான விடயம்" என்பது "தொடர்புடைய அனைத்துக் காரணிகளையும் கருத்தில் கொண்டு அதைப் பார்த்தாலோ, படித்தாலோ மக்களை ஒழுக்க ரீதியாக மோசமாக்கும்"[99] என்று வரையறுக்கப்படுகின்றது.

---

95 இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவை, பிரிவு 290A

96 மேற்சொன்னபடி 291 A

97 மேற்சொன்னபடி 291 B

98 சுமுது சாமர, "சட்டங்கள் மதத்தை எவ்வளவு நிர்வகிக்க வேண்டும்?", தி மார்னிங், 13 டிசம்பர் 2021, கெஹான் குணதிலக்க மேற்கோள் காட்டப்பட்டது, https://www.themorning.lk/articles/178996

99 இலங்கைப் பத்திரிகை பேரவை சட்டம் (1973 ஆம் ஆண்டின் இல. 5), பிரிவு 15

## 3.3 பாகுபாடு மற்றும் வன்முறையைத் தூண்டுவதிலிருந்து பாதுகாக்க FoE ஐக் கட்டுப்படுத்துதல்

பாகுபாடு மற்றும் வன்முறையைத் தூண்டுவதிலிருந்து தடுக்க, குறிப்பாக மதம் தொடர்பானவற்றைத் தடுக்க, கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை பல சட்டங்கள் அங்கீகரிக்கின்றன.

முன்னர் குறிப்பிட்டபடி, வெவ்வேறு சமூகங்கள் அல்லது இன அல்லது மதக் குழுக்களுக்கு இடையே வன்முறை அல்லது மத, இன அல்லது சமூகத்தில் ஒற்றுமையின்மை அல்லது மோசமான உணர்வுகள் அல்லது விரோதத்தைத் தூண்ட விரும்பும் எந்தவொரு நபரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 2(1)(h) இன் கீழ் குற்றம் புரிந்தவராகக் கருதப்படுவார். இது பேசும் அல்லது எழுதப்பட்ட வார்த்தைகள், அடையாளங்கள் அல்லது புலப்படும் பிரதிநிதித்துவங்கள் அல்லது வேறு ஏதேனும் வழிகளில்[100] இருக்கலாம். அந்தச் சட்டத்தின் பிரிவு 14(2)(a)(ii) இன் பிரகாரம், வெவ்வேறு சமூகங்கள் அல்லது இன அல்லது மதக் குழுக்களுக்கு இடையே வன்முறை அல்லது மத, இன அல்லது சமூகத்தில் ஒற்றுமையின்மை அல்லது மோசமான உணர்வுகள் அல்லது விரோதத்தைத் தூண்டும் வகையில் எந்தவொரு விடயத்தையும் சம்பந்தப்பட்ட அதிகாரசபையின் எழுத்து மூலமான ஒப்புதல் இன்றி எந்தவொரு நபரும் பத்திரிகையில் அச்சிடவோ வெளியிடவோ முடியாது.[101] ICCPR சட்டத்தின் பிரிவு 3(1) எந்தவொரு நபரும் பிரச்சாரம் செய்யக்கூடாது அல்லது பாகுபாடு, விரோதம் அல்லது வன்முறையைத் தூண்டும் தேசிய, இன அல்லது மத வெறுப்பை[102] ஆதரிக்கவோ கூடாது என்று கூறுகின்றது.

இதேபோன்று, பாகுபாடு, விரோதம் மற்றும் வன்முறையைத் தூண்டுவதையோ அல்லது ஆதரிப்பதையோ தடைசெய்யும் சட்டங்கள், மதம் தொடர்பான கருத்துச் சுதந்திரத்தையும் (FoE) கட்டுப்படுத்துகின்றன.[103]

மேற்கூறிய காரணங்களுக்காக FoE மீதான கட்டுப்பாடுகள் ஏற்படலாம் என்றாலும், அத்தகைய கட்டுப்பாடுகள் அவசியமாக இருக்க வேண்டும், பரந்ததாக இருக்கக்கூடாது, அதற்கு பதிலாக விகிதாசாரமாக[104] இருக்க வேண்டும்.

---

100 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இல. பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம், பிரிவு 2(1)(h)

101 மேற்சொன்னபடி, பிரிவு 14(2)(a)(ii)

102 சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை, பிரிவு 3(1)

103 பொது அவசரகால நிலைமைகளிலும், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அமைதியின் நலனுக்காகவும் தொலைத்தொடர்பு பயன்பாட்டைத் தடைசெய்ய அல்லது கட்டுப்படுத்த அரசாங்கத்தின் அதிகாரத்தைக் குறிப்பிடும் 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இல. இலங்கை தொலைத்தொடர்புச் சட்டத்தின் (திருத்தப்பட்டது) பிரிவு 69 ஐயும் ஒரு உதாரணமாகப் பார்க்கவும்.

104 UN மனித உரிமைகள் குழு (HRC), பொது கருத்து எண். 34: உறுப்புரை 19 (கருத்து மற்றும் கருத்து சுதந்திரம்) CCPR/C/GC/34, 12 செப்டம்பர் 2011https://www.refworld.org/legal/general/hrc/2011/en/83764

## 3.4 மதத்தைத் திரிபுபடுத்துவதைத் தடுப்பதற்காக கருத்து சுதந்திரம் மீதான கட்டுப்பாடு

மதத்தைத் திரிபுபடுத்துவதை ஒழுங்குபடுத்த சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தும் திட்டங்கள் இருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்றாலும், அந்தச் சட்டம் எவற்றை உள்ளடக்கும் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

மதத்தை அவமதித்ததாக மக்கள் மீது குற்றம் சாட்டப்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து, மே 2023 இல், அப்போதைய புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, மத சுதந்திரம் மற்றும் உண்மைகளைத் திரிபுபடுத்தல்[105] தொடர்பான புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகக் கூறினார். ஜூன் 26, 2023 அன்று அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், மத சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும், மத போதனைகளை அவதூறு செய்வதைத் தடுப்பதற்கும் சட்டம் தேவை என்பதை அங்கீகரித்து மதத் தலைவர்கள், சட்ட வல்லுநர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடகங்கள்[106] அடங்கிய குழுவை நியமிப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஜனவரி 2024 இல் "மத போதனைகள் மற்றும் நடைமுறைகள் வேண்டுமென்றே திரிபுபடுத்தப்படுவதைத் தடுப்பதற்கும், சமூகங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும்" பாராளுமன்றத்தில்[107] சட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு கூறியது. 2024 மே 22 அன்று தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான பாராளுமன்ற ஒன்றியக் கூட்டத்தில், "பௌத்த தர்மத்தை திரிபுபடுத்துதல், புத்தர் பற்றிய கட்டுக்கதைகளைப் பரப்புதல் மற்றும் தேரர்களை இழிவுபடுத்தும்[108] பிரச்சாரம் ஆகியவற்றைத் தடுக்க தேவையான பரிந்துரைகளை ஒன்றியத்தின் மூலம் முன்வைக்க எதிர்பார்த்திருப்பதாக" குறிப்பிடப்பட்டது. அதேவேளை, தற்கொலை மறுபிறப்புக்கான விரைவான பாதை என்ற "மத போதனையால்" 7 பேர் தற்கொலை செய்துகொண்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்ட நிலையில், இவ்வாறான சட்டத்தை அறிமுகப்படுத்துவதை சிலர் ஊக்குவிக்கின்றனர். (அத்தியாயம் 2, பிரிவு 5[109] ஐப் பார்க்கவும்). டிசம்பர் 2024 இல் மத போதனைகள் மற்றும் நடைமுறைகளின் சிதைவை நிவர்த்தி செய்ய பௌத்த அறநிலையங்கள் சட்டத்தின் 42 மற்றும் 43 ஆவது பிரிவுகள் திருத்தப்பட உள்ளதாக[110] செய்தி அறிக்கைகள் தெரிவித்தன.

---

105 "மத சுதந்திரம் மற்றும் உண்மைகளைத் திரிபுபடுத்தல் தொடர்பாக புதிய சட்டம் கொண்டு வரப்படும் - அமைச்சர்" அத தெரண, மே 28 2023

106 2023.06.26 அன்று அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு https://www.cabinetoffice.gov.lk/cab/index.php?option=com_content&view=article&id=16&Itemid=49&lang=en&dID=12074

107 சஹ்றான் தென்னகோன், "மதத்தைத் திரிபுபடுத்துதல்: அரசாங்கம் புதிய சட்டத்தை இயற்ற வலியுறுத்துகின்றது", தி மார்னிங், 08 ஜனவரி 2024 https://www.themorning.lk/articles/b0iLnVccWmwV12IjSweD

108 "பௌத்த தர்மத்தை திரிபுபடுத்தல், சங்கக் கூட்டுத்தாபனத்தின் வீழ்ச்சி மற்றும் இலங்கை வரலாற்றைத் திரிபுபடுத்துவதைத் தடுப்பது தொடர்பில் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான பாராளுமன்ற ஒன்றியம் கவனம் செலுத்துகின்றது", parliament.lk, 31.05.2024

109 சஹ்றான் தென்னகோன், "மதத்தைத் திரிபுபடுத்துதல்: அரசாங்கம் புதிய சட்டத்தை இயற்ற வலியுறுத்துகின்றது."

110 மேற்சொன்னபடி

## 3.5 மதமாற்றம் மற்றும் பரப்புதல்

மதமாற்றம் என்பது "ஒருவரை அவர்களின் மதம் அல்லது அரசியல் நம்பிக்கைகள் அல்லது வாழ்க்கை முறையை உங்கள் மதத்திற்கு ஏற்றவாறு[111] மாற்ற முயற்சிப்பது" என்று வரையறுக்கப்படுகின்றது. அதுபோன்று, பரப்புதல் என்பது ஒருவரின் மதத்தை "அதன் கொள்கைகளை விளக்குவதன் மூலம்" பகிர்வது அல்லது பரப்புவதைக்[112] குறிக்கின்றது. அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது அனுமதிக்கப்படுகின்றதா மற்றும் அவை FoRB இன் கீழ் வருமா என்பது மிகவும் சர்ச்சைக்குரிய மற்றும் விவாதத்திற்குரிய கேள்வியாகும் (அத்தியாயம் 2, பிரிவு 3 ஐப் பார்க்கவும்).

ஒருவரின் மதம் அல்லது நம்பிக்கையை வழிபாடு, அனுசரிப்பு, நடைமுறை மற்றும் கற்பித்தல்[113] ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்தும் உரிமையை FoRB உள்ளடக்கியது. பிரிவு 18 இன் பொது கருத்து இல. 22 இன் பிரகாரம், மதம் அல்லது நம்பிக்கையின் நடைமுறை மற்றும் கற்பித்தலில் "மதக் குழுக்கள் தங்கள் முக்கிய செயல்பாடுகளை எவ்வாறு நிர்வகிக்கின்றன என்பதற்கு அவசியமான செயல்களும்" உள்ளடக்கப்பட்டுள்ளன. செமினரிகள் மற்றும் மதப் பாடசாலைகளை நிறுவுதல், மத நூல்கள் மற்றும் வெளியீடுகளைத் தயாரித்து விநியோகிக்கும் சுதந்திரம் ஆகியவை இந்தச் செயல்களுக்கு உதாரணங்களாக[114] வெளிப்படையாகக் குறிப்பிடப்படுகின்றன. இருப்பினும், ICCPR இன் பிரிவு 18(2), யாரும் தங்களுக்கு விருப்பமான மதம்/நம்பிக்கையைக் கொண்டிருக்கவோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ[115] உள்ள சுதந்திரத்தைப் பாதிக்கும் வற்புறுத்தலுக்கு ஆளாகக் கூடாது என்றும் கூறுகின்றது.

ஒருவரின் மதத்தையோ நம்பிக்கையையோ பிரச்சாரம் செய்ய இலங்கைச் சட்டத்தில் எந்த உரிமையும் இல்லை என்பது தெளிவாகின்றது. உதாரணமாக, யெகோவாவின் சாட்சிகள் வழக்கில், இலங்கையில் பிரஜைகள் தங்கள் மதத்தையோ நம்பிக்கைகளையோ பிரச்சாரம் செய்ய அரசியலமைப்பு ரீதியாகப் பாதுகாக்கப்பட்ட உரிமை இல்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இது தொடர்பாக நீதிமன்றம் S.C. தீர்மான இல. 2/2001 மற்றும் S.C. தீர்மான இல. 19/2003 [116]ஆகியவற்றை மேற்கோள் காட்டியது. பொது ஊழியத்தின் ஒரு பகுதியாக வீடு வீடாகச் செல்லும்போது யெகோவாவின் சாட்சிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையே நிகழக்கூடிய உரையாடல்கள், மத சுதந்திரத்தின்[117] பாதுகாக்கப்பட்ட வெளிப்பாடான "கற்பித்தல்" என்ற வரம்பிற்குள் வராது என்பதையும் யெகோவாவின் சாட்சிகள் வழக்கின் தீர்ப்பு தெளிவுபடுத்தியது.

---

111 "மதமாற்றம்", கேம்பிரிட்ஜ் அகராதி

112 அருட்திரு. ஸ்டானிஸ்லாஸ் எதிர் மத்தியப் பிரதேசம் (AIR SC 1977 908 பக்கம் 911 இல்) S.C.F.R இல.241/14 (யெகோவாவின் சாட்சி வழக்கு) இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

113 சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை பிரிவு 18(1) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978, உறுப்புரை 14(இ)

114 ருே மனித உரிமைகள் குழு (HRC), CCPR பொது கருத்து இல. 22 பத்தி 4: பிரிவு 18 (சிந்தனை, மனசாட்சி அல்லது மதம் சுதந்திரம்)

115 சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை பிரிவு 18(2)

116 S.C.F.R இல.241/14. (யெகோவாவின் சாட்சிகள் வழக்கு)

117 மேற்சொன்னபடி, பக்கம் 35

இருப்பினும், இந்தத் தீர்ப்பை வழங்குவதில் நீதிமன்றம் ஒரு முக்கியமான வேறுபாட்டைக் கடைப்பிடித்தது. நீதிமன்றத்தால் வெளிப்படுத்தப்பட்ட மதம் அல்லது நம்பிக்கையைப் பரப்புவதற்கான உரிமை அல்லது அரசியலமைப்பு ரீதியாகப் பாதுகாக்கப்பட்ட சுதந்திரம் இல்லாதது, எந்த வகையிலும் பிரச்சார நடவடிக்கைகளை (குறிப்பாக இந்த வழக்கில் மனுதாரர்களின் நடவடிக்கைகள்) சட்டவிரோதமாக்காது அல்லது அவற்றை குற்றங்களாகக்[118] கருத முடியாது என நீதிமன்றம் குறிப்பிட்டது. கட்டாய மதமாற்றங்களைக் குற்றமாக்கும் சட்டத்தை இயற்றுவதற்கான முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன[119].

மதம் மற்றும் நம்பிக்கையைப் பரப்புவதற்கான உரிமை இலங்கையின் சட்டக் கட்டமைப்பில் இல்லை என்பது சந்தேகத்திற்கு இடமின்றி இருந்தாலும், மதத்தைப் பரப்புவதற்கான சுதந்திரம் FoRB இன் எல்லைக்குள் வருவதை அங்கீகரிப்பதற்கு ஆதரவாக கலாநிதி குணதிலக்க ஒரு வாதத்தை முன்வைக்கின்றார். இந்தச் சுதந்திரத்தை நடைமுறைப்படுத்துவதில், சில சட்டக் கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்று அவர் விளக்குகின்றார்.[120] ஒருவரின் மதத்தைப் பரப்புவதற்கான சுதந்திரம் அங்கீகரிக்கப்படாவிட்டால், சட்டமானது பாரம்பரிய மற்றும் நிறுவப்பட்ட மதங்களுக்கு நியாயமற்ற முறையில் சாதகமாக இருக்கும் என்றும், புதிய அல்லது வழக்கத்திற்கு மாறான மதங்கள் தங்கள் நம்பிக்கைகளைப் பரப்புவதில் அதிகம் சார்ந்திருப்பதால், அவற்றுக்கு பாதகமாக இருக்கும் என்றும் கலாநிதி குணதிலக்க சுட்டிக்காட்டுகின்றார்.[121]

# 4. FoRB ஐப் பாதிக்கும் ஏனைய சட்டங்கள் / கொள்கைகள்

## 4.1 அரச/பெரும்பான்மை மதத்தை பரந்த சமூகத்தின் மீது திணித்தல்

அரச அல்லது பெரும்பான்மை மதத்தை பரந்த சமூகம் அல்லது பொதுமக்கள் மீது திணிப்பது பல வழிகளில் இடம்பெறலாம். அவற்றில் அரச மதத்தை நிறுவுதல் மற்றும் பெரும்பான்மை மதத்துடன் தொடர்புடைய சடங்குகள் மற்றும் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பதைக் கட்டாயமாக்குதல் என்பன அடங்கும்.

இலங்கையில் அரசியலமைப்பின் 9 ஆவது உறுப்புரை பௌத்த மதத்திற்கு முதன்மையான இடம் வழங்கப்பட வேண்டும் என்று கூறுகின்றது. "அதற்கிணங்க 10 ஆம், 14(1)(உ)[122] ஆம் உறுப்புரைகளால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை எல்லா மதங்களுக்கும் காப்புறுதி செய்யும் அதேவேளையில், பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணிவளர்த்தலும் அரசின் கடமையாக

---

118 மேற்சொன்னபடி

119 "நெறிமுறையற்ற மதமாற்றங்களுக்கு எதிரான புதிய சட்டங்கள்", தி மார்னிங், 18 பிப்ரவரி 2021 https://www.themorning.lk/articles/120252

120 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978, உறுப்புரை 15(7)

121 கெஹான் குணதிலக்க, மத சுதந்திரத்தில் பிரச்சாரம் செய்வதற்கான சுதந்திரமும் அடங்கியுள்ளதா? (மைனர்மேட்டர்ஸ், 26 செப்டம்பர் 2022) https://forbdashboard.minormatters.org/resource/does-the-freedom-of-religion-include-the-freedom-to-propagate/

122 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978, உறுப்புரை 9

இருத்தலும் வேண்டும்” என்று அது கூறுகின்றது.

பௌத்த மதத்திற்கு “முதன்மையான” இடத்தை வழங்குவதன் மூலம், அரசாங்கம் ஒரு மதத்தை ஏனைய மதங்களை விட தெளிவாக உயர்த்தி முன்னுரிமை அளிக்கின்றது. இந்த முன்னுரிமை அன்றாட வாழ்க்கை மற்றும் நடைமுறைகளின் பல்வேறு பகுதிகளைப் பாதிக்கலாம். இந்த விதி இருந்தபோதிலும் கூட, அனைத்து மதங்களுக்கும் சமத்துவம், மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரத்திற்கான உரிமைகளை உறுதி செய்வதற்கு அரசாங்கத்திற்குப் பொறுப்புள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும், ஒரு மதத்திற்கு “முதன்மையான இடத்தை” வழங்குவது, அதை உத்தியோகபூர்வ அரச மதமாகக் கட்டாயப்படுத்துவதை விட ஒப்பீட்டளவில் குறைந்த சக்தியைக் கொண்டது.[123]

## 4.2 கல்வி

சிந்தனை, மனசாட்சி மற்றும் மத சுதந்திரம் மற்றும் மதத்தைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்தையும் சாத்தியமாக்குவதில் கல்வி ஒரு கருவியாக இருக்க முடியும். ICCPR இன் பிரிவு 18(4) இன் படி, பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் தங்கள் குழந்தைகள் தங்கள் சொந்த நம்பிக்கைகளுடன் பொருந்தக்கூடிய மத மற்றும் தார்மீகக் கல்வியைப் பெறுவதை உறுதிசெய்யும் உரிமையை அரசாங்கங்கள் மதிக்க வேண்டும்.[124]

இலங்கையில் கல்வி கட்டளைச் சட்டத்தின் பிரிவு 35 மத போதனை தொடர்பாக குறிப்பிடுகின்றது. அதில் அரசாங்கப் பாடசாலையில் ஒவ்வொரு மாணவரும் தங்கள் படிப்பின் ஒரு பகுதியாக தங்கள் பெற்றோரின் மதத்தில்[125] போதனையைப் பெற வேண்டும் என்று கூறுகின்றது[126]. இருப்பினும், பெற்றோர் தாமாக முன்வந்து பாடசாலை அதிபரிடம் தங்கள் குழந்தைக்கு மத போதனை, வழிபாடு அல்லது சொந்த மதம் தொடர்பான அனுசரிப்புகளிலிருந்து விலக்கு அளிக்கக் கோரி எழுத்துப்பூர்வ கோரிக்கையைச் சமர்ப்பித்தால், அந்தக் குழந்தை அதில் பங்கேற்க வேண்டிய அவசியமில்லை அல்லது அனுமதிக்கப்படாது.[127] மறுபுறம், ஒரு மாணவர் தங்கள் பெற்றோரின் மதத்தை அடிப்படையாகக் கொண்டிராத மத போதனை, வழிபாடு அல்லது கடைப்பிடிப்பில் பாடசாலையில் பங்கேற்க கட்டாயப்படுத்தவோ அனுமதிக்கவோ கூடாது.[128] பிரிவு 35(1)(a) இன் பிரகாரம் அரசாங்கப் பாடசாலைகளில் ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றும் பெற்றோர்களின் எண்ணிக்கை 15 அல்லது அதற்கும் குறைவாக இருந்தால், அந்த மதத்தில் கல்வி கற்பிக்க வேண்டிய அவசியமில்லை.[129]

---

123 ரோஹன் எதிரிசிங்க (அரசியலமைப்புச் சட்ட நிபுணர்) உடனான யனித்ரா குமரகுருவின் நேர்காணல், டிசம்பர் 28, 2024, கொழும்பு. (நேர்காணலின் போது வேறொருவர் கதையிலிருந்து விவாதிக்கப்பட்ட கருத்து)

124 சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை, பிரிவு 18(4)

125 பிரிவு 35(4) இன் பிரகாரம், ஒரு மாணவரின் மதம் பொதுவாக தந்தை அறிவித்த மதத்தை அடிப்படையாகக் கொண்டது. தந்தை ஒரு அறிவிப்பைச் செய்யவில்லை என்றால், தாயின் மதத்தைக் கருத்தில் கொள்ளலாம். பெற்றோரில் யாரும் அதை அறிவிக்கவில்லை என்றால், மாணவரின் மதம், மாணவர் மீது சட்டப்பூர்வ அல்லது உண்மையான கட்டுப்பாட்டைக் கொண்ட நபரால் அறிவிக்கப்பட்டதை அடிப்படையாகக் கொண்டது.

126 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இல. கல்வி கட்டளைச் சட்டம், பிரிவு 35(1)

127 மேற்சொன்னபடி, பிரிவு 35(1)(b)

128 மேற்சொன்னபடி, பிரிவு 35(2)

129 மேற்சொன்னபடி, பிரிவு 35 (1)(a)

ஒரு மாணவரின் மதம் பாடசாலையில் அனுமதிக்கப்படும்போது பாதிப்பை ஏற்படுத்துகின்றதா என்பதைக் கருத்தில் கொள்ளும்போது, மத சுதந்திரமும் கல்வியும் ஒன்றுடன் ஒன்று குறுக்கிடக்கூடும்.

இது தொடர்பான கல்வி கட்டளைச் சட்டம், எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் அவரின் மதம் அல்லது அவரது பெற்றோரின் மதம் [130]காரணமாக, எந்தவொரு உதவி பெறும் பாடசாலையிலும் சேர்க்கை மறுக்கப்படக்கூடாது என்று கூறுகின்றது. “2025 ஆம் ஆண்டில் அரச பாடசாலைகளின் தரம் ஒன்றிற்கு பிள்ளைகளை அனுமதிப்பது தொடர்பான விதிமுறைகள்” என்ற கல்வி அமைச்சின் அறிவித்தலில், அரசாங்கத்தினால் கையேற்கப்பட்ட பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்பும்போது, “பாடசாலைகளைக் கையேற்கும்போது பாடசாலையில் ,ருந்த மாணவர்களின் வெவ்வேறு மதங்களின் சதவீதம் கருத்தில் கொள்ளப்படும்” எனத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே, பாடசாலையில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறு மதங்கள் மற்றும் பிரிவுகளுக்கு[131] இடையில் ஒரே மாதிரியாகப் பிரிக்கப்படும்.

## 4.3 குடியுரிமையற்றவர்கள்

ICCPR இன் பிரிவு 18, “**ஒவ்வொருவருக்கும்** சிந்தனை, மனசாட்சி மற்றும் மத சுதந்திரத்திற்கான உரிமை உண்டு” [132]என்று கூறுகின்றது. ICCPR இன் பிரிவு 27 இன, மத அல்லது மொழியியல் சிறுபான்மையினர் இருக்கும் இடங்களில், இந்த சிறுபான்மை நபர்கள் தங்கள் சொந்த மதத்தை[133] நடைமுறைப்படுத்தவும் பின்பற்றுவதற்கும் உரிமை மறுக்கப்படக்கூடாது என்று கூறுகின்றது. இந்தப் பிரிவின் கீழ் உரிமைகள் பாதுகாக்கப்படும் நபர்களில் நாட்டின் பிரஜைகள் அல்லாதவர்கள், பிரஜாவுரிமை அற்றவர்கள் மற்றும் தற்காலிக வதிவாளர்கள் ஆகியோரும் அடங்குவர் என்பதைப் பிரிவு 27 இன் பொதுவான கருத்து இல. 23 தெளிவுபடுத்துகின்றது. புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் நாட்டிற்கு வருகை தருபவர்கள் கூட இந்தப் பிரிவின் பாதுகாப்பைப் பெறுவார்கள்.[134]

மேலே உள்ள பிரிவுகள் பரவலாகப் பொருந்தும் அதேவேளை, 1951 அகதிகள் பிரகடனம் குறிப்பாக அகதிகளுக்கான மத சுதந்திரத்தைப் பாதுகாக்கின்றது. பிரிவு 4 இன் பிரகாரம், அரசாங்கங்கள் தங்கள் எல்லைக்குள் உள்ள அகதிகளுக்கு அவர்களின் மதத்தைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் மற்றும் அவர்களின் குழந்தைகள் மதக் கல்வியை[135] பெறுவதற்கான சுதந்திரம் தொடர்பாக “குறைந்தபட்சம் அவர்களின் பிரஜைகளைப் போல சாதகமாக நடத்தப்படுவதை” உறுதி செய்யவேண்டும். இருப்பினும் 1951 அகதிகள் பிரகடனத்தை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை.

130 மேற்சொன்னபடி, பிரிவு 34

131 கல்வி அமைச்சு, அறிவித்தல் - 2025 ஆம் ஆண்டில் அரச பாடசாலைகளில் தரம் ஒன்றிற்கு பிள்ளைகளை அனுமதிப்பது தொடர்பான வழிமுறைகள், பந்தி 3.2

132 சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையின் பிரிவு 18.

133 மேற்சொன்னபடி, பிரிவு 27

134 UN மனித உரிமைகள் குழு (HRC), CCPR பொதுக் கருத்து எண். 23, பந்திகள் 5.1 மற்றும் 5.2: பிரிவு 27 (சிறுபான்மையினரின் உரிமைகள்), CCPR/C/21/Rev.1/Add.5> 8 ஏப்ரல் 1994, https://www.refworld.org/legal/general/hrcen/129940

135 அகதிகளின் நிலை தொடர்பான பிரகடனம், பிரிவு 4, ஜூலை 28, 1951, 189 UNTS 137” (அகதிகள் பிரகடனம்)

இலங்கையில் அரசியலமைப்பின் 10 ஆவது உறுப்புரை, **ஒவ்வொரு நபருக்கும்** சிந்தனை, மனசாட்சி மற்றும் மத சுதந்திரத்திற்கான உரிமை உண்டு[136] என்று கூறுகின்றது. இருப்பினும், உறுப்புரை 12(2) மதம்[137] போன்ற அடிப்படையில் எந்தவொரு **பிரஜைக்கும்** பாகுபாடு காட்டப்படக்கூடாது என்று அனைவரையும் உள்ளடக்காத வார்த்தையைப் பயன்படுத்துகின்றது. இதேபோன்று ஒவ்வொரு **பிரஜையும்** தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், சாதனையிலும், போதனையிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரம் உள்ளது என யாரைப் பாதுகாக்கின்றது என்பதைக் கட்டுப்படுத்தும் வகையில் உறுப்புரை 14(உ) அமைந்துள்ளது.[138] மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்திற்கு அளிக்கப்படும் பாதுகாப்பை நாட்டின் பிரஜைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்துவது புலம்பெயர் தொழிலாளர்கள், அகதிகள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் நாட்டின் எல்லைக்குள் தங்கியிருக்கும் பிரஜைகள் அல்லாதவர்களுக்கு அரசியலமைப்பின் மூலம் வழங்கப்படும் பாதுகாப்பைத் தடுக்கின்றது.

## 4.4 வழிபாட்டுத் தலங்கள் மற்றும் நம்பிக்கை சார்ந்த அமைப்புகளை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்

### வழிபாட்டுத் தலங்கள்

மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தைச் செயல்படுத்துவதற்கு வழிபாட்டுத் தலங்களை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் பயன்படுத்துதல் என்பன முக்கியமாகும் அதிலும் குறிப்பாக கூட்டாக இணைந்து ஒருவரின் மதத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம்[139] முக்கியமானதாகும். மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையில் அனைத்து வகையான சகிப்பின்மை மற்றும் பாகுபாட்டை நீக்குவதற்கான 1981 பிரகடனத்தின்[140] பிரிவு 6 மற்றும் "அனைத்து வகையான மத சகிப்பின்மையையும் நீக்குதல்" குறித்த பொதுச் சபை தீர்மானம் 55/97[141] ஆகியவற்றில் அத்தகைய இடங்களை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் உள்ள உரிமை வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதை மனித உரிமைகள் தீர்மானம் 2005/40 அங்கீகரிப்பதுடன் மதம் மற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்தும் உரிமையுடன்[142] ஒத்துப்போகும் வகையில் பதிவு நடைமுறைகளை மறுபரிசீலனை செய்ய அரசாங்கங்களை வலியுறுத்துகின்றது.

இலங்கையில் அனைத்து மதங்கள் தொடர்பான விடயங்களும் புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின்[143] எல்லைக்குள் வருகின்றன. இந்த அமைச்சினால் முறையே

---

136 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978, உறுப்புரை 10

137 மேற்சொன்னபடி, உறுப்புரை (12)(2)

138 மேற்சொன்னபடி, உறுப்புரை (14)(உ)

139 வழிபாட்டில் "வழிபாட்டுத் தலங்களைக் கட்டுவது போன்ற முக்கியமான தொடர்புடைய நடைமுறைகள் அடங்கும்" என்று கூறுகிறது பொதுவான கருத்து இல. 22 விளக்குகின்றது.

140 மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையில் அனைத்து வகையான சகிப்புத்தன்மை மற்றும் பாகுபாட்டை நீக்குவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை பிரகடனம், பிரிவு 6(a), G.A. Res. 36/55> UN. GAOR, 36வது அமர்வு, துணை 51 (1981)

141 ஐக்கிய நாடுகள் சபை, தீர்மானம் 55/97: அனைத்து வகையான மத சகிப்பின்மையையும் நீக்குதல், மார்ச் 1, 2001

142 மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம், மனித உரிமைகள் தீர்மானம் 2005/40, பிரிவு 4(c) மற்றும் (d). பொதுச் சபைத் தீர்மானம் A/RES/77/221 இன் பிரிவு 14(f) ஐயும் பார்க்கவும்.

143 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி எண்.2187/27; புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் வலைத்தளம் https://

2008, 2011 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட மூன்று சுற்றறிக்கைகள், புதிய மத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிப்பதற்கு[144] அமைச்சிடமிருந்து ஒப்புதல் பெற வேண்டும் என்ற தேவையை விதித்தன. ஏப்ரல் 2022 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சமீபத்திய சுற்றறிக்கை, இதற்கு முன்னர் வெளியான சுற்றறிக்கைகளை இரத்து செய்தது. அனைத்து மத நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள், பிரார்த்தனை நிலையங்கள் அல்லது கூட்டு வழிபாட்டில் ஈடுபடும் எந்தவொரு அமைப்புகளுக்கும் இது பொருந்தும். பாராளுமன்றத்தின்[145] கீழ் இணைக்கப்பட்ட நிறுவனங்கள் மட்டுமே இதற்கு விதிவிலக்கு ஆகும். சட்டப்பூர்வ அடிப்படை இல்லாமலும், பதிவுச் செயல்முறை மற்றும் தொடர்புடைய சலுகைகள்[146] குறித்து தெளிவில்லாமலும் இந்தச் சுற்றறிக்கையின் விதிகள் உள்ளன. ஒப்புதல் பெறுவதற்கு சட்டரீதியான கட்டாயம் எதுவும் இல்லை என்பதுடன், இதற்கான தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அமைப்புகள் தண்டிக்கப்படுவதில்லை என்ற போதிலும், இவ்வாறான தேவை மூலம் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்பட்டுள்ளது.[147]

சிறிய அல்லது குறைவாக அறியப்பட்ட மதக் குழுக்கள் தொடர்பில் பரிச்சயம் இல்லாததால், சில நேரங்களில் பதிவு நடைமுறையின்போது சிரமங்கள் ஏற்படுவதுடன் பதிவும் மறுக்கப்படுகின்றது[148]. இவ்வாறு பதிவு மறுக்கப்படுவது அத்தகைய வழிபாட்டுத் தலத்தின் செயல்பாட்டிற்குத் தேவையான நிர்வாகப் பணிகளைச் செய்து முடிப்பதற்கு[149] தடையாக இருக்கலாம். மேலும், வழிபாட்டுத் தலம் பதிவு செய்யப்படாதது சிறுபான்மையினரின் மதப் பழக்கவழக்கங்களைக் குறிவைக்க ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் சம்பவங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன (அத்தியாயம் 2, பிரிவு 4.1 ஐப் பார்க்கவும்).[150]

### அரசு சாரா நிறுவனங்களின் பதிவு

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு[151] இணங்க மதம், தொண்டு மற்றும் மனிதாபிமான நிறுவனங்களை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்குமான சுதந்திரத்தை உறுதி செய்யுமாறு மனித உரிமைகள் தீர்மானம் 2005/40 அரசாங்கங்களை வலியுறுத்துகின்றது. இந்தத் தேவை FoRB[152] தொடர்பில் பொதுச் சபைத் தீர்மானம் A/RES/77/221 இலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 2024 இல் அரசு சாரா நிறுவனங்கள் (பதிவு மற்றும் மேற்பார்வை) சட்டத்திற்கான சட்டமூலம் முன்மொழியப்பட்டது. இந்தச் சட்டமூலம் நடைமுறைக்கு வந்தால், தற்போது

mbs.gov.lk/web/ (ஜனவரி 7, 2025 அன்று அணுகப்பட்டது)

144 வெரிட்டே ரிசேர்ச், "மறைந்து வரும் நம்பிக்கைகள்: இலங்கையில் மத வழிபாட்டு உரிமையில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்தல்" ஜூலை, 2024, பக்கங்கள் 29-30 https://www.veriteresearch.org/wp-content/uploads/2024/07/20240507_VeriteLegal_FadingBeliefs.pdf

145 NCEASL, கவனக் குழு (இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலை), ஜோவிடா அருளானந்தம் உடனான உரையாடல், டிசம்பர் 12, 2024, கொழும்பு

146 லக்ஷான் டயஸ் (மனித உரிமைகள் சட்டத்தரணி) உடனான ஜோவிடா அருளானந்தத்தின் நேர்காணல், அக்டோபர் 10, 2024, கொழும்பு

147 வெரிட்டே ரிசேர்ச், "மறைந்து வரும் நம்பிக்கைகள்: இலங்கையில் மத வழிபாட்டு உரிமையில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்தல்" 12

148 மேற்சொன்னவாறு 6,12

149 மேற்சொன்னவாறு, 12 வங்கிக் கணக்குகள் திறப்பதை உதாரணமாகக் காட்டுகின்றன.

150 மேற்சொன்னவாறு 7

151 மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம், மனித உரிமைகள் தீர்மானம் 2005/40, பிரிவு 4(e)

152 எர்மிசா டெகல், "அரசாங்கம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்த ஒரு சட்டத்தை முன்மொழிகின்றது", கிரவுண்ட்வியூஸ், 14 மே 2024 https://groundviews.org/2024/05/14/government-proposes-a-law-to-control-ngo-activity/

நடைமுறையில் உள்ள 1980 ஆம் ஆண்டின் தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் சட்டத்திற்கு மாற்றாக இருக்கும். அடிப்படையில், முன்மொழியப்பட்ட சட்டம் சில விதிவிலக்குகளுடன் கட்டாயப் பதிவை அறிமுகப்படுத்த முயல்வதுடன் அரசாங்கக் கொள்கை மற்றும் நிகழ்ச்சி நிரலுடன் இணங்க வேண்டும் என்று கோருகின்றது. இதனை எதிர்த்தாலும் ஆட்சேபித்தாலும்[153] விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். இது போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு, முன்மொழியப்பட்ட சட்டம் “தற்போதைய அரசு சாரா நிறுவனங்களின்[154] அடக்குமுறைக்கு சட்டப்பூர்வ அங்கீகாரத்தை அறிமுகப்படுத்துவது போல் தெரிகின்றது” என எர்மிசா டெகல் விபரித்தார்.

ஆரம்பத்தில் சட்ட வரைபு குறைவாகவும் முறைசாரா முறையிலும் வெளியிடப்பட்டது, அந்த நேரத்தில் ஆங்கில மொழியில் மட்டுமே கிடைத்தது, சட்டம் தொடர்பான ஆலோசனைகளை அர்த்தமுள்ள வகையில் மேற்கொள்ள முயற்சி செய்யப்படாதது மற்றும் புதிய சட்டத்தை இயற்றுவதற்கான நியாயமான காரணத்தை வெளிப்படுத்தத் தவறியது ஆகியவற்றுக்காக இந்தச் சட்டம் நடைமுறை ரீதியாகவும் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளானது. நிதிக் குற்றங்களைத் தடுப்பதற்கான தேவை புதிய சட்டத்திற்கான முதன்மையான காரணமாக இருக்க முடியாது என்று டெகல் வாதிடுகின்றார். ஏனெனில் நிதிக் குற்றங்களுக்காக[155] நிபுணத்துவத்துடன் கூடிய சட்டக்கட்டமைப்பு ஏற்கனவே உள்ளது. முன்மொழியப்பட்ட சட்டத்தின் உத்தியோகபூர்வ வரைபு எதுவும் வெளியிடப்படவில்லை[156].

## 4.5 தொல்பொருட்கள் மற்றும் காணி தொடர்பான சட்டக் கட்டமைப்பு

மத முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் கட்டடங்களை அணுகுதல், பயன்படுத்துதல் மற்றும் உரிமையாக்குதல் தொடர்பில் FoRB ஐச் செயல்படுத்துவதற்கு தொல்பொருட்கள், தொல்பொருள் தளங்கள் மற்றும் காணி உரிமையை நிர்வகிக்கும் சட்டக் கட்டமைப்பு சமூகங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. பல தசாப்தங்களாக வழிபாட்டுத் தலங்கள் உட்பட ஏராளமான காணிப் பிரச்சனைகள் மற்றும் மோதல்கள் தொடர்வதால் இலங்கைக்கு இது மிகவும் முக்கியமானதாக உள்ளது.

### தொல்பொருள் கட்டளைச்சட்டம்

பிரிவு 2.2 இன் கீழ் விவாதிக்கப்பட்ட விதிகளுக்கு மேலதிகமாக, தொல்பொருள் கட்டளைச் சட்டம் (திருத்தப்பட்டது) வழிபாட்டுத் தலங்கள் அமைந்துள்ள நிலங்கள் மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் தொடர்பான குழசுடீக்கு பொருத்தமான பல விதிகளைக் கொண்டுள்ளது.

உதாரணமாக, பிரிவு 6 இன் பிரகாரம் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின்[157]

153 மேற்சொன்னவாறு

154 மேற்சொன்னவாறு

155 மேற்சொன்னவாறு

156 பவானி பொன்சேகா, நேர்காணல்.

157 தொல்பொருட்கள் கட்டளைச் சட்டம் (திருத்தப்பட்டது), பிரிவு 6

அகழ்வாராய்ச்சிக்கான அனுமதி இல்லாவிட்டால் தொல்பொருட்களைக் கண்டுபிடிப்பதற்காக எந்த அகழ்வாராய்ச்சியும் மேற்கொள்ளப்படக்கூடாது. பிரிவு 8 இன் பிரகாரம், போதுமான இழப்பீடு வழங்குவதற்கான ஏற்பாடுகள்[158] மேற்கொள்ளப்படாவிட்டால், காணி உரிமையாளர் அகழ்வாராய்ச்சிக்கு ஒப்புதல் அளித்து, அருகில் வசிப்பவர்களுக்கு அல்லது சமய தலங்களுக்கு எந்தவித சேதமோ சிரமமோ ஏற்படாது என பணிப்பாளர் நாயகம் திருப்தி அடைந்தால் மட்டுமே அத்தகைய அனுமதி வழங்கப்படும். மேலும் பிரிவு 13 அவ்வாறான அகழ்வாராய்ச்சியின்[159] போது ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு அரசாங்கம் பொறுப்பேற்க முடியாது என்று கூறுகின்றது.

மேலதிகமாக, பிரிவு 18 அரசாங்க நிலத்தில் உள்ள எந்தவொரு பழங்கால நினைவுச்சின்னமும் அழிக்கப்படும் அல்லது அகற்றப்படும் அபாயத்தில், அல்லது புறக்கணிப்பு அல்லது நியாயமற்ற முறையில் நடத்தப்படுவதால் சேதமடையும் அபாயத்தில் உள்ளது என்று தோன்றும் பட்சத்தில் அத்தகைய நினைவுச்சின்னத்தைப் பாதுகாப்பது பொது நலனுக்காக[160] எனில் அமைச்சர் அந்தச் சின்னங்களை "பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்கள்" என அறிவிக்கலாம். அரசாங்க நிலத்தில் உள்ள எந்தவொரு பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னம்/பழங்கால நினைவுச்சின்னத்தையும் வேண்டுமென்றே அழிப்பது, காயப்படுத்துவது, சிதைப்பது அல்லது சேதப்படுத்துவது, அல்லது அத்தகைய நினைவுச்சின்னத்தைப் புனிதமாக மதிக்கும் அல்லது வைத்திருக்கும் நபர்களின் மத உணர்வுகளை காயப்படுத்தும் அல்லது புண்படுத்தும் அல்லது புண்படுத்தும் செயலில் ஈடுபடுவதை பிரிவு 31 குற்றமாகக் கருதுகின்றது. அத்தகைய குற்றத்திற்கான தண்டனை ரூ. 50,000 முதல் ரூ. 250,000 வரை அபராதம், 2 முதல் 5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது[161].

மேலும் FoRB இனை பாதுகாப்பதாகத் தோன்றினாலும், சட்டத்திற்கும் FoRBக்கும் இடையிலான உறவை உண்மையாகப் புரிந்துகொள்ள இந்த விதிகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் ஆராய வேண்டும்.

இந்த விதிகள் மத சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகக் கூறப்பட்டாலும், இன - தேசியவாத நிகழ்ச்சிநிரல்களை மேலும் மேம்படுத்துவதற்கும் சிறுபான்மை சமூகங்களிடம் பாரபட்சம் காட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை இத்தகைய ஆய்வு துரதிர்ஷ்டவசமாக வெளிப்படுத்துகின்றது. (அத்தியாயம் 2, பிரிவு 2 ஐப் பார்க்கவும்). உதாரணமாக, அம்பாறை (கிழக்கு) முள்ளிக்குளம் மலையில் அப்பிரதேச முஸ்லிம் மக்கள் தங்கள் விவசாய நடவடிக்கைகளை மீண்டும் தொடங்க[162] நிலத்தைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக தொல்பொருள் திணைக்களம் முள்ளிக்குளம் மலையை தொல்பொருள் தளம் என தொல்பொருள் சட்டத்தின் பிரிவு 15 மற்றும் 16 இன் கீழ் கூறியது. வவுனியா (வடக்கு) வெடுக்குநாறி ஆதி

158 மேற்சொன்னபடி, பிரிவு 8

159 மேற்சொன்னபடி, பிரிவு 13

160 மேற்சொன்னபடி, பிரிவு 18

161 மேற்சொன்னபடி, பிரிவு 31

162 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இலங்கையில் காணி மோதல்களின் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய போக்குகள், (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், ஆகஸ்ட், 2024), https://www.cpalanka.org/the-intersectional-trends-of-land-conflicts-in-sri-lanka/#:~:text=15%20years%20after%20the%20end>to%20a%20post%2Dconflict%20society> 14-15

லிங்கேஸ்வரர் கோயில் (வத்தமான பப்பத்தாய விகாரை என்ற பெயரில் புத்த விகாரை என சர்ச்சைக்குட்பட்டது) தொடர்பாக, சம்பந்தப்பட்ட கோயில் தொல்பொருள் திணைக்களத்தால் தொல்பொருள் நினைவுச்சின்னமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. தொல்பொருள் துறை மேற்கொண்ட கள ஆய்வில் பௌத்த இடிபாடுகள் மட்டுமே அறிக்கையிடப்பட்டன, எந்த இந்து நினைவுச்சின்னங்களையும் அது அங்கீகரிக்கவில்லை. அதன் பின்னர் அத்திணைக்களம் வெளியிட்ட அறிவிப்பில், கோயில் உட்பட அப்பகுதிக்குள் நுழைவதற்கு உள்ளூர்வாசிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அவர்கள் அந்தப் பகுதிக்குள் நுழைய முயன்றால் கைது செய்யப்படுவார்கள் என்றும் வெடுக்குநாறி மலை தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின்[163] கீழ் வரும் என்றும் தெரிவித்தது. தொல்பொருள் சட்டத்தின்[164] அடிப்படையில் கோயில் அறங்காவலர் குழுவிற்கு எதிராக வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டது.

தொல்பொருள் சட்டத்தைப் பயன்படுத்தி சில இடங்களுக்கு மட்டும் பாதுகாப்பு வழங்கப்படுவதன் ஊடாக இன - தேசியவாத நிகழ்ச்சிநிரலை ஆதரிக்க இந்தச் சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதைக் காணலாம். முல்லைத்தீவு (வடக்கு) குருந்தூர் மலையில் குருந்தூர்மலை ஆதி சிவன் கோயில் அமைந்துள்ள இடத்தில், தொல்பொருள் தளத்தின் எல்லைக்குள் இருந்த மரங்கள் பௌத்தர்களால்[165] எரிக்கப்பட்டு வெட்டப்பட்டபோது தொல்பொருள் திணைக்களமோ வனத்திணைக்களமோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேபோன்று வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் கோயில் தொடர்பாக, தொல்பொருள் சட்டத்தின் அடிப்படையில் கோயில் அறங்காவலர் குழு மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்ட போதிலும், தெய்வங்கள்[166] அகற்றப்பட்டு கோயில் அழிக்கப்பட்டபோது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

### 1946 ஆம் ஆண்டின் 13 ஆம் இல. நகர மற்றும் கிராமிய நிர்மாணக் கட்டளைச் சட்டம்

நகர மற்றும் கிராமிய நிர்மாணக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 6(2) இன் பிரகாரம், அமைச்சர் எந்தவொரு நகரத்தையும் அல்லது பகுதியையும் நகர அபிவிருத்திப் பகுதியாக[167] அறிவிக்கலாம். இது அத்தகைய நகரம்/பகுதியைப்[168] பயன்படுத்துவதில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும்.

நகர அபிவிருத்திப் பகுதிகளை[169] மட்டும் வர்த்தமானியில் வெளியிடுவதற்கான விதிகள் இருந்தாலும், பிரிவு 6(2)(b) சில சந்தர்ப்பங்களில் “புனிதப் பகுதிகளை” வர்த்தமானியில் வெளியிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கில்[170] பௌத்த

163 மேற்சொன்னபடி, 57-58

164 மேற்சொன்னபடி, 58, வழக்கு எண். ஈ/2084/19. வெடுக்குநாறி மலை தொடர்பாக தொடரப்பட்ட அனைத்து சட்ட நடவடிக்கைகளின் விரிவான கண்ணோட்டத்திற்கு தயவுசெய்து அறிக்கையைப் பார்க்கவும்.

165 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இலங்கையில் காணி மோதல்களின் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய போக்குகள், 41,42

166 மேற்சொன்னபடி, 58, 59

167 1946 ஆம் ஆண்டின் 13 ஆம் இல. நகர மற்றும் கிராமிய நிர்மாண கட்டளைச் சட்டம், பிரிவு 6(2)

168 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இலங்கையில் காணி மோதல்களின் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய போக்குகள், 70

169 மேலே உள்ள அறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளபடி முஹுது மகா விகாரையின் உதாரணத்தைக் காண்க.

170 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். “இலங்கையில் காணி மோதல்களின் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய போக்குகள்” 69

விகாரைகளைக் கட்டுவதற்கு வசதியளிக்கும் ஒரு கருவியாக இந்தச் சட்டம் (தவறாக) பயன்படுத்தப்பட்டுள்ளது.

### காணி தொடர்பான ஏனைய சட்டங்கள்

மேற்கூறிய சட்டங்கள் நிலம் கையகப்படுத்துதலை நிர்வகிக்கும் பொதுவான சட்ட விதிகளால் ஆதரிக்கப்படுகின்றன. ஏனெனில் இந்த விதிகள் மிகவும் விரிவானவை என்பதுடன் அதிகார ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துவதால் இன தேசியவாதம் மற்றும் ஏனையவர்கள் மீது மதத் திணிப்பு போன்ற தொடர்பில்லாத நிகழ்ச்சி நிரல்களுக்கு அவற்றைத் தவறாகப் பயன்படுத்தலாம். 1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இல. காணி கையகப்படுத்தல் சட்டம், உயர் பாதுகாப்பு வலயங்களை அறிவிப்பதற்கான அவசரகால விதிமுறைகள், மகாவலி அதிகாரசபை சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இல. சுற்றுலாச்சட்டம் ஆகியவை இதற்கான சில உதாரணங்கள் ஆகும்[171].

வழிபாட்டுத் தலங்களுடன் தொடர்புடைய காணி மற்றும் தொல்பொருள் தகராறுகளில், நீதிமன்ற அமைப்பு மூலம் நீதியைப் பெற்றுக்கொள்ள எடுக்கப்பட்ட பல முயற்சிகள், FoRB மற்றும்/அல்லது நில உரிமைகள் மீறப்பட்டவர்களுக்கு[172] ஆதரவாக நீதிமன்றங்கள் தீர்ப்பளித்த சந்தர்ப்பங்களிலும் கூட அவை பயனற்றுப் போனது குறிப்பிடத்தக்கது. பவானி பொன்சேகாவுடனான நேர்காணலில் விளக்கப்பட்டது போன்று, வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள உள்ளூர் நீதிமன்றங்கள் இன – தேசியவாதத்தைத் தடுக்க முயற்சித்து நீதித்துறை அதன் பங்கை நிறைவேற்றிய போதும், முடிவைச் செயல்படுத்துவது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. நீதிமன்ற உத்தரவுகளைப் புறக்கணிப்பது நீதிமன்ற அவமதிப்பாகும். ஆனால் இதை யார் செயல்படுத்துவார்கள் என்ற கேள்வி இன்னும் நீடிக்கின்றது. இதைச் செயல்படுத்துவது இயற்கையாகவே அரசாங்கத்திடம் உள்ளதாலும், அரசாங்கம் பௌத்த தேரர்கள் மற்றும் இராணுவத்துடன் மிக நெருக்கமாகச் செயல்படுவதாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் சிரமம் நீடிக்கின்றது. அதாவது “ஒவ்வொருவரும் ஏனைய சக்திகளால் இயக்கப்படாமல் தன்னுடைய பங்கைச் செய்ய வேண்டும். நீதித்துறை அவ்வாறான ஒன்று – நீதித்துறையால் மட்டும் வேரூன்றிய பிரச்சினையைச் சரிசெய்ய முடியாது”.”[173]

## 4.6 தனியார் சட்டங்கள்

இலங்கையின் சிக்கலான சட்டக் கட்டமைப்பு, நாட்டின் பொதுச் சட்டத்துடன் கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம் மற்றும் முஸ்லிம் சட்டம் போன்ற சிறப்பு இன - கலாசார மற்றும் மத தனிநபர் சட்டங்களின் சகவாழ்வை அனுமதிக்கின்றது. இவற்றில் முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் போன்ற சட்டங்கள் மூலம் நடைமுறைக்கு வரும் முஸ்லிம் சட்டத்தின் அங்கீகாரம் FoRB இன் முன்னேற்றத்திற்கு நேரடியாகப் பங்களிக்கின்றது.

இருப்பினும் இந்தத் தனிநபர் சட்டங்கள் பிற அடிப்படை சுதந்திரங்கள் மற்றும் உரிமைகளை

171 நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான சட்டங்கள் குறித்த விரிவான விளக்கத்திற்கு மேலே உள்ள அறிக்கையைப் பார்க்கவும்.

172 உதாரணமாக, மாணிக்கமடு மாயக்கல்லி மலை, முள்ளிக்குளம் மலை, குருந்துமலை ஆதி சிவன் கோயில் ஆகியவை மேற்கண்ட அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

173 பவானி பொன்சேகா, நேர்காணல்

மீறும் இடங்களில் அவற்றைத் திருத்துவதை உறுதி செய்வதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். 1978 இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 16 இல் "எழுத்திலான சட்டங்கள், எழுத்தில் இல்லாச் சட்டங்கள் எல்லாம் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இருப்பினும் செல்லுபடியாவதுடன் தொழிற்பாடும் உடையனவாக இருக்க வேண்டும்" எனக் கூறப்பட்டுள்ளதன் மூலம் தனிநபர் சட்டங்கள் தொடர்ந்தும் அமுலில் இருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. (அத்தியாயம் 3, பிரிவு 3.3 ஐப் பார்க்கவும)[174]

## 5. பாலினமும் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரமும்

FoRB இற்கும் பாலின சமத்துவத்திற்கும் இடையில் முரண்பாடு உள்ளதா என்பது குறித்து விவாதங்களில் பரிசீலிக்கப்பட்டுள்ளன. பெண்கள் மற்றும் பாலினச் சிறுபான்மையினருக்கு எதிராக FoRB பயன்படுத்தப்பட்ட பல நிகழ்வுகள் உள்ளன: கருக்கலைப்புச் சட்டம், ஓரினச்சேர்க்கையைக் குற்றமற்றதாக்குதல் மற்றும் முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தைச் சுற்றியுள்ள விடயங்கள் இதற்கு உதாரணங்களாகும்.[175]

இலங்கையில் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதில் பல சட்ட முன்னேற்றங்கள் 2024 இல் நிகழ்ந்தன. ஜூன் 20, 2024 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 37 ஆம் இல. பெண்களின் வலுவூட்டல் சட்டம் அத்தகைய ஓர் உதாரணம் ஆகும். பெண்கள் முன்னேற்றம் மற்றும் வலுவூட்டல் தொடர்பான தேசியக் கொள்கை, தேசிய பெண்கள் ஆணைக்குழு, பெண்கள் உரிமைகளுக்கான குறைதீர்க்கும் அதிகாரிகள் நியமனம் மற்றும் பெண்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான[176] வழிமுறைகளை வழங்குவதன் மூலம் இந்தச் சட்டம் பெண்களுக்கு அதிகாரமளிக்கின்றது.

இதேவேளை, பாலின சமத்துவச் சட்டமூலமும் ஏப்ரல் 17, 2024 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுடன் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக அதிகாரமளித்தல் அமைச்சரால் மே 9, 2024 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. இந்தச் சட்டமூலம் பின்வரும் நோக்கங்களை மேம்படுத்துவதாகும்: கொள்கைகளை உருவாக்குவதில் பாலின சமத்துவக் கொள்கைகளை நிறுவுதல் மற்றும் எளிதாக்குதல் பாலினம் அல்லது பாலின அடையாளத்தின் அடிப்படையில் பாகுபாடு இல்லாமல் அனைத்து நபர்களும் அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அனுபவிப்பதை உறுதிசெய்தல் பாலின சமத்துவமின்மை மற்றும் பாலின அடிப்படையிலான பாகுபாட்டிற்கான முறையான மற்றும் கட்டமைப்பு காரணங்களை அடையாளம் கண்டு நீக்குவதை எளிதாக்குதல் குறைபாடு, ஓரங்கட்டுதல், பாலினப் பாகுபாடு, களங்கம், வகைப்படுத்துதல், ஒரே மாதிரியான தன்மை, பாரபட்சம் மற்றும் வன்முறை ஆகியவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை

174 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978, உறுப்புரை 16

175 சட்ட நிபுணர் உடனான யனித்ரா குமரகுருவின் நேர்காணல், பிப்ரவரி 18, 2025, கொழும்பு.

176 பெண்கள் வலுவூட்டல் சட்டம், இலக்கம். 37.'.2024

எடுத்தல், அத்துடன் கட்டமைப்பு மாற்றத்தின் மூலம் ஆண்கள், பெண்கள் மற்றும் வெவ்வேறு பாலின அடையாளங்களைக் கொண்ட நபர்களை ஏற்றுக்கொள்ளுதல் பாலினம் அல்லது பாலின அடையாளத்தைப் பொருட்படுத்தாமல் மனித கண்ணியத்தைப் பாதுகாத்தல் பாலின சமத்துவத்தில் முடிவுகளை அடைய சம வாய்ப்புகள் மற்றும் சூழலை வழங்குதல் பாலின சமத்துவக் கொள்கைகளை நிறுவுதல் மற்றும் பொது நிறுவனங்கள், வணிகங்கள், சிவில் சமூக அமைப்புகள், வேலைவாய்ப்பு மற்றும் பிற சட்ட நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின்[177] நடத்தையில் அத்தகைய கொள்கைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தல். சட்டமூலத்தின் பிரிவு 3 பாலின சமத்துவத்திற்கான[178] உரிமையை வெளிப்படையாக வெளிப்படுத்தியது.

சட்டமூலம் எளிமையானதாக இருந்த போதிலும், இது உச்ச நீதிமன்றத்தில் இரண்டு மனுக்கள் மூலம் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது (SC SD இல.54/2024 மற்றும் SC SD 55/2024). மேலும் ஒட்டுமொத்த அரசியலமைப்பிற்கும்[179] முரணானது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அத்தகைய ஒரு நிலைப்பாடு பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு (சமூகமளிக்காதவர்கள் உட்பட) ஒப்புதலின் மூலமும், பொது வாக்கெடுப்பில் நாட்டு மக்களால் அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே சட்டமாக [180]இயற்றப்பட முடியும் என்பதைக் குறிக்கின்றது.

சட்டமூலத்தில் முன்மொழியப்பட்ட எந்தவொரு விதியிலும் மதம் வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை என்றாலும், சட்டமூலத்திற்கு எதிரான தீர்ப்பில் நீதிமன்றத்தால் FoRB கருத்தில் கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சட்டமூலம் சட்டமாக இயற்றப்பட்டால் சாசனம், மடங்கள், பிக்கு பல்கலைக்கழகங்கள், பிரிவேனாக்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் போன்ற மத அமைப்புகள் தங்களின் வழிபாட்டு நடவடிக்கைகளுக்கு[181] சாத்தியமான சேவையாளர்களைச் சேர்க்கும்போது பாலினம் அல்லது பாலினத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவதையோ நிராகரிப்பதையோ தடுக்கும் என்பது மனுதாரர்களின் ஒரு வாதமாக இருந்தது. புத்த துறவிகளை நியமனம் செய்வதற்கான விதிமுறைகளின் கீழ், ஒரு பெண்ணோ ஆண் அல்லது பெண்ணாக அடையாளம் காணப்படாத ஒருவரோ அவ்வாறு நியமனம் செய்ய அனுமதிக்கப்படவில்லை[182] என்று வாதிடப்பட்டது.

இந்தப் பிரச்சினையைக் கருத்தில் கொண்ட நீதிபதி சூரசேன சட்டமூலத்தில் “தனியார் நிறுவனம்” என்பதன் வரையறையைக் கவனத்தில் கொண்டார். சட்டமூலத்தின் பிரிவு 29 இன் பிரகாரம், தனியார் நிறுவனம் என்பது “எந்தவொரு எழுதப்பட்ட சட்டத்தின் கீழும் நிறுவப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட அல்லது அனுமதி பெற்ற நிறுவனம்” என்று வரையறுக்கப்படுகின்றது. மேலும் அரசாங்கத்தால் முழுமையாக நிதியளிக்கப்படும் நிறுவனங்கள் தவிர[183] உயர் கல்வி நிறுவனம், பல்கலைக்கழகம் மற்றும் தொழில்முறை நிறுவனம் மற்றும் தொழிற்கல்வி

177 பாலின சமத்துவச் சட்டமூலம், பிரிவு 2 (ஏப்ரல் 17, 2024 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

178 மேற்சொன்னபடி, பிரிவு 3

179 SC SD 54/2024 மற்றும் SC SD 55/2024 (பாலின சமத்துவச் சட்டமூல வழக்கு)

180 மேற்சொன்னபடி 41,45

181 மேற்சொன்னபடி 21

182 மேற்சொன்னபடி

183 SC SD 54/2024 மற்றும் SC SD 55/2024 (பாலின சமத்துவச் சட்டமூல வழக்கு) சட்டமூலத்தின் பிரிவு 29 ஐ பக்கம் 22 மேற்கோள் காட்டுகின்றது.

அல்லது தொழில்நுட்பக் கல்வியை வழங்கும் நிறுவனம் ஆகியவை இதில் அடங்கும். புத்த பல்கலைக்கழகங்கள், பிரிவேனாக்கள் மற்றும் அதுபோன்ற ஏனைய நிறுவனங்கள் இந்த வரையறையின் கீழ் வரும் என்றும், சட்டமூலத்தின் நிபந்தனைகளின்படி[184] பாலின சமத்துவக் கொள்கைகளுக்கு இணங்க வேண்டும் என்றும் கவனிக்கப்பட்டது. எனவே, மத நிறுவனங்களில் அனுமதிப்பதில் எந்தவொரு பாலினத்தையும் விலக்குவது, நிறுவப்பட்ட மத நடைமுறைகளைப் பின்பற்றுவதில் அத்தகைய கட்டுப்பாடு இருந்தபோதிலும், பாலின சமத்துவ சட்டமூலத்தை மீறுவதாகக் கருதப்படலாம்.

மேலும், பாலினம் அல்லது பாலின அடையாளத்தின் அடிப்படையில் இந்த நிறுவனங்களில் சேர்க்கையை கட்டுப்படுத்தும் நடைமுறை வேறு சட்டங்களில்[185] இடம்பெற்றிருந்தாலும் கூட, பாலின சமத்துவ சட்டமூலம் சட்டமாக நிறைவேற்றப்பட்டால் இந்தக் கட்டுப்பாடுகள் செல்லுபடியாகாது என்று நீதிபதி சூரசேன குறிப்பிட்டார். வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்துடன் முரண்பாடு ஏற்பட்டால், பாலின சமத்துவ சட்டமூலத்தின் விதிகள்தான் மேலோங்கும் என்று கூறும் பிரிவு 28 இன் மூலம் சட்டமூலத்தின்[186] விதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதே இதற்குக் காரணம் ஆகும்.

இந்தச் சட்டமூலம் சட்டமாக நிறைவேற்றப்பட்டால், ஓரினச்சேர்க்கையை குற்றமற்றதாக்குதல் மற்றும் ஒரே பாலினத் திருமணங்களைச் சட்டப்பூர்வமாக்குதல்[187] தொடர்பாக மதம் குறித்த கேள்விக்கும் இந்த தீர்ப்பு குறிப்பிடத்தக்க பரிசீலனையை அளித்தது. உதாரணமாக, ஒரே பாலினத் திருமணங்களைப் பற்றிப் பேசுகையில் தீர்ப்பின் 29 ஆவது பக்கத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

“எனவே, இந்தச் சட்டமூலம் சட்டமாக மாறும்போது, இந்தச் சட்டமூலத்தின் வரையறைகள் மற்றும் விதிகள் மூலம் எந்தவொரு ஆர்வமுள்ள தரப்பினரும் ஒரே பாலினத் திருமணங்களுக்கு சட்டப்பூர்வ அந்தஸ்தைப் பெற முடியும் என்பது தெளிவாகின்றது. இது நமது அரசியலமைப்போ நமது கலாசாரமோ கற்பனை செய்யாத ஒன்று.”

இந்த நாட்டில் பின்பற்றப்படும் அனைத்து மதங்களும் இந்தக் கலாசாரத்திலிருந்து விலகவில்லை, ஏனெனில் கலாசாரம் மற்றும் மதம் இரண்டும் இந்த நாட்டு மக்களின் நடைமுறையின் ஒரு பகுதியாகும். பொதுவாக கலாசாரம் மற்றும் மதத்தின் நடைமுறை நாட்டின் சட்டத்திற்கு முரணாக இருக்க முடியாது[188].

மேலே விபரிக்கப்பட்டவாறு மதங்கள் கடைப்பிடிக்கும் சட்டங்கள், விதிகள் மற்றும்

184 மேற்சொன்னபடி 22

185 தீர்ப்பில் பரிசீலிக்கப்பட்ட அத்தகைய ஒரு நிகழ்வின் உதாரணம் 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இல. பிரிவேனா கல்விச் சட்டத்தின் பிரிவு 2 ஆகும். இது “பிரிவேனா கல்வியின் நோக்கம் அ) பிக்குகள் மற்றும் ஆ) பிரிவேனாவில் வழங்கப்படும் படிப்புகளைப் பின்பற்ற விரும்பும் 14 வயதுக்கு மேற்பட்ட ஆண் மாணவர்கள் மற்றும் புத்த சூழலில் கல்வி பெற விரும்புபவர்களுக்கு கல்வி வசதிகளை வழங்குவதாகும்.”

186 பாலின சமத்துவச் சட்டமூலம், பிரிவு 3 பிரிவு 28

187 பாலின சமத்துவச் சட்டமூலம் வழக்கு29, 32. இருப்பினும், ஓரினச்சேர்க்கையை குற்றமற்றதாக்குவது தொடர்பான உச்ச நீதிமன்ற சிறப்புத் தீர்மான இல.13/2023 (தண்டனைச் சட்டக்கோவை திருத்த சட்டமூலம்) இல், ஓரினச்சேர்க்கை செயல்பாடு பபௌத்த மதத்தின் கொள்கைகளுக்கு முரணானது என்றும், எனவே 9 ஆவது உறுப்புரையை மீறுகின்றது என்றும் மனுதாரர்கள் முன்வைத்த வாதம் செல்லுபடியாகாது என்று நீதிபதிகளால் தள்ளுபடி செய்யப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது.

188 பாலின சமத்துவச் சட்டமூல வழக்கு 29

நடைமுறைகளை மீறுவதன் மூலம் பாலின சமத்துவச் சட்டமூலம், இலங்கை அரசியலமைப்பின் சிந்தனை, மனசாட்சி மற்றும் மத சுதந்திரம் குறித்த[189] உறுப்புரை 10 மற்றும் இலங்கை அரசியலமைப்பின் மத சுதந்திரத்தின் வெளிப்பாடு குறித்த உறுப்புரை 14(1)(உ) ஆகியவற்றை மீறுவதாகக் கருதப்பட்டது. மேலும், பாலின சமத்துவச் சட்டமூலத்தால் மறுக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் நடைமுறைகள் புத்த மதத்துடன் தொடர்புடையவை என்பதால், அரசியலமைப்பின் 9 ஆவது உறுப்புரையை[190] பாலின சமத்துவச் சட்டமூலம் மீறுவதாகவும் கருதப்பட்டது.

189 மேற்சொன்னபடி 23

190 மேற்சொன்னபடி 22

# மதிப்பெண் மற்றும் ராக் (RAG) கணிப்பீடு

ஒவ்வொரு துணைக் குறிகாட்டியும் 1-10 என்ற அளவில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. திரட்டப்பட்ட மதிப்பெண்களின் சராசரி ஒவ்வொரு முக்கிய குறிகாட்டிக்கும் மதிப்பெண்ணைத் தீர்மானிக்கின்றது.

(மேலதிக விபரங்களுக்கு பிரிவு 2 இல் “குறிகாட்டிகள் மற்றும் மதிப்பெண்/ஆராய்ச்சி முறையை” பார்க்கவும்).

| குறிகாட்டி | மதிப்பெண் | விளக்கம் | RAG மதிப்பீடு |
|---|---|---|---|
| **குறிகாட்டி 1: FoRB ஐ ஆதரிக்கும் ஒரு அடிப்படை சட்டக் கட்டமைப்பு** | | | |
| 1. இலங்கை FoRB உடன் தொடர்புடைய சர்வதேசச் சட்டங்களை அங்கீகரித்து, உள்நாட்டில் அத்தகைய உறுதிமொழிகளைச் செயல்படுத்த சட்டத்தை இயற்றியுள்ளதா? | 7 | இலங்கை ICCPR ஐப் பின்பற்ற ஒப்புக்கொண்டுள்ளது. இதை ஆதரிக்கும் வகையில், 2007 ஆம் ஆண்டு ICCPR சட்டத்தை உருவாக்கியது. ஆனால் இந்தச் சட்டத்தின் பிரிவு 3 மிகவும் விரிவானதாக இருப்பதாக விமர்சிக்கப்படுகின்றது. இலங்கை ICERD ஐயும் பின்பற்ற ஒப்புக்கொண்டுள்ளது. | |
| 2. அதன் சர்வதேச உறுதிமொழிகளுக்கு ஏற்ப, FoRBக்கு அரசியலமைப்பு பாதுகாப்பை இலங்கை வழங்கியுள்ளதா? | 7 | அரசியலமைப்பு மத சுதந்திரத்தை உத்தரவாதம் செய்கின்றது, மதத்தை வெளிப்படையாகப் பின்பற்றும் உரிமையும் இதில் அடங்கும். இருப்பினும், இந்த அரசியலமைப்பு உத்தரவாதங்கள் சர்வதேச ஒப்பந்தங்களை விட குறைவாகவே இருக்கலாம், எனவே அவை குறைவான பாதுகாப்பை வழங்கக்கூடும். மத சுதந்திரத்தில் சில வரம்புகள் அனுமதிக்கப்படுகின்றன, ஆனால் சர்வதேச விதிகளைப் பின்பற்றுகின்றன. | |

| குறிகாட்டி 2: பாதுகாப்பு விடயங்களில் FoRB ஐ ஆதரிக்கும் சட்டம் | | | |
|---|---|---|---|
| 1. பொதுப் பாதுகாப்பு அல்லது பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் தொந்தரவு அல்லது அச்சுறுத்தலுக்கு ஆளாகாமல் மக்கள் தங்கள் மதம் அல்லது நம்பிக்கைகளை அமைதியாகப் பின்பற்றுவதை சட்டக் கட்டமைப்பு உறுதி செய்கின்றதா? | 5 | தண்டனைச் சட்டக்கோவை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், ICCPR சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டம் ஆகியவற்றில் உள்ள விதிகள் அனைத்தும் அமைதியைக் குலைப்பதிலிருந்தும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களிலிருந்தும் பாதுகாப்பதாகத் தெரிகின்றது. இருப்பினும், இந்த விதிகள் வடிவமைக்கப்பட்ட பரந்த விதம், சிறுபான்மையினரை குறிவைத்து சுரண்டுவதற்கும் பயன்படுத்துவதற்கும் அனுமதிக்கின்றது. | |
| 2. இலங்கையின் சட்டக் கட்டமைப்பு மத தலங்களுக்குப் போதுமான பாதுகாப்பை வழங்குகின்றதா? | 7 | தண்டனைச் சட்டக்கோவை மூலமாகவும், முக்கியமான சந்தர்ப்பங்களில், தொல்பொருள் கட்டளைச் சட்டம் மூலமாகவும் மத தலங்களுக்கு சட்டபூர்வ பாதுகாப்பு வழங்கப்படுகின்றது (இந்தச் சட்டங்கள் உண்மையில் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பது அத்தியாயம் 2 இல் விவாதிக்கப்படுகின்றது). | |
| குறிகாட்டி 3: கருத்துச் சுதந்திரம் தொடர்பான விடயங்களில் FoRB ஐ ஆதரிக்கும் சட்டம் | | | |
| 1. இன மற்றும் மதக் குழுக்கள் தங்கள் மதத்தை சுதந்திரமாக வெளிப்படுத்தவும் பின்பற்றவும் சட்டம் அனுமதிக்கின்றதா? | 9 | தற்போது சட்டத்தின் மூலம் உள்ள ஒரே குறிப்பிடத்தக்க கட்டுப்பாடு ஒலி மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் மட்டுமே: சர்வதேச தரநிலைகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளுக்கு ஏற்ப அனுமதிக்கப்பட்ட கட்டுப்பாடு. | |
| 2. சட்டம் மத சுதந்திரத்திற்கான உரிமையையும் பேச்சு சுதந்திரத்திற்கான உரிமையையும் நியாயமாக சமன் செய்கின்றதா? | 6 | மதம் மற்றும் மத உணர்வுகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு, அதன் வெளிப்பாட்டிற்குப் பரந்த வரம்புகள் உள்ளன. எனினும், இந்த பரந்த கட்டுப்பாடுகள் அதிகப்படியான தணிக்கைக்கு வழிவகுக்கும். இது அவசியமானதாகவும் சமநிலையானதாகவும் இருப்பதற்கான சட்டத் தரங்களை பூர்த்தி செய்யத் தவறிவிடும். | |

| குறிகாட்டி 4: மதமாற்றம் தொடர்பான விடயங்களில் FoRB ஐ ஆதரிக்கும் சட்டம் | | | |
|---|---|---|---|
| 1. மதமாற்றத்திற்கு பாதுகாப்பு அளிக்கின்றதா/மதப் பிரச்சார உரிமையை சட்டக் கட்டமைப்பு அங்கீகரிக்கின்றதா? | 4 | அரசியலமைப்பின் கீழ் ஒரு உரிமையாக அங்கீகரிக்கப்படவில்லை. இந்த நிலைப்பாட்டை நீதித்துறை ஆதரித்துள்ளது. | |
| 2. பிரச்சாரத்திற்கு தடை விதிப்பதை சட்டக் கட்டமைப்பு தவிர்க்கின்றதா? | 5 | மதமாற்றத்திற்கு எதிரான சட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. பிரச்சாரம் செய்யும் திறனுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை என்றாலும், அத்தகைய செயல்பாடு சட்டவிரோதமானது அல்ல என்பதை நீதித்துறை ஆதரித்துள்ளது. | |
| **குறிகாட்டி 5: மதம் அல்லது நம்பிக்கைக்கு எதிராக பாகுபாடு காட்டும் பிற சட்டங்கள் இன்மை** | | | |
| 1. சட்டக் கட்டமைப்பு அதன் மக்கள் மீது அரச /பெரும்பான்மை மதத்தைத் திணிப்பதைத் தவிர்க்கின்றதா? | 4 | அரசியலமைப்பின் பிரகாரம் பௌத்தத்திற்கு முதன்மையான இடம் வழங்கப்பட்டுள்ளது. | |
| 2. கல்வி தொடர்பில் FoRB இன் நலன்களை சட்டக் கட்டமைப்பு எவ்வாறு நிவர்த்தி செய்கின்றது? | 6 | பெற்றோரின் மதத்தைக் கற்பிப்பதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. அரச பாடசாலைகளில் மாணவர் சேர்க்கையின்போது, அந்தப் பாடசாலை அரசாங்கத்தால் நடத்தப்பட்டால் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த மாணவர்களின் விகிதம் கருத்தில் கொள்ளப்படும். | |
| 3. FoRB இன் பாதுகாப்பால் பிரஜாவுரிமை அற்றவர்கள் பயனடைகின்றார்களா? | 4 | சில அரசியலமைப்பு உத்தரவாதங்கள் மூலம் வழங்கப்படும் பாதுகாப்பு பிரஜைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அகதிகளுக்கு முறையான பாதுகாப்பு வழங்கப்படவில்லை. 1951 அகதிகள் பிரகடனத்தை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை. | |

| குறிகாட்டி 6: வழிபாட்டுத் தலங்கள் மற்றும் நம்பிக்கை சார்ந்த அமைப்புகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் | | | |
|---|---|---|---|
| 1. வழிபாட்டுத் தலங்களை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் சட்டங்கள் உதவுகின்றனவா? | 4 | வழிபாட்டுத் தலங்களை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் உள்ள தடைகளில் கட்டாயப் பதிவு தேவைப்படும் சுற்றறிக்கை, இந்தப் பதிவைப் பெறுவதில் உள்ள சவால்கள் மற்றும் வழிபாட்டுத் தலத்தை குறிவைக்க பதிவு செய்யாததை ஒரு காரணமாகப் பயன்படுத்துவது ஆகியவை அடங்கும். | |
| 2. நம்பிக்கை சார்ந்த அமைப்புகளை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் சட்டம் உதவுகின்றதா? | 4 | முன்மொழியப்பட்ட அரசு சாரா நிறுவனச் சட்டம் கட்டாயப் பதிவு மற்றும் அரசாங்கக் கொள்கையுடன் இணங்குவதைக் கோருகின்றது. இது எதிர்ப்புகளை வெளிப்படுத்துவதை கடினமாக்குகின்றது. சட்டம் தொடர்பாக அர்த்தமுள்ள ஆலோசனைகள் எதுவும் நடத்தப்படவில்லை. உத்தியோகப்பூர்வ வரைபு எதுவும் அனுப்பப்படாததால் நம்பிக்கை சார்ந்த அமைப்புகளின் மீதான தாக்கத்தைத் தீர்மானிப்பது கடினம் ஆகும். | |



## அத்தியாயம் 2:

# சமூக - அரசியல் மற்றும் நிர்வாகம்

FoRB இன் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் அரசாங்கம் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களின் செயல்களில் காணப்படும் முக்கிய போக்குகள் மற்றும் தாக்கங்கள்.

## முக்கிய அவதானிப்புகள்

- அரசாங்கத்தின் ஆதரவு அதிகம் இல்லாத போதும், வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சர்ச்சைக்குரிய மத தலங்களில் இடம்பெறும் நடவடிக்கைகள், பௌத்த மத பாரம்பரியத்திற்கு முன்னுரிமை அளிக்கும் போக்கு தொடர்வதையும் ஏனைய மதங்கள் புறக்கணிக்கப்படும் நிலையையும் வெளிப்படுத்துகின்றன.
- மதக் குழுக்கள் மற்றும் வழிபாட்டு இடங்கள் தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிகள் நடைமுறைப்படுத்தப்படும்போது, அவை பெரும்பான்மையினருக்கு சாதகமாக அமைகின்றன் பெரும்பாலான முரண்பாடுகளில் பௌத்த மதம் சார்ந்த நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. சிறுபான்மையினருடன் தொடர்புடைய முரண்பாடுகளில் பெரும்பான்மையினருக்கு முன்னிலை வழங்கப்படுகின்றது.
- சமூக அரசியல் மட்டங்களில் கடும்போக்கு பௌத்தக் குழுக்கள் தொடர்பான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என்றாலும், இந்து கடும்போக்கு அமைப்புகள் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான உணர்வுகளை ஊக்குவிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.
- அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட பிரச்சாரங்கள் குறைந்துள்ள போதும், அரசாங்கத்தின் தொடரும் பாகுபாடுகள் மற்றும் சில பகுதிகளில் நிலவும் கட்டுப்பாடுகள் முஸ்லிம் சமூகத்தின் ஒரு பகுதியைப் புறக்கணிக்கின்றன.
- மதக் குழுக்களைக் குறிவைக்கும் தீங்கு விளைவிக்கும் பேச்சு குறைந்திருப்பதை 2024 ஆம் ஆண்டு தேர்தல்கள் காட்டுகின்றன. அதேநேரம் அனைவரையும் உள்ளடக்கிய வரவேற்பு மனப்பான்மையை அரசியல் நடவடிக்கைகள் வெளிப்படுத்தின.

பௌத்த மதம் அரசியலுடனும் அரசாங்கத்துடனும் இணைக்கப்பட்டிருப்பது அதன் மேன்மையை நிர்ணயித்துள்ளது. இது அரசாங்கத்தையும் அரசியல் செயற்பட்டாளர்களையும் செல்வாக்குச் செலுத்தி மத சுதந்திரத்தில் (FoRB) தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இன - தேசியவாதத் திட்டங்களுக்கான அரசாங்கத்தின் ஆதரவு தளர்த்தப்பட்டதுடன் 2024 நிர்வாகங்களால் முன்னெடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள் காரணமாக FoRB இற்கான சூழல் மேம்பட்டாலும், இன்னும் சில சிக்கலான நடைமுறைகள் தொடர்வதை உறுதிப்படுத்துகின்றன.

## 1. சமய மரபுகளைப் பாதுகாத்தல்

அரசியலமைப்பு பௌத்தத்திற்கு "முன்னுரிமை" அளித்து அதை அரசாங்கத்துடன் உத்தியோகபூர்வமாக இணைக்கின்றது. "புத்த சாசனத்தைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும்" அரசியலமைப்பு அரசாங்கத்ததிற்கு ஆணையிடுகின்றது (அத்தியாயம் 1, பிரிவு 4.1 ஐப் பார்க்கவும்). இது விகாரைகள், நினைவுச்சின்னங்கள், விகாரை நிலங்கள் மற்றும் பின்பற்றுபவர்கள் தொடர்புடைய பௌத்த நடைமுறைகள் மற்றும் சித்தாந்தங்களைப் பாதுகாப்பதற்கும்

நீட்டிக்கப்படுகின்றது.[191]

காலப்போக்கில் அரசாங்கங்கள் இந்த வழிமுறையைப் பின்பற்றி பௌத்த மதத்தை “முதன்மை”[192] என்ற கருத்துடன் இணைத்துள்ளன. மேலும் இந்த உணர்வு தேசிய, சமூக மற்றும் தனிப்பட்ட மட்டங்களில் பரவியுள்ளது. பாரம்பரிய தளங்களை பாதுகாப்பதும் நிர்வகிப்பதும் தொடர்பான அரசாங்கத்தின் அணுகுமுறை இந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அனுராதபுரம் புனித பூமி அபிவிருத்தி திட்டத்தின் பணிகளை விரைவுபடுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இது இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள நான்கு யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளங்களில் ஒன்றாகும். குறித்த பகுதியைப் பாதுகாப்பதற்காக நகரத்தின் நுழைவாயிலில்[193] எதிர்காலத்தில் கட்டட நிர்மாணங்களைத் தடை செய்யும் புதிய நடவடிக்கைகளை தொல்லியல் திணைக்களம் ஜூலை மாதம் அறிவித்தது. அதே நேரம் இலங்கைக்கு வருகை தந்த யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகத்துடன்[194] தொல்லியல் அகழ்வாராய்ச்சி ஒத்துழைப்பு குறித்து ஜனாதிபதி கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவை இலங்கையின் பௌத்த சமூகம் உட்பட உலகளாவிய மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தளங்கள் என்பதால் அவற்றில் கவனம் செலுத்துவது அவசியமானதும் வரவேற்கத்தக்கதும் ஆகும். இருப்பினும், இலங்கை தொல்லியல் திணைக்களத்திற்கு இலங்கையின் மொத்த தொல்லியல் பாரம்பரியத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு இருந்தாலும், சிங்கள – பௌத்த சமூகத்துடன் தொடர்புடைய தளங்களுக்கு முன்னுரிமை[195] அளிப்பதை ஆய்வுகள் காட்டுகின்றன.

திருகோணமலை (கிழக்கு) கந்தசாமி மலையில் உள்ள தளங்களின் பராமரிப்பில் இது தெளிவாக வெளிப்படுகின்றது் அங்கு முருகக் கடவுளை வழிபடும் பழமையான இந்து கோயிலின் எச்சங்கள் உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கம் 2013 ஆம் ஆண்டு கந்தசாமி மலையை பாதுகாப்பான புராதன “தொல்பொருள் தளம்” என அறிவித்திருந்தாலும், அதனைப் பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பழமையான கல்வெட்டுகள் அழிக்கப்பட்டு எச்சங்கள் பராமரிக்கப்படாமல் விட்டுவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நியாயமற்ற நடவடிக்கை குறித்து பெரிதும் புகழ்பெற்ற வழிபாட்டு தலங்களும்

---

191 வெரிட்டே ரிசேர்ச், மறைந்து வரும் நம்பிக்கைகள்: இலங்கையில் மத வழிபாட்டு உரிமையில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்தல், (வெரிட்டே ரிசேர்ச். ஜூலை, 2024), https://www.veriteresearch.org/wp-content/uploads/2024/07/20240507_VeriteLegal_FadingBeliefs.pdf, 22

192 நாஸ்லியா கானியா, மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையில் வெறுப்பு: மதச்சார்பான அல்லது நம்பிக்கை சார்ந்த சுதந்திரம் தொடர்பான சிறப்பு அறிக்கையாளர் அறிக்கை, (ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, ஏப்ரல் 2024), https://documents.un.org/doc/undoc/gen/g23/267/05/pdf/g2326705.pdf

193 கெனோலி பெரேரா, “அனுராதபுர புனித பூமி: நகர நுழைவாயிலில் எதிர்காலக் கட்டுமானத்திற்கு தடை,” தி மார்னிங், ஜூலை 21, 2024, https://www.themorning.lk/articles/skKfP5lgC5za6U99Tqck

194 இலங்கை தூதரகம் – பிரான்ஸ், “பாரிஸில் பணிப்பாளர் நாயகம் ஆட்ரி அசுலேவுடன் நடைபெற்ற சந்திப்பில், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யுனெஸ்கோவுடனான இலங்கையின் ஒத்துழைப்பு குறித்து விவாதித்தார்,” 26 ஜூன் 2023, https://www.srilankaembassy.fr/en/page/953-president-ranil-wickremesinghe-discusses-sri-lankas-cooperation-unesco-meeting

195 மாற்று கொள்கைகளுக்கான நிலையம், இலங்கையில் காணி மோதல்களின் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய போக்குகள், (மாற்று கொள்கைகளுக்கான நிலையம், ஆகஸ்ட் 2024), https://www.cpalanka.org/the-intersectional-trends-of-land-conflicts-in-sri-lanka/#:~:text=15%20years%20after%20the%20end>to%20a%20post%2Dconflict%20society. பக்கம் 53-54 ஓக்லாந்து நிறுவனம், முற்றுகையில் திருகோணமலை: இலங்கையில் தமிழர் பாரம்பரிய நிலங்களை குறிவைக்கும் நில அபகரிப்புகள், (ஓக்லாந்து நிறுவனம், 12 செப்டம்பர் 2024), https://www.oaklandinstitute.org/trincomalee-under-siege-land-grabs-target-tamil-homeland-sri-lanka. பக்கம் 16 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேசக் கூட்டணி (NCEASL), இந்துக்களுக்கு எதிரான வன்முறை மற்றும் அச்சுறுத்தல் சம்பவங்கள் 2024, வெளியிடப்படாத அறிக்கை, NCEASL, டிசம்பர் 2024

புகார் தெரிவித்துள்ளன. திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரம் 205 கி. மு[196] கால வரலாற்றைக் கொண்ட முக்கிய இந்து வழிபாட்டு தலமாகக் கருதப்படுகின்றது. இத்தலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஒன்றாக உள்ளபோதும், கோயிலுக்கு அருகில் புதிய பாதைகள் மற்றும் வீதியோர வியாபாரங்கள் மூலம் அந்த இடத்தின் பாதுகாப்பும் புனிதமும்[197] பாதிக்கப்பட்டுள்ளதாக கோயில் நிர்வாகமும் அந்த பகுதியின் அரசியல் பிரதிநிதிகளும் குறிப்பிடுகின்றனர்.

தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கை ஒன்றுக்குப் பதிலளித்த தொல்பொருளியல் திணைக்களம் “மதம், இனம் அல்லது பிற சிறப்புகளின் அடிப்படையில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படவில்லை...” என்று குறிப்பிட்டது. மேலும், “ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்படும் தொகை போதுமானதாக இல்லாததால்[198], வெளிப்புற நிதியுதவிகளுடன் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது...” என்றும் தெரிவித்தது. 2023 மே மாதம் அப்போதைய ஜனாதிபதி விக்கிரமசிங்க அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்ள பௌத்த தேரர்களிடமிருந்து தொல்பொருள் திணைக்களம் நிதி பெற்றதை விமர்சித்தார்[199]. இந்தச் சூழலில், தேசிய தொல்லியல் மதிப்பு மற்றும் பாதுகாப்பை மட்டும் வெளிப்புற நிதியளிப்பவர்களின் நோக்கங்கள் கருத்தில் கொள்ளாது என்பதால், நிதி வழங்கும் செயல்முறைகளை ஒழுங்குபடுத்துவது முக்கியமானதாகும்.

பாரம்பரிய முகாமைத்துவம் தொடர்பில் உருவாக்கப்படும் குழுக்களில் பாரபட்சம் காட்டப்படுவது தெளிவாகக் காணப்படுகின்றது. மார்ச் மாதம், அப்போதைய புத்தசாசன, சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, தொல்பொருட்கள் மற்றும் தொல்லியல் பாரம்பரியத்தைக் கண்டறியவும் பாதுகாக்கவும் ஒரு புதிய சட்டமூலத்தை உருவாக்கும் திட்டம் தொடர்பில் அறிவித்தார். இந்தச் சட்டத்தை உருவாக்குவது தொடர்பிலான ஆலோசனைகள் பெரும்பாலும் பௌத்த மதத் தலைவர்களுடன்[200] மட்டுமே நடந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாரம்பரியம் தொடர்பான விவாதங்களில் மத சிறுபான்மையினர் புறக்கணிக்கப்படுவது ஒன்றும் புதிய விடயம் அல்ல. 2020 ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கிழக்கு மாகாணத்தில்[201] “தொல்லியல் பாரம்பரிய முகாமைத்துவத்திற்கான” 11 பேர் கொண்ட செயலணியை நியமித்தார் இதில் அந்த மாகாணத்தில் பெரும்பான்மையாக உள்ள தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆரம்பத்தில் சேர்க்கப்படவில்லை. தேசிய பாரம்பரியத்தைச் சுற்றியுள்ள விவாதங்கள் அடையாள அரசியல், மக்கள் தொகை மற்றும் நிலக் கட்டுப்பாட்டை[202] பாதிக்கும் வகையில் கொள்கைகளை

196 “ஈழத்தின் பஞ்ச (ஐந்து) ஈஸ்வரங்கள்,” தமிழ் நே‘ன், அக்டோபர் 16, 1999, https://tamilnation.org/heritage/eelam/fiveishwarams#Koneshwaram

197 D.B.S ஜெயராஜ், “முருகேசன் திருச்செல்வம் மற்றும் கோணேசுவரம் விவகாரம்,” டெய்லி மிரர், நவம்பர் 19, 2022, https://sangam.org/murugeysen-tiruchelvam-and-koneswaram-issue/

198 அறிக்கையின் ஆசிரியரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்கு பதிலாக தொல்பொருள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தகவல். டிசம்பர் 3, 2022.

199 “பௌத்த பிக்குகளிடமிருந்து நிதி பெற்றது தொடர்பாக தொல்பொருள் திணைக்களத்தை இலங்கை ஜனாதிபதி கடுமையாகக் கண்டித்தார்,” எகானமி நெக்ஸ்ட், மே 12, 2023, https://economynext.com/sri-lanka-president-raps-archeological-dept-for-obtaining-funds-from-monks-120425/

200 “பாரம்பரிய மரபுரிமையைப் பாதுகாக்க புதிய சட்டம் முன்மொழியப்பட்டது,” டெய்லி நியூஸ், மார்ச் 4, 2024, https://www.dailynews.lk/2024/03/04/admin-catagories/breaking-news/430450/new-act-proposed-to-preserve-archaeological-heritage/

201 “ஒக்லாந்து நிறுவனம், முற்றுகையில் திருகோணமலை: இலங்கையில் தமிழர் பாரம்பரிய நிலங்களை குறிவைக்கும் நில அபகரிப்புகள், 14-15”

202 மாற்று கொள்கைகளுக்கான நிலையம், “இலங்கையில் காணி மோதல்களின் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய போக்குகள் ” 83

உருவாக்கும் சாத்தியம் உள்ளதால், இந்தப் புறக்கணிப்பு முறைகள் கவலை அளிக்கின்றன.

## 2. பாரம்பரியம் தொடர்பான சவால்களில் மத சுதந்திரம் (FoRB)

சிறுபான்மை மதத் தலங்களின் வெளிப்படையான புறக்கணிப்பு மற்றும் பாரம்பரியம் தொடர்பான விவாதங்களில் சிறுபான்மையினரை விலக்குவது தவிர, சர்ச்சைக்குரிய மதத் தலங்கள் குழசுடீக்கான மிகப்பெரிய கவலைகளை ஏற்படுத்துகின்றன. வடக்கு மற்றும் கிழக்கில், மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்திற்கு எதிரான சம்பவங்களில் அசாதாரணமான முறையில் பௌத்த சின்னங்களைக் கட்டாயப்படுத்துதல், மத சின்னங்கள் மற்றும் தளங்களை சேதப்படுத்துதல் மற்றும் வழிபாட்டைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

இந்தப் பிரச்சினைகள் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தை மீறுவதுடன், வடக்கு கிழக்கின் கடந்த கால மோதல்கள் மற்றும் பிராந்திய சுயாட்சி கோரிக்கைகளுடன் தொடர்புடையவை. இந்து மதத்திற்கு முக்கியமான இடங்களில் புத்த மதச் சின்னங்களைத் திணிப்பது, "தமிழர் தாயகம்[203]" என்ற கோரிக்கைகளின் எதிர்ப்பாகப் பார்க்கப்படுகின்றது.

பத்திரிகைச் செய்தியொன்றில் வெளியான தகவலின் பிரகாரம், 2023 ஆம் ஆண்டில் தொல்பொருள் திணைக்களம் கிழக்கின் மீது புதிய கவனம் செலுத்துவதாகக் காட்டியது. 2023 ஆம் ஆண்டில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு (கிழக்கு) மாவட்டங்களில் 996 தொல்பொருள் தளங்களை திணைக்களம் அடையாளம் கண்டது. அதன் இணையதளத்தில் அனுராதபுரம், பொலன்னறுவை (வட மத்திய), காலி (தென் மேற்கு) மற்றும் கண்டி (மத்திய) ஆகிய இடங்களில் மொத்தம் 329 தொல்பொருள் தளங்கள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அறிக்கையின் பிரகாரம், வரலாற்றை அழிக்க முடியாது என்றும், தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகள் பராமரிப்பை மையமாகக் கொண்டவை என்றும் கொழும்பில் ஊடகங்களிடம் பேசியபோது அமைச்சர் விக்ரமநாயக்க குறிப்பிட்டார்[204].

தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் வரும் தொல்பொருட்கள் சட்டம் சமமாக அமுல்படுத்தப்படவில்லை என்றும், அரசியல் நோக்கில் பயன்படுத்தப்படுகின்றது என்றும் பரவலாக கருதப்படுகின்றது[205] (அத்தியாயம் 1, பிரிவு 2.2 ரூ பிரிவு 4.5 ஆகியவற்றைப் பார்க்கவும்). தொல்பொருள் திணைக்களம் ஏனைய அரச திணைக்களங்கள்[206] மற்றும் இராணுவத்துடன் இணைந்து சிங்கள - பௌத்த இன - தேசியத்துவத்தை நிலைநிறுத்தும் பணியில் பங்களித்து வருவதாக கடந்த கால ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

---

203 ஹரிந்திர தசநாயக்க மற்றும் ரஜினி கமகே, "குருந்தி விவாதம் மற்றும் கலாசார அரசியலை (மற்றும் அவசர தேவை) ஆராய்தல்," டெய்லி குவு, ஜுலை 22, 2024 https://www.ft.lk/columns/Mapping-the-Kurundi-discourse-and-politics-of-culture-and-expediency/4-750898

204 நெத்மி ராஜவசம், "கிழக்கில் இலங்கை தொல்பொருள் திணைக்களம் அகழ்வாராய்ச்சிகளைத் தொடரும்: அமைச்சர்," எகனாமிநெக்ஸ்ட், மார்ச் 18, 2024 https://economynext.com/sri-lanka-archaeology-dept-to-continue-excavations-in-the-east-minister-154506/

205 மாற்று கொள்கைகளுக்கான நிலையம், இலங்கையில் காணி மோதல்களின் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய போக்குகள், 61

206 மேலே குறிப்பிடப்பட்டது 41-42

முல்லைத்தீவு (வடக்கு) மாவட்டத்தில் அமைந்துள்ள குருந்தூர் ஆதி சிவன் ஐயனார் கோயில் அமைந்துள்ள இடத்தில் நடைபெற்றுவரும் கட்டுமானப் பணிகள், சர்ச்சைக்குரிய மத தலங்களில் புதிய பௌத்த மதச் சின்னங்களைத் திணிப்பதை வெளிப்படுத்துகின்றன.

1933 ஆம் ஆண்டு முதன்முறையாக தொல்பொருள் தளமாக அறிவிக்கப்பட்ட இந்த இடம், பண்டைய காலத்திலிருந்து பல தலைமுறைகளாக இந்து வழிபாட்டு முறைகளுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டில் பௌத்த பிக்கு ஒருவர் இங்கு புத்த தூபியை நிறுவ முயன்றபோது, நீதிமன்றங்கள் இந்த இடத்தில் இந்து மதத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, காவல்துறைக்கு கலவரங்களைத் தடுப்பதற்கான அதிகாரத்தை வழங்கின. 2020 ஆம் ஆண்டில், “குருந்தி விகாரை” என்ற பௌத்த மடாலயம் இங்கு இருந்திருக்கலாம் என்ற ஆய்வு தொல்பொருள் திணைக்களம் நடவடிக்கைளை முன்னெடுப்பதற்கு ஆரம்பமாக இருந்தது. அதனைத் தொடர்ந்து மறுசீரமைப்பு என்ற போர்வையில் குருந்தி விகாரை இருந்ததாக நம்பப்படும் இடத்தில் புதிய தூபியை நிர்மாணிக்கும் பணிகள் தொடங்கின. புதிதாகக் கட்டப்பட்ட நிர்மாணம் அகற்றப்பட வேண்டும் என ஜுலை 2022 இல் வழங்கப்பட்ட உத்தரவு உட்பட புதிய கட்டுமானங்களை பல நீதிமன்ற உத்தரவுகள் தடுக்க முயன்றாலும், இந்தச் செயற்பாடுகள் தொடர்கின்றன[207].

உண்மை அடிப்படையிலான அகழ்வாராய்ச்சிப் பணிகள் முக்கியமானவை என்பதுடன் வரவேற்கத்தக்கவை என்றாலும், அந்த இடத்தை “சிங்கள- பௌத்த” தலம் என அவசரமாக உரிமை கோரும் முயற்சிகள் கவலையை எழுப்பியுள்ளது. இது முழுமையான அகழ்வுப் பணிகளைப் பாதிப்பதோடு, பொதுவான இன மத வரலாறு இருக்கக்கூடிய வாய்ப்பை புறக்கணிக்கின்றது[208].

இந்த முயற்சிகள் இந்து பாரம்பரியத்துடன் தொடர்புடைய விடயங்களை அழித்தல் மற்றும் வழிபாட்டைத் தடுத்தல் உள்ளிட்ட மத சுதந்திர மீறல்களுக்கு வழிவகுத்துள்ளன. முன்னர் குறிப்பிடப்பட்டது போன்று, (அத்தியாயம் 1, பிரிவு 4.5 ஐப் பார்க்கவும்) கோயிலில் இருந்த இந்து சிலைகள் அகற்றப்பட்டதாகவும், அந்தப் பகுதியில் தொந்தரவு செய்யப்படக்கூடாது என்ற விதிமுறைகள் இருந்தபோதும் மரங்களை வெட்டப்பட்டு எரிக்கப்பட்டதாக[209] இந்த ஆண்டு அறிக்கையிடப்பட்டிருந்தது.

மேலும், பௌத்த மற்றும் இந்து சமூகங்கள் அந்த இடத்திற்கு சென்று வழிபாடுகள் நடத்தினாலும்[210], அவர்களிடத்தில் காட்டப்படும் அணுகுமுறை வேறுபடுகின்றது[211]. 2024 ஜுன் மாதம் அனுராதபுரத்திலிருந்து வந்த 200க்கும் மேற்பட்ட புத்த பிக்குகள் மற்றும் சிங்கள பக்தர்கள் அந்த இடத்தில் எந்தத் தடையும் இல்லாமல், காவல்துறையின் பாதுகாப்புடன் வழிபாடு செய்தனர். ஆனால் அந்த இடத்திற்கு செல்லும் இந்துக்கள் மீது கண்காணிப்பு

207 மேலே குறிப்பிடப்பட்டது

208 கலாநிதி மகேந்திரன் திருவரங்கன், (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), ஜோவிடா அருளானந்தம் உடனான தொலைதூர நேர்காணல். நவம்பர் 21, 2024.

209 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இலங்கையில் காணி மோதல்களின் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய போக்குகள், 41-42

210 ஹரிந்திர தசநாயக்க மற்றும் ரஜினி கமகே, “குருந்தி விவாதம் மற்றும் கலாசார அரசியலை (மற்றும் அவசர தேவை) ஆராய்தல்”

211 மாற்று கொள்கைகளுக்கான நிலையம், இலங்கையில் காணி மோதல்களின் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய போக்குகள், 41-42

இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்[212].

முன்னர் குறிப்பிடப்பட்டது போன்று (அத்தியாயம் 1, பகுதி 4.5 ஐப் பார்க்கவும்), சர்ச்சைக்குரிய இடங்களில் மத வழிபாட்டிற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், 2018 ஆம் ஆண்டு முதல் தொல்பொருள் திணைக்களத்தின் தலையீடுள்ள வவுனியா வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் கோயிலில் ஏற்பட்ட நிகழ்வுகளிலும் தெளிவாகப் பார்க்க முடிகின்றது. மார்ச் மாதம் சிவராத்திரி[213] அன்று வழிபாடுகளை முன்னெடுக்க நீதிமன்ற உத்தரவு அனுமதித்திருந்த போதும், காவல்துறையினர் தடை செய்ததால் அங்கு பதட்டம் ஏற்பட்டது. இதன்போது மதச் சின்னங்கள் அவமதிக்கப்பட்டதுடன் எட்டு பக்தர்கள் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்தில் தவறாக நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது (பின்னர் குற்றச்சாட்டு இல்லாமல் விடுவிக்கப்பட்டனர்), மேலும் ஒரு பக்தர் தாக்கப்பட்டார்[214].

ஜூலை மாதத்தில், தொல்பொருள் திணைக்களத்தால் பாரம்பரிய இடமாக அறிவிக்கப்பட்ட முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பகுதியில் உள்ள நீராவியடி பிள்ளையார் கோயிலிலும் ஆண்டு தோறும் நடைபெறும் இந்துக்களின் திருவிழாவை அதிகாரிகள் தடுக்க முயன்றனர். புதிய அகழ்வு, நிர்மாணம் அல்லது நிறுவல்களைத் தடைசெய்யும் நீதிமன்ற உத்தரவைப் பெற்றிருந்த காவல்துறை, பக்தர்கள் சிவலிங்கத்தை (மதச் சின்னம்) நிறுவ முயன்றதாகக் குற்றஞ்சாட்டினர். விழாவைத் தடை செய்வதற்காக மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக கோயில் நிர்வாகமும் பக்தர்களும் தெரிவித்திருந்தனர். அருகிலுள்ள விகாரையின் பிக்குவுடன் சேர்ந்து கால்வதுறை, இராணுவம் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் கோயில் பூசாரிகளை எதிர்த்ததாகவும் கூறினர்[215].

அதேபோன்று கிழக்கில் கந்தசாமி மலையில் உள்ள முருகன் ஆலயத்தில் பெப்ரவரி மாதம் நடைபெற்ற மாதாந்தப் பொங்கல் விழாவில் இந்துக்கள் பங்குபற்றுவதை காவல் துறையினரும் இராணுவத்தினரும் தடுத்துள்ளனர் (பிரிவு 1 ஐப் பார்க்கவும்). தற்போது இந்த இடம் தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதால், பக்தர்கள் மலையில் ஏறி கோயிலில் வழிபட அனுமதிக்கப்படவில்லை அவர்கள் மலையடிவாரத்தில் சேதமடைந்த மற்றும் உடைந்த சிலைகள் உள்ள இடத்தில் மட்டுமே வழிபட அனுமதிக்கப்படுகின்றனர்.[216]

தனியான புத்த விகாரைகளை விரிவுபடுத்துவதன் மூலம் பௌத்தச் சின்னங்களைப் பரப்பும் முக்கிய போக்கு வடக்கு மற்றும் கிழக்கில் காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் பெரும்பாலான முஸ்லிம்கள் வசிக்கும் அம்பாறை (கிழக்கு) பொத்துவிலில் 1950 ஆம் ஆண்டுகளில் நிறுவப்பட்ட முஹுது மகா விகாரை தற்போது பாரிய திட்டமாக விரிவுசெய்யப்பட்டுள்ளது. குறைந்தது 72 ஏக்கர் காணியை உள்ளடக்கிய இந்த விரிவாக்கம், குறைந்தது 300 முஸ்லிம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்றது. முஹுது மகா விகாரை உட்பட 11 விகாரைகளை "புனித

212 "குருந்தூர்மலை வழிபாட்டின்போது காவல்துறையால் தமிழ் பக்தர்கள் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டனர்", தமிழ் கார்டியன், ஜூன் 24, 2024 , https://www.tamilguardian.com/content/tamil-devotees-subjected-surveillance-sri-lankan-police-during-worship-kurunthurmalai

213 இரவு முழுவதும் மக்கள் விழித்திருந்து சிறப்பு பிரார்த்தனைகள் மற்றும் சடங்குகளைச் செய்யும் சிவபெருமானுக்கான விழா.

214 "NCEASL, 2024 - இந்துக்களுக்கு எதிரான வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள்"

215 மேற்சொன்னபடி

216 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இலங்கையில் காணி மோதல்களின் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய போக்குகள், 41-42

பூமி" என பெப்ரவரி மாதத்தில் தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களம் அறிவித்தபோது இந்தத் திட்டம் மேலும் அதிகாரப்பூர்வமாக்கப்பட்டது.[217]

இவ்வாறான ஏனைய திட்டங்கள் குடிசனப் பரம்பலை மாற்றியமைக்கும் அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளன் இது அடையாள அரசியலில் பாதிப்புகளை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகின்றது. சமீப ஆண்டுகளில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் வாழும் திருகோணமலையின் குச்சவெளி பிரிவில் 32 புத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளதுடன், 2506.5 ஏக்கர் தனியார் நிலம் கையகப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது[218].

போரின் போதும் போர் முடிந்த காலகட்டங்களிலும் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் புத்த மதக் கட்டடங்கள் தோன்றியுள்ளன; தற்போது அவற்றைச் சட்டப்பூர்வமாக்கும் முயற்சிகள் நடக்கின்றன. கிளிநொச்சி (வடக்கு) தையிட்டி பகுதியில் புத்த விகாரை ஒன்று தனியார் காணியில் ஆக்கிரமிக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளதுடன் தமிழ் காணி உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தைத் தொடர்ந்து பாதித்து வருகின்றது. மார்ச் மாதம் இலங்கை தேசிய பாதுகாப்பு[219] மேற்பார்வை குழு, காணியை விகாரைக்கு மாற்றுவதற்கு உள்ளூர் அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கி, அதை சட்டபூர்வமாக்க முயன்றதுடன் போராட்டங்களைத் தடுக்க முயன்றது.

வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவம் நிலைகொண்டிருப்பது மத சுதந்திரத்திற்குப் பரவலான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது் வழிபாட்டுத் தலங்கள் உட்பட காணிகளை அணுகுவதற்கு கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளன. எனினும், வரவேற்கத்தக்க வகையில் யாழ் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள[220] ஏழு கோயில்களுக்கு பக்தர்கள் நிபந்தனை அடிப்படையில் செல்ல இந்த ஆண்டு பிப்ரவரியில் அனுமதி வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் கட்டப்பட்ட "சரசவி விகாரை" எனப்படும் பெரிய பௌத்த விகாரையானது, பிற இன - மதக் குழுக்களுக்கு முக்கியமான பகுதிகளில் பௌத்தச் சின்னங்களைத் திணிப்பதைக் காட்டும் போக்கைக் குறிக்கின்றது. ஏனைய மதங்களின் வழிபாட்டுத் தலங்களுடன் ஒப்பிடுகையில், இந்தப் பௌத்த விகாரை வெளிப்புற நிதியுதவியுடன் எதிர்ப்புகளுக்கு மத்தியில் கட்டப்பட்ட பாரிய அளவிலான கட்டுமானமாகும். இந்த ஆண்டு, சிங்கள மற்றும் தமிழ் பேசும் மாணவர்கள் விகாரையில் வழிபட நேரடியாகவும் மறைமுகமாகவும் அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் இது அவர்களின் மத சுதந்திர உரிமையை மீறுகின்றது[221] என்றும் கவலையளிக்கும் தகவல்கள் வெளியாகின.

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கு வெளியே இடம்பெற்ற சம்பவங்கள் சமீபத்தில் பதிவுசெய்யப்படவில்லை என்றாலும், இது போன்ற சிக்கல்கள் கடந்த ஆண்டுகளில் இடம்பெற்றுள்ளன[222]. கேகாலை (சப்ரகமுவ) மாவட்டத்தில் உள்ள தேவனகல பாறை மற்றும்

---

217 மேற்சொன்னபடி 16-17

218 மேற்சொன்னபடி, பக்கம் 46-49

219 மேற்சொன்னபடி, பக்கம் 27-28

220 யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் தீவுகளில் பெரும் நிலப்பகுதிகள் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ளன.

221 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி (NCEASL), 2024 ஆம் ஆண்டின் பொது மற்றும் ஏனைய மத சமூகங்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பயமுறுத்தல் சம்பவங்கள், வெளியிடப்படாத அறிக்கை, NCEASL, டிசம்பர் 2024

222 பவானி பொன்சேகா, "இலங்கையின் சர்ச்சைக்குரிய மத தலங்கள் குறித்த சுருக்கமான ஆய்வு", (மைனர் மேட்டர்ஸ், நவம்பர் 2023), https://

மாத்தளை (மத்திய) மாவட்டத்தில் உள்ள தம்புள்ளை கைரியா பள்ளிவாசல் தொடர்பான நிகழ்வுகள் இந்தப் போக்கை வெளிப்படுத்துகின்றன.

சிவில் சமூகத் தலைவர்களுடன் நடைபெற்ற நேர்காணல்களில், சில சந்தேகங்கள் இருந்தாலும், இந்தப் போக்குகள் இந்த ஆண்டு [223]அரசியல் நிர்வாகங்களால் தடுக்கப்படவில்லை என்றாலும் ஆதரிக்கப்படவில்லை என்பதில் பலரும் நம்பிக்கையுடன் இருந்தனர். 2023 ஜூனில், அப்போதைய ஜனாதிபதி விக்கிரமசிங்க வடக்கு மற்றும் கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தின் காணி அபகரிக்கும் அணுகுமுறையை விமர்சித்திருந்தார். இதன் விளைவாக பணிப்பாளர் நாயகம்[224] பதவியை ராஜினாமா செய்தார். பாராளுமன்றத் தேர்தலுக்கு முன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அரச முகவரகங்களிடம் உள்ள காணிகளை மீண்டும் வழங்குவதாக வாக்குறுதி அளித்தார். தேர்தல்[225] வெற்றிக்குப் பின்னர் யாழ்ப்பாணம் கற்கோவளம் பகுதியில் மூன்று தசாப்தங்களுக்குப் பிறகு இராணுவ முகாம் மூடப்பட்டதாக[226] அறிவிக்கப்பட்டது. எனினும் காணிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அரசாங்கம் உண்மையிலேயே “சட்டத்தின் ஆட்சியை” நியாயமாகவும் பாரபட்சம் இன்றியும் பின்பற்றினால் பாரம்பரிய இடங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு சுமூகமான தீர்வினைக் காணலாம் என சிவில் சமூகத் தலைவர்கள் கருதுகின்றனர்[227].

பாரம்பரிய தலங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பது சிக்கலானது. இந்துக்களின் பாரம்பரியத்திற்கு ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து அந்த சமூகத்திடம் கவலைகள் இருந்தாலும் பௌத்த சமூகத்தின் கருத்துகளும் உணர்வுகளும் முக்கியமானவை.

ஒரு நேர்காணலில் வணக்கத்திற்குரிய கலுபஹன பியரதன தேரர், புதிய பௌத்த மதச் சின்னங்களைத் திணிக்கும் திட்டங்களுக்கு தனது எதிர்ப்பைத் தெரிவித்த அதேவேளை, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த மத இடங்களைப் பாதுகாப்பதில் தமிழ் சமூகத்தின் ஆதரவை உறுதிப்படுத்தும் பொறுப்பு குறித்து குறிப்பிட்டார். வடக்கு மற்றும் கிழக்கில் [228]பௌத்தச் சின்னங்கள் அழிக்கப்பட்டிருக்கலாம் என்ற பழைய பயங்களில் இருந்து உருவான “பௌத்த சமுதாயத்தின் சந்தேகம்” குறித்து அவர் சுட்டிக்காட்டினார். இதேபோன்று, தேசிய சமாதானப் பேரவை 2024 ஆம் ஆண்டு முன்னெடுத்த ஆய்வில், 60% பௌத்தர்கள்

---

minormatters.org/wp-content/uploads/2024/08/A-Brief-Examination-of-Contested-Religious-Sites-in-Sri-Lanka.pdf, பக்கங்கள் 18 - 19

223 கலாநிதி ஜெஹான் பெரேரா (நிறைவேற்றுப் பணிப்பாளர், இலங்கை தேசிய சமாதானப் பேரவை) உடன் ஜோவிடா அருளானந்தம் நடத்திய நேர்காணல், அக்டோபர் 08, 2024, கொழும்பு் முகமது ஹி'ாம் (மேம்பாட்டு நிபுணர்.∴சமூக செயற்பாட்டாளர்) உடன் ஜோவிடா அருளானந்தம் நடத்திய தொலைதூர நேர்காணல், அக்டோபர் 08, 2024 கலாநிதி வின்யா அரியரத்ன (தலைவர், சர்வோதய சிரமதான இயக்கம்) உடன் ஜோவிடா அருளானந்தம் நடத்திய நேர்காணல், அக்டோபர் 12, 2024, கொழும்பு் மனித உரிமை வழக்கறிஞர் மற்றும் செயற்பாட்டாளர் உடன் ஜோவிடா அருளானந்தம் நடத்திய தொலைதூர நேர்காணல், அக்டோபர் 14, 2024 ஹில்மி அகமட் (உப தலைவர், இலங்கை முஸ்லிம் கவுன்சில்) உடன் ஜோவிடா அருளானந்தம் நடத்திய தொலைதூர நேர்காணல், அக்டோபர் 25, 2024.

224 “பேராசிரியர் அனுர மனதுங்க தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவியில் இருந்து விலகினார்,” - அத தெரண, ஜூன் 12, 2023.https://www.adaderana.lk/news/91211/prof-anura-manatunga-steps-down-as-dg-of-archeology-dept.

225 மீரா ஸ்ரீநிவாசன், “அரச முகவரகங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலங்களை மீண்டும் வழங்குவதாக இலங்கை ஜனாதிபதி அநுர திசாநாயக்க வாக்குறுதி அளித்தார்,” தி ஹிந்து, நவம்பர் 10, 2024.

226 “வடக்கின் கற்கோவளம் இராணுவ முகாம் அகற்றப்பட்டது,” டெய்லி மிரர், நவம்பர் 21, 2024.https://www.dailymirror.lk/print/front-page/Katkolam-Army-Camp-land-in-North-disbanded/238-296466

227 கலாநிதி ஜெஹான் பெரேரா, நேர்காணல் ஹில்மி அகமட், நேர்காணல் மனித உரிமை வழக்கறிஞர் மற்றும் செயற்பாட்டாளர், நேர்காணல் மொஹமட் ஹி'ாம், நேர்காணல் கலாநிதி வின்யா அரியரத்ன, நேர்காணல் வண. கல்கந்தே தம்மானந்த தேரர் (ஸ்தாபகர்.∴பணிப்பாளர், வல்பொல ராகுல நிறுவகம்), ஜோவிடா அருளானந்தம் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல், நவம்பர் 26, 2024, கொழும்பு

228 வண. கலுபஹன பியரதன தேரர், (ஒருங்கிணைப்பாளர், சிறந்த இலங்கைக்கான சங்கம்), ஜோவிடா அருளானந்தம் அவர்களால் நடத்தப்பட்ட நேர்காணல். அக்டோபர் 25, 2024, கொழும்பு.

தங்கள் சமுதாயம் பண்டைய மத பாரம்பரியத்தையும்[229] இடிபாடுகளையும் பாதுகாப்பதில் சவால்களை எதிர்கொள்வதாக நம்புகின்றனர். வடக்கு மற்றும் கிழக்கில் நடைபெறும் அகழ்வாராய்ச்சி குறித்து விவாதித்த கலாநிதி திருவரங்கன், அது நம்பகமானதாகத் தோன்ற வேண்டும் என்பதையும் அப்போதுதான் தமிழர்களின் ஆதரவை பெற முடியும் என்பதையும் வலியுறுத்தினார். வடக்கு மற்றும் கிழக்கில் பாரம்பரிய முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு முயற்சிகள் உள்ளூர்மயமாக்கப்பட்டு அங்குள்ள சமூகங்களைச் சேர்ந்த நிபுணர்களை உள்ளடக்கியதாக இருந்தால் எதிர்ப்பைச் சந்திக்க வாய்ப்பில்லை என்றும் கருதுகின்றார்[230].

## 3. பௌத்தமும் சட்டம் ஒழுங்கும்

சர்ச்சைக்குரிய வழிபாட்டுத் தலங்களில் மத சுதந்திரம் மீறப்பட்ட சம்பவங்கள் பெரும்பாலும் பௌத்தத்தின் நலன்களுக்கும் பௌத்த தேரர்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதைக் காட்டுகின்றன. பௌத்தத்தின் செல்வாக்கு சர்ச்சைக்குரிய வழிபாட்டுத் தலங்களைத் தாண்டி சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளிலும் தாக்கம் செலுத்துகின்றன.

முதலாவது அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்டபடி, இலங்கையில் மத சுதந்திரம் மற்றும் மத சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாக்க பல கருவிகள் உள்ளன. இருப்பினும், இவை அரசியல் எதிர்ப்பாளர்களைக் குறிவைக்கும், கருத்து வெளிப்பாட்டை அடக்கும் அல்லது பௌத்த மதத்தின் நலனை[231] பாதுகாப்பதாகக் கூறி பயன்படுத்தப்படுகின்றது என்பது கவலைக்குரிய போக்காக உள்ளது. அண்மைக் காலங்களில், மத சுதந்திரத்தைப் பாதிக்கும் விவகாரங்களில் ICCPR பெரும்பாலும் ஒரு தெய்வ நிந்தனைச் சட்டத்தைப் போன்று அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது (அத்தியாயம் 1, பிரிவு 2.4 ஐப் பார்க்கவும்).

2023 மே மாதம் நடா'ா எதிரிசூரிய என்ற பெண் நகைச்சுவை பேச்சாளர் பௌத்த மதத்தை அவமதித்ததாகக் கூறி ICCPR சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். 2023 ஜூலை மாதத்தில் அவருக்கு பிணை வழங்கப்பட்டது[232]. பின்னர் 2024 ஜூன் மாதம் வழக்கைத் தொடர போதுமான ஆதாரம் இல்லை என்றும், வெறுப்புப் பேச்சு குற்றச்சாட்டை நிரூபிக்க முடியவில்லை என்றும் கூறி, வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதால் அவர் முழுமையாக விடுவிக்கப்பட்டார். நகைச்சுவை நிகழ்ச்சியை ஒலிபரப்பியது தொடர்பில் கைது செய்யப்பட்ட புருனோ திவாகராவின் வழக்கும் அதேபோன்று தள்ளுபடி செய்யப்பட்டது[233].

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் வழக்கு மிகவும் சிக்கலானது. மே 2023 இல் போதகர்

---

229 தேசிய சமாதானப் பேரவை, மத சுதந்திரம் குறித்த கணக்கெடுப்பு 2024, வெளியிடப்படாத அறிக்கை, NPC, டிசம்பர் 2024, 13-16

230 கலாநிதி மகேந்திரன் திருவரங்கன், நேர்காணல்

231 ஷ்ரீன் சரூர், பெண்களின் உடல்களுக்கு எதிரான போர், (மைனர்மேட்டர்ஸ், ஜூலை 2023) https://www.minormatters.org/storage/app/uploads/public/659/e16/ef8/659e16ef8d894655383751.pdf, 5"மனித உரிமைகள் சட்டம் இலங்கையில் எப்படி ஒடுக்குமுறைக்கான கருவியாக மாறியது" - கெஹான் குணத்திலக https://www.himalmag.com/politics/iccpr-human-rights-law-repression-blasphemy-sri-anka?access-token=b1a1ccc9-6160-449b-9e03-3d3a1a634c04-1730528547394

232 "சிரிப்பதற்கு உரிமை இல்லை" https://www.ft.lk/ft_view__editorial/No-right-to-laugh/58-748881.

233 "சர்ச்சைக்குரிய அறிக்கை குற்றச்சாட்டுகளிலிருந்து நடாஷா, புருனோவை நீதிமன்றம் விடுவித்தது," நியூஸ் ∴பெர்ஸ்ட், ஜூன் 19, 2024. https://www.newsfirst.lk/2024/06/19/court-clears-natasha-bruno-of-controversial-statement-charges

பெர்னாண்டோ நிரம்பியிருந்த சபையில் புத்த பெருமான், இஸ்லாம் மற்றும் இந்து மதம் குறித்து அவமதிப்பாகக் கருதப்படும் கருத்துக்களை வெளியிட்டார். அத்துடன் போதகர் நிதி முறைகேடு குற்றச்சாட்டுகளையும் எதிர்கொண்டார். டிசம்பர் 2023 இல் ICCPR சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பின்னர், அவரது கருத்துக்கள் சரியாக மதிப்பீடு செய்யப்படவில்லை என்றும், அவரது கருத்து சுதந்திர உரிமை மீறப்பட்டதாகவும் தெரிவித்து குற்றச்சாட்டுகளை[234] திரும்பப் பெற அதிகாரிகளிடம் NCEASL அழைப்பு விடுத்தது. அவர் ஜனவரி 2024 இல் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

முக்கியமான பௌத்த நலன்கள் பாதிக்கப்படுவதாகக் கூறப்படும் போது ICCPR ஐப் பயன்படுத்த அதிகாரிகள் தயாராக இருந்தாலும், ஏனைய இன - மதக் குழுக்களின் நலன்களில், குறிப்பாக பேசியவர் பௌத்த பிக்குகளில் முக்கிய உறுப்பினர் என்றால் நடவடிக்கை[235] எடுக்கத் தாமதம் காட்டியுள்ளனர். வெறுப்புப் பேச்சு, சிறுபான்மை மதங்களிற்கு எதிராக வன்முறையைத் தூண்டுதல் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான கலவரங்களை ஏற்படுத்தியதில் பெரும் பங்கு இருந்தும் பொது பல சேனா பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு எதிராக தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்கத் தவறின. அவரைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்ட அரைகுறை மனதுடனான முயற்சிகளும் பெரும்பாலும் பிடியாணைகள் தவிர்க்கப்பட்டு, நீதிமன்ற அழைப்புக்கள் புறக்கணிக்கப்பட்டு, ஜனாதிபதி மன்னிப்புக்களைக் கூடப் பெற்றுள்ளன.

2016 ஆம் ஆண்டில் குருநாகலில் (வட மேற்கு) ஒரு பௌத்த விகாரையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் முஸ்லிம்களிற்கு எதிரான கருத்துகளை வெளிப்படுத்தியதற்காக அவருக்கு கொழும்பு உயர்நீதிமன்றம் மார்ச் மாதம் நான்கு ஆண்டுகள் கடுமையான சிறைத் தண்டனை[236] வழங்கியது. நீதிபதி அவருடைய கருத்துக்களை “வேண்டுமென்றே கூறப்பட்டவை மற்றும் தீங்கு விளைவிக்கும் நோக்கம் கொண்டவை” என்று குறிப்பிட்டு மத உணர்வுகளைக் காயப்படுத்தியதற்காக தண்டனைக் கோவையின் பிரிவு 291 (b) கீழ் தண்டனை வழங்கினார் (அத்தியாயம் 1, பிரிவு 3.2 ஐப் பார்க்கவும்). திருத்தப்பட்ட மனு விசாரணைக்காக காத்திருந்தபோது அவர் ஜூலை மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டபோதும், நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவருக்கு டிசம்பரில் பிடியாணை விடுக்கப்பட்டது.

சட்டம் மற்றும் ஒழுங்கில் செல்வாக்குச் செலுத்துவதில் பௌத்த மத தலைமையின் நேரடி தலையீடு இந்த வழக்கில் தெளிவாகக் காணப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்பு மற்றும் செயற்பாட்டாளரை மிரட்டிய குற்றச்சாட்டில் பிக்கு குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டார். ஆனால் பௌத்த பீடாதிபதிகளின் தலையீட்டின் மூலம் ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் அவர் விடுவிக்கப்பட்டார். 2024 ஆம் ஆண்டிலும் பௌத்த பீடாதிபதிகள் அப்போதைய ஜனாதிபதி

234 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷகக் கூட்டணி “போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கைது குறித்த அறிக்கை”, 3 டிசம்பர் 2023,https://www.nceasl.org/post/statement-on-the-arrest-of-pastor-jerome-fernando

235 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்: ஞானசார தேரரின் ஜனாதிபதி மன்னிப்பு தொடர்பான அறிக்கை https://www.cpalanka.org/cpa-statement-on-the-presidential-pardon-of-gnanasara-thero/

236 “ஞானசார தேரரின் பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது,” டெய்லி குவு, 3 ஏப்ரல், 2024. https://www.ft.lk/news/Gnanasara-Thera-s-bail-application-denied%C2%A0/56-760240

விக்கிரமசிங்கவுக்கு மன்னிப்பு வழங்குமாறு எழுதியிருந்தனர்[237]. மன்னிப்பு வழங்கப்படவில்லை என்றாலும், அது அவரது பிணை விண்ணப்பத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது[238].

பௌத்த மதத்தை இழிவுபடுத்துவதாகக் கருதப்படும் தனிநபர்கள் மீது ICCPR தேர்ந்தெடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டாலும், அரசாங்கத்தின் கருத்துக்களுடன் அல்லது சிங்கள - பௌத்தப் பெரும்பான்மையினரின் நம்பிக்கைகளுடன் இணங்காத நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளுக்கும் இது பயன்படுத்தப்பட்டுள்ளது. யுத்தத்துடன் தொடர்புடைய தமிழர் நினைவு நிகழ்வுகளை நடத்துவதில் இந்த அணுகுமுறை தெளிவாகத் தெரிகின்றது. இது குழசுடீ மீதான கட்டுப்பாடுகளையும் உள்ளடக்கியது.

2009 ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்ததைக் குறிக்கும் நிகழ்வுகள் மே மாதம் இலங்கை முழுவதும் நடைபெறும். இறுதி யுத்தமானது விடுதலைப்புலிகளின் கடைசிக் கோட்டையான முல்லைத்தீவில்[239] இராணுவ படையெடுப்பின் மூலம் முடிவிற்கு வந்தது. யுத்தத்தின் இறுதி மாதங்களில் கொல்லப்பட்டதாக நம்பப்படும் 40,000 தமிழ் மக்களை நினைவுகூரும் வகையில் தமிழ் நிகழ்வுகளும் நடைபெறும். இதனை அசௌகரியமாக கண்ட தொடர்ச்சியான அரசாங்கங்கள் இந்த நினைவஞ்சலிகளுக்கு விதவிதமான கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

பெரும்பாலும் சிங்கள - பௌத்தர்கள் நடத்தும் நினைவேந்தல் நிகழ்வுகள் இத்தகைய கட்டுப்பாடுகளை எதிர்கொள்வதில்லை. தெற்கில் இடம்பெற்ற 1971 கிளர்ச்சியில் அரசாங்கத்தால் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் “வீரர்கள் நினைவு” நிகழ்வு அவ்வாறானதொன்று. 2024 ஆம் ஆண்டிலும், “53 ஆவது ஏப்ரல் வீரர்கள் நினைவு” தின நிகழ்வு எந்தவிதப் பிரச்சினைகளும் இன்றி நடந்தது. ஆனால், ஒரு மாதம் கழித்து திருகோணமலையில் இந்து கோயிலில் யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் சடங்குகளை முன்னெடுத்ததன் மூலம் உத்தரவை மீறியதாகக் கூறி நான்கு தமிழர்கள் ICCPR இன் கீழ் கைது செய்யப்பட்டனர். காவல்துறையினர் சரியான நடைமுறைகளைப் பயன்படுத்தவில்லை என்றும், கைது செய்யப்பட்ட நபர்கள் மிரட்டல் மற்றும் பாலின அடிப்படையிலான அவமானத்தை எதிர்கொண்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.[240]

வரவேற்புக்குரிய நடவடிக்கைகளில் ஒன்றாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ICCPR சட்டத்தின் “தவறான பயன்பாடு” குறித்து கவலை தெரிவித்துள்ளது. அத்துடன் நினைவுநாள் தேசிய அல்லது மத வெறுப்பை[241] ஊக்குவிப்பதாகக் கருதவில்லை என்று தீர்மானித்துள்ளது (அத்தியாயம் 1, பிரிவு 2.4 ஐப் பார்க்கவும்). முன்னாள் ஜனாதிபதி விக்ரமசிங்க அவர்களால்

237 வீரகத்தி தானபாலசிங்கம், “ஞானசார தேரருக்கு மன்னிப்பு தலைமை பீடாதிபதிகள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்,” தி மார்னிங், மே 26, 2024.https://www.themorning.lk/articles/u4FXbKHQ4RgrvO0MxR8s

238 டாக்டர் அமீர் அலி, “முன்னணி மதத் தலைவர்கள் குற்றஞசாட்டப்பட்ட தூண்டுதலாளரை விடுவிக்கின்றனர்,” ∴பைனான்ஷியல் டைம்ஸ், ஆகஸ்ட் 3, 2024. https://www.ft.lk/columns/Prelates-loosen-condemned-provocateur/4-765095

239 ஐக்கிய நாடுகள் சபை செயலாளர், இலங்கையில் பொறுப்புக்கூறல் தொடர்பான பொதுச்செயலாளர் நிபுணர் குழுவின் அறிக்கை, (ஐக்கிய நாடுகள் சபை செயலாளர், மார்ச் 2011), https://www.securitycouncilreport.org/atf/cf/%7B65BFCF9B-6D27-4E9C 8CD3CF6E4FF96FF9%7D/POC%20Rep%20on%20Account%20in%20Sri%20Lanka.pdf

240 NCEASL, 2024 ஆம் ஆண்டில் இந்துக்களுக்கான வன்முறை மற்றும் பயங்கரவாத சம்பவங்கள்

241 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, “திருகோணமலை நினைவு நிகழ்வு தொடர்பில் ICCPR சட்டத்தின் பிரிவு 3 தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது”, 21 மே 2024, https://www.hrcsl.lk/wp-content/uploads/2024/05/HRCSL-Press-Notice-21052024.pdf

உருவாக்கப்பட்ட நினைவேந்தல் தொடர்பான நிபுணர் குழு ஜூன் மாதம் வெளியிட்ட அறிக்கையும் இது தொடர்பில் முக்கியமானது; அதில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் (OHCHR) “பாதிக்கப்பட்டவர்களின் முழுமையான பங்கேற்பு புதிய முயற்சிகளுக்கான முக்கிய அடித்தளமாக இருக்கக்கூடும்” என்று மதிப்பிடுகின்றது[242].

அரசாங்கத்தின் தமிழ் நினைவுநாள் நிகழ்வுகள் மீதான சந்தேகம், இந்து மத நிகழ்வுகளுக்கும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. இந்துக்களால் கொண்டாடப்படும் கார்த்திகை விளக்கீடு நவம்பரில் நடைபெறும் மாவீரர் நினைவுநாள் நிகழ்வுகளுடன் தொடர்புடையது என அரச அதிகாரிகளால் தவறுதலாகக் கருதப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிமுகப்படுத்திய[243] மாவீரர் நாள், வெளிநாடுகளிலும் இலங்கையிலும் சில தமிழ் பிரிவினரால் தொடர்ந்து நினைவுகூரப்படுகின்றது. இதில் சில நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய பொருட்கள் மற்றும் படங்கள் இடம்பெறுகின்றன. கார்த்திகை விளக்கீடு மீதான கட்டுப்பாடுகள் பெரிதும் தளர்ந்துள்ளபோதும், கடுமையான கண்காணிப்பு மற்றும் சில அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன.[244]

## 4. பிராந்திய பெரும்பான்மைவாதம், சட்ட அமலாக்கம் மற்றும் FoRB

தேசிய மட்டத்தில் பெரும்பாலான மோதல்களில் அதிகாரிகள் பிரதான பௌத்த நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர். (வளர்ந்து வரும் பௌத்த போதகர்கள் மற்றும் குழுக்களுக்கு அரசாங்கமும் சமூகமும் எவ்வாறு பதிலளித்துள்ளன என்பதை அறிய அத்தியாயம் 3, பிரிவு 5 மற்றும் அத்தியாயம் 4, பிரிவு 1.1 ஐப் பார்க்கவும்) அதே போக்கு சமூக மட்டத்திலும் காணப்படுகின்றன. எனினும், சிறுபான்மை குழுக்களுக்கிடையில் மோதல்கள் எழும்போது அதிகாரிகள் பெரும்பான்மை சமூகத்துக்கு பக்கச்சார்பாக இருப்பதாக தெரிகின்றது. அந்தப் பகுதியில் உள்ள உள்ளூர் அதிகாரிகள் பெரும்பான்மை மக்கள் குழுக்களிடையில் இருந்து வருவதாகக் கருதப்படுகின்றது.

மத வழிபாட்டுத் தலங்களுக்கான சட்டங்களை நடைமுறைப்படுத்தல், சமூக மோதல்களைக் கையாளுதல் மற்றும் வளங்கள் ஒதுக்கீட்டில் இடம்பெறும் பக்கச்சார்பு இந்த நிலவரத்தை எடுத்துக்காட்டுகின்றது. கூடுதலாக, கட்டுமானம் மற்றும் ஒலி மாசுபாடு தொடர்பானவை உட்பட ஏனைய விதிமுறைகள் சமுதாயத்தில் சிறுபான்மையினர் மீது நியாயமற்ற முறையில் பயன்படுத்தப்படுகின்றது.

242 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம், இலங்கையில் மனித உரிமைகள் நிலை, ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் விரிவான அறிக்கை, (மனித உரிமைகள் பேரவை 57வது அமர்வு, ஆகஸ்ட் 2024) https://www.ohchr.org/en/documents/reports/ahrc5719-situation-human-rights-sri-lanka-comprehensive-report-united-nations, 10

243 D.B.S ஜெயராஜ், “மாவீரர் நாள் நிகழ்வின் தோற்றம் மற்றும் வளர்ச்சி”, DBS Jeyaraj.com, நவம்பர் 25, 2024. https://dbsjeyaraj.com/dbsj/?p=83174

244 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி - வவுனியாவில் மத சுதந்திர நிலவரம் 2023-2024, (மைனர் மேட்டர்ஸ், டிசம்பர், 2024). https://minormatters.org/wp-content/uploads/2024/12/FoRB-Landscape-in-Vavuniya-2023-24.pdf, 5

## 4.1 பதிவு செய்வதற்கான கட்டாயம்

இலங்கைச் சட்டத்தில் தேவைப்படாத போதும், வழிபாட்டுத் தலங்களைப் பதிவுசெய்யவும் அதன் நடவடிக்கைகளைக் கட்டப்படுத்தவும் பல சுற்றறிக்கைகள் முயற்சித்துள்ளன. (அத்தியாயம் 1, பிரிவு 4.4 ஐப் பார்க்கவும்). 2022 ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்ட சமீபத்திய சுற்றறிக்கை[245] தெளிவற்றது. பதிவுச் செயல்முறை மற்றும் அதனுடன் கூடிய நன்மைகள் குறித்து அதில் குழப்பம் உள்ளது (அத்தியாயம் 1, பிரிவு 4.4 ஐப் பார்க்கவும்). அரசாங்க அமைப்புகளின் கருத்துக்களும் இந்த விடயத்தில் ஒரே மாதிரியாக இல்லை.

சர்வதேச மத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணைக்குழுவின் 2024 அறிக்கையின் படி, புத்த சாசன அமைச்சின் கீழுள்ள கிறிஸ்தவ அலுவல்கள் திணைக்களம், ஏற்கெனவேயுள்ள தேவாலயங்களை தேசிய அளவில் பதிவு செய்வதற்குத் தேவையில்லை என்றாலும், பதிவு செய்தால் "மேலதிக பாதுகாப்பு[246]" கிடைக்கும் என்று பரிந்துரைத்துள்ளது. எனினும், 2024 மார்ச் மாதம் மத வேறுபாடின்றி அனைத்து மத நிறுவனங்களும்[247] பதிவு செய்யப்பட வேண்டும் என்று அமைச்சர் விக்கிரமநாயக்க கூறினார். யெகோவாவின் சாட்சிகள் மற்றும் இயேசு கிறிஸ்துவின் பிந்தைய நாள் புனிதர்களின் திருச்சபையைக் குறிவைத்து, பதிவு செய்யப்படாத வழிபாட்டுத் தலங்களில் சோதனை செய்யத் திட்டமிடுவதாக அறிவித்தார்[248]. பதிவு செய்வதைத் திணிக்க முடியாத அதிகாரிகள், தாமாக முன்வந்து பதிவு செய்ய குழுக்களுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

சமூக உந்துதல் மற்றும் உணர்வுகளால் ஊக்குவிக்கப்படும் இந்த உள்ளூர் அதிகாரிகள் சிறுபான்மையினரின் வழிபாட்டுத் தலங்களின் நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக இந்த தெளிவாக வரையறுக்கப்படாத சுற்றறிக்கைகளைப்பயன்படுத்தியுள்ளனர்.

2024 ஆம் ஆண்டு, கொழும்பு, அம்பாந்தோட்டை, கண்டி, குருநாகல் மற்றும் காலி மாவட்டங்களில் குறைந்தது 5 தேவாலயங்கள் தொடர்பான பதிவு விவகாரங்களில் பல சம்பவங்களை NCEASL பதிவு செய்துள்ளது. இந்தச் சம்பவங்கள் அதிகாரிகளிடம் மாறுபட்ட அணுகுமுறை மற்றும் அவர்களுக்குள்ள புரிதல் குறைவைக் காட்டுகின்றன. பதிவு விதிமுறைகளிலும் குழப்பம் காணப்படுகின்றது.

ஜூலை மாதம், குருநாகலில் (வட மேற்கு) உள்ள ஒரு தேவாலயம் பிரதேச செயலாளரின் கோரிக்கையைப் பின்பற்றி "புதிய வழிபாட்டுத் தலத்தைக் கட்டுவதற்கும், தற்போதுள்ள இடத்தைப் புதுப்பிப்பதற்கும்" விண்ணப்பித்தது. ஆனால், அத்தகைய விடயங்களைக் கையாள தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று அந்த விண்ணப்பம் அனுப்பப்பட்ட கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் குறிப்பிட்டது.

245 லக்சன் டயஸ் (மனித உரிமைகள் வழக்கறிஞர்) உடன் ஜோவிடா அருளானந்தம் முன்னெடுத்த நேர்காணல், 2024 அக்டோபர் 10, கொழும்பு

246 அமெரிக்க சர்வதேச மத சுதந்திர ஆணைக்குழு, இலங்கையில் மத சிறுபான்மையினருக்கான இடம் சுருங்கிவருகின்றது, (வாஷிங்டன், டி.சி., 2024), https://www.uscirf.gov/sites/default/files/2024-06/2024%20Sri%20Lanka%20Country%20Update.pdf, 3

247 மேலே குறிப்பிட்டது

248 லக்ஷன் டயஸ், நேர்காணல்

கோரப்பட்டுள்ள ஆவணங்களை வழங்க முடியாத நிலையையும் சில மதக் குழுக்கள் எடுத்துரைத்துள்ளன. மட்டக்களப்பில் (கிழக்கு) மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய ஆய்வில், யுத்த காலத்தில் காணி உறுதி போன்ற முக்கிய ஆவணங்கள் அழிந்தது ஆரையரம்பதி போன்ற கிராமங்களில் கவலைக்குரிய விடயமாக உள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது.[249] அங்கு 54 சைவக் கோயில்கள் உள்ளன, அவற்றில் சில பதிவு செய்யப்படவில்லை.

சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துவது ஒரே மாதிரியாக இல்லை என்றும் சில நிறுவனங்கள் ஏனையவற்றை விட அதிக கண்காணிப்பிற்கு ஆளாவதாகவும் நேர்காணல் ஒன்றில் வழக்கறிஞர் லகஷன் டயஸ் தெரிவித்துள்ளார். பதிவு செயல்முறை அதிகளவிலான கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது என்பதுடன், மேலும் பதிவுசெய்யும் போது சமூக எதிர்ப்புகளுக்கு வாய்ப்பு அளிப்பதால், பிரபலமற்ற குழுக்களுக்கு இது பாகுபாட்டை ஏற்படுத்தக்கூடும்[250].

இந்து வழிபாட்டுத் தலங்களைப் பதிவு செய்வதற்கான அழுத்தம் குறித்து மாறுபாடான கருத்துகள் நேர்காணலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்துக் கோயில்கள் பெரும்பாலும் அதே சமூகத்திலிருந்து வரும் உள்ளூர் அதிகாரிகளின் பகுதிகளில் இருப்பதால், அழுத்தம் குறைவாகவே உள்ளது என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர். சுவிசே'ச தேவாலயங்களைப் போலவே இந்து இடங்களும் கண்காணிப்புக்கு உட்படுவதாக ஏனையவர்கள் தெரவித்தனர். எனினும் இந்த அழுத்தம் குறைந்த செல்வாக்கு உள்ளதாகக் கருதப்படும் இடங்களை மையமாகக் கொண்டதாகத் தெரிகின்றது. மேலும், அரச கண்காணிப்பு பெரும்பாலும் புலம்பெயர்ந்தவர்களிடம் இருந்துவரும் பரிவர்த்தனைகளைக் கண்காணிப்பதில் கவனம் செலுத்துவதாகவும் குறிப்பிடப்பட்டது. வவுனியாவில் சைவக் கோயில்களுக்கு அனுமதிகள் பெறுவதில் மிகுந்த தாமதங்கள், பாகுபாடு மற்றும் "ஒவ்வொரு கட்டத்திலும் தடைகள்" இருப்பதாகவும், பௌத்த அமைப்புக்களுக்கு இந்தளவு தடைகள் இல்லை என்றும் சைவக் குருமார்கள் தெரிவித்துள்ளனர்[251].

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள்[252] திணைக்களத்தின் கீழ் செயல்படும் வக்ஃப் சபையில் பள்ளிவாசல்கள் பதிவு செய்யப்படுவதால், பதிவு தொடர்பான பிரச்சினை முஸ்லிம்களிடம் அதிக பாதிப்பை ஏற்படுத்தாது என புரிந்துகொள்ளப்படுகின்றது. மதம் அல்லது தொண்டு நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட சொத்துகளை நிர்வகிக்கும் திணைக்களமும் வக்ஃப் சபையும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு[253] பிறகு ஐந்தாண்டு காலம் இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் புதிய பள்ளிவாசல்களின் பதிவை மீண்டும் தொடங்குவதாக 2024 ஆகஸ்ட் மாதம் அறிவித்தது.

பதிவுசெய்வதற்கான தேவை தொடர்பில் நேர்காணலில் மாறுபட்ட கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டன. சுயாதீன தேவாலயங்களை அரசு சாரா அமைப்புகளாக அல்லது

249 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷகக் கூட்டணி, மட்டக்களப்பில் மத அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் நிலவரம் 2023-2024, (மைனர்மேட்டர்ஸ், டிசம்பர், 2024).

250 லக்ஷன் டயஸ், நேர்காணல்

251 ஸ்ரீயானி தேவகுமார் (மனித உரிமைகள் பாதுகாவலர்) உடன் ஜோவிடா அருளனந்தம் முன்னெடுத்த தொலைதூர நேர்காணல், நவம்பர் 20, 2024 மனித உரிமைகள் வழக்கறிஞர் மற்றும் செயற்பாட்டாளர், நேர்காணல் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷகக் கூட்டணி, வவுனியாவில் மதச்சார்பு அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் நிலை 2023-2024, பக்கம் 13.

252 ஹில்மி அஹமட், நேர்காணல்.

253 மட்டக்களப்பில் மத அல்லது நம்பிக்கையின் சுதந்திரத்தின் நிலவரம் 2023-2024, 9

கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதையும், வீடுகளை தேவாலயங்களாக மாற்றுவதையும்[254] தடுப்பதற்காக சுற்றறிக்கை முதன்மையாக உருவாக்கப்பட்டதாக சிலர் நம்புகின்றனர்.[255] பதிவு செய்வதன் மூலம் சிறந்த[256] அங்கீகாரம், பொறுப்புணர்வு மேம்பாடு[257] மற்றும் மோசடிகளை தடுப்பதற்கான நன்மைகள் கிடைக்கும் என்று ஏனையவர்கள் கருதுகின்றனர். ஆனால் நிதி, கட்டடங்கள் மற்றும் ஒலி மாசுபாடு குறித்த தற்போதைய விதிகள் போதுமானவை என்றும், குறைபாடுகளைக் களைவதற்காக புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டால் அவை நியாயமாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் ஏனையவர்கள் வாதிட்டனர்.

## 4.2 கண்காணிப்பு மற்றும் மிரட்டல்

பதிவு செய்வதற்கான அழைப்புகளுடன் பாதுகாப்பு கண்காணிப்பு பற்றிய தகவல்களும் உள்ளன. மே மாதம் மாத்தறையில் (தெற்கு) தேவாலயம் ஒன்றில் உள்ளூர் அதிகாரிகள் வழிபாட்டைக் கண்காணித்தனர். அதன்பின் காவல்துறை விசாரணை நடத்தி, தகவல்களைப் பாதுகாப்பு அமைச்சிற்கு சமர்ப்பிக்குமாறு கோரியது.[258]

பௌத்த பிக்குகள் உள்ளூர் அதிகாரிகள் மீது அதிக தாக்கம் செலுத்துவதை காவல்துறை கண்காணிப்பு சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன. காலி பலப்பிட்டியவில் பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழ்வதால், பௌத்த பிக்கு ஒருவர் போதகர் ஒருவரிடம் அவரது வீட்டில் வழிபாடுகளில் ஈடுபட வேண்டாம் என்று தெரிவித்துள்ளார். அதன் பின்னர், காவல்துறையின் கண்காணிப்பு மூலம் உள்ளூர் அதிகாரிகள் தலையிட்டதுடன், வழிபாட்டாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துமாறும் அந்த ,டத்தைப் பதிவு செய்யுமாறும் கட்டாயப்படுத்தியதாக போதகர் தெரிவித்தார்[259].

இந்தப் போக்கை எடுத்துக் காட்டும் வகையில், ஒரு கிறிஸ்தவ சர்வதேச தொண்டு நிறுவன அமைப்பின் அறிக்கை "கிறிஸ்தவ சமூகத்தை ,லக்கு வைத்து நடத்தப்படும் கண்காணிப்பு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளது. காவல்துறை மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களம் (CID) உட்பட சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்புகள் வழிபாட்டுத் தலங்கள், நம்பிக்கை சார்ந்த தொண்டு நிறுவனங்கள் மற்றும் போதகர்களைக் கண்காணிப்பதாகக் குறிப்பிடுகின்றது[260].

254 வண. கலுபஹான பியரதன தேரர், நேர்காணல்

255 அருட்தந்தை ரொஹான் டி சில்வா (சமூகமும் மதமும் நிலைய பணிப்பாளர்) உடனான நேர்காணல், நேர்காணல் செய்தவர் ஜோவிடா அருளானந்தம், நவம்பர் 27, 2024, கொழும்பு

256 இலங்கையில் மத சுதந்திர நிலைமையைப் பற்றிய ஆய்வு, NCEASL கவனக்குழு, டிசம்பர் 12, 2024, கொழும்பு
பங்கேற்பாளர்கள்: மகேஷ் டி மெல், மைக் கேப்ரியல் மற்றும் சலோமி டி சில்வா

257 லக்ஷன் டயஸ், நேர்காணல்

258 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி 2024 ஆம் ஆண்டில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள், வெளியிடப்படாத அறிக்கை, NCEASL, டிசம்பர் 2024.

259 மேற்சொன்னவாறு

260 Open Doors – World Watch Research, இலங்கை முழு நாடு அறிக்கை, (Open Doors, மார்ச் 2024) https://www.opendoors.org/research-reports/country-dossiers/WWL-2024-Sri-Lanka-Full-Country-Dossier.pdf, 34-35

## 4.3 சிவில் சமூகம் மீதான கட்டுப்பாடுகள்

வழிபாட்டுத் தலங்களுடன் சேர்ந்து நம்பிக்கை அடிப்படையிலான அமைப்புகளும் கண்காணிப்பிற்கு உட்பட்டுள்ளன. இந்த நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக நேர்காணல்களில் ஒப்புக்கொள்ளப்பட்டாலும், புதிய அரசாங்கத்தின் கீழ் சிறந்த சூழலை எதிர்பார்ப்பதாக பலரும் நம்பிக்கை தெரிவித்திருந்தாலும், அமைப்புகளின் அனுபவங்கள் சற்று வேறுபட்டதாக உள்ளன.

தேசிய சமாதானப் பேரவையின் மதங்களுக்கு இடையேயான பணிகளுக்கு உள்ளூர் அதிகாரிகள் பெரும்பாலும் ஆதரவளிப்பதாகவும் சமூக முரண்பாடுகளில்[261] அவர்களது தலையீட்டைக் குறைக்கும் என்பதால் இத்தகைய முயற்சிகளை அவர்கள் வரவேற்பதாகவும் கலாநிதி ஜெஹான் பெரேரா கூறினார். சில நேர்காணல்களில் முன்னேற்றங்களைப் பற்றிய சந்தேகங்கள் வெளிப்படுத்தப்படுவதுடன் பயங்கரவாத புலனாய்வு திணைக்களத்தை (TID) மறுசீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கில் சர்ச்சைக்குரிய மத தலங்களில் உள்ள ஓரங்கட்டப்பட்ட சமூகங்களைப் பிரதிநிதித்துவம்[262] செய்பவர்கள் கண்காணிப்பு மற்றும் மிரட்டல்களை எதிர்கொள்வதாகக் குறிப்பிட்டனர். சமீப[263] ஆண்டுகளில் அரச அதிகாரிகளால் நேரடி கண்காணிப்பு மற்றும் பயமுறுத்தல்களை எதிர்கொள்ளவில்லை என்றாலும், மத சுதந்திரம் தொடர்பான பணிகளை விரும்பாத உள்ளூர் அதிகாரிகளிடமிருந்து எதிர்ப்பைச் சம்பாதித்தார்கள் என்று ஊடகவியலாளர் அறிக்கை தெரிவித்துள்ளது. முஸ்லிம் மதம் சார்ந்த அமைப்புகளின் செயல்பாட்டைப் பற்றி பேசும்போது, முகமது ஹிஷாம் கடந்த மூன்று ஆண்டுகளில் கண்காணிப்பு[264] சம்பவங்கள் குறைந்துள்ளதாகக் குறிப்பிட்டார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்ட முஸ்லிம் எதிர்ப்பு உணர்வுகளின் பின்னணியில் முஸ்லிம் அமைப்புகளின் கண்காணிப்பு இடம்பெறுகின்றது. (பிரிவு 7 ஐப் பார்க்கவும்)

## 4.4 மோதல்களைக் கையாளுதல்

மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரம் தொடர்பான சட்ட அமலாக்கத்தின் பதிலளிப்பில் கவலைகள் இருந்தாலும், சமூக மட்டத்தில் நிகழ்ந்த பிரச்சினைகளை NCEASL பதிவுசெய்ததில், சில இடங்களில் அதிகாரிகள் திறம்பட பதிலளித்துள்ளனர் என்று தெரியவருகின்றது. மொரட்டுவை, புத்தளம், மன்னார் மற்றும் மாத்தறை ஆகிய இடங்களில் குறைந்தபட்சம் ஐந்து சுயாதீன தேவாலயங்கள் சம்பந்தப்பட்ட சம்பவங்களில், காவல்துறை மற்றும் உள்ளூர் அதிகாரிகள் விரைவாகவும் சரியான முறையிலும் பதிலளித்ததாகத் தெரிகின்றது[265].

மன்னாரில் (வடக்கு) கத்தோலிக்கம் - சுவிஷேசம் இடையேயான மோதல்கள் ஏற்பட்டது. கத்தோலிக்க சமூகத்தினர் ஒரு தேவாலயத்தில் நடைபெற்ற வழிபாட்டை கற்களை எறிந்தும் பட்டாசுகளை வெடித்தும் குழப்பினர். தேவாலயத்தின் மிகுந்த சத்தமான வழிபாட்டு முறைகள்

261 கலாநிதி ஜெஹான் பேரேரா, நேர்காணல்.

262 மனித உரிமை வழக்கறிஞர் மற்றும் செயலாளர் உடனான நேர்காணல்

263 இலங்கையில் மத சுதந்திர நிலை பற்றிய ஆய்வு, NCEASL கவனக்குழு

264 முகமது ஹிஷாம், நேர்காணல்

265 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி, 2024 ஆம் ஆண்டில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பயங்கரவாத சம்பவங்கள், வெளியிடப்படாத அறிக்கை, NCEASL, டிசம்பர் 2024.

அருகிலுள்ள கத்தோலிக்கர்களுக்கு தொந்தரவு அளித்ததால் இந்த மோதல்கள் உருவானதாக NCEASL குறிப்பிட்டுள்ளது. காவல்துறை தலையிட்டு, அருகிலிருப்பவர்களுக்கு எந்த தொந்தரவும் இல்லாமல் வழிபாடுகளைத் தொடரலாம் என உடன்படிக்கையை ஏற்படுத்தினர். தற்போது வழிபாடுகள் நடைபெற்று வருவதுடன் நிலைமையை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்[266].

எனினும் வேறு இடங்களில் மேலே விவாதிக்கப்பட்டது போன்று, உள்ளூர் அதிகாரிகள் பெரும்பான்மை உணர்வினால் வழிநடத்தப்படுகின்றனர். ஜூன் மாதம் நுவரெலியாவில் (மத்திய) தோட்டம் ஒன்றில் வீட்டுடன் தேவாலயத்தைக் கட்ட எடுத்த முயற்சிகளுக்கு கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் ஏழு பேர் கைது செய்யப்பட்டனர். இதன்போது காவல்துறை தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தியதுடன் போதகரின் 14 வயது மகனைத் தாக்கினர். கட்டுமானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தது நியாயமானதா என்பதும், போதகர் கட்டுமானத்திற்கு தேவையான அனுமதிகளை பெற்றாரா என்பதும் தெளிவாகத் தெரியாவிட்டாலும், இந்தச் சம்பவம் காவல்துறையின் மோசமான நடத்தையை வெளிப்படுத்துகின்றது[267].

மார்ச் மாதம் களுத்துறையில் தேவாலயத்தில் ஞானஸ்தான தொட்டி கட்டும் பணிக்கு கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், காவல்துறை தலையிட்டதுடன் நீதிமன்ற அனுமதி பெற வேண்டும் என்று கூறப்பட்டது. போதகர் அவரின் வழக்கறிஞரிடம் ஆலோசனை பெற்றபோது, இந்தக் கோரிக்கையைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று கூறப்பட்டாலும், கட்டுமானம் இடைநிறுத்தப்பட்டதாகப் புரிந்துகொள்ளப்படுகின்றது[268].

## 4.5 வள ஒதுக்கீடு

மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரம் தொடர்பான விடயங்களில் உள்ளூர் அதிகாரிகளின் பங்கு சமூக வளங்களின் ஒதுக்கீட்டிலும் வெளிப்படுகின்றது.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மட்டக்களப்பு, காத்தான்குடியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, அப்பகுதியில் காணியின்மை பிரச்சனை நிலவுகின்றது. தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்க அதிகாரிகள் காணி ஒதுக்கீடுகளைத் தடுத்து வருவதாகத்[269] தெரிவிக்கப்படுகின்றது. 2024 ஆகஸ்ட் மாதம், சிவில் அமைப்புகள் மற்றும் நிபுணர்கள் மன்றம் இந்தக் காணிப் பிரச்சனைகளை எழுப்பி, மட்டக்களப்பு மக்கள் தொகையில் முஸ்லிம்கள் 27% ஆக இருந்தாலும், மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் அவர்களுக்கு 1.46% மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளனர். இன மற்றும் மத அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுவதாகத் தோன்றும் ஏனைய சம்பவங்களில் பதவி உயர்வுகள் மறுக்கப்படுதல், ஆசிரியர்கள் உட்பட முஸ்லிம் அரசாங்க அதிகாரிகள் வேண்டுமென்றே தூரப் பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்படுதல்[270] போன்ற சம்பவங்களையும் இந்த ஆய்வு வெளிப்படுத்துகின்றது. இலங்கையில் இந்தக் கவலை

266 மேற்சொன்னபடி

267 மேற்சொன்னபடி

268 மேற்சொன்னபடி

269 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷகக் கூட்டணி, மட்டக்களப்பில் மத அல்லது நம்பிக்கையின் சுதந்திரத்தின் நிலவரம் 2023 - 2024, 9

270 மேற்சொன்னபடி 16-17

எவ்வளவு பரவலாக உள்ளது என்பது தெளிவாக இல்லாவிட்டாலும், 22.1% இந்துக்கள் மற்றும் 27.1% முஸ்லிம்கள் தங்கள் சமூகத்தினர் அரசாங்க அலுவலகங்களில் சேவைகளைப் பெறுவதில் தடைகள் உள்ளன என்று நம்புவதாக 2024 ஆம் ஆண்டின் தேசிய சமாதானப் பேரவையின் ஆய்வு[271] கண்டறிந்தது.

## 5. கடும்போக்குவாத அரசியல் - மத அமைப்புகள்

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்த அல்லது வழிநடத்த சமூக உணர்வு முக்கிய பங்கு வகிக்கும் அதேவேளை, கடும்போக்குவாத அரசியல் - மத அமைப்புகளும் இன - மத கதைகளை உருவாக்கி, அரச நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன.

மேலே குறிப்பிடப்பட்டது போன்று (பிரிவு 3), பொது பல சேனா போன்ற குழுக்கள் முஸ்லிம்கள் மற்றும் ஓரளவு கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல்களை நடத்தத் தூண்டுவதில் புகழ்பெற்றவை. இந்த ஆண்டும் பொது பல சேனா மற்றும் ராவண பலய, சிங்கள ராவய போன்ற கடும்போக்கு பௌத்தக் குழுக்கள் நாட்டில் செயற்பட்டு வந்தாலும், அவர்களுடன் நேரடியாகத் தொடர்புடைய வன்முறை அல்லது வெறுப்பு பேச்சு சம்பவங்கள் பதிவாகவில்லை. ஆனால் இந்த ஆண்டில் இந்து அமைப்புகளுடன் தொடர்புடைய சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

“சிவசேனை” என்பது 2016 ஆம் ஆண்டு மறவன்புலவு சச்சிதானந்தன் நிறுவிய ஒரு அமைப்பாகும். ஐ.நா. முன்னாள் அதிகாரியான இவர் பின்னர் இந்து தேசியவாதியாக மாறியவர். இந்த அமைப்புக்கு இந்தியாவின் இந்துத்வா குழுக்களுடன் தொடர்புகள் உள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த அமைப்பு வடக்கு மற்றும் கிழக்கில் இந்து மதக் கொள்கைகளை முன்னெடுத்து, கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளை ஊக்குவித்து வருகின்றது.

2024 ஜூலை மாதம் நடந்த ஒரு சம்பவத்தில், அலுவலகத்தில் இருந்து இந்து தெய்வங்களின் படங்களை அகற்றியதற்காக புதிதாக நியமிக்கப்பட்ட கிறிஸ்தவ[272] வலயக் கல்விப் பணிப்பாளரை நீக்கக் கோரி போராட்டங்கள் நடைபெற்றதுடன் அதன் காரணமாக அவர் இடம் மாற்றம் செய்யப்பட்டார்[273]. போராட்டக்காரர்கள் கிறிஸ்தவர்களை போர்த்துக்கேயப் பறங்கிப் படைகளின் எச்சங்கள் என்று குறிப்பிட்டதுடன் “சிவனின் நிலம் கிறிஸ்துவ நிலமாக மாறும்” என்ற அச்சத்தை எழுப்பினர். சுவிசே‘க் குழுக்களால் முன்னெடுக்கப்படும் மதமாற்றங்களைக் காட்டி (அத்தியாயம் 3, பகுதி 2 ஐப் பார்க்கவும்) கிறிஸ்தவர்களுக்கு எதிரான உணர்வுகளை[274] இந்தக் குழு ஊக்குவித்தது. பல ஆண்டுகளாக அவர்கள் கிறிஸ்தவக் கூட்டங்களுக்கு இடையூறு விளைவித்ததுடன் கிறிஸ்தவ - தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பைக் குறைத்துள்ளனர்.

271 தேசிய சமாதானப் பேரவை, “மத சுதந்திரம் தொடர்பான 2024 ஆய்வு, 32”

272 NCEASL “கிறிஸ்தவர்களுக்கு எதிரான 2024 ஆம் ஆண்டின் வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள்”

273 “வண. கலுபஹானா பியரதன தேரர், நேர்காணல்”

274 ஸ்கந்தா குணசேகர, “இந்து தேசியவாதத்தின் எழுச்சி தமிழ் சமூகத்தைக் கவலைக்குள்ளாக்குகின்றது”, தி மார்னிங், ஆகஸ்ட் 27, 2023. https://www.themorning.lk/articles/SX6ExzwZEokbdYLty8t0

மேலும், ஜூலை மாதம் மன்னாரில் பாரம்பரிய இந்துக்களின் ஆடிப்பூரம் திருவிழாவை கத்தோலிக்கர்கள் மடு மாதா திருவிழாவாக[275] மாற்றியதாக சிவசேனை சமூக ஊடகப் பிரச்சாரம் ஒன்றை முன்னெடுத்தது. மடு திருவிழாவுக்கு கண்டனம் தெரிவித்ததுடன் அதை உடனடியாக நிறுத்தி[276], "பாரம்பரியங்களுக்குத் திரும்ப வேண்டும்" என்று கோரிக்கை விடுத்ததுடன், அதற்குப் பதிலாக தமிழ் இந்துக்கள் ஆடிப்பூரம் திருவிழாவைக் கொண்டாடக் கூடிய வகையில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.[277]

மே மாதம், சிவசேனை தலைமையிலான ஆர்ப்பாட்டம் யாழ்ப்பாணம் நல்லூரில் இடம்பெற்றது. இதில் முஸ்லிம் சமூகம் மாடுகளை வெட்டுவதற்கும் இறைச்சியைக் கொண்டு செல்வதற்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. சிவசேனையைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம் "சிவபூமி" என்பதால் மாட்டிறைச்சி கடைகள் மற்றும் மாடு வெட்டுதல் தடை செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். யாழ்ப்பாணம் நாக விகாரையின் தலைமை பிக்கு ஏனைய இந்து மதத் தலைவர்களுடன் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டது[278] கடும்போக்குவாத இந்துக்களுக்கும் பௌத்த பிக்குகளின் ஒரு பகுதியினருக்கும் இடையிலான ஒத்துழைப்பைக் குறிக்கின்றது.

இந்த ஒத்துழைப்பிற்கு மேலும் ஒரு உதாரணமாக 2024 ஆம் ஆண்டு, "இலங்கை இந்து சம்மேளனம்" என்ற குழு பௌத்த பீடாதிபதிகளுடன் இணைந்து கடும்போக்குவாத பௌத்த தேரரான ஞானசாரருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கக் கோரியது[279]. நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு சிங்கள அரசியல்வாதியின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட "இந்து - பௌத்த சங்கம்" போன்ற கூட்டு அமைப்புகள் உள்ளது வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டது[280]. சர்ச்சைக்குரிய மத தலங்கள் உட்பட அப்பகுதியில் ஏற்படும் மோதல்களில் இத்தகைய அமைப்புகளின் தாக்கம் குறித்து பிரதேசவாதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்து கடுமைவாதக் குழுக்களின் பிரிவினைகளை ஏற்படுத்தும் முயற்சிகள் வட பகுதியுடன் மட்டும் மட்டப்படுத்தப்படவில்லை. இந்தியாவின் ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக் சங்கம் (RSS), விஸ்வ ஹிந்து பரிஷத் மற்றும் சிவசேனா போன்ற அமைப்புகளால் ஊக்குவிக்கப்பட்ட உள்ளூர் குழுக்கள் இந்துத்வத்தை பிரச்சாரம் செய்து வருகின்றன என்பதை தமிழ் இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகள் வெளிக்காட்டுகின்றன. அவர்களுடைய நடவடிக்கைக்கு திருச்செந்தூர் முருகன்[281] கோயில் தலைமையகமாகச் செயல்படுவதாகக் கூறப்படுகின்றது. ஜூன் மாதம் கோயிலுக்கு அருகிலுள்ள கத்தோலிக்க தேவாலயத்தின்

---

275 1870களில் தொடங்கிய, இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்களை ஈர்க்கும், ஆண்டுதோறும் நடைபெறும் முக்கியமான கத்தோலிக்க திருவிழாக்களில் ஒன்றாகும்.

276 ஜூலை - ஆகஸ்ட் காலத்தின் தொடக்கதைக் குறிக்கும் பாரம்பரிய இந்து திருவிழா, லக்ஷ்மி தேவியின் அவதாரம் என நம்பப்படும் ஆண்டாளை மையமாகக் காண்டது.

277 NCEASL, 2024 ஆம் ஆண்டில் கிறிஸ்தவர்களுக்கான வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள்

278 NCEASL, 2024 ஆம் ஆண்டில் கிறிஸ்தவர்களுக்கான வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள்

279 சதுரங்க சமரவிக்கிரம, "இந்து பேரவை வண. ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குமாறு கோரிக்கை விடுத்தது", டெய்லி மிரர், மே 22, 2024. https://www.dailymirror.lk/breaking-news/Hindu-Federation-requests-Presidential-pardon-for-Ven-Gnanasara-Thera/108-283138

280 NCEASL, வவுனியா 2023 - 2024 ஆம் ஆண்டுக்கான மத சுதந்திரம் அல்லது நம்பிக்கையின் நிலைமை, (மைனர் மேட்டர்ஸ், டிசம்பர், 2024), https://minormatters.org/report_policy_briefs/the-landscape-of-freedom-of-religion-or-belief-in-batticaloa-2023-2024/, பக்கம் 11-12

281 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி, மட்டக்களப்பில் மத அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் நிலவரம் 2023 - 2024, 9

உறுப்பினர்கள் கோயிலுக்குச் செல்லும் வீதியில் மாதா சிலையை நிறுவ முயன்றபோது இந்த அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தன.

சர்ச்சைக்குரிய வழிபாட்டுத் தலங்கள் உட்பட இந்து சமூகத்தைப் பாதிக்கும் முக்கிய பிரச்சனைகளில் அரசாங்கத்தின் மோசமான கையாளுகையால் ஏற்பட்ட வெற்றிடத்தை[282] சிவசேனை[283] போன்ற குழுக்கள் பயன்படுத்திவருவதாக நேர்காணலின் போது தர்ஷகா குருக்கள் கூறினார். இந்தக் குழுக்களின் தோற்றத்திற்கு பூகோள அரசியல்,[284] இந்தியாவில் இந்து மயமாக்கலின் போக்கு மற்றும் அதன் மத்திய அரசாங்கத்தின் செல்வாக்கு ஆகியவற்றை ஏனைய நேர்காணல்கள் காரணமாகக் குறிப்பிடுகின்றன[285]. மேலும், யுத்த காலத்தில் கூட ஒன்றிணைந்திருந்த இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே பிரிவுகளை உருவாக்குவதன் மூலமும், முக்கிய தமிழ் அரசியல் கட்சிகளுக்குள் பிளவுகளை ஏற்படுத்துவதன் மூலமும் தமிழர் சமூகத்தைப் பலவீனப்படுத்தும் அரசியல் தந்திரமாகவும் இது பார்க்கப்படுகின்றது.[286]

சம்பவங்கள் அதிகரித்திருந்தாலும் இந்தக் குழுக்கள் எதிர்பார்த்ததைப் போல அதிக ஆதரவைப் பெறவில்லை. இன மத மோதல்களால் லாபம் பெறும் குழுக்கள் அரசாங்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களாலும் புதிய அரசியல் கலாசார வாக்குறுதிகளாலும் பின்னடைவைச் சந்தித்துள்ளன (பிரிவு 7 ஐப் பார்க்கவும்). மதத்தை விட இனம் மற்றும் தேசிய மொழி அடையாளத்தை அடிப்படையாகக் கொண்ட மதச்சார்பற்ற தேசியவாதத்தில் கவனம் செலுத்தும் தமிழ் தேசியவாதக் கட்சிகளின் இந்து தேசியவாதத்திற்கு எதிரான எதிர்ப்பும் உதவியது எனப் புரிந்துகொள்ளப்படுகின்றது.

இந்து அடிப்படைவாதக் குழுக்களின் வளர்ச்சி குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பது தற்போது தெளிவாக இல்லை. விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் சிவசேனை தலைவரிடம் விசாரணை[287] நடத்தப்பட்டாலும், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மீது வெறுப்பை தூண்டக்கூடிய நடவடிக்கைகளுக்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்து அடிப்படைவாதத்தின் வளர்ச்சி மற்றும் சர்ச்சைக்குரிய வழிபாட்டுத் தலங்கள் போன்ற சமூகங்களின் கவலைகள் குறித்து அரசாங்கம் இந்து தலைமைகளுடன் கலந்துரையாட வேண்டியதன் அவசியத்தை தர்ஷகா குருக்கள்[288] வலியுறுத்தினார் (பரிந்துரைகளைப் பார்க்கவும்). புதிய அரசாங்கம் அதன் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் தோல்வியடைவதாகக் கருதப்பட்டால், கடுமைவாதக் குழுக்கள் மேலும்

282 தர்ஷகா குருக்கள் (செயலாளர், இந்து குருக்கள் சபை), ஜோவிடா அருளானந்தம் முன்னெடுத்த தொலைதூர நேர்காணல், மார்ச் 1, 2025.

283 ஷ்ரீன் சரூர் (இணை ஸ்தாபகர், பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு) உடன் ஜோவிடா அருளானந்தம் முன்னெடுத்த தொலைதூர நேர்காணல், 15 அக்டோபர் 2024; ஹில்மி அகமட், நேர்காணல் லக்ஷன் டயஸ், நேர்காணல் மனித உரிமை வழக்கறிஞர் மற்றும் செயற்பாட்டாளர், நேர்காணல் ஸ்ரீயானி தேவகுமார், நேர்காணல்

284 அடையாளம் கொள்கை ஆராய்ச்சி நிலையம், “முள்ளிவாய்க்காலின் 15 ஆண்டுகள் - மதப் பிரச்சனைகள் குறித்த பிரதிபலிப்புகள்,” YouTube, 2024 ஜூன் 20, வீடியோ, https://www.youtube.com/watch?v=n6qogLSRVxw

285 ஷ்ரீன் சரூர், நேர்காணல்

286 கலாநிதி மகேந்திரன் திருவரங்கன், நேர்காணல்

287 “LTTE உடன் தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் இந்து கடும்போக்குவாத தலைவரிடம் TID விசாரணை நடத்துகின்றது”, தமிழ் கார்டியன், ஜூன் 21, 2024, https://www.tamilguardian.com/content/tid-interrogates-hindu-extremist-leader-over-alleged-links-ltte.

288 தர்ஷகா குருக்கள் நேர்காணல்.

வாய்ப்புகளைத் தேடுவார்கள் என கலாநிதி திருவரங்கன் குறிப்பிட்டார்[289].

## 6. இஸ்லாமோபோபியா மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான மனப்பான்மை

மத சிறுபான்மைகள் அரசாங்கம் அல்லது அரசியல் - மதக் குழுக்களுடன் தொடர்புடைய வன்முறை மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ள நிலையில், முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துகள் அந்தச் சமூகத்தை நேரடியாகக் குறிவைக்கும் அரசாங்கக் கொள்கைகளால் தொடர்ச்சியாக ஊக்குவிக்கப்பட்டுள்ளன. கூடுதலாக, இன - மத அடையாளத்தின் மீதான ஆரோக்கியமற்ற முக்கியத்துவம்[290], மக்கள்தொகை மாற்றங்கள் மற்றும் சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுக்கு இடையே முக்கியத்துவம் இழப்பு பற்றிய அச்சத்தைத் தூண்டி முஸ்லிம்களுக்கு எதிரான கொள்கைகளுக்கு சமூக ஆதரவை உருவாக்கியுள்ளது. தேசிய சமாதானப் பேரவையின் 2024 ஆம் ஆண்டு ஆய்வில், இலங்கையில் நான்கில் ஒரு முஸ்லிம் தங்கள் மதத்தைக் கடைபிடிக்கும் சுதந்திரம் சில நேரங்களில் சவாலுக்கு உள்ளாகியுள்ளதாக நம்புவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது[291].

2012 ஆம் ஆண்டு முதல் முஸ்லிம்களுக்கு எதிரான பேச்சுக்கள் மற்றும் வன்முறை அதிகரித்துவருகின்றது. சமீபத்திய உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பின்னர் இது மேலும் அதிகரித்துள்ளது. இந்தத் தாக்குதலில் 253 பேர் கொல்லப்பட்டதுடன் 500 பேர் காயமடைந்தனர். முஸ்லிம் குண்டுதாரிகள் ஈடுபட்ட இந்தத் தாக்குதலுக்கு தேசிய தவ்ஹீத் ஜமாஅத் (NTJ) என்ற முஸ்லிம் குழு காரணம் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. நாட்டின் பல இடங்களில் பள்ளிவாசல்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் தாக்கப்பட்டதுடன் சமூக ஊடகங்களில் “வெறுப்புப் பேச்சு” பதிவுகளும் பெருகின[292].

தீவிர பௌத்த அமைப்புகள் முன்னெடுத்த முஸ்லிம் எதிர்ப்பு பிரச்சாரங்கள் மற்றும் அரசாங்க நடவடிக்கைகளின் தீவிரம் குறைந்திருந்தாலும், இந்த ஆண்டு இடம்பெற்ற சில சம்பவங்கள் அரசாங்கத்தின் சில பிரிவுகளுக்குள் உள்ள பாகுபாடுகளையும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பிறகு தொடரும் கட்டுப்பாடுகளையும் பிரதிபலிக்கின்றன.

சில முஸ்லிம் பெண்கள் பின்பற்றும் ஆடை விதிகள் இலக்குவைக்கப்பட்டதுடன் கல்வி மற்றும் பணிசெய்யும் நிறுவனங்களில் பாகுபாடு காட்டப்படுவதற்கும், அரச சேவைகள் மறுக்கப்படுவதற்கும் வழிவகுத்துள்ளன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பிறகு, பெண் அதிகாரிகளின் ஆடை குறித்த வழிகாட்டுதல்கள் பொது நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால் அந்த வழிகாட்டுதல்களின் மாறுபட்ட விளக்கங்கள் முஸ்லிம் பெண்களின் ஒரு

289 கலாநிதி மகேந்திரன் திருவரங்கன், நேர்காணல்

290 சர்வதேச மன்னிப்புச் சபை, “இலங்கை: முஸ்லிம்கள் மீது நடைபெறும் வன்முறை மற்றும் பாகுபாட்டை அதிகாரிகள் முடிவுக்கு கொண்டு வர வேண்டும்”, 18 அக்டோபர் 2021, https://www.amnesty.org/en/latest/news/2021/10/sri-lanka-authorities-must-end-violence-and-discrimination-against-muslims/.

291 தேசிய சமாதானப் பேரவை, மதச் சுதந்திரம் குறித்த கணக்கெடுப்பு 2024, 10

292 சுதா ராமச்சந்திரன், “இலங்கையின் முஸ்லிம் எதிர்ப்பு வன்முறை”, தி டிப்ளோமட், மார்ச் 13, 2018. https://thediplomat.com/2018/03/sri-lankas-anti-muslim-violence/

பிரிவின் கலாசார மற்றும் மத வெளிப்பாட்டை மீறும் சம்பவங்களை ஏற்படுத்தின[293].

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டிருந்தாலும், இந்த ஆண்டிலும் தலையை மூடும் ஆடை குறித்து குறைந்தபட்சம் மூன்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஜூன் மாதம் திருகோணமலை ஸாஹிரா கல்லூரியில்[294] 70 மாணவர்களின் உயர்தரப் பரீட்சை முடிவுகள், பரீட்சையின்போது காதுகள் தெரியும் வண்ணம் இருக்க வேண்டும் என்ற விதியை அவர்கள் மீறியதாகக் கூறி, நிறுத்திவைக்கப்பட்டன. மாணவர்களைப் பொறுத்தவரை காதுகள் வெளியே தெரிவதை தலையை மூடும் ஆடை மறைக்கவில்லை என்று கூறியபோதும், மாணவர்களின் ஆடை பரீட்சை விதிகளை மீறியதா என்பதைத் தீர்மானிப்பதில் மேற்பார்வையாளர்கள் நியாயமாக செயற்படாமல் இருந்திருக்கலாம் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னெடுத்த விசாரணையில் தெரியவந்தது.[295] பரீட்சை முடிவுகள் பின்னர் ஜூலை மாதத்தில் வெளியிடப்பட்டன.

ஜூன் மாதம் நடந்த மற்றொரு சம்பவத்தில், கொழும்பு (மேற்கு)[296] கொட்டாஞ்சேனை மகா வித்தியாலயத்தின் பரீட்சை நிலையத்தில் தேர்வு எழுதிய 13 பெண் முஸ்லிம் அதிபர்களின் பரீட்சை முடிவுகள் இதே காரணத்தால் நிராகரிக்கப்பட்டன.

மே மாதம் மற்றுமொரு சம்பவத்தை NCEASL பதிவுசெய்துள்ளது. அதில் புத்தளத்தில் (வட மேற்கு) உள்ள பாலவிய சிங்கள மகா வித்தியாலயத்தில் க.பொ. த சாதாரண தரப் பரீட்சையில் பங்கேற்ற மாணவிகள் தங்கள் பர்தாவை அகற்ற வேண்டும் என்றும், அதற்கு பதிலாக ஸ்கார்ஃப் அணிய வேண்டும் என்றும் கேட்டகப்பட்டனர். பரீட்சை நிலையத்தில் முகமும் இரு காதுகளும் தெரியும் வகையில் பர்தா அணிய ஆரம்பத்தில் அனுமதி வழங்கப்பட்டதனால், மாணவிகள் அந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகின்றது[297].

திருகோணமலை மற்றும் கொழும்பில் ஏற்பட்ட சம்பவங்களைச் சரிசெய்வதில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விரைவாகவும் திறமையாகவும் செயல்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. திருகோணமலை சம்பவத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பரீட்சைகள் திணைக்களத்திற்கு உள்ளக விசாரணை நடத்தும்படி அறிவுறுத்தியது. அதில் பரீட்சை மேற்பார்வையாளர்கள் நியாயமாக நடந்துகொண்டார்களா என்பதை ஆராய்ந்து, பரீட்சை விதிகளின் பொருள் விளக்கத்தை மீண்டும் பரிசீலித்து, அவை தொடர்பான ஒருமைப்பாடு மற்றும் தெளிவை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொண்டது[298].

மேலும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரச அதிகாரிகளுக்காக FoRB குறித்த

293 சரூர்., பெண்களின் உடல் மீது போர் தொடுத்தல், 15

294 பமோடி வரவிதா. "பரீட்சையின்போது காதுகளை மூடாமல் இருப்பது தொடர்பான விதி: பல மாணவர்கள் பரீட்சை முடிவுகளுக்காக காத்திருப்பு." தி மார்னிங். ஜூன் 23, 2024, https://www.themorning.lk/articles/uge514dFEa88535OkVmi

295 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, "மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் மீறுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக இடைக்கால வழிகாட்டுதல்கள்," ஜூலை 18, 2024, https://www.hrcsl.lk/wp-content/uploads/2024/07/HRCSL-Interim-Directions-to-Department-of-Examinations.pdf.

296 NCEASL, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை மற்றும் அச்சுறுத்தல் சம்பவங்கள் 2024

297 மேற்சொன்னபடி

298 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, "மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் மீறுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக இடைக்கால வழிகாட்டுதல்கள்"

வழிகாட்டுதல்களை உருவாக்க ஆலோசனை செயல்முறையில் ஈடுபட்டுள்ளது.[299] இந்த வழிகாட்டுதல்களின் தேவை குறித்து ஒரு நேர்காணலில், பேராசிரியர் ஃபர்ஸானா ஹனிஃபா, சம்பவங்களை விசாரணை செய்ததில் பல கேள்விகள் எழுந்துள்ளன் இவற்றை வழிகாட்டுதல்கள் மூலம் தீர்க்க உள்ளோம் எனப் பகிர்ந்தார். இவற்றுள் குழப்பமான விதிகள் வெளியிடப்படுதல், முறையற்ற அமுலாக்கம் மற்றும் நடைமுறையில் ஒரே மாதிரியாக இல்லாத செயல்பாடுகள் போன்றவை அடங்கும்[300].

ஏனைய பகுதிகளில், முஸ்லிம்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னரான கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். சிவில் சமூகம் இஸ்லாமிய[301] இலக்கியங்களை இறக்குமதி செய்வதில் தொடரும் கட்டுப்பாடுகளைக் குறிப்பிடுகின்றது. 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தகவல் அறியும் உரிமைக் கோரிக்கையின் பிரகாரம், ஆரம்பத்தில் இஸ்லாமிய அறிஞர்கள் குழு அந்த வெளியீட்டைச் சரிபார்த்த போதிலும் இஸ்லாமிய நூல்கள் அல்லது குர்ஆன் மொழிபெயர்ப்புகளை இறக்குமதி செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு இறுதி அனுமதியை வழங்க வேண்டும் என முகமது ஹி'ாம் குறிப்பிடுகின்றார். ஏனைய சமயத் திணைக்களங்கள் இதுபோன்ற செயல்முறைக்கு உட்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆண்டு குர்ஆன் உட்பட இஸ்லாமிய நூல்கள் அடங்கிய ஒரு கப்பல் மே மாதம் துறைமுகத்தில் தடுத்து நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா (யுஊதுரு) என்ற இஸ்லாமிய இறையியல் தலைமை அமைப்பின் தலையீட்டின் பிறகு செப்டம்பர் மாதத்தில் அந்த நூல்கள் விடுவிக்கப்பட்டன[302].

ஏனைய பகுதிகளில் முஸ்லிம் அமைப்புகள் (பிரிவு 4.3 ஐப் பார்க்கவும்) மீதான கட்டுப்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது, ஆனால் இன்னும் சில தொடர்கின்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் உட்பட 90க்கும் மேற்பட்ட தனிநபர்கள் 2012 ஆம் ஆண்டின் 01 இல. ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் கீழ் பெயர்குறிக்கப்பட்ட ஆட்களின் பட்டியலில் இருந்து 2024 ஆம் ஆண்டில் அகற்றப்பட்டனர்.[303] எனினும் இஸ்லாமிய மாணவர் இயக்கத்தை நீக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் அது தொடர்ந்தும் பட்டியலில் உள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய இரண்டு மாணவர்களும் தனிப்பட்ட முறையில் செயல்பட்டதால், இந்த பட்டியலில் இடம்பெறுவது நியாயமற்றது[304] எனக் கருதப்படுகின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய முன்னாள் கைதிகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் தொடர்ந்தும் பாதுகாப்பு கண்காணிப்பில் உள்ள காரணத்தால் அவர்கள் சமூகத்தில் இருந்து ஒதுக்கப்படுவதாக மனித உரிமைகள் குழுக்கள்

299 முந்தைய மேற்கோள்

300 பேராசிரியர் ஃபர்சானா ஹனிஃபா (ஆணையாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு) உடன் ஜோவிடா அருளானந்தம் முன்னெடுத்த நேர்காணல், டிசம்பர் 5, 2024.

301 மொஹமட் ஹிஷாம், நேர்காணல்

302 NCEASL, 2024 ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் மீது நடந்த வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள்

303 பாதுகாப்பு அமைச்சு, ஐக்கிய நாடுகள் சட்டம், 1968 ஆம் ஆண்டு இல 45: ஐக்கிய நாடுகள் விதிகள் எண் 1 (2012) விதி 4(7) இன் கீழ் குறியிடப்பட்ட நபர்கள், குழுக்கள் மற்றும் அமைப்புகளின் பட்டியலில் திருத்தம், ஜெனரல் கமல் குணரத்ன, எண் 2387/02, (இலங்கை, திங்கள், ஜூன் 3), 3, https://fiusrilanka.gov.lk/docs/UNSCR/List/2387_02/2387_02_E.pdf.

304 மொஹமட் ஹிஷாம், நேர்காணல்

தெரிவிக்கின்றன. (அத்தியாயம் 1, பகுதி 2.3 இல் PTA ன் பயன்பாட்டை[305] பார்க்கவும்).

இந்த ஆண்டில் மேலும் ஒரு நல்ல செய்தியாக, 2019 தாக்குதலுக்குப் பிறகு மூடப்பட்டிருந்த தேசிய தவ்ஹீத் ஜமாஅத் பள்ளிவாசலும் காத்தான்குடி தருல் அதர் பள்ளிவாசலும் விரைவில் பொதுமக்களிடம்[306] ஒப்படைக்கப்படும் என்று முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. மேலும், 2019 இல் சந்தேகமான சொத்து சேர்க்கை, சிங்களப் பெண்கள் மீதான சட்டவிரோதக் கருத்தடை[307] செயற்பாடுகள் மற்றும் தீவிரவாதத் தொடர்புகள் போன்ற குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான வைத்தியர் ஷா.்.பி ஷிஹாப்தீன் குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டுள்ளார். போதுமான சாட்சிகள் இல்லாததால் நவம்பர் மாதம் வழக்கு நிராகரிக்கப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டார்.

## 7. மதப் பசப்புரையும் சின்னங்களும்

முஸ்லிம் சமூகத்தை ஓரங்கட்டுவது உட்பட வெறுப்பு மனப்பான்மைகள் அன்றாட அரசியல் மற்றும் சமூக உரையாடல்கள் மூலம் “விலக்கு, கட்டுப்பாடு அல்லது விருப்பத்திற்கு” வழிவகுக்கும் வகையில் நிலைத்திருக்கக்கூடும்[308]. இலங்கையிலும் 1920களிலிருந்து அரசியல் உரையாடல் “இனம் அடிப்படையிலான போட்டி” மூலம் பாதிக்கப்பட்டதுடன், அரசியல்வாதிகள் தேர்தல் வெற்றிக்காக இத்தகைய உணர்வுகளைப் பயன்படுத்தி வந்தனர். 2019 ஜனாதிபதி தேர்தலில்[309] இந்த நிலைமை தெளிவாகக் காணப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான எதிர்ப்பின் பின்னணியில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார். அவர் தனது பதவிப் பிரமாணத்தை பௌத்தர்களின் புனித இடமான ருவன்வெலிசாய தூபியில் எடுத்ததன் மூலம் “சிங்களப் பெரும்பான்மை வாக்குகளே” அவரை ஆட்சிக்குக் கொண்டு வந்தது என்பதை அங்கீகரித்தார்.[310] இந்தத் தேர்தலில் இன - மத பிளவுகள் மிக அதிகமாக இருந்தபோதிலும், 2024 தேர்தல்கள் பல நேர்மறை மாற்றங்களைக் காண்பித்துள்ளன[311].

பொருளாதார நெருக்கடிகளில் ராஜபக்‘க்களின் பங்கு மற்றும் பொதுமக்களின் நம்பிக்கையை இழந்தது, மத உணர்வுகளை அவர்கள் பயன்படுத்திய விதம் உட்பட அரசியல் உத்திகளில்

---

305 இலங்கை: பொய் பயங்கரவாத வழக்குகள் அடக்குமுறைக்கு வழிவகுக்கின்றன..., மனித உரிமைகள் கண்காணிப்பகம். 17 ஜூலை, 2024, https://www.hrw.org/news/2024/07/17/sri-lanka-false-terrorism-cases-enable-repression

306 மட்டக்களப்பில் மதச்சார்பு அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் நிலை 2023 - 2024, 10.

307 “நீதிமன்றம் வைத்தியர் ஷாபியை அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவித்தது”, டெய்லி குவு, 7 நவம்பர் 2024.https://www.ft.lk/front-page/Court-exonerates-Dr-Shafi-of-all-charges/44-768942

308 நாஸ்லியா கானியா, மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையில் வெறுப்பு..., 4

309 பிரதீப் பீரிஸ் மற்றும் நிபுனிகா லகம்வசம், “மாற்றம் காணும் அலைகள்: இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் ஜனநாயகம் குறித்த பொதுமக்கள் கருத்தின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு” (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - சமூகக் குறிகாட்டி, மார்ச், 2024), https://www.cpalanka.org/wp-content/uploads/2024/04/Shifting-Tides_A-Trend-Analysis-of-Public-Opinion-on-Reconciliation-and-Democracy-in-SL_FINAL_FF.pdf, 12

310 “சிங்கள பெரும்பான்மை எனது வெற்றியை உறுதி செய்தது: கோட்டாபய” தி மார்னிங், நவம்பர் 18, 2019, https://www.themorning.lk/articles/51463.

311 கலாநிதி ஜெஹான் பெரேரா நேர்காணல்

சந்தேகம் உருவாகுவதற்கு காரணமாக[312] உள்ளது. பொதுமக்கள் பொருளாதாரப் பிரச்சனைகளில் கவனம் செலுத்துவதால், சமீபத்திய தேர்தல் பிரச்சாரங்களில் மதம் சார்ந்த பேச்சுக்கள் குறைந்துள்ளது என்று புரிந்துகொள்ளப்படுகின்றது.

இந்த ஆய்வின் ஒரு பகுதியாக நேர்காணலில் ஈடுபட்டபோது, இனவாதத்தின் ஈர்ப்பைக் குறைத்ததில் அரகலய[313] பங்கு வகித்துள்ளது என்று பலரும் குறிப்பிட்டனர்[314]. அரகலய அரசியலில் இருந்து தன்னை தூரப்படுத்திக் கொண்டதுடன் அது இன மற்றும் மத வேறுபாடுகளை கடந்து அனைவரையும் உள்ளடக்கியதாக இருந்தது என்று கருதப்பட்டது. இளம் தலைமுறையின் பார்வையில் ஏற்பட்ட மாற்றங்களையும் இதற்கான காரணமாக சிவில் சமூகம் குறிப்பிடுகின்றது.[315]

இந்த மாற்றத்திற்குப் பதிலளிக்கும் சில முயற்சிகளை முக்கிய வேட்பாளர்களின் ஜனாதிபதி தேர்தல் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. விக்கிரமசிங்க[316] அனைத்து வழிபாட்டு தலங்களையும் பாதுகாப்பதாக வாக்குறுதி அளித்துள்ளார். மேலும் இந்து பாரம்பரிய தளங்களின் வளர்ச்சியையும் பௌத்த தளங்களுடன் சேர்த்து அரசாங்கம் முன்னெடுக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷவின் வாக்குறுதியிலும் கூட, புத்த சாசனத்தைப் பாதுகாப்பது முக்கியமாகக் குறிப்பிடப்பட்டாலும், “மத சுதந்திரத்தை மதிப்பது”[317] என்ற தனிப் பிரிவு இடம்பெற்றுள்ளது.

திசாநாயக்கவின் தேர்தல் அறிக்கையில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிப்பது போன்ற வழமையான வலியுறுத்தல் எதுவும் இல்லை. ஆனால் “பாதுகாப்பு, பரஸ்பர புரிந்துணர்வு, நம்பிக்கை, இன மற்றும் மதக் குழுக்களின்[318] உரிமைகள்” என்பவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்ற ஒரு நேர்காணலில் “மதவெறி அல்லது இனவெறி இல்லாத ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதே” தனது முதன்மையான இலக்கு[319] என திசாநாயக்க கூறினார். பாராளுமன்றத்தின்[320] தொடக்க நிகழ்ச்சியில் இலங்கையில் மதவெறியை எதிர்க்கும் தனது உறுதியையும், “இனவாத அரசியலுக்கு” இடமளிக்காமல் தடுப்பதற்கான வாக்குறுதியையும்

312 கலாநிதி ஜெஹான் பெரேரா, நேர்காணல், கலாநிதி வின்யா அரியரத்ன, நேர்காணல், வண. கல்கந்த தம்மானந்த தேரர், நேர்காணல்

313 போராட்டத்திற்கான சிங்கள வார்த்தை, 2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கும் அதன் பொருளாதார கையாள்கைக்கும் எதிரான மக்கள் போராட்டங்கள்.

314 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - சமூகக் குறிகாட்டி, அரகலய தொடர்பான சுருக்கமான பகுப்பாய்வு (மாற்று கொள்கைகளுக்கான நிலையம், மே 2023) https://www.cpalanka.org/wp-content/uploads/2023/05/A-Brief-Analysis-of-the-Aragalaya_Final-Report.pdf> gf;fq;fs; 6-26

315 கலாநிதி வின்யா அரியரத்ன, நேர்காணல், அருட்தந்தை ரொஹான் டி சில்வா, நேர்காணல், வண. கல்கந்த தம்மானந்த தேரர், நேர்காணல்

316 ரணில் விக்கிரமசிங்க, ரணிலுடன் நாட்டை வென்று ஐந்து ஆண்டுகள், 15 அக்டோபர் 2024 அன்று அணுகப்பட்டது,

317 நமல் ராஜபக்ஷ, உங்களுக்காக ஒரு வளர்ந்த நாடு, பக்கங்கள் 13-14 மற்றும் 47, 22 அக்டோபர் 2024 அன்று அணுகப்பட்டது, https://namal2024.com/full-manifesto

318 தேசிய மக்கள் சக்தி (NPP இலங்கை), ஒரு வளமான நாடு, ஒரு அழகான வாழ்க்கை
(NPP இலங்கை, ஆகஸ்ட் 2024)https://www.npp.lk/up/policies/en/npppolicystatement.pdf mZfpa jpfjp: 1 nrg;lk;gu; 2024

319 மீரா ஸ்ரீனிவாசன். இலங்கையின் பொருளாதாரத்தைச் சரிசெய்வதும், இனவாதத்தை அகற்றுவதும் முதன்மையானது என JVP தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.”
தி ஹிந்து, 3 செப்டம்பர் 2024 https://www.thehindu.com/news/international/fixing-sri-lankas-economy-wiping-out-racism-top-priority-says-jvp-leader-anura-kumara-dissanayake/article68601908.ece

320 பத்தாவது பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தின் தொடக்க விழாவில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக வழங்கிய முழு உரை (இலங்கை, நவம்பர் 2024) https://www.presidentsoffice.gov.lk/the-full-speech-delivered-by-president-anura-kumara-dissanayake-at-the-inauguration-of-the-first-session-of-the-tenth-parliament/.

அவர் வலியுறுத்தினார்.[321]

தேர்தலுக்குப் பின்னர், இன - மத சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் இந்த மாற்றத்தைக் கவனித்து, “இனவாதத்தையோ மதவாதத்தையோ பயன்படுத்தாமல் அடைந்த இந்த சிறப்பான வெற்றிக்கு” ஜனாதிபதியை வாழ்த்தினர்.

தேர்தல் ஆணைக்குழு விதித்த கட்டுப்பாடுகளும் இதற்கு காரணமாக இருக்கலாம். முந்தைய நடத்தைக் கோட்பாடுகள் மத சமூகங்களைக் குறிவைக்கும் வெறுப்புச் சொற்களைப் பயன்படுத்தாமலிருக்க எச்சரித்திருந்தாலும், தற்போது பிரச்சாரங்களில் “மத சின்னங்களைப் பயன்படுத்தாமலிருப்பதற்கும்” கூடுதல் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.[322]

தேசிய மட்டத்தில் பிரச்சார முறையில் மாற்றம் காணப்பட்டாலும், பிராந்திய அளவிலான சிறு கூட்டங்களில் இது பிரதிபலிக்கவில்லை. NCEASL அறிக்கையில், மட்டக்களப்பு (கிழக்கு) சம்மாந்துறையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்ற அரசியல் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரச்சார கூட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான பேச்சுக்கள் இடம்பெற்றன. விடுதலைப் புலிகளின் தளபதியும் அரசியல்வாதியுமான கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும் இதேபோன்ற பேச்சுக்களில் ஈடுபட்டதாக அறிக்கை கூறுகின்றது.[323]

தேர்தலுக்கு முன்பாக மே மாதம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவரான பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் ‘ஈஸ்டர் படுகொலை’ என்ற புத்தகத்தை வெளியிட்டார். விடுதலைப் புலிகளில் இருந்து பிரிந்துசென்ற ஒரு பிரிவின் முன்னாள் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் நெருக்கமாகத் தொடர்புடையவர் என அறியப்படுகின்றார். இந்தப் புத்தகம் இஸ்லாத்தை அவமதிப்பதாகவும், தீங்கு விளைவிக்கும் முன்மாதிரிகளை வலுப்படுத்துவதுடன், தேர்தலுக்கு முன்பாக முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்களை வலுப்படுத்தும் முயற்சியாக இருப்பதாக மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் கவலை தெரிவிக்கின்றன.[324]

முன்னாள் அமைச்சர் அந்தப் பகுதியில் தமிழ் - முஸ்லிம் பதட்டங்களை ஏற்படுத்துவதில் புகழ்பெற்றவர். ஆகஸ்ட் மாதம் அம்பாறை (கிழக்கு) மாவட்டத்தில் வீரமுனை சிந்தாயாத்திரை பிள்ளையார் கோயிலில் வளைவு நிறுவுதல் தொடர்பான முஸ்லிம் - இந்து முரண்பாட்டில் அவர் தலையிட்டதனால்[325] சமூகங்களுக்கு இடையேயான பகைமை அதிகரித்தது. இதனால், வழக்கமாக கோயில் திருவிழாவில் பங்கேற்கும் முஸ்லிம்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் நவம்பர் மாதம் சமூக ஊடகங்களில் வெளியிட்ட ஒரு நேர்காணலில்

---

321 மதியாபரணன் சுமந்திரன் (@MAsumanthiran), “வாழ்த்துகள் @anuradisanayake அவர்களுக்கு. இவ்வெற்றி எந்தவொரு இன அல்லது மத அடிப்படையிலான வெறுப்பும் இல்லாமல் பெறப்பட்டது”, ட்விட்டர், செப்டம்பர் 22, 2024, https://twitter.com/MASumanthiran/status/1837666232264544430

322 இலங்கை தேர்தல் ஆணைக்குழு, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், இல. 22403.:.21, பிரிவு 8(8) இன் படி வெளியிடப்பட்ட நடத்தைக் குறியீடு (தேர்தல் ஆணைக்குழு, செப்டம்பர் 2024), பக்கம் 6, https://elections.gov.lk/web/wp-content/uploads/2024/10/GAZ_2403_21_E.PDF

323 2024 இல் இலங்கையில் முஸ்லிம்கள் மீது நடந்த வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள் - ஸ்ரீயானி தேவகுமார் மற்றும் NCEASL அறிக்கை

324 மட்டக்களப்பு 2023 - 2024 மத சுதந்திர நிலைமைகள்

325 NCEASL, முஸ்லிம்கள் மீது வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள் 2024

மட்டக்களப்பில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக அச்சத்தை ஏற்படுத்தும் கருத்துக்களை வெளியிட்டார். அவர் அந்த சமூகத்தின் சில பிரிவுகள் தற்கொலை[326] தீவிரவாதத் தாக்குதல்களை நடத்தக்கூடிய மனப்பான்மையுடன் இருப்பதாகக் கூறினார். ஆனால், அவரது இந்த தந்திரம் பலிக்காமல் முன்னாள் அமைச்சர் நவம்பர் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தார்.

வேறு சந்தர்ப்பங்களில், அரசியல் கட்சிகள் தங்களது பிரச்சாரங்களில் நேரடியாக இன மதக் குழுக்களை இலக்கு வைக்கவில்லை. ஆனால் இன மத அடையாளத்தில் கவனம் செலுத்தின. வடக்கில் தமிழ் தேசியவாதக் கட்சிகள் பெரும்பாலும் 'இனம்[327]' என்பதைப் பயன்படுத்தி, தமிழ் அடையாளத்தைச் சுற்றி ஒருங்கிணைத்து, "சிங்களக் கட்சிக்கு" வாக்களிப்பதைத் தவிர்க்குமாறு வலியுறுத்தியதாகக் கூறப்படுகின்றது. அதேபோன்று கிழக்கில் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர் விக்ரமசிங்கவின் பிரச்சார கூட்டங்கள் இன மத அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டு, முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகங்களுக்கு என தனித்தனியான கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதன்போது மாற்றி மாற்றி ஒருவரைப் பற்றிய எதிர்மறைக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதாகவும்[328] கூறப்படுகின்றது.

தேர்தல்களுக்கு அப்பால், புதிய அரசாங்கத்தின் செயல்களும் பேச்சுக்களும் அனைவரையும் உள்ளடக்கிய வரவேற்கும் அரசியல் கலாசாரத்தை நோக்கியது என்னும் வகையில் சமிக்ஞைகளை வெளிப்படுத்துகின்றன. நவம்பர் மாதம் இடம்பெற்ற பாராளுமன்றத் தொடக்க விழா எளிமையாக நடந்ததையும் பௌத்த மந்திரமான ஜெய மங்கள கதா இடம்பெறாததையும் நேர்காணலில் வரவேற்றனர்[329]."

## 8. மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரத்தை ஊக்குவிப்பதற்கான அரசாங்கத்தின் தலையீடுகள்

மேலே குறிப்பிட்டதைப் போன்று, மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் மற்றும் சமூகங்களின் மதம் சார்ந்த நலன்களைப் பாதுகாப்பது அல்லது மீறுவதில் அரசாங்கத்தின் நடவடிக்கை அல்லது செயலற்ற தன்மை பங்களித்துள்ளது. "மதத்தை தவறாகச் சித்தரிப்பதை" நிறுத்துவதில் கவனம் செலுத்தும் சட்டங்கள் உட்பட புதிய சட்டங்களைப் பரிந்துரைப்பதன் மூலம் மதம் மற்றும் மதக் குழுக்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது (அத்தியாயம் 1, பகுதி 3.4 மற்றும் அத்தியாயம் 3, பகுதி 5 ஆகியவற்றைப் பார்க்கவும்).

இந்த ஆண்டில் ஏற்பட்ட ஏனைய முன்னேற்றங்கள், மத சமூகங்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் மதக் குழுக்களுக்கு எதிரான வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்களைச் சமாளிப்பதற்கும் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகின்றன. இதில் முக்கியமானது

326 மேற்சொன்னபடி

327 கலாநிதி மகேந்திரன் திருவரங்கன், நேர்காணல்

328 மட்டக்களப்பில் மத சுதந்திர நிலை 2023 - 2024, பக்கம் 18

329 வண. கல்கந்தே தம்மானந்த தேரர், நேர்காணல் கலாநிதி மகேந்திரன் திருவரங்கன், நேர்காணல்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான நம்பகமான விசாரணையை நடத்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு அரசாங்கத்தின் பதிலாகும்.

ஏப்ரல் 2024 ஆம் ஆண்டு தாக்குதல்களின் ஐந்தாவது ஆண்டு நினைவுகூரப்பட்டது. விசாரணையில் முன்னேற்றமில்லாததால் கத்தோலிக்க தேவாலயம் சர்வதேச விசாரணையைக் கோரியது. அந்தத் தாக்குதல்கள் அரசாங்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்ட சதி என பரவலாகக் கருதப்படுகின்றது. தாக்குதல்களை ஆராய்ந்த பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை, "குழப்பத்தை உருவாக்கி பயத்தையும் நிச்சயமற்ற தன்மைமையும் ஏற்படுத்த" மற்றும் "ஆட்சி மாற்றத்திற்கான அழைப்புக்கு இட்டுச்செல்ல" விரும்பியவர்களைச் சுட்டிக்காட்டியது[330].

இதனை ஏற்றுக்கொண்டு, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களை ஜனாதிபதி திசாநாயக்க சந்தித்தபோது, "அத்தகைய உச்சத்தை எட்டியிருந்தால்" நாட்டின் அரசியலை மாற்றும் உறுதிப்பாட்டுடன் புதிய விசாரணையை நடத்துவதாக உறுதியளித்தார்[331].

ராஜபக்ஷ மற்றும் விக்கிரமசிங்கவின் நிர்வாகங்கள் விசாரணைகளை மாறிமாறி முடக்கிய நிலையில், கத்தோலிக்க சமூகம் தற்போது புதிய ஜனாதிபதியிடமிருந்து மீண்டும் வாக்குறுதிகளைக் கேட்கின்றது. ஏமாற்றங்கள் இருந்த போதிலும் அருட்தந்தை. ரொஹான் சில்வா போன்ற சமூகத் தலைவர்கள் "விசாரணைகள் சரியான திசையில் முன்னெடுக்கப்படும்[332]" என்பதில் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர். "குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்[333] என்று நம்பிக்கை கொண்டுள்ளோம்" என்று கடந்த டிசம்பரில் கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் அருட்திரு மல்கம் ரஞ்சித் ஆண்டகை செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார். மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் விசாரணையில் முக்கிய பங்கு வகிக்க, குற்றப் புலனாய்வு பகுப்பாய்வு மற்றும் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராக ஷானி அபேசேகர மீண்டும் நியமிக்கப்பட்டதை நேர்மறை முன்னேற்றமாக அவர்கள் கருதுகின்றனர்.[334]

மத சமூகங்களுக்கு அரசாங்கத்தின் ஆதரவைக் குறிக்கும் மற்றொரு சமீபத்திய நடைமுறை என்பது, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் உட்பட அனைத்து மத வழிபாட்டு இடங்களுக்கும்[335] அரச பாதுகாப்பு வழங்கப்படுவதாகும். இந்த நடவடிக்கை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பிறகு பரவலாக அறிமுகப்படுத்தப்பட்டதுடன் வரவேற்பைப் பெற்றது. இந்த ஆண்டு கிறிஸ்தவ மதத்தின் முக்கிய நாட்களில் அனைத்து தேவாலயங்களுக்கும் காவல்துறையின் சிறப்பு

330 இலங்கை பாராளுமன்றம், "2019 ஏப்ரல் 21 அன்று இலங்கையின் பல இடங்களில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல்களை விசாரித்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழு," இல. 22403/21, (இலங்கை பாராளுமன்றம், 2029 அக்டோபர் 23), பக்கங்கள் 1-5, https://www.parliament.lk/uploads/comreports/sc-april-attacks-report-en.pdf#page=1

331 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி நீதியை உறுதி செய்தார்", அத தெரண, 6 அக்டோபர் 2024.http://www.adaderana.lk/news.php?nid=102485

332 அருட்தந்தை ரொஹான் டி சில்வா (சமூகமும் மதமும் நிலையப் பணிப்பாளர்) உடனான ஜோவிடா அருளானந்தத்தின் நேர்காணல், 27 நவம்பர் 2024, கொழும்பு

333 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைக்கு கார்டினல் அரசாங்கத்தைப் பாராட்டினார்", டெய்லி மிரர், 19 டிசம்பர் 2024.https://www.dailymirror.lk/breaking-news/Cardinal-commends-Govt-over-Easter-Sunday-probe/108-298498

334 அனுபவமிக்க விசாரணையாளர் ஷானி இலங்கை காவல்துறைக்கு திரும்பினார்", டெய்லி குவு, 11 அக்டோபர் 2024. https://www.ft.lk/front-page/Seasoned-investigator-Shani-returns-to-SL-Police/44-767819

335 பெரிய வெள்ளி, உயிர்த்த ஞாயிறுக்கு சிறப்பு பாதுகாப்பு திட்டம்", டெய்லி நியூஸ், 27 மார்ச் 2024.https://www.dailynews.lk/2024/03/27/admin-catagories/breaking-news/468487/special-security-plan-for-good-friday-easter-sunday/

பாதுகாப்பு வழங்கப்பட்டது. அதேபோன்று ரமழான்[336] காலத்தில் பள்ளிவாசல்களுக்கும் இதே விதமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

கோவிட்-19 காலத்தில் முன்னெடுக்கப்பட்ட கட்டாயத் தகனக் கொள்கையால் பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களிடம் அரசாங்கம் மன்னிப்பு கேட்டது கால தாமதம் ஆனாலும் முஸ்லிம் சமூகம் மீதான நல்லெண்ணம் வெளிப்பட்டது. அப்போதைய ஜனாதிபதி விக்கிரமசிங்க அடக்கம் செய்வது, தகனம் செய்வது அல்லது மருத்துவ நிறுவனங்களுக்கு உடலைத் தானம் செய்வதை அனுமதிக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டு வரப்படும் என அறிவித்தார்[337].

முஸ்லிம்களின் மத உணர்வுகளுக்கு எதிராகவும், நிபுணர்களின் கருத்துக்களைப் புறக்கணித்தும் முன்னெடுக்கப்பட்ட கட்டாயத் தகனக் கொள்கை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பின்னர் ஏற்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வின் விளைவு எனப் பரவலாகக் கருதப்பட்டது. பெப்ரவரி 2021 இல் புதைப்பது அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் கோவிட்-19 ஆல் உயிரிழந்த 276 முஸ்லிம்கள் உடல்கள் எரிக்கப்பட்டன.[338] அதே நேரம், புதிய அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதிகள் இல்லை என்ற விமர்சனங்களுக்குப் பதிலாக, அரசாங்கம் முஸ்லிம் ஒருவரை பிரதி சபாநாயகராகவும், மற்றொருவரை பிரதி அமைச்சராகவும் நியமித்து அந்தச் சமூகத்தை[339] திருப்திப்படுத்த முயன்றது.

இலங்கையில் சிறுபான்மை இன - மதக் குழுக்களுடன் சில மோதல்கள் இருந்தாலும், இலங்கை பெரும்பாலும் பௌத்த மதத்தைச் சாராத சமூகங்களை வரவேற்கின்றது (அத்தியாயம் 1, பிரிவு 4.3 ஐப் பார்க்கவும்). கடந்த ஜூலை மாதம் 15,000 போஹ்ரா[340] சமூக உறுப்பினர்கள் அவர்களின் ஆன்மீக மாநாடு மற்றும் வருடாந்திர மாநாட்டுக்காக[341] இலங்கைக்கு வந்திருந்தனர். இலங்கையில் ஏழாவது முறையாக நடைபெற்ற இந்தக் கூட்டங்கள், அவர்கள் பெறும் சிறந்த வரவேற்புக்குச் சான்றாக விளங்குகின்றன.

இதற்கான வரவேற்பு பெரும்பாலும் சுற்றுலா ஆர்வத்தால் ஏற்படுவதாக இருந்தாலும், இது சுற்றுலாப் பயணிகளின் மத உணர்வு குறித்த அரசாங்கத்தின் விழிப்புணர்வைக் குறிக்கின்றது. எனினும் இது சில நேரங்களில் அதன் சொந்த பிரஜைகளின் நலன்களைப் பாதிக்கக்கூடும். அம்பாறையில் உள்ள பிரபலமான அலைச் சறுக்கல் தலமான அறுகம்பேயில் இஸ்ரேல் சுற்றுலாப் பயணிகள் தொடர்பான சமீபத்திய சம்பவங்கள் இதைப் பிரதிபலிக்கின்றன.

---

336 தர்ஷன பாலசூரிய, “அடுத்துவரும் மத மற்றும் கலாசார நிகழ்வுகளுக்கு உயர் பாதுகாப்பைக் கோருகின்றார் IGP”, டெய்லி மிரர், 10 ஏப்ரல் 2024. https://www.dailymirror.lk/print/front-page/IGP-urges-heightened-security-for-upcoming-religious-and-cultural-events/238-280528

337 “கோவிட் தொற்றுநோய் காலத்தில் அடக்கம் செய்வதற்கான கட்டுப்பாடுகளுக்கு இலங்கை ஜனாதிபதி மன்னிப்பு கோரினார்”, நியூஸ் ∴பெர்ஸ்ட், 19 ஜூன் 2024.https://www.newsfirst.lk/2024/06/19/sri-lanka-president-apologizes-for-covid-burial-restrictions

338 “மூன்றாண்டுகளுக்குப் பின்னர் அரசாங்கம் மன்னிப்பு கோரியது”, சிலோன் ருடே, ஜூலை 24, 2024. https://ceylontoday.lk/2024/07/24/govt-extends-apology-after-three-years/

339 பா.உ. ரிஸ்வி சாலி பாராளுமன்ற பிரதி சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்”, டெய்லி மிரர், நவம்பர் 21, 2024.https://www.adaderana.lk/news.php?nid=103657, ஜனாதிபதி செயலகம், “இராஜாங்க அமைச்சர்கள் உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றனர்”, நவம்பர் 21, 2024. https://www.presidentsoffice.gov.lk/deputy-ministers-officially-sworn-in/

340 முஸ்லிம் சமூகத்தின் ஒரு மதப் பிரிவு

341 “15,000 போஹ்ரா சமூக உறுப்பினர்கள் இலங்கையில் ஒன்றுகூட உள்ளனர்”, டெய்லி மிரர், ஜூன் 26, 2024 https://www.dailymirror.lk/front-page/15-000-Bohra-community-members-set-to-gather-in-Sri-Lanka/238-285760

அக்டோபரில், இஸ்ரேல் பயணிகளுக்கு அச்சுறுத்தல் இருக்கலாம் என்ற தகவல் வெளியானதன் பின்னர், தூதரகங்கள் பாதுகாப்பு மற்றும் பயண எச்சரிக்கைகளை உயர்த்தின. மேலும் ஆறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் தீவிரவாதிகள் அல்ல என்றும் அரச அதிகாரிகள் அமெரிக்காவிற்கு அறிவித்தனர்.[342]

அறுகம்பேயில் யூத சுற்றுலாப் பயணிகள் பிரார்த்தனை நிலையங்களை அமைத்து வருகின்றார்கள்[343] என்று தகவல்கள் வெளியாகின. உள்ளூர் மக்கள் புதிய வழிபாட்டுத் தலங்களை அமைப்பதற்குக் காணப்படும் கடுமையான விதிமுறைகள் சுற்றுலாப் பயணிகளுக்குப் பொருந்தவில்லை என்பது கவனிக்கப்பட்டது. யூத சுற்றுலாப் பயணிகளுக்கு நம்பிக்கை சார்ந்த விடயங்களில் முன்னுரிமை அளிக்கப்பட்டதாகத் தோன்றியதுடன் இஸ்ரேலின் போர் முறைகள் மற்றும் காசாவில்[344] நடக்கும் இனப்படுகொலைகளை எதிர்க்கும் அப்பகுதி முஸ்லிம்கள் உட்பட பல இலங்கையர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காதது கவலையளிக்கின்றது. மேலும் அங்குள்ள இஸ்ரேலிய உல்லாச விடுதிகளின் சுவர்களில் காசாவில் இஸ்ரேலிய இராணுவ வீரர்களின் படங்கள் மற்றும் எபிரேபிய மொழியில் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்ததாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன[345].

இலங்கைக்கு வர விரும்பும் வெளிநாட்டுப் பிரஜைகளில், மதத் துன்புறுத்தலை எதிர்கொள்பவர்கள் உட்பட புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் அகதிகளும் ஒரு பிரிவினர் ஆவர். திருப்பி அனுப்புதல், விரோதப் போக்கு மற்றும் ஆதரவு வழங்க விருப்பமின்மை போன்ற சம்பவங்களுடன் இலங்கை எப்போதும் இவர்கள் வருகையை வரவேற்பதில்லை என்றாலும், அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் பெரும்பாலும் அவர்கள் தற்காலிகமாகத் தங்குவதை[346] பொறுத்துக் கொண்டுள்ளன. ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின்[347] (UNHCR) பிரகாரம், 2024 ஜனவரி 31 நிலவரப்படி இலங்கையில் பதிவு செய்யப்பட்ட 311 அகதிகளும் பதிவு செய்யப்பட்ட 180 புகலிடக் கோரிக்கையாளர்களும் உள்ளனர். இவர்களில் இன மத அடையாளம் காரணமாக துன்புறுத்தலை எதிர்கொண்ட 105 ரோஹிங்கியா அகதிகள்

342 சுனில் ஜெயசிறி, “அறுகம்பே சம்பவம் தீவிரவாதம் அல்ல, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் என அரசாங்கம் விளக்கம்”, டெய்லி மிரர், நவம்பர் 1, 2024. https://www.dailymirror.lk/breaking-news/Govt-clarifies-Arugam-Bay-incident-as-organized-crime-not-extremism/108-295001

343 பிஷப் துலீப் டி சிக்கேரா, “அறுகம்பே: மறைக்கப்பட்ட நீரோட்டங்கள”, கிரவுண்ட்வியூஸ், நவம்பர் 23, 2024. https://groundviews.org/2024/11/23/arugam-bay-hidden-currents/

344 பலஸ்தீனிய மக்கள் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பிற அரபிகளின் மனித உரிமைகளை பாதிக்கும் இஸ்ரேலின் செயல்பாடுகளை விசாரிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு குழு, “பசியை போர் ஆயுதமாக பயன்படுத்துதல் உட்பட, காசாவில் இஸ்ரேலின் போர் முறைகள் இனப்படுகொலைக்கு ஒத்ததாக உள்ளன” எனக் கண்டறிந்துள்ளது,
(ஐ.நா., நவம்பர் 14, 2024)https://www.ohchr.org/en/press-releases/2024/11/un-special-committee-finds-israels-warfare-methods-gaza-consistent-genocide>
சர்வதேச மன்னிப்புச் சபை, “காசாவில் பலஸ்தீனியர்களுக்கு எதிராக இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ளது என சர்வதேச மன்னிப்புச் சபையின் விசாரணை முடிவுசெய்கின்றது”, டிசம்பர் 5, 2024.
https://www.amnesty.org/en/latest/news/2024/12/amnesty-international-concludes-israel-is-committing-genocide-against-palestinians-in-gaza/

345 அமீன் இஸ்ஸாதீன், “பாதுகாப்பு எச்சரிக்கை: வெளியில் தெரிவதை விட தீவிரமானதாக இருக்கலாம்”, டெய்லி மிரர், 2024 அக்டோபர் 25.https://www.dailymirror.lk/opinion/Security-alert-More-to-it-than-meets-the-eye/172-294504

346 ருகி பெர்னாண்டோ, “அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு எதிரான பொறுப்புகளை நிறைவேற்றுவதில் இலங்கை குறைவாக உள்ளது”, 2024 ஜூன் 20.https://groundviews.org/2024/06/20/sri-lanka-falls-short-in-its-responsibilities-towards-refugees-and-asylum seekers/#:~:text=In%202023%2C%20the%20number%20of>Bangladesh%20(about%201%20million)

347 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, “2024 உலக அகதிகள் தினத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை”, 2024 ஜூன் 20.https://www.hrcsl.lk/wp-content/uploads/2024/06/HRCSL-Statement-on-World-Refugee-Day-2024.pdf

மற்றும் அஹ்மதியா சமூகத்தைச் சேர்ந்த பல புகலிடக் கோரிக்கையாளர்கள் உள்ளனர்[348].

ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் இலங்கையில் தனது செயல்பாடுகளை நிறுத்துவதாக வெளியான அறிவிப்பு, இந்த ஆண்டு இந்த மக்களைப் பாதித்த ஒரு விடயமாகும். UNHCR இன் பிரகாரம், பதிவு செய்யப்பட்ட 176 புகலிடக் கோரிக்கையாளர்கள் மூன்றாவது நாட்டில் குடியேற்றம் பெறுவதற்கான வாய்ப்பில் இருந்து விலக்கப்பட்டு 2024 டிசம்பர் மாதத்திற்குப் பின்னரும் இலங்கையில் தங்கியிருப்பார்கள். கூடுதலாக, அகதிகளுக்கும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கும் வழங்கப்படும் மாதாந்த வாழ்வாதார உதவி மற்றும் கல்வி உதவி நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளுக்குப் பின்னரும் அகதிகள் தொடர்ந்தும் இலங்கைக்கு வருகின்றார்கள். கடந்த டிசம்பர் மாதம் குழந்தைகள் உட்பட 116 ரோஹிங்யா மக்களுடன் பல நாள் இழுவைப் படகு முல்லைத்தீவு (வடக்கு) முள்ளிவாய்க்கால் கடற்கரைக்கு வந்தது. ஆனால் அவர்களின் இறுதி இலக்கு எங்கே என்பது தெளிவாக இல்லை[349].

2024 உலக அகதிகள் தினத்தன்று வெளியிடப்பட்ட அறிக்கையில், அனைத்து அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் உறுதி செய்ய ஒரு விரிவான கொள்கையை வகுக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கையைக் கேட்டுக் கொண்டது. இலங்கை பல சர்வதேச மனித உரிமை உடன்படிக்கைகளில் பங்காளராக இருப்பதை நினைவூட்டியது. அவை சட்டபூர்வமாக திருப்பி அனுப்பப்படாத கொள்கையைப் பின்பற்ற வலியுறுத்துகின்றன. ஆபத்தில் உள்ளவர்களைத் திருப்பி அனுப்புவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், 1951 அகதிகளின் நிலை தொடர்பான பிரகடனம் மற்றும் அதன் 1967 நெறிமுறையை அணுகுவது குறித்து பரிசீலிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.

தற்போது 'A' நிலை[350] அங்கீகாரம் பெற்றுள்ள HRCSL இன் பங்கு குறிப்பிடத்தக்கது. இங்கு அவர்களின் தலையீடு மற்றும் இந்த அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்ட நிகழ்வுகளில் குறிப்பிடப்படுவது போல, மத வெளிப்பாட்டுக்காக இலக்குவைக்கப்பட்ட சமூகங்களின் கவலைகளை எதிர்கொள்வதிலும் FoRB ஐ ஊக்குவிப்பதிலும் முக்கிய பங்கு வகித்துள்ளனர். இந்தக் காலகட்டத்தில் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான மேம்பட்ட சூழலை அவர்கள் செயல்திறன் வெளிப்படுத்துகின்றது.

இலங்கையில் உள்ள நான்கு முக்கிய மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச திணைக்களங்கள், புத்த சாசன அமைச்சின் கீழ் தனித்தனியாக செயல்படுகின்றன. கத்தோலிக்க திருச்சபை, முக்கிய திருச்சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் தேசிய கிறிஸ்தவ மன்றத்தை (NCC) கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் அங்கீகரித்தாலும், சுவிசேஷம் மற்றும் சுயாதீன திருச்சபைகளை அவை அங்கீகரிப்பதில்லை என NCEASL போன்ற நம்பிக்கை சார்ந்த அமைப்புகள் எடுத்துக்காட்டியுள்ளன. இந்த அங்கீகாரமின்மையே அந்த தேவாலயங்கள்

---

348 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, “முல்லைத்தீவில் தடுத்துவைக்கப்பட்ட ரோஹிங்கியா அகதிகள் மற்றும் தொடர்புடைய ஏனைய பிரச்சினைகள் குறித்த அறிக்கை”, (இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, 2025 ஜனவரி), https://www.hrcsl.lk/wp-content/uploads/2025/01/HRCSL-Report-on-Rohingya-Asylum-Seekers_January-2025.pdf

349 மேற்சொன்னபடி

350 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு. “HRCSLக்கு மீண்டும் 'A' நிலையை வழங்க GANHRI அங்கீகார உப குழு பரிந்துரைக்கின்றது.” மே 14, 2024, https://www.hrcsl.lk/ganhri-sub-committee-on-accreditation-recommends-that-hrcsl-be-reaccredited-with-a-status/

எதிர்கொள்ளும் பல பிரச்சனைகளுக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது. உதாரணமாக, கிறிஸ்தவ ஆசிரியர் நியமனங்கள் மற்றும் மிஷனரி விசாக்களுக்கான ஒப்புதல்கள் தொடர்பான விடயங்களில், சுவிசேஷர்களுக்கு கூட, அரசாங்கம் NCC ஒப்புதலை நாடுகின்றது. இதன் விளைவாக ஒப்புதல்கள் தாமதமாகின்றன அல்லது தடுக்கப்படுகின்றன. இந்தப் பிரச்சனை பல பிரிவுகளைக் கொண்ட ஏனைய மதக் குழுக்களுக்கும் எவ்வளவு தூரம் பரவியுள்ளது என்பது தெளிவாக இல்லை.

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் இடத்திற்கு சமூக விஞ்ஞானம் மற்றும் தேசிய மொழிகளில் பின்புலம் கொண்ட கல்வியாளர் பேராசிரியர் ஹினிதுமா சுனில் செனவி புதிய அமைச்சராக பொறுப்பேற்க உள்ளார். 2022 முதல் 2024 செப்டம்பர் வரை பணியாற்றிய விதுர விக்கிரமநாயக்க, வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் பௌத்தக் கொள்கைகளை முன்னெடுத்து, தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்தார் எனப் பரவலாகக் கருதப்படுகின்றது. சிரேஷ்ட தலைமையின் மாற்றம் அமைச்சின் கவனத்தை ஈர்க்கும் நீண்டகாலமாக நிலவும் குழசுடீ தொடர்பான கவலைகளை நிவர்த்தி செய்வதற்கு அதிக வாய்ப்புக்களை வழங்கக்கூடும் (பரிந்துரைகளைப் பார்க்கவும்).

# மதிப்பெண் மற்றும் RAG கணிப்பீடு

ஒவ்வொரு துணைக் குறிகாட்டியும் 1 - 10 என்ற அளவில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. திரட்டப்பட்ட மதிப்பெண்களின் சராசரி ஒவ்வொரு முக்கிய குறிகாட்டிக்கும் மதிப்பெண்ணைத் தீர்மானிக்கின்றது.

(மேலதிக விபரங்களுக்கு பிரிவு 2 இல் “குறிகாட்டிகள் மற்றும் மதிப்பெண்/ஆராய்ச்சி முறையை” பார்க்கவும்).

| குறியீடு | மதிப்பெண் | விளக்கம் | RAG கணிப்பீடு |
|---|---|---|---|
| **குறிகாட்டி 1: கலாசார மற்றும் பாரம்பரிய தளங்களின் பாதுகாப்பும், சர்ச்சைக்குரிய தளங்களில் மத சுதந்திரத்தின் பாதுகாப்பும்** | | | |
| 1. கலாசார மற்றும் மரபுரிமை தளங்கள் சமமாகப் பாதுகாக்கப்படுகின்றதா? | 4 | (பிரிவுகள் 1 & 2) பௌத்த பாரம்பரிய தளங்களுக்கு முன்னுரிமை அளிப்பதையும், பௌத்தமல்லாத சமூகங்களுடன் தொடர்புடைய தளங்களை புறக்கணிப்பதையும் பிரதிபலிக்கின்றது. பாரம்பரிய விடயங்களில் முடிவெடுப்பதில் மோசமான இன - மத பிரதிநிதித்துவத்திலும் இது தெளிவாகின்றது.<br><br>இலங்கையின் அரசியலமைப்பு பௌத்தத்திற்கும் “புத்த சாசனத்திற்கும” முன்னுரிமை அளிக்கின்றது, இது பௌத்த பாரம்பரிய தளங்களைப் பாதுகாப்பதில் உள்ள முக்கியத்துவத்தை விளக்குகின்றது. இருப்பினும், பௌத்தத்துடன் தொடர்பற்ற தளங்களைப் புறக்கணிப்பதை இது விளக்கவில்லை, குறிப்பாக தொல்பொருள் திணைக்களம் இலங்கையின் “தொல்பொருள் பாரம்பரியம் அனைத்தையும” பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது. | |

| | | | |
|---|---|---|---|
| 2. கலாசார மற்றும் பாரம்பரிய தளங்களைப் பாதுகாக்கும் அரச விதிகள் மற்றும் சட்டங்கள் சமமாக நிர்வகிக்கப்படுகின்றனவா? | 3 | பிரிவு 2 இல் விளக்கப்பட்டுள்ளபடி, தொல்பொருள் சட்டம் நியாயமற்ற முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு இன - தேசியவாத நிகழ்ச்சி நிரலை ஊக்குவிக்கப் பயன்படுத்தப்படுவதாகக் கருதப்படுகின்றது. உதாரணமாக, நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் விதிகளை மீறி பாரம்பரிய தளங்களில் புதிய கட்டமைப்புகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. எனினும், சிறுபான்மையினரின் மத வழிபாட்டை நிறுத்த அதே விதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.<br><br>எனினும், இந்த ஆண்டு சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உயர் தலைமை அத்தகைய நடவடிக்கைகளுக்கு வெளிப்படையான ஆதரவைக் காட்டவில்லை என்பதும் புதிய ஜனாதிபதியின் நிலம் விடுவிப்பதற்கான வாய்மொழி உறுதிமொழிகளும் அடங்கும். | |
| 3. சர்ச்சைக்குரிய மதத் தளங்களில் மதச் சின்னங்களை தவறாக அல்லது சட்டவிரோதமான முறையில் வைப்பதன் மூலம் குழசுடீ மீறப்பட்டதற்கான ஆதாரம் உள்ளதா? | 3 | பிரிவு 2 இல் உள்ள உதாரணங்கள், குறிப்பாக பௌத்தம் அல்லாத சமூகங்களுக்கு முக்கியமான பகுதிகளில், பௌத்தச் சின்னங்கள் திணிக்கப்படுவதைக் காட்டுகின்றன. சர்ச்சைக்குரிய பிற இடங்களில், சிறுபான்மை சமூகங்கள் தங்கள் மத இடங்களை வழிபடுவதையோ அல்லது அணுகுவதையோ தடுக்க விதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.<br><br>நேர்மறை முன்னேற்றமாக, வடக்கில் இராணுவம் கைப்பற்றிய நிலத்தில் உள்ள கோயில்களுக்கு நிபந்தனை அடிப்படையில் இந்து பக்தர்களுக்கு அணுகல் வழங்கப்பட்டது. | |
| 4. குறிப்பிட்ட பகுதியின் இன அமைப்பை மாற்ற அரசாங்கம் பொருளாதார அல்லது பிற சலுகைகளை வழங்கியுள்ளதா? | 4 | திருகோணமலையின் குச்சவெளிப் பிரிவில் 32 புத்த விகாரைகளைக் கட்டுவது மக்கள்தொகை மாற்றங்களுக்கு வழிவகுக்கும் என்ற கவலைகள் உள்ளன. இந்த முன்னேற்றங்கள் கவலையளிக்கும் அதே வேளையில், அந்தப் பகுதியின் இன அமைப்பை மாற்ற அரசாங்கம் சலுகைகளை வழங்குவதற்கான தெளிவான ஆதாரங்கள் எதுவும் ஆராய்ச்சியில் கிடைக்கவில்லை. | |

| குறிகாட்டி 2: *FoRB* மற்றும் இன - மதக் குழுக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சட்டங்கள் மற்றும் விதிகளை நடைமுறைப்படுத்துதல் | | | |
|---|---|---|---|
| 1. மத சுதந்திரத்தையும் இன மதக் குழுக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் சட்டங்கள் நியாயமாகவும் சமமாகவும் செயல்படுத்தப்படுகின்றனவா? | 5 | சமீபத்திய நிகழ்வுகள் (பிரிவு 3) மத சுதந்திரத்தைப் பாதுகாக்கும் சட்டங்கள் சமமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதைக் காட்டுகின்றன. பௌத்த நலன்கள் அச்சுறுத்தப்படுவதாகக் கூறப்படும்போது ICCPR விரைவாகப் பயன்படுத்தப்படுகின்றது, ஆனால் பிற இன - மதக் குழுக்களை ஆதரிக்கத் தயக்கம் உள்ளது. சில நேரங்களில், அரசாங்கத்தின் நோக்கத்திற்குப் பொருந்தாத சூழ்நிலைகளில் ICCPR தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது.<br><br>எனினும், நகைச்சுவை பேச்சாளர் நடா'ா எதிரிசூரிய 2024 இல் விடுவிக்கப்பட்டது ஒரு நேர்மறையான நடவடிக்கையாகும். சட்டங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டபோது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு திறன்பட செயல்பட்டுள்ளது | |
| 2. மதம் சார்ந்த மனிதாபிமான அமைப்புகள் உட்பட வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மத நிறுவனங்கள் சுதந்திரமாக இயங்குகின்றனவா? | 6 | மத இடங்கள் பற்றிய சட்டங்கள் சமமற்ற முறையில் அமல்படுத்தப்படுவதை சம்பவங்கள் காட்டுகின்றன. சிறுபான்மை குழுக்கள், குறிப்பாக சுவிசேஷ தேவாலயங்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றன (பிரிவு 4.1 மற்றும் 4.2).<br><br>நம்பிக்கை சார்ந்த அமைப்புகள் கலவையான அறிக்கையை அளிக்கின்றன. மத சகவாழ்வில் பணிபுரிபவர்கள் மேம்பட்ட சூழலையும் உள்ளூர் அதிகாரிகளின் ஆதரவையும் காண்கின்றார்கள். ஆனால் சிவில் சமூகக் குழுக்கள் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தில் கவனம் செலுத்துகின்றன, குறிப்பாக சர்ச்சைக்குரிய மத தளங்கள் போன்ற முக்கியமான பிரச்சினைகளில், எதிர்ப்பு, கண்காணிப்பு மற்றும் மிரட்டலை எதிர்கொள்கின்றன (பிரிவு 4.3). | |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | இன - மதக் குழுக்களுக்கு இடையே வளங்கள் சமமாக ஒதுக்கப்படுகின்றதா? | 5 | கிழக்கின் சில பகுதிகளில் வளங்களை விநியோகிப்பதில் பாரபட்சம் காட்டுவதாக ஆராய்ச்சி காட்டுகின்றது. 2024 ஷேஉ கணக்கெடுப்பு சில தகவல்களை வழங்கினாலும், இந்தப் பிரச்சினை இலங்கையின் பிற பகுதிகளை எவ்வளவு பாதிக்கின்றது என்பது தெளிவாகத் தெரியவில்லை (பிரிவு 4.5). | |
| 4. | மதக் குழுக்களுக்கு இடையிலான தகராறுக-ளில் சட்டம் சமமாக அமல்படுத்தப்பட்டுள்ள-தா, மேலும் மிரட்டல் மற்றும் வன்முறையில் அரசாங்கம் ஈடுபட்டதற்க-ான சான்றுகள் உள்ள-தா? | 4 | கிடைக்கக்கூடிய தரவுகள், இன - மதக் குழுக்களுக்கு இடையிலான மோதல்களை சட்ட அமலாக்க அதிகாரிகள் கையாளும் விதம் கலவையாக இருப்பதைக் காட்டுகின்றன. சில சந்தர்ப்பங்களில், காவல்துறையினர் திறன்பட தலையிட்டு முறையாகச் செயல்படுகின்றார்கள், ஏனையவற்றில், அவர்களின் நடத்தை மோசமாக உள்ளது (பிரிவு 4.4). | |
| **குறிகாட்டி 3: மதக் குழுக்கள் மற்றும் நாத்திகர்கள்/அஞ்ஞானவாதிகளுக்கு எதிராக பாகுபாடு, தீவிரவாதக் கருத்துக்கள், மிரட்டல் மற்றும் வன்முறையைப் பரப்புவதில் அரச அதிகாரிகள் அல்லது அரசியல் ரீதியாகத் தொடர்புடைய குழுக்களின் பங்கேற்பு.** | | | | |
| 1. | கடும்போக்குவாத அரசியல் - மதக் குழுக்கள் சகிப்பின்மையையும், கடுமையான நம்பிக்கைகளையும் ஊக்குவிக்கின்றன என்பதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா? | 6 | பௌத்த கடும்போக்குக் குழுக்கள் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் குறைந்திருந்தாலும், வடக்கு மற்றும் கிழக்கில் இந்து கடும்போக்குக் குழுக்களுடன் தொடர்புடைய சம்பவங்கள் அதிகரித்துள்ளன. நேர்மறையாக, இந்து அடையாளத்தை ஊக்குவிக்க தமிழ் அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தது அவர்களின் செல்வாக்கைக் குறைத்திருக்கலாம். எனினும், அரசு அல்லது பௌத்த நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது அதில் தலையிடும் அதிகாரிகள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான பாகுபாட்டைத் தூ ண்டும் நடவடிக்கைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் இந்து தலைவர்களை முறையாக ஈடுபடுத்தவில்லை என்ற கவலையும் உள்ளது (பிரிவு 5). | |

| | | | |
|---|---|---|---|
| 2. மதத்தை அல்லது கலாசார அடையாளத்தை வெளிப்படுத்துவதில் வரம்புகள் உள்ளதா? | 6 | முஸ்லிம் மத வெளிப்பாட்டிற்கு எதிராக கடும்போக்குவாத குழுக்களும் அரசாங்கமும் முன்னெடுத்த ஒழுங்கமைக்கப்பட்ட பிரச்சாரங்கள் குறைந்துள்ளன. இருப்பினும், தலையை மூடும் ஆடையை அணிவது தொடர்பான சம்பவங்களில் சில அரச அதிகாரிகள் இன்னும் பாரபட்சமான கருத்துக்களைக் கொண்டிருப்பதைக் காட்டுகின்றன. மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பிறகு முஸ்லிம் சமூகத்தைத் தனிமைப்படுத்தும் சில விதிகள் இன்னும் நடைமுறையில் உள்ளன. | |
| 3. அரசியல் பிரச்சாரத்திலும் தேர்தல்களிலும் மதம் சார்ந்த பேச்சுக்கள் பயன்படுத்தப்பட்டனவா? | 8 | தேர்தல் பிரச்சாரங்களின் போது, குறிப்பாக உள்ளூர் மட்டத்தில் சில தீங்கு விளைவிக்கும் பேச்சுக்கள் பதிவாகியிருந்தாலும், இதுபோன்ற சம்பவங்கள் பொதுவாகக் குறைந்துள்ளன. முக்கியமாக, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க தேர்தல் ஆணைக்குழு மேம்பட்ட விதிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது (பிரிவு 7). | |
| **குறிகாட்டி 4: மத சமூகங்களின் நலன்களை ஆதரிக்கும் அல்லது *FoRB* தொடர்பான விடயங்களை நிவர்த்தி செய்யும் அரசாங்கத்தின் முயற்சிகள்** | | | |
| 1. மத சமூகங்களுக்கு முக்கியமான முன்முயற்சிகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பாக நேர்மறையான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதா? | 5 | வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைப் பாதிக்கும் மத இடங்கள், இன மதக் குழுக்களின் முக்கிய கவலைகளில் ஒன்றாக இருக்கின்றது. இத்தகைய கவலைகளைத் தீர்க்க அரசாங்கம் தெளிவான உறுதிப்பாடு வழங்கவில்லை என்றாலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் (பிரிவு 8) தொடர்பாக நம்பகமான விசாரணை நடத்துவதில் சில உண்மைத்தன்மையை அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | FoRB ஐப் பாதுகாக்கும் மற்றும் ஊக்குவிக்கும் அரச திணைக்களங்கள் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் எவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டன? | 5 | இலங்கையில் உள்ள முக்கிய மதக் குழுக்கள் தொடர்ந்து உத்தியோகப்பூர்வ அங்கீகாரத்தையும் அரசாங்க ஆதரவையும் பெற்று வருகின்றன. இருப்பினும், சிறிய பிரிவுகள் அங்கீகரிக்கப்படாததால் ஓரங்கட்டப்படுவது குறித்து கவலைகளை எழுப்பியுள்ளன.<br>இதற்கு நேர்மாறாக, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட HRCSL போன்ற சுயாதீன ஆணைக்குழுக்கள், மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் (FoRB) தொடர்பான பிரச்சினைகளில் திறன்பட தலையிட்டுள்ளன (பிரிவு 3, 6, மற்றும் 8). | |
| 3. | இன - மதக் குழுவாக வெளிப்படையாக தம்மை அடையாளம் காணும் வெளிநாட்டு பிரஜைகளை அரசாங்கம் எவ்வளவு சிறப்பாக ஏற்றுக்கொண்டுள்ளது? | 6 | மத அடையாளம் கொண்ட வெளிநாட்டுப் பயணிகளை இலங்கை பெரும்பாலும் சிறப்பாக வரவேற்றாலும், அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களை நடத்துவதில் குறைவாக உள்ளது (பிரிவு 8). | |



## அத்தியாயம் 3:

# சமூகம் மற்றும் கலாசாரம்

சமூக மற்றும் தனியார் மட்டங்களில் FoRB நடைமுறையினைப் பாதிக்கும் வகுப்புவாத உறவுகள், மத நடைமுறைகள் மற்றும் நம்பிக்கைகளின் போக்குகள்

## முக்கிய அவதானிப்புகள்

- மத நடவடிக்கை அல்லது வழிபாட்டுத் தலங்களைச் செயல்படுத்துவதற்கான சமூகத்தின் எதிர்ப்பு, சுவிசேஷம் அல்லது சுயாதீன தேவாலயங்களை விகிதாச்சாரமற்ற முறையில் குறி வைப்பதாகத் தெரிகின்றது. மதமாற்றம் குறித்த ஆழமான அச்சங்கள் மற்றும் பெரும்பான்மைவாத உணர்வால் எதிர்ப்பு தூண்டப்படுவதாகத் தெரிகின்றது.
- மதமாற்றத்திற்கு எதிரான கலாசார மற்றும் சமூகச் சார்பு தங்கள் நம்பிக்கைகளைப் பகிர்வதில் சில மதக் குழுக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.
- சிறுபான்மை இன மதக் குழுக்களிடையே சில மதப் போக்குகள் மற்றும் நடைமுறைகள் விரோதத்தைத் தூண்டி, மதங்களுக்கு இடையேயான பதட்டங்களுக்கு வழிவகுத்துள்ளன. சுவிசேஷ/ சுயாதீன தேவாலயங்களிடையே தீவிரமான ஆதரவு, இலங்கையின் சைவ மரபுகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் இந்துத்துவாவின் செல்வாக்கு மற்றும் முஸ்லிம் சமூகத்தின் பிரிவுகளிடையே காணப்படும் தீவிர பழமைவாதம் ஆகியவை இதில் அடங்கும்.
- பன்முகத்தன்மைக்கு எதிரான சகிப்பின்மையை வளர்க்கும் கருத்துக்களை பிரதான மத அமைப்புகள் தொடர்ந்து நிலைநிறுத்தி வருகின்றன. டுபுடீவுஞஜ நபர்களைப் புறக்கணிக்கும் காலாவதியான சட்டங்களைச் சீர்திருத்துவதற்கான எதிர்ப்பில் இது தெளிவாகத் தெரிகின்றது.
- தங்களைத் தாங்களே அங்கீகரிக்கும் சர்ச்சைக்குரிய போதகர்களின் இருப்பு அவர்களைக் கட்டுப்படுத்த புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு வழிவகுத்தாலும் கூட, கவலைகளைத் தீர்க்க சகிப்புத்தன்மை, விவாதம் மற்றும் கலந்துரையாடலுக்கான அழைப்புகளுக்கு அது வழிவகுத்தது.

பல்வேறு இன மதக் குழுக்களின் நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள், மத சுதந்திரம் அல்லது நம்பிக்கை (FoRB) எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகிறது என்பதைப் பாதித்துள்ளன, மேலும் அவை சமூகங்களுக்குள்ளும் இடையிலும் உள்ள உறவுகளைப் பாதித்துள்ளன. சில புதிய அல்லது வளர்ந்து வரும் போக்குகள், மதங்களுக்குள்ளும் இடையிலும் விரோதத்தையும் பதட்டங்களையும் ஏற்படுத்தியுள்ளன. அதே நேரத்தில், முக்கிய மதக் குழுக்களிடையே உள்ள சார்புடைய கருத்துக்கள், குறிப்பாக பாலினப் பிரச்சினைகளில், உலகளாவிய மதத் தலைவர்கள் அதிக உள்ளடக்கத்திற்கு அழைப்பு விடுத்திருந்தாலும், சகிப்பின்மைக்கு வழிவகுத்துள்ளன. இருப்பினும், மத மரபுகள் மற்றும் மதங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பைக் கலப்பதற்கான எடுத்துக்காட்டுகள், குறிப்பாக புதிய சட்டங்களுக்குப் பதிலாக திறந்த விவாதம் ஊக்குவிக்கப்படும்போது, அமைதியான சகவாழ்வு சாத்தியமாகும் என்பதைக் காட்டுகின்றன.

# 1. பிராந்திய பெரும்பான்மைவாதம், வகுப்புவாத உறவுகள் மற்றும் FoRB

அத்தியாயம் 2 இல் விவாதிக்கப்பட்டபடி, உள்ளூர் அதிகாரிகள் பெரும்பாலும் பிராந்திய பெரும்பான்மையினருக்கு ஆதரவாகச் செயல்படுகின்றார்கள். இதன் விளைவாக எண்ணிக்கையில் பலவீனமான மதக் குழுவைப் புறக்கணிக்கும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. மத நடவடிக்கைகள் அல்லது வழிபாட்டுத் தலங்களின் செயல்பாட்டுக்கு சமூகத்தின் எதிர்ப்பு தொடர்பிலான சம்பவங்களில், சுவிசேஷ அல்லது சுயாதீன தேவாலயங்கள் அதிகம் குறிவைக்கப்படுவதாக தரவுகள் குறிப்பிடுகின்றன. ஒரே மாதிரியான இன - மதக் குழுவைக் கொண்ட பகுதிகளில் சுவிசேஷ தேவாலயங்கள் பெரும்பாலும் குறிவைக்கப்படுவதாகத் தெரிகின்றது. இவற்றில் தெற்கில் பௌத்தர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளும், வடக்கில் இந்துக்கள் அல்லது கத்தோலிக்கர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளும் அடங்கும் (அத்தியாயம் 2, பிரிவு 4 ஐப் பார்க்கவும்).

சுவிசேஷகர்களைக் குறிவைப்பதன் பின்னணியில் உள்ள நோக்கங்களைப் பற்றி விவாதித்த NCEASL, சமூகத்தில் அவர்களை 'வெளியாட்களாக' பார்ப்பதிலிருந்து இந்த எதிர்ப்பு உருவாகின்றது என உணர்ந்தது. மதக் குழுக்கள் மீதான மிரட்டல் மற்றும் தாக்குதல் சம்பவங்களில் 'பிராந்தியவாதத்தின்' போக்கை மட்டக்களப்பில் நடத்தப்பட்ட ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. இது இந்தக் கருத்தை எதிரொலிக்கின்றது.[351] மத மாற்றத்தால் எண்ணிக்கை குறைந்துவிடுமோ என்ற ஆழமான அச்சத்துடன், சமூகத்தில் முதன்மையான தன்மை இழக்கப்படுமோ என்ற அச்சமும் இணைந்தே செல்கிறது என்பதை சம்பவங்களின் தன்மை வெளிப்படுத்துகின்றது.

## 1.1 வழிபாட்டுத் தலங்கள் இயங்குவதை எதிர்த்தல்

(அத்தியாயம் 2, பிரிவு 4.1) விவாதிக்கப்பட்டபடி, வழிபாட்டுத் தலங்களின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்துவதில் காவல்துறை மற்றும் உள்ளூர் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பெரும்பாலான சம்பவங்கள் சமூக உறுப்பினர்களை உள்ளடக்கியது. களுத்துறை, கொழும்பு, அம்பாந்தோட்டை, குருநாகல், கண்டி மற்றும் காலி ஆகிய இடங்களில் கிறிஸ்தவ அமைப்புகள் தொடர்பாக NCEASL பதிவு செய்த சம்பவங்கள், சமூக உறுப்பினர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர் என்பதைக் குறிக்கின்றன.[352]

பதிவு செய்யப்பட்ட பல சம்பவங்களில் தேவாலயங்களுக்கு எதிரான முறைப்பாடுகள் அயல் வீட்டாரால் செய்யப்பட்டன. ஏப்ரல் மாதம் கொழும்பு (மேற்கு) களனியில் உள்ள ஒரு தேவாலயத்திற்கு எதிராக, அந்த தேவாலயம் "சட்டவிரோதமாக" நடத்தப்படுவதாகக்

351 இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலை குறித்த ஆய்வு, ஊேறுயுளூடு கவனக் குழு, டிசம்பர் 12, 2024, கொழும்பு பங்கேற்பாளர்கள்: மகேஷ் டி மெல், மைக் கேப்ரியல் மற்றும் சலோமி டி சில்வா் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி, மட்டக்களப்பில் மதம் அல்லது நம்பிக்கையின் சுதந்திரத்தின் நிலை 2023-2024, (மைனர்மேட்டர்ஸ், டிசம்பர், 2024). https://minormatters.org/report_policy_briefs/the-landscape-of-freedom-of-religion-or-belief-in-batticaloa-2023-2024/> 21

352 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷகக் கூட்டணி (NCEASL), கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள் 2024, வெளியிடப்படாத அறிக்கை, NCEASL, டிசம்பர் 2024

கூறி, போதகரின் அயல் வீட்டாரிடமிருந்து காவல்துறைக்கு முறைப்பாடு கிடைத்தது. இந்த முறைப்பாடு களனி பௌத்த விகாரை, களனி பிரதேச செயலகம் மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றுக்கும் பிரதிசெய்யப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து, தேவாலயத்தைப் பதிவு செய்யவோ வேறு இடத்திற்கு மாற்றவோ காவல்துறை அழைப்பு விடுத்தது.[353]

ஜூலை மாதம் கண்டி (மத்திய) கெலியோயாவில் உள்ள ஒரு தேவாலயத்தின் திறப்பு விழாவிற்கு புத்த மதகுருமார்கள் மற்றும் அப்பகுதி மக்கள் இடையூறு விளைவித்தனர், 'பௌத்த கிராமத்தில்' வழிபாட்டு முறைகளை நடத்த முடியாது என்று அவர்கள் போதகரிடம் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து, தேவாலயத்தின் அங்கத்தவர் உள்ளிட்ட விபரங்களை காவல்துறையினர் பெற்றுக்கொண்டனர். உத்தியோகபூர்வ முறைப்பாடு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், காவல்துறையினரை எச்சரிக்கும் வகையில் ஏராளமான தொலைபேசி அழைப்புகள் வந்ததாக காவல்துறையினரிடம் இருந்து போதகர் அறிந்து கொண்டார்.[354]

## 1.2 வழிபாட்டைச் சீர்குலைத்தல் மற்றும் வன்முறை

சமூக உறுப்பினர்கள் முன்னிலை வகிக்கும் சம்பவங்களில், தேவாலயங்களின் 'சட்டவிரோதம்' மற்றும் பதிவு இல்லாமை என்பன அந்த அமைப்புகள் மற்றும் அதன் உறுப்பினர்கள் மீதான அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்களை நியாயப்படுத்த பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. கொழும்பு, புத்தளம், மன்னார், குருநாகல் மற்றும் கம்பஹா[355] ஆகிய இடங்களில் குறைந்தது ஐந்து கிறிஸ்தவ அமைப்புகள் மீது உடல் ரீதியான மோதல்கள் அல்லது தாக்குதல்களை NCEASL பதிவு செய்துள்ளது.

ஜூலை மாதம், கம்பஹா (மேற்கு) வத்தளையில் உள்ள ஒரு தேவாலயத்தில் நடந்த வழிபாட்டை அயல் வீட்டவர்கள் உரத்த இசை மற்றும் ஆபாச வார்த்தைகளைப் பயன்படுத்தி இடையூறு செய்ததுடன் வழிபாட்டை நிறுத்தக் கோரினர். அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வாக்குவாதத்தில் போதகரின் மனைவி தாக்கப்பட்டார். மேலும், குருநாகல், பொல்கஹவெலவில் உள்ள ஒரு தேவாலயம் பதிவுசெய்யப்பட வேண்டும் அல்லது வழிபாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்ற கட்டாயத்திற்கு ஆளானதுடன் கற்கள் வீசப்பட்ட தொடர்ச்சியான சம்பவங்களையும் எதிர்கொண்டது. ஒரு சந்தர்ப்பத்தில் கிராமவாசிகள் தேவாலயத்திற்குச் செல்லும் வீதியைத் தடை செய்ததுடன் வழிபாடுகளில் ஈடுபடுபவர்களும் போதகரும் உள்ளே நுழைவதைத் தடுத்தனர். காலி (தென் மேற்கு) பலப்பிட்டியவில் ஒரு தேவாலயத்தில், தொடர்ச்சியான சமூக எதிர்ப்பினால் அக்டோபரில் தாக்குதல் நடத்தப்படும் என்ற வதந்தி வெளியானதுடன் இதன் காரணமாக போதகரும் அவரது குடும்பத்தினரும் தற்காலிகமாக வீட்டை விட்டு வெளியேற[356] வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

353 மேற்சொன்னபடி

354 மேற்சொன்னபடி

355 மேற்சொன்னபடி

356 மேற்சொன்னபடி

## 1.3 சமூக வளங்கள் மறுக்கப்படல்

சுவிசேஷ கிறிஸ்தவ நடவடிக்கைகளுக்கு சமூகம் தலைமையிலான எதிர்ப்பும் பாகுபாட்டிற்கு வழிவகுத்துள்ளது. இலங்கையில் உள்ள இறுதிச் சடங்கு உதவிச் சங்கங்கள், துக்க காலங்களில் குடும்பங்களுக்கு நிதியுதவி உட்பட ஆதரவு வழங்கும் சமூக அடிப்படையிலான முக்கியமான சங்கங்களாகும். மாத்தளை (மத்திய) மற்றும் குருநாகல் (வட மேற்கு) ஆகிய இடங்களில் குறைந்தது இரண்டு சம்பவங்களை NCEASL பதிவு செய்துள்ளது. அங்கு கிறிஸ்தவர்கள் அல்லது சமீபத்தில் மதம் மாறியவர்கள் இந்தச் சங்கங்களில் இருந்து நன்மைகளைப் பெறுவதைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மாத்தளை, மடத்துகமவில் நடந்த இறுதிச் சடங்கு உதவி சங்கக் கூட்டத்தில், கிராமவாசிகளின் எதிர்ப்பைப் பெற்ற போதகர் ஒருவரிடம், அவரும் அவரது குடும்பத்தினரும் சங்கத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டு கிறிஸ்தவ நடைமுறைகளின் பிரகாரம் அடக்கம் செய்ய முடியும் என்றாலும், கிராமத்தில் எதிர்ப்பு எழுந்தால் பொது கல்லறைக்கு மாற்றப்படும் என்று கூறப்பட்டது. கிராமத்தில் இனி கிறிஸ்தவ மதத்திற்கு மாறினால் சங்கத்தின் ஆதரவு கிடைக்காது[357] என்றும் அவர்கள் எச்சரித்தனர்.

புதிதாக கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்கள் குடும்பத்தில் உள்ள புத்த மதத்தைப் பின்பற்றும் உறுப்பினர்களுக்களின் இறுதிச் சடங்கில் புத்த மதச் சடங்குகள் பின்பற்றப்படாது என்ற அச்சுறுத்தலுடன் அவர்கள் தங்கள் நம்பிக்கையைக் கைவிட அழுத்தம் கொடுக்கப்படுவதாக கிறிஸ்தவ அரசு சாரா நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரியவந்தது. மேலும், குடும்ப மட்டத்தில் பரம்பரை உரிமைகளை வழங்க மறுப்பது அல்லது இழப்பது புதிதாக மதம் மாறியவர்கள் தங்கள் நம்பிக்கையை கைவிடச் செய்வதற்கான[358] உத்திகளாகப் பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

அம்பாறை (கிழக்கு) பகுதியில் பௌத்தர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மகா ஓயாவில் மார்ச் மாதம் நடந்த ஒரு சம்பவத்தில், மத மாற்றங்கள் குறித்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து அங்கு சென்ற 26 கிறிஸ்தவப் பணியாளர்கள் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது இத்தகைய பதட்டங்கள் எவ்வாறு தொடர்கின்றன என்பதைக் காட்டுகின்றது.[359]

# 2. பிரச்சனைக்குரிய வழியில் மதத்தைப் பரப்புதல்

மத மாற்றங்கள் ஆதிக்கக் குழுக்களின் அந்தஸ்தைக் குறைக்கும் என்று சிலர் அச்சப்படுவதால், இலங்கையில் மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரத்தில் மதத்தைப் பரப்புதல் மிகவும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளில் ஒன்றாக உள்ளது.[360] மேலும் மதமாற்றங்களைக் கட்டுப்படுத்தும்

357 மேற்சொன்னபடி

358 ஓப்பன் டோர்ஸ், இலங்கைக்கான முழுமையான அறிக்கை - ஓபன் டோர்ஸ், வேர்ல்ட் வாட்ச் ரிசேர்ச், (ஓப்பன் டோர்ஸ், மார்ச் 2024), https://www.opendoors.org/research-reports/country-dossiers/WWL-2024-Sri-Lanka-Full-Country-Dossier.pdf> 32-33

359 NCEASL, கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள் 2024

360 ஜெஹான் குணதிலக்க, மத சுதந்திரம் பிரச்சார சுதந்திரத்தையும் உள்ளடக்கியதா? (மைனர்மேட்டர்ஸ், செப்டம்பர் 2022), https://forbdashboard.

சட்டத்தை இயற்றுவதற்கான முயற்சிகளுக்கும் வழிவகுத்துள்ளது (அத்தியாயம் 1, பிரிவு 3.5 ஐப் பார்க்கவும்).[361] “ஒரு மதம் அல்லது நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளும் சுதந்திரத்திற்கு” அரசியலமைப்பில் பாதுகாப்பு உள்ளபோதிலும், இலங்கையில் மதமாற்றம் பெரும்பாலும் எதிர்க்கப்படுகின்றது, மற்றும் சில நேரங்களில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எந்த நம்பிக்கையைப் பின்பற்றினாலும் மத மாற்றம் செய்பவர்கள் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர்[362] உட்பட தனிப்பட்ட உறவுகளில் மோதல்களை எதிர்கொள்கின்றனர்.

ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்களையோ பிரதான கிறிஸ்தவப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களையோ மதம் மாற்றுவதில் சுவிசேஷ கிறிஸ்தவர்களின் பங்கு இருப்பதாகக் கருதப்படுவதால் அவர்கள் வெறுக்கப்படுகின்றார்கள். தேசிய சமாதானப் பேரவை 2024 இல் நடத்திய கணக்கெடுப்பின்படி, ‘மதமாற்றம்’ என்பது மத சுதந்திரத்திற்கு முக்கிய தடையாக அடையாளம் காணப்பட்டுள்ளது (‘பிரச்சாரம்’ மற்றும் ‘மதமாற்றம்’ ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாட்டிற்கான அத்தியாயம் 1, பிரிவு 3.5 ஐப் பார்க்கவும்). பௌத்தம், இந்து மற்றும் கத்தோலிக்க சமூகங்களைச் சேர்ந்த 50 சதவீதத்திற்கும் அதிகமானோர், இந்த நடைமுறைக்கு முதன்மையாக சில கிறிஸ்தவக் குழுக்கள் பொறுப்பு என்று அடையாளம் கண்டுள்ளனர். மேலும் இது அவர்களின் மதத்தை எதிர்மறையாகப் பாதிக்கும்[363] வகையில் நடைபெறுகின்றது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த உணர்வை வெளிப்படுத்தும் விதமாக, மார்ச் மாதம் வவுனியா (வடக்கு) பூவரசங்குளத்தில் தமிழர்களை கிறிஸ்தவர்களாக மாற்றுவதன் மூலம் கிறிஸ்தவர்கள் “தமிழ் இனத்தை அழிப்பதாக“ குற்றஞ்சாட்டி, கிறிஸ்தவர்களின் ஆசீர்வாத விழாவை விளம்பரப்படுத்தும் சுவரொட்டிகளின் மேல் ‘தமிழ் பேரவை’ என்ற பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. கிறிஸ்தவர்கள் ‘தமிழர் தாயகத்தை விட்டு வெளியேற[364] வேண்டும்’ என்றும் அதில் கோரப்பட்டது.

சுவிசேஷ திருச்சபைகளுடன் தொடர்புடைய “ஆக்கிரமிப்பு மதமாற்றம்” பரந்த கிறிஸ்தவ - கத்தோலிக்க சமூகம்[365] மீது எதிர்மறையான கருத்துக்களை உருவாக்கியுள்ளது என்ற கவலைகளை கிறிஸ்தவ மதகுருமார்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இந்தக் கவலையை எதிரொலிக்கும் வகையில், வவுனியாவில் சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், ‘யெகோவாவின் சாட்சிகள்’ என்ற கிறிஸ்தவப் பிரிவு, சாதியப் பாகுபாட்டை[366] எதிர்கொள்பவர்கள் உட்பட, ஒடுக்கப்பட்ட பின்னணியைச் சேர்ந்த இந்துக்களை தீவிரமாக மதம் மாற்றுவதாகக்

---

minormatters.org/resource/does-the-freedom-of-religion-include-the-freedom-to-propagate/

361 மாற்று கொள்கைகளுக்கான நிலையம், கட்டாய மதமாற்றத் தடை சட்டமூலம், (மாற்று கொள்கைகளுக்கான நிலையம், ஆகஸ்ட் 2007), https://www.cpalanka.org/the-prohibition-of-forcible-conversion-of-religion-bill/

362 மேரி வருகீஸ், மத மாற்றமும் கலாசார அதிர்ச்சியும், (மத சுதந்திரத்திற்கான சர்வதேச இதழ், நவம்பர் 2024), https://ijrf.org/index.php/home/article/view/291/338#:~:text=The%20new%20movement%20was%20a>a%20whole%20(Brantley%202022); ஓபன் டோர்ஸ், இலங்கைக்கான முழுமையான அறிக்கை - ஓபன் டோர்ஸ், வேர்ல்ட் வாட்ச் ரிசேர்ச், 28-29

363 தேசிய சமாதானப் பேரவை, மத சுதந்திரம் குறித்த கணக்கெடுப்பு 2024, வெளியிடப்படாத அறிக்கை, NPC, டிசம்பர் 2024, 19,22

364 NCEASL, கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள் 2024

365 அன்டோலியா பலெர்மோ, “இலங்கையில் திருச்சபை மற்றும் மதங்களுக்கு இடையேயான உரையாடலின் சவால்,” வத்திக்கான் செய்திகள், மார்ச் 18, 2024,
https://www.vaticannews.va/en/church/news/2024-03/sri-lanka-church-and-the-challenge-of-interreligious-dialogue.html

366 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி, வவுனியாவில் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் நிலை 2023-2024, (மைனர்மேட்டர்ஸ், டிசம்பர், 2024). https://minormatters.org/report_policy_briefs/the-landscape-of-freedom-of-religion-or-belief-in-batticaloa-2023-2024/> 5-6

கூறப்படுகின்றது. இத்தகைய அறிக்கைகள் “நெறிமுறையற்ற மத மாற்றங்கள்”[367] பற்றிய கேள்வியையும் எழுப்புகின்றன. அனைத்து முக்கிய மதங்களும் சமூக சேவைப் பணிகளில்[368] ஈடுபட்டிருந்தாலும், சுவிசேஷ/சுயாதீன தேவாலயங்களின் நிதியுதவி ஏன் சந்தேகக் கண்ணோட்டத்துடன் பார்க்கப்படுகின்றது என்பதை இது விளக்குகின்றது.

ஆன்மீக சலுகைகள், உளவியல் ஆதரவு, திருமணம், பெண்களுக்கு மேம்பட்ட நிலை, சாதி மற்றும் மதக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் மற்றும் நிதி ஊக்கத் தொகைகள் ஆகியவை மதமாற்றத்திற்கான சில காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. இந்த நோக்கங்களில் பல ஆன்மீக நோக்கமற்றவை என்றாலும், நிதி ஊக்கத் தொகைக்காக மதமாற்றம் செய்வது ‘நெறிமுறைக்கு மாறானது’[369] என்று கருதப்படுகின்றது. மட்டக்களப்பில் கிறிஸ்தவ மதத்திற்கு மாறும் ஏழை மக்களுக்கு நிதி மற்றும் வளங்களை வழங்கும் கிறிஸ்தவக் குழுக்கள் காரணமாக இந்து மதகுருமார் இந்த விடயத்தை நீதிமன்றத்திற்கு[370] கொண்டுசென்றனர்.

மத மாற்றத்தில் நிதி ஊக்கத்தொகையின் பங்கு குறித்த தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட சிலர், ஏழைகளின் ‘பலவீனங்களை’ சுரண்டக்கூடாது[371] என்று கருதினர். உந்துதல்[372] எதுவாக இருந்தாலும், தனிநபரின் மதத்தைத் தேர்ந்தெடுக்கும் ‘விருப்பம்’ குறித்து ஏனையவர்கள் கவனம் செலுத்தினார்கள்.

NCEASL அவர்களின் உறுப்புரிமையில் உள்ள போதகர்கள் பின்பற்ற ஊக்குவிக்கும் ‘நடத்தை விதியில்’ ‘சமூக நடவடிக்கை, அல்லது ஏழைகளுக்கு உதவுதல்’ என்பது சுவிசேஷப் பிரசங்கத்திற்கான தூண்டில் போல[373] பயன்படுத்தப்படக்கூடாது என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. உலக சுவிசேஷக் கூட்டணி உட்பட சர்வதேச கிறிஸ்தவ வலையமைப்புகள் நடத்தைக்கான பரிந்துரைகளை வகுக்கும்போது, “...வறுமை மற்றும் தேவையின் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி சுரண்டுவதற்கு கிறிஸ்தவப் பிரச்சாரத்தில் இடமில்லை. கிறிஸ்தவர்கள் தங்கள் சேவைச் செயல்களில்[374] நிதி ஊக்கத்தொகைகள் மற்றும் வெகுமதிகள் உட்பட அனைத்து வகையான கவர்ச்சிகளையும் மறுக்க வேண்டும் மற்றும் வழங்குவதைத் தவிர்க்க வேண்டும்” என்று வலியுறுத்துகின்றது.

---

367 மோசடி, வற்புறுத்தல் அல்லது தேவையற்ற செல்வாக்கின் விளைவாக நடந்த மதமாற்றங்கள். இலங்கையில் நிதி ஊக்கத்தொகைகளின் பங்கு குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது.

368 சுமுது சாமர, “‘மத மாற்றங்களை’ நிறுத்துதல்: அரசாங்கத்தின் ஆபத்தான நம்பிக்கைக் கோட்பாடுகளுக்குப் பின்னால் என்ன இருக்கின்றது?”, தி மார்னிங், மார்ச் 14, 2024, https://www.themorning.lk/articles/PNej5DTVIhbbfZNvN0Qr

369 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி, மட்டக்களப்பில் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் நிலை 2023-2024; ஸ்ரீயானி தேவகுமார் (மனித உரிமைகள் பாதுகாவலர்) உடனான ஜோவிடா அருளானந்தத்தின் தொலைதூர நேர்காணல், நவம்பர் 20, 2024; அருட்தந்தை ரொஹான் டி சில்வாவுடன் ஜோவிடா அருளானந்தத்தின் நேர்காணல் (பணிப்பாளர், சமூகம் மற்றும் மத நிலையம்), நவம்பர் 27, 2024, கொழும்பு.

370 மட்டக்களப்பில் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் நிலை 2023-2024, 8

371 வண. கல்கந்தே தம்மானந்த தேரர் (ஸ்தாபகர்/பணிப்பாளர், வல்பொல ராகுல நிறுவகம்), ஜோவிடா அருளானந்தம் அவர்களின் நேர்காணல், நவம்பர் 26, 2024, கொழும்பு

372 கலாநிதி மகேந்திரன் திருவரங்கன் (கல்வியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) உடனான ஜோவிடா அருளானந்தத்தின் தொலைதூர நேர்காணல். நவம்பர் 21, 2024.

373 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி (ஊேநுயுளுடு), இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி - நடத்தை விதிகள், வெளியிடப்படாத ஆவணம், NCEASL. 12 நவம்பர் 2024 அன்று அனுகப்பட்டது.

374 இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலை குறித்த ஆய்வு, ஊேநுயுளுடு கவனக் குழு, டிசம்பர் 12, 2024, கொழும்பு
பங்கேற்பாளர்கள்: மகேஷ் டி மெல், மைக் கேப்ரியல் மற்றும் சலோமி டி சில்வர் உலக தேவாலயங்கள் சபை, மதங்களுக்கு இடையேயான உரையாடலுக்கான கத்தோலிக்க திருச்சபை, உலக சுவிசேஷக் கூட்டணி, “பல மதங்கள் உள்ள உலகில் கிறிஸ்தவர்களின் மத வெளிப்பாடு: நடத்தைக்கான பரிந்துரைகள்”, ஜனவரி 2011

இருப்பினும், மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரத்தில் மதத்தைப் பரப்புதல் மற்றும் அதற்கான நோக்கங்கள் தொடர்பான விடயங்கள் தனிப்பட்ட எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டது என்றும், இதனால் ஒழுங்குமுறை சவாலானதாக இருக்கும் என்றும் NCEASL சுட்டிக்காட்டியது. அதற்கு பதிலாக FoRB கல்வியறிவு மற்றும் அதன் சட்டப் பாதுகாப்புகள் குறித்து அதிக உரையாடல்கள் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் அழைப்பு விடுத்தனர். மதமாற்றக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து வலுவான கவலைகளைப் பகிர்ந்து கொள்ளும் பௌத்தத் தலைவர் வண. கலுபஹன பியரதன தேரர், இவ்வாறான பிரச்சினைகளை சட்டத்தின் மூலம் கையாளக்கூடாது என்றும் சர்வ மதக் குழுக்கள் போன்றவற்றின் மூலம் அரசாங்கம் தலையிடுவது வரவேற்கத்தக்கது[375] என்றும் குறிப்பிட்டார்.

## 3. சமூகங்களுக்கு உள்ளேயும் அவற்றுக்கு இடையேயுமான மதப் போக்குகள் மற்றும் மோதல்கள்

FoRB இன் சட்டப் பாதுகாப்புகள் குறித்த மதக் கல்வியறிவு முக்கியமானது மற்றும் பாதிக்கப்படக்கூடிய மதக் குழுக்களின் நலன்களைப் பாதுகாக்க உதவும். இருப்பினும், மதக் குழுக்கள் தங்கள் சமூகங்களிலும் பரந்த சமூகத்திலும் தங்கள் மத போதனைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

சிறுபான்மை இன மதக் குழுக்களிடையே மதப் போக்குகள் மற்றும் நடைமுறைகள் பகைமை, மதங்களுக்கு உள்ளேயும் அவற்றுக்கு இடையேயும் மோதல்கள், சகிப்பின்மை மற்றும் பெண்களைப் புறக்கணித்தல் போன்றவற்றுக்குத் தூண்டிவிட்டிருப்பதை சமீபத்திய சம்பவங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

### 3.1 கிறிஸ்தவப் பிரிவுகளின் தீவிரமான பிரச்சாரம்

“ஆக்கிரமிப்பு மதமாற்றம்” மற்றும் “நெறிமுறையற்ற மதமாற்றங்கள்” போன்ற குற்றச்சாட்டுகளுடன், சமூகத்தின் சில பிரிவுகளின் பொறுப்பற்ற பிரசங்கம் சுவிசே‘ கிறிஸ்தவ இயக்கத்தின் மீது மேலும் விமர்சனங்களை ஈர்த்துள்ளது.

“அவர்களின் நம்பிக்கையைப் புரிந்துகொள்ள மற்றவர்களை அழைப்பது, மற்றவர்களின் உரிமைகள் மற்றும் மத உணர்வுகளை மீறுவதன் மூலம் செயல்படுத்தப்படக்கூடாது” என்று சுவிசேஷ திருச்சபைகளுக்கான சர்வதேச வழிகாட்டுதல் கூறுகின்றது. மத சுதந்திரம் என்பது “நம்பிக்கைகளை மதிக்கும் சமமான பேரம் பேச முடியாத பொறுப்பை” விதிக்கின்றது என்றும், அவற்றை ஒருபோதும் இழிவுபடுத்தவோ, கொச்சைப்படுத்தவோ அல்லது தவறாக சித்தரிக்கவோ கூடாது[376] என்றும் அது மேலும் குறிப்பிடுகின்றது. விழிப்புணர்வை ஏற்படுத்துவதும்

375 இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலை பற்றிய ஆய்வு, NCEASL கவனக் குழு; வண. கலுபஹன பியரதன தேரர், (சிறந்த இலங்கைக்கான சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர்), ஜோவிடா அருளானந்தம் அவர்களின் நேர்காணல். அக்டோபர் 25, 2024, கொழும்பு

376 “பல மதங்கள் உள்ள உலகில் கிறிஸ்தவர்களின் மத வெளிப்பாடு: நடத்தைக்கான பரிந்துரைகள்”, ஜனவரி 2011

திருச்சபையுடன் இணைந்து பணியாற்றுவதும் பன்முகச் சமூகத்தில் கிறிஸ்தவத்தைப் பின்பற்றுவதில் முதிர்ச்சி உணர்வைத் தூண்டியுள்ளது என்று NCEASL உணர்கின்றது. ஒலி மாசுபாடு தொடர்பான சம்பவங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியை அவர்கள் சுட்டிக்காட்டுவதுடன், தேவாலயங்கள் உணர்திறனை வெளிப்படுத்தும் வகையில் செயல்படத் தொடங்கியுள்ள போதும் சிறந்த நடைமுறைகளைப்[377] பின்பற்றாத சில தேவாலயங்கள் இருக்கலாம் என்பதையும் ஒப்புக்கொண்டது.

சுவிசேஷப் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ பிற மதங்களை அவமதிக்கும் பழக்கவழக்கங்கள் மற்றும் சொல்லாட்சிக்காக தேசிய அளவில் கவனத்தை ஈர்த்தார் (அத்தியாயம் 2, பிரிவு 3 ஐப் பார்க்கவும்). அவரது பேச்சு சர்வதேச சட்டத்தால் பாதுகாக்கப்படலாம் என்றாலும், அது கிறிஸ்தவப் பிரிவைச் சேர்ந்தவர்கள் உட்பட பலராலும் முட்டாள்தனமானது என்றும் தீங்கு விளைவிப்பதாகவும் கருதப்படுகின்றது.

மே 2023 இல் நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து (அத்தியாயம் 2, பிரிவு 3 ஐப் பார்க்கவும்), டிசம்பர் 2024 இல், போதகர் பெர்னாண்டோ ஒரு ஆராதனையை வழிநடத்தினார். போதகர் பெர்னாண்டோவின் ஊடக ஆதாரங்களின்படி அங்கு புத்த பிக்குவாக உடையணிந்த நபர் ஒருவர் அவரிடம் ஆசியைப் பெற்ற பிறகு நோயிலிருந்து குணமடைந்தார். அந்த நபர் உண்மையில் புத்த பிக்கு அல்ல என்பது பரவலாகக் கருதப்பட்டது. இந்தச் சம்பவம் சமூக ஊடகங்களில் பரவியதுடன், பீடாதிபதிகள் உட்பட பௌத்த சமூகங்களை எரிச்சலடையச் செய்தது (அத்தியாயம் 4, பிரிவு 1.3 ஐப் பார்க்கவும்).[378]

மதக் குழுக்களிடையே வெறுப்புணர்வையும் பகைமையையும் ஏற்படுத்தினாலும், இதுபோன்ற செயல்கள் ஏற்கனவே குறிவைக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவப் பிரிவின் செல்வாக்கற்ற தன்மையை அதிகரிக்கும் அபாயம் உள்ளது. நவம்பர் மாதம் கண்டி (மத்திய) நாவலப்பிட்டியில் உள்ள ஒரு தேவாலயத்திற்கு பெர்னாண்டோ வந்தபோது, மறுவாழ்வு நிலையம்[379] கட்டும் சாக்கில் அவர் ஒரு வழிபாட்டுத் தலத்தைக் கட்டி வருவதாகக் குற்றம் சாட்டிய கிராமவாசிகள் அவரை எதிர்த்தனர்.

கிறிஸ்தவர்கள் இல்லாத பகுதிகளிலும், கடுமையான எதிர்ப்பு நிலவும் பகுதிகளிலும் பிரார்த்தனை நிலையங்கள் அல்லது தேவாலயங்களை அமைக்கும் சில சுவிசேஷ தேவாலயங்களின் நடைமுறை[380] மற்றொரு கவலையாக உள்ளது. தேவாலயங்கள் தங்கள் செயல்களில் "உடனடி கலாசார மற்றும் மனித சூழலை" கருத்தில் கொள்ள வேண்டும் என NCEASL இன் வழிகாட்டுதல் எச்சரித்துள்ளது.[381] இந்தப் போக்கின் வெளிப்பாடாக, அக்டோபரில், கம்பஹா (மேற்கு) சீதுவையில் ஒரு கிராமத்தில் கிறிஸ்தவ பிரார்த்தனை நிலையத்தை நிறுவும் திட்டங்களுக்கு கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். கிராம மக்களும் அங்கு வசிக்கும்

377 இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலை குறித்த ஆய்வு, NCEASL கவனக் குழு

378 போதகர் ஜெரோம் ஒரு புத்த பிக்குவை ஆசீர்வதிக்கின்றார் (சக்ரா டிவி, 2024), https://www.youtube.com/watch?v=7BxQTxnSHSU; சஹான் தென்னகோன், "மதங்களைத் திரிபுடுத்துதல்: அரசாங்கம் சட்டங்களைத் திருத்த முயல்கின்றது," தி மார்னிங், டிசம்பர் 27, 2024, https://www.themorning.lk/articles/VJZXpXsjgLVZ8W7euvW1

379 NCEASL, கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள் 2024

380 வண. கல்கந்தே தம்மானந்த தேரர். நேர்காணல்

381 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி (NCEASL), இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி - நடத்தை விதிகள்

புத்த பிக்குவும், பிரார்த்தனை நிலையம் வேறு இடத்தில் கட்டப்படுவதை எதிர்க்கவில்லை என்றாலும், கிராமத்தின் புத்த விகாரைக்கு மிக அருகில் இது அமைக்கப்பட்டால் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது என்று தெரிவித்தனர். தற்போதைய நிலவரப்படி, போதகர் காவல்துறையின் அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படிந்து, அந்த இடத்தில் நிர்மாணத்தையோ சேவைகளைத் தொடர்வதையோ தவிர்ப்பதாகக் கூறப்படுகின்றது.[382]

வடக்கில் சில கிறிஸ்தவக் குழுக்களிடையே கலாசார விழிப்புணர்வு மற்றும் உணர்திறன் இல்லாமை தமிழர்களுக்கு இடையேயான உறவுகளைப் பாதித்து வருவதாக கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. தமிழ் உறவுகள் மற்றும் மதப் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட சமீபத்திய ஆவணப்படத்தில், பிரதான கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க மதகுருமார்கள் இப்பகுதியில் 'கிறிஸ்தவ அடிப்படைவாதம்' இருப்பதைப் பற்றி விவாதித்தனர். கிறிஸ்தவ அடிப்படைவாதிகள் அப்பகுதியில் வசிக்கும் இந்து குழுக்களை மதம் மாற்ற முயற்சிப்பதால், தமிழர்களின் ஒற்றுமை[383] பாதிக்கப்படுவதாகவும், கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டனர். புதிதாக மதம் மாறிய கிறிஸ்தவர்கள் தங்கள் 'வெறித்தனமான வைராக்கியத்தாலும், தீவிரத்தாலும்'[384] இந்துக்களை விரோதப்படுத்துவதாகவும் அவதானிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. கட்டுப்பாடு இல்லாமல் இதுபோன்ற நடைமுறைகள் மேலும் மோதல்களுக்கும் ஆட்சிப் பிரச்சினைகளுக்கும்[385] வழிவகுக்கும் என்று தரஷகா குருக்கள் நேர்காணல் ஒன்றில் எச்சரித்தார்.

## 3.2 இந்துத்துவா செல்வாக்கு

பிற சமூகங்களில் வளர்ந்து வரும் மதப் போக்குகளும் பிளவுகளுக்கும் மதங்களுக்கு இடையேயான மோதல்களுக்கும் பங்களித்துள்ளன. விவாதிக்கப்பட்டபடி, கிறிஸ்தவ எதிர்ப்பு மற்றும் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வை ஊக்குவிக்கும் இந்து தேசியவாத அமைப்புகளுடன் தொடர்புடைய செயல்பாடு அதிகரித்துள்ளது (அத்தியாயம் 2, பிரிவு 5 ஐப் பார்க்கவும்) அதே நேரத்தில் அது இந்து சமூகத்திற்குள் பிளவுகளுக்கும் ஊக்குவித்துள்ளது.

இலங்கையில் பல நூற்றாண்டுகளாக தமிழ் இந்துக்களால் பின்பற்றப்பட்டு வரும் இந்து மதத்தின் ஒரு பிரிவான சைவ மதத்திற்கு இந்துத்துவாவின் செல்வாக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக கவலை எழுந்துள்ளது. மட்டக்களப்பில் ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்கம் (ஆர்எஸ்எஸ்), சிவசேனா மற்றும் இந்தியாவில் விஸ்வ இந்து பரஷத் போன்ற இந்துத்துவா குழுக்களுடன் இணைந்த குழுக்கள், பாரம்பரிய வழிபாட்டு நடைமுறைகளை[386] குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

382 NCEASL, கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள் 2024

383 முள்ளிவாய்க்காலின் 15 ஆண்டுகள் - மதப் பிரச்சினைகள் குறித்த பிரதிபலிப்புகள் (அடையாளம் கொள்கை ஆராய்ச்சி நிலையம், 2024), https://www.youtube.com/watch?v=n6qogLSRVxw.

384 D.B.S. ஜெயராஜ், "ஒரு 'இந்து' ஜனாதிபதி வேட்பாளரும் 'இந்து தமிழ் ஈழம்' கருத்தும்", பைனான்சியல் டைம்ஸ், ஏப்ரல் 10, 2024. https://www.ft.lk/columns/A-Hindu-presidential-candidate-and-the-Hindu-Tamil-Eelam-concept/4-760530

385 தர்ஷகா குருக்கள் (செயலாளர், இந்து குருக்கள் சபை) உடனான ஜோவிடா அருளானந்தத்தின் தொலைதூர நேர்காணல், மார்ச் 1, 2025.

386 மட்டக்களப்பில் மத சுதந்திரம் அல்லது நம்பிக்கையின் நிலை 2023-2024, 3-14; மைனர்மேட்டர்ஸ், மைனர்மேட்டர்ஸ், இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலை குறித்த ஒரு மதிப்பாய்வு, (மைனர்மேட்டர்ஸ், செப்டம்பர், 2022), https://minormatters.org/wp-content/uploads/2024/08/A-Review-of-the-State-of-Religious-Freedom-in-Sri-Lanka-English.pdf, 36 ரூ 37; ஸ்ரீயானி தேவகுமார், நேர்காணல்

சிவில் சமூகத்தினரும் மத குருமார்களும் தங்கள் செல்வாக்கு குடும்பங்களுக்குள் பிளவுகளை ஊக்குவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பாக கோயில் நடவடிக்கைகளில் ஈடுபடும் இளைஞர்கள் போதனைகளால் ஈர்க்கப்படுவதாக புரிந்து கொள்ளமுடிகின்றது.[387] அக்டோபரில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு தனிப்பட்ட கூட்டத்தில் சுமார் 70 இந்து இளைஞர்களுடன் சிவசேனை அமைப்பினர் உரையாடினார். அங்கு அவர்கள் ஏனைய 'வெளிநாட்டு' மதங்களை எதிர்ப்பதில் அமைப்பின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு வலியுறுத்தினர். குறிப்பாக 'இந்து சமூகத்திற்கு[388] எதிரான கிறிஸ்தவ திருச்சபையின் தாக்குதலை' வலியுறுத்தினர்.

## 3.3 முஸ்லிம் சமூகத்திற்குள் தீவிர பழமைவாதம்

முஸ்லிம் சமூகத்தின் சில பிரிவுகளின் போதனைகள் மற்றும் குர்ஆனின் விளக்கங்கள் சகிப்பின்மையை வளர்ப்பதுடன் தீங்கு விளைவிக்கும் பாரம்பரிய மரபுகளின் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகப் புரிந்து கொள்ளப்படுகின்றது.

வஹாபிசம்[389] போன்ற இயக்கங்கள் பெரும்பாலும் அடிப்படைவாதம், கடினத்தன்மை மற்றும் அதன் கொள்கைகளிலிருந்து விலகுவதாகக்[390] கருதப்படும் தனிநபர்களை சமூக ரீதியாக ஒதுக்கி வைப்பதுடன் தொடர்புடையவை. 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பிறகு இந்த இயக்கம் மீதான ஆர்வமும் அதிகரித்தது. தாக்குதல்களுடன் தொடர்புடைய தேசிய தவ்ஹீத் ஜமாத் (NTJ) அமைப்பு[391] இதனுடன் தொடர்புடையதாக இருந்ததே இதற்குக் காரணமாக அமைந்தது.

எனினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து வந்த அரச பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் இஸ்லாமிய சமூகத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு ஆகியவை வஹாபிசத்தின் தெரிவுநிலை மற்றும் செல்வாக்கைக் குறைத்ததாகப் புரிந்து கொள்ளமுடிகின்றது. வஹாபிசத்தை ஊக்குவிப்பதில் இருந்து பின்வாங்கி, பெண்கள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தி சவுதி அரேபியா நவீனத்துவத்தை ஏற்றுக்கொண்டது போன்ற முன்னேற்றங்களும் இதில் பங்களித்துள்ளதாக[392] புரிந்து கொள்ளமுடிகின்றது.

இருப்பினும், முஸ்லிம் சமூகத்திற்குள் தீவிர பழமைவாதம் வஹாபிசத்தை ஊக்குவிக்கும்

387 முள்ளிவாய்க்கால் 15 வருடங்கள் - மதப் பிரச்சினைகள் பற்றிய பிரதிபலிப்புகள் மனித உரிமைகள் வழக்கறிஞர் மற்றும் ஆர்வலர் உடனான ஜோவிடா அருளானந்தத்தின் தொலைதூர நேர்காணல், அக்டோபர் 14, 2024; தர்ஷகா குருக்கள், நேர்காணல்.

388 NCEASL, கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் மிரட்டல் சம்பவங்கள் 2024

389 வஹாபிசம் என்பது சவுதி அரேபியாவிலிருந்து தோன்றிய கடுமையான சுன்னி இஸ்லாம் பிரிவு ஆகும். பெரும்பான்மையான இலங்கையர்களால் சுன்னி இஸ்லாம் பின்பற்றப்படுகின்றது. வஹாபிகள் குர்ஆனின் நேரடி விளக்கத்தை கடைப்பிடிப்பதாகவும், வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் ஷரியா சட்டத்தைப் பின்பற்றுவதாகவும் கூறப்படுகின்றது. இந்தத் தீவிரம் பெரும்பாலும் ஏனைய பிரிவுகள் மீது சகிப்பின்மையை வளர்ப்பதாகவும், இதனைப் பின்பற்றுபவர்கள் சிலர் தீவிரவாதத்திற்குப் பங்களிப்பதாகவும் கருதப்படுகின்றது.

390 ஷ்ரீன் சரூர், பெண்களின் உடல்கள் மீது போர் தொடுத்தல், (மைனர்மேட்டர்ஸ். ஜூலை, 2023), https://www.minormatters.org/storage/app/uploads/public/659/e16/ef8/659e16ef8d8946553837521.pdf, ஷ்ரீன் சரூர் (இணை ஸ்தாபகர், பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு) உடனான ஜோவிடா அருளானந்தத்தின் தொலைதூர நேர்காணல், அக்டோபர் 15, 2024.

391 அலெக்ஸாண்ட்ரா உல்மர் மற்றும் ஒமர் ராஜரத்தினம், "வஹாபிசம் எதிர்கொள்ளப்பட்டது: குண்டுவெடிப்புகளுக்குப் பிறகு சவுதியின் செல்வாக்கை இலங்கை கட்டுப்படுத்துகின்றது", ராய்ட்டர்ஸ், ஜூலை 5, 2019, https://www.reuters.com/article/world/wahhabism-confronted-sri-lanka-curbs-saudi-influence-after-bombings-idUSKCN1U00LT/

392 முகமது ஃபஸ்லான் (அடையாள அரசியல் மற்றும் தீவிரமயமாக்கலை மையமாகக் கொண்ட கல்வியாளர்) உடனான ஜோவிடா அருளானந்தத்தின் தொலைதூர நேர்காணல், நவம்பர் 24, 2024; மனித உரிமைகள் கண்காணிப்பகம், "சவுதி அரேபியா: சவுதி பெண்களுக்கான முக்கிய முன்னேற்றங்கள்", ஆகஸ்ட் 2, 2019 https://www.hrw.org/news/2019/08/02/saudi-arabia-important-advances-saudi-women

பிரிவுகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. வஹாபிசத்தின் செல்வாக்கு குறைந்து வருவது வெளிப்படையாகத் தெரிந்தாலும், முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் (MMDA) மற்றும் மதரசா கல்வியை சீர்திருத்துவதற்கும், சில கிராமப்புற சமூகங்களிடையே தொடர்ந்து நடைமுறையில் உள்ள பெண் பிறப்புறுப்பு சிதைப்பு[393] நடைமுறையை ஒழிப்பதற்கும் சமூகத்தின் சில பிரிவுகளிடமிருந்து தொடர்ந்து எதிர்ப்பு கிளம்புவது இதற்கு ஒரு உதாரணம் ஆகும்.[394]

பல தசாப்தங்களாக முஸ்லிம் சமூகத்தின் சில பிரிவுகளும், ஆர்வலர்களும் MMDA இன்[395] விளைவாக முஸ்லிம் பெண்கள், சிறுமிகள் மற்றும் குடும்பங்கள் அனுபவிக்கும் பாகுபாடு மற்றும் தீங்கு குறித்து கவலைகளை எழுப்பியுள்ளன. 1956 முதல் பல அரச குழுக்களால் முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் பெரும்பாலும் சமூகத்திற்குள் இருந்து வந்த எதிர்ப்பின் விளைவாகவே நிறுத்தி வைக்கப்பட்டன. மே 2023 இல் MMDA திருத்தத்திற்கான வரைபு சட்டமூலத்தின் அதிகாரப்பூர்வமற்ற பதிப்பு பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டது. சில விடயங்களில் எதிர்ப்புகள் இருந்தபோதிலும், இந்தச் சட்டமூலம் பொதுவாக முன்னேற்றத்தைச் செயல்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாகக் கருதப்பட்டது. இருப்பினும், ஜூன் 2023 இல், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த சட்டமூலத்தை நிராகரித்து புதிய பரிந்துரைகளை முன்வைத்தனர். இந்தப் பரிந்துரைகள் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சாசனம் (CEDAW)[396] உட்பட இலங்கையின் உள்ளூர் மற்றும் சர்வதேச கடமைப்பாடுகளை மீறுவதாக ஐ. நா நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இஸ்லாமிய இறையியல் தலைமையான அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா (ACJU) MMDA[397] சீர்திருத்தத்தில் முன்னேற்றத்தைத் தடுப்பதில் பங்களித்ததாகக் கருதப்பட்டாலும், ஆண்கள் மற்றும் பெண்கள் உட்பட முஸ்லிம் சமூகத்தின் சில பிரிவினரிடையே காணப்படும் சந்தேகமும் பங்களித்துள்ளது. சீர்திருத்தத்தை எதிர்த்த பெண்களில், பலருக்கு இந்த மாற்றங்கள் என்னவென்று தெரியாது. புரிதல் குறைவாகவே உள்ளது. மேலும் அது தங்கள் மீது திணிக்கப்பட்டதாக உணர்கின்றார்கள்[398] என்பது புரிந்து கொள்ளப்படுகின்றது.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கை முஸ்லிம்களின் ஒரு பகுதியினர் சீர்திருத்தத்தை எதிர்ப்பதற்கு இலங்கையில் உள்ள சமூகங்களிடம் செல்வாக்கு செலுத்துவதாகவும் கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. இலங்கைக்கு வெளியே இருந்துவரும் சீர்திருத்தத்திற்கு எதிரான பிரச்சாரங்கள், MMDA சீர்திருத்தத்திற்கு எதிரான செய்திகளைப் பரப்பி அதனுடன் சம்பந்தப்பட்ட

393 உலக சுகாதார அமைப்பு, பெண் பிறப்புறுப்பு சிதைப்பு: முக்கிய தகவல்கள், (உலக சுகாதார அமைப்பு. பிப்ரவரி, 2024), https://www.who.int/news-room/fact-sheets/detail/female-genital-mutilation (இலங்கை முஸ்லிம் சமூகங்களில் பெண் பிறப்புறுப்பு விருத்தசேதனம்/வெட்டு என்றும் குறிப்பிடப்படுகின்றது)

394 ஷரீன் சரூர், பெண்களின் உடல்கள் மீது போர் தொடுத்தல், 2; முகமது ஃபஸ்லான், நேர்காணல் நபீலா இக்பால் (ஸ்தாபகர் / இணை பணிப்பாளர், சகோதரத்துவ முன்முயற்சி) உடனான ஜோவிடா அருளானந்தத்தின் தொலைதூர நேர்காணல், நவம்பர் 25, 2024.

395 முஸ்லிம் தனிநபர் சட்ட சீர்திருத்த நடவடிக்கைக் குழு (MPLRAG), "அறிக்கை: MMDA சீர்திருத்தங்கள் நிகழ்ச்சி நிரலில் இல்லை என்ற அமைச்சர் விஜித ஹேரத்தின் கருத்துகள் மாற்றத்திற்கான நீண்டகால கோரிக்கைகளை அங்கீகரிக்கத் தவறிவிட்டன", 7 நவம்பர் 2024, https://www.mmdasrilanka.org/statement-minister-vijitha-heraths-comments-that-mmda-reforms-are-not-on-the-agenda-fails-to-recognize-long-standing-demands-for-change/

396 சர்வதேச மத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணைக்குழு, இலங்கையில் மத சிறுபான்மையினருக்கான இடம் சுருங்குகின்றது, (வாஷிங்டன், டிசி, 2024), https://www.uscirf.gov/sites/default/files/2024-06/2024%20Sri%20Lanka%20Country%20Update.pdf> 4

397 ஷ்ரீன் சரூர், நேர்காணல்; நபீலா இக்பால், நேர்காணல்; முகமது ஃபஸ்லான், நேர்காணல்

398 நபீலா இக்பால், நேர்காணல்

அமைப்புகள் மற்றும் ஆர்வலர்களை[399] தனிமைப்படுத்தி குறிவைத்து வருகின்றன. "இந்தக் கட்டத்தில் MMDAயைத் திருத்துவதற்கான எந்த முடிவும் அல்லது தேவையும் இல்லை" என்று வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் நவம்பரில் கூறியது சீர்திருத்திற்கு ஆதரவானவர்களை ஏமாற்றமடையச் செய்தாலும், பெண் பிரதமரை உள்ளடக்கிய புதிய அரசாங்கம் சீர்திருத்தத்திற்கான சிறந்த சூழலை ஆதரிக்கும்[400] என்ற நம்பிக்கை காணப்படுகின்றது.

## 4. வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளாமை

சில குழுக்கள் மற்றும் பிரிவுகளிடம் அவதானிக்கப்படும் போக்குகள் மற்றும் மத நடைமுறைகளுடன், முக்கிய மத நிறுவனங்களும் ஒருதலைப்பட்சமான கருத்துக்களைக் கொண்டுள்ளன. பல மத நிறுவனங்கள் தங்கள் மத நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மீது சகிப்புத்தன்மையைக் காட்டாமல் அவர்கள் மீது தங்கள் நம்பிக்கைகளைத் திணிப்பதில் குற்றவாளிகளாக உள்ளன. LGBTIQ+ நபர்களைப் பாதிக்கும் பழமையான சட்டங்களைச் சீர்திருத்த எடுக்கப்படும் முயற்சிகளை எதிர்ப்பதில் மத குருமார்களின் பங்கு இதை வெளிப்படுத்துகின்றது.

ஜூலை மாதம் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் உட்பட மத குருமார்களில் ஒரு பகுதியினர், பாலின சமத்துவ சட்டமூலம், பெண்களை வலுவூட்டல் சட்டமூலம் மற்றும் ஓரினச்சேர்க்கையை குற்றமற்றதாக்க தண்டனைச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தம் உள்ளிட்ட முன்மொழியப்பட்ட சட்டமூலங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். "சீரழிந்த மற்றும் ஒழுக்கக்கேடான LGBTQ சட்டங்கள், நாகரீகச் சமூகத்தை அழிக்கும்" என்ற தலைப்பில் இடம்பெற்ற கூட்டு செய்தியாளர் சந்திப்பில், ஓரினச்சேர்க்கையை குற்றமற்றதாக்குவது "இலங்கை நாகரிகத்தையும் சமூகத்தையும் அழித்துவிடும்" என்றும் பாரம்பரியமான குடும்ப அமைப்பே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே கட்டமைப்பு என்றும் அவர்கள் அங்கீகரித்தனர்.[401] இந்தப் பின்னணியில், பெண்களை வலுவூட்டல் சட்டமூலத்திற்கு எதிரான தீர்ப்பை வழங்கும்போது நீதிமன்றத்தால் மத சுதந்திரமும் கணிசமாகக் கருத்தில் கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது (அத்தியாயம் 1, பிரிவு 5 ஐப் பார்க்கவும்).

சட்டத்தில் முன்னெடுக்கப்படும் சீர்திருத்தங்கள் பாரம்பரிய குடும்பக் கட்டமைப்புகளில்[402] தாக்கத்தை ஏற்படுத்தும் என தங்களைப் பின்பற்றுபவர்கள் வெளிப்படுத்தும் கவலைகளை மதத் தலைவர்கள் வெளிப்படுத்துவதாக நேர்காணலில் கலந்துகொண்ட சிவில் சமூகத்தினரும் மதத் தலைவர்களும் குறிப்பிட்டனர். ஆனால் கத்தோலிக்க திருச்சபையின் தலைமையகம் போன்ற

399 மேற்சொன்னபடி

400 அஜித் சிறிவர்தன, "முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் மாற்றப்படாது: அமைச்சர்", டெய்லி மிரர், நவம்பர் 6, 2024. https://www.dailymirror.lk/breaking-news/Muslim-Marriage-and-Divorce-Act-will-not-be-changed-Minister/108-295360; பேராசிரியர் ஃபர்சானா ஹனிஃபா (ஆணையாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு) உடனான ஜோவிடா அருளானந்தத்தின் நேர்காணல், டிசம்பர் 5, 2024

401 யோஹான் பெரேரா, "மூன்று சட்டமூலங்களைத் திரும்பப் பெற மதத் தலைவர்கள் அழைப்பு விடுக்கின்றனர்", டெய்லி மிரர், ஜூலை 26, 2024, https://www.dailymirror.lk/print/front-page/Religious-leaders-call-for-withdrawal-of-three-Bills/238-288110;
"இலங்கையில் ஓரினச்சேர்க்கையை ஊக்குவிக்கும் சட்டமூலங்களை மதத் தலைவர்கள் எதிர்க்கின்றனர்", UCANews, ஜூலை 26, 2024, https://www.ucanews.com/news/faith-leaders-oppose-bills-promoting-homosexuality-in-sri-lanka/105856a

402 அருட்தந்தை ரொஹான் டி சில்வா, நேர்காணல் இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலை குறித்த ஆய்வு, NCEASL கவனக் குழு.

மத அமைப்புகள் மிகவும் வெளிப்படையான மற்றும் ஏற்றுக்கொள்ளும் அணுகுமுறையை எடுத்துள்ளன. 2023 ஆம் ஆண்டு ஒரு நேர்காணலில், ஒரே பாலின உறவுகளை[403] குற்றமாக்கும் சட்டங்களை முடிவுக்குக் கொண்டுவர திருச்சபை இன்னும் அதிக முயற்சிசெய்ய வேண்டும் என்று போப்பாண்டவர் பிரான்சிஸ் அழைப்பு விடுத்தார்.

கடந்த ஆண்டு பாலியல் நோக்குநிலை மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் வன்முறை மற்றும் பாகுபாட்டிற்கு எதிரான பாதுகாப்பு குறித்த ஐ. நாவின் சுயாதீன நிபுணர், மத நம்பிக்கைகள் பெரும்பாலும் LGBTQ தனிநபர்களின் உரிமைகளுக்கு எதிராக நிலைநிறுத்தப்படுகின்றன. இது உள்ளார்ந்த மோதல் பற்றிய கருத்தை உருவாக்குகின்றது என்று கூறினார். "வன்முறை மற்றும் பாரபட்சமான நிலைப்பாடுகள் மத அல்லது பிற நம்பிக்கைகளின் சர்வதேச சட்டப் பாதுகாப்புகளுக்கு அப்பாற்பட்டவை" என்ற அவரது கருத்துக்கள் இந்த ஆய்வுக்காக நடத்தப்பட்ட பல நேர்காணல்களில் எதிரொலித்தன.[404]

## 5. தங்களைத் தாங்களே மத ஆசிரியர்கள் மற்றும் போதகர்கள் என்று அழைப்பவர்கள்

அதிக சகிப்புத்தன்மை தேவை என்ற கலந்துரையாடல்களுடன், மதங்களை குறிப்பாக பௌத்தத்தை 'திரிபுபடுத்தும்' புதிய மத ஆசிரியர்கள் மற்றும் போதகர்களின் தோற்றம் குறித்த கவலைகளும் அதிகரித்துள்ளன (அத்தியாயம் 1, பிரிவு 3.4 ஐப் பார்க்கவும்). அதிக கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறை தேவை என சிலர் குறிப்பிட்டாலும், ஏனையவர்கள் சகிப்புத்தன்மையும் கூடுதல் கலந்துரையாடலும் வேண்டும் என்று வாதிடுகின்றனர்.

இந்த ஆண்டில் பௌத்தக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பௌத்தத்தை திரிபுபடுத்தி, பிரச்சாரம் செய்த மத போதகர்களின் குறைந்தது இரண்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கவலையளிக்கும் விதமாக, ஜனவரி மாதம் நடந்த கூட்டு தற்கொலையுடன் போதகர் ஒருவர் தொடர்புடையவர். ஜூலை மாதம் "தேசிய மரபுரிமையைப் பாதுகாப்பதற்காகச் செயல்படும் பாராளுமன்றக் குழு", "இலங்கை வரலாற்றையும் பௌத்தக் கோட்பாட்டையும் சிதைக்கும்" 12 நிலையங்கள் இருப்பதாகவும், 85 நபர்கள் "பௌத்த தர்மத்தைத் திரிபுபடுத்துகிறார்கள்" என்றும், அவர்கள் நாட்டில் செயல்படும் "போலி துறவிகள்"[405] என்றும் குற்றஞ்சாட்டியது.

சமீபத்திய நிகழ்வுகள் ஊடக கவனத்தை ஈர்க்கத் தொடங்குவதற்கு முன்பே, மாற்று மதப் போதகர்களின் செயல்பாடு குறித்து பௌத்தத் தலைமையின் பரிசீலனையில் நீண்ட காலம்

403 அருட்தந்தை ரொஹான் டி சில்வா, நேர்காணல் எலிசபெட்டா பவோலெடோ, "ஓரினச்சேர்க்கை ஒரு குற்றமல்ல என்று போப் பிரான்சிஸ் கூறுகின்றார்", நியூயார்க் டைம்ஸ், ஜனவரி 25, 2023, https://www.nytimes.com/2023/01/25/world/europe/pope-francis-homosexuality.html

404 விக்டர் மாட்ரிகல்-போர்லோஸ், மத சுதந்திரம் அல்லது நம்பிக்கையும் LGBTQ நபர்களுக்கான சமத்துவத்துவமும் ஒன்றாகப் பொருந்தலாம், (சிறப்பு நடைமுறைகள்: ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள், உயர்ஸ்தானிகர் அலுவலகம், 5 பிப்ரவரி 2024); https://www.ohchr.org/en/press-releases/2023/06/freedom-religion-or-belief-not-incompatible-equality-lgbt-persons-un-expert; பேராசிரியர் ஃபர்சானா ஹனிஃபா, நேர்காணல் அருட்தந்தை ரொஹான் டி சில்வா, நேர்காணல் இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலை குறித்த ஆய்வு, NCEASL கவனக் குழு

405 மெத்மாலி திசாநாயக்க, "மத வழிபாட்டால் தூண்டப்பட்ட வெகுஜன தற்கொலை, தேசத்தை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றது", சிலோன் ருடே, 6 ஜனவரி 2024, https://ceylontoday.lk/2024/01/06/mass-suicide-incited-by-religious-cult-shocks-the-nation/; "இலங்கை வரலாற்றையும் பௌத்தக் கோட்பாட்டையும் சிதைக்கும் 12 நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன - பாராளுமன்றக் குழு." டெய்லி மிரர், 27 ஜூலை, 2024, https://www.dailymirror.lk/print/front-page/12-centres-distorting-Sri-Lankan-history-and-Buddhist-doctrine-identified-Parliamentary-Caucus/238-288108

இருந்ததாகத் தெரிகின்றது. இந்தக் கரிசனைகளை நிவர்த்தி செய்யும் திறன் கொண்ட சில சட்டமூலங்களை முன்வைப்பது குறித்து அரசாங்கத்துடன் விவாதங்களும் பங்கேற்பும் இடம்பெற்றதாகத் தெரிகின்றது (அத்தியாயம் 1, பிரிவு 3.4 ஐப் பார்க்கவும்).[406] எனினும், சமீபத்திய சம்பவங்களைக் கருத்தில் கொண்டு, இலங்கையின் மூன்று பௌத்தப் பிரிவுகளின் மகாநாயக்க தேரர்கள் அப்போதைய ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் "பௌத்தத்தைப் பற்றிய தவறான சித்தாந்தங்களைப் பரப்பி, அதன் தத்துவம் மற்றும் கலாசார விழுமியங்களுக்கு[407] தீங்கு விளைவிக்கும்" ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களுக்கு எதிராக சட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தினர்.

இதேபோன்று, ஏனைய மதக் குழுக்களை அவமதிப்பதாகக் கருதப்படும் பேச்சு மற்றும் வெளிப்பாட்டைத் தவிர்த்து போதகர் பெர்னாண்டோ போன்றவர்களின் செயல்பாடு குறித்து கத்தோலிக்க திருச்சபை கவலை எழுப்பியுள்ளது. (பிரிவு 3.1 ஐப் பார்க்கவும்). போதகரைச் சார்ந்த பிற சம்பவங்கள் பரந்த கத்தோலிக்க - கிறிஸ்தவ சமூகத்திற்குள் சில குழப்பங்களையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளன. நவம்பர் மாதம் அமெரிக்காவின் உலகளாவிய அப்போஸ்தலிக்க மறைமாவட்டங்களின் ஆயர் பேரவை பெர்னாண்டோவை 'பேராயராக' நியமித்தது. போதகர் கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் அல்ல என்பதை கத்தோலிக்க திருச்சபை தெளிவுபடுத்தியதுடன் "கத்தோலிக்க விசுவாசிகளை ஏமாற்ற வேண்டாம்"[408] என்று வலியுறுத்தியது.

புத்த சாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்களுக்காகப் புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர் ஊடகங்களைச் சந்தித்தபோது, சம்பந்தப்பட்ட மதத் தலைமைகளுடன் இணைந்து பணியாற்ற உறுதிபூண்டதுடன் புத்த விகாரைகள் மற்றும் அவற்றின் சொத்துக்களை நிர்வகிக்கும் விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பான சட்டத்தைத் திருத்துவதற்கான திட்டங்களையும் சுட்டிக்காட்டினார். திரிபு என்ற விடயத்தில், திருச்சபைத் தலைமையும் இதே போன்ற கவலைகளை எழுப்பியுள்ளதுடன் போதகர் பெர்னாண்டோ குறித்து ஆராய்வதாகக் கூறினார். ஆனால் முந்தைய அமைச்சர் பரிந்துரைத்த புதிய சட்டங்களுக்கு[409] அவர் உடன்படவில்லை.

ஏனைய மதத் தலைவர்கள் குறிப்பாக வெறுப்பைப் பரப்புவர்கள் அல்லது பின்பற்றுவர்கள் தங்களைத் தாங்களே காயப்படுத்திக் கொள்ளத் தூண்டியவர்கள் குறித்து கவலைகள் இருப்பதாக ஒப்புக்கொள்கின்றார்கள். ஆனால் இந்த விடயத்தில் அவர்களுக்கு மாறுபாடான கருத்துகள் உள்ளன. மனிதநேயக் கல்வி பேராசிரியரான வண. இந்துரகரே தம்மரத்ன தேரர், புத்த மதம் சாதாரண மக்கள் தம்மத்தைப் பிரசங்கிப்பதைத் தடை செய்யவில்லை என்றும்,

406 புவனக. எஸ். பெரேரா, "இலங்கையில் பௌத்தத்தின் 'திரிபுகள்' தொடர்பான ஆய்வுகள்", சிலோன் ருடே, 13 ஜனவரி 2024, https://ceylontoday.lk/2024/01/13/critical-examination-of-distortions-of-buddhism-in-sl/

407 பௌத்த போதனைகளைத் திரிபுபடுத்துதல்: மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்கள், நியூஸ்வயர், 15 ஜனவரி 2024, https://www.newswire.lk/2024/01/15/distortion-of-buddhist-teachings-mahanayaka-theros-write-to-president/

408 "ஜெரோம் பெர்னாண்டோ கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் அல்ல, நியூஸ்வயர், 11 டிசம்பர் 2024, https://www.newswire.lk/2024/12/11/pastor-jerome-not-a-bishop-of-the-catholic-church/

409 சஹரான் தென்னகோன், "மதங்களைத் திரிபுபடுத்தல்: சட்டங்களைத் திருத்த அரசாங்கம் முயல்கின்றது", தி மார்னிங், 27 டிசம்பர் 2024, https://www.themorning.lk/articles/VJZXpXsjgLVZ8W7euvW1; "மத திரிபுபடுத்தலுக்கு எதிரான சட்டத்தை அரசாங்கம் துரிதப்படுத்துகின்றது, டெய்லி மிரர், 6 ஜனவரி 2024, https://www.dailymirror.lk/breaking-news/Govt-expedites-legislation-against-religious-distortion/108-274536

அவர்களின் செயல்பாடு இலங்கையில் புத்த மதத்திற்கு அச்சுறுத்தலாக[410] இருக்காது என்றும் இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்குப் பேட்டி அளித்தபோது கூறினார்.

பௌத்த மற்றும் கிறிஸ்தவ சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மதத் தலைவர்களும் சிவில் சமூகத்தினரும், வரலாறு முழுவதும் மாற்றுப் போதகர்கள் இருந்துள்ளனர் என்பதை சுட்டிக்காட்டுகின்றனர். இருப்பினும், சமூக ஊடகங்கள் காரணமாக இந்தப் பிரசங்கங்களின் உள்ளடக்கம் அதிக அளவில் சென்றடைகின்றது என்று அவர்கள் குறிப்பிடுகின்றார்கள் (அத்தியாயம் 4, பிரிவு 1.1 ஐப் பார்க்கவும்). இது இயற்கையாகவே எதிர்க்கருத்துகள், விவாதம் மற்றும் கலந்துரையாடல்களுக்கு[411] பங்களிக்கின்றது.

வரலாற்று ரீதியாக அனைத்து மதக் கருத்துக்களும் பெரும் விவாதம் மற்றும் போட்டியின் மூலம் வெளிவந்தன. மேலும் போட்டியிடும் கருத்துக்கள் பொறுத்துக்கொள்ளப்பட[412] வேண்டும் என்று நியாயப்படுத்தப்பட்டுள்ளது. புதிய பௌத்த பிரசங்கிகளின் இருப்பு குறித்து கருத்து தெரிவித்த வணக்கத்திற்குரிய கல்கந்தே தம்மானந்த தேரர், சகிப்புத்தன்மை மற்றும் பல உண்மைகளின் இருப்பை ஏற்றுக்கொள்வதை வலியுறுத்தினார். பௌத்த வேதத்தை (சுத்த நிபாதா) மேற்கோள் காட்டி, "ஒரு குறிப்பிட்ட கருத்து மீது பற்றுக்கொண்டு, ஏனையவர்களின் கருத்துக்களைத் தாழ்வாகக் கருதுவதை ஞானிகள் தங்களைக் கட்டி வைத்திருக்கும் சங்கிலியாகப்" பார்க்கின்றார்கள்[413] என புத்தர் கூறியதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தை ஆதரித்து பல சிவில் சமூக மற்றும் மதத் தலைவர்கள் சிக்கலானதாகக் கருதப்படும் நிலைப்பாடுகளை சவால் செய்யும் விவாதம் மற்றும் கலந்துரையாடலுக்காக வாதிட்டனர். மேலும் சட்டத்தின் மூலம் அதைக் கட்டுப்படுத்தத் தேவையில்லை என்கின்றனர். FoRB "மதங்களைப் பாதுகாக்காது, மக்களைப் பாதுகாக்கின்றது" என்பதை வலியுறுத்திய NCEASL, இதற்கு மேலும் சட்டங்கள் தேவையில்லை என்றும் இலங்கையில் தற்போதுள்ள சட்டங்களால் மற்றவர்களுக்கோ தனக்கோ தீங்கு விளைவிக்கும்[414] பிரசங்கத்தைக் கையாள முடியும் என்றும் வலியுறுத்தியது.

# 6. இன - மத சகவாழ்வு மற்றும் ஒத்துழைப்பு

அரசாங்கம் அல்லது சமூக மட்டத்தில் மதங்களுக்கு இடையேயான மற்றும் மதங்களுக்கு உள்ளேயான மோதல்கள் தூண்டப்பட்டாலும் மத சகவாழ்வு மற்றும் ஒத்துழைப்புக்கான வாய்ப்பு இன்னும் இருக்கின்றது.

இலங்கையில் மத ஒத்திசைவின் இருப்பை அல்லது அதற்கான சாத்தியக்கூறுகளை பல போக்குகள் எடுத்துக்காட்டுகின்றன. சில மதத் தலங்களில் (அத்தியாயம் 2, பிரிவு 2 ஐப்

410 புவனக. எஸ். பெரேரா, "இலங்கையில் பௌத்தத்தின் 'திரிபுகள்' தொடர்பான ஆய்வுகள்"

411 வண. கல்கந்தே தம்மானந்த தேரர், நேர்காணல் இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலை பற்றிய ஆய்வு, NCEASL கவனக் குழு

412 கெஹான் குணதிலக்க, மத சுதந்திரம் என்பது பிரச்சார சுதந்திரத்தையும் உள்ளடக்கியதா?

413 வண. கல்கந்தே தம்மானந்த தேரர், நேர்காணல்

414 வண. கல்கந்தே தம்மானந்த தேரர், நேர்காணல் இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலை பற்றிய ஆய்வு, NCEASL கவனக் குழு

பார்க்கவும்) சர்ச்சைகள் உள்ளபோதும், இரத்தினபுரி/நுவரெலியா மாவட்டத்தில் (மத்திய) உள்ள சிவனொளிபாதமலை போன்ற சில தலங்கள் பல நம்பிக்கைகளைச் சேர்ந்த பக்தர்களுக்கு பொதுவானதாக அங்கீகரிக்கப்பட்டு மதிக்கப்படுகின்றன. மேலும், நாளாந்த சமயச் சடங்குகள், மதங்களுக்கு இடையே பொதுவான தெய்வங்களை வழிபடுதல் மற்றும் மதங்களுக்கு[415] இடையேயான பண்டிகைகள் இந்த பகிரப்பட்ட சூழலை எடுத்துக்காட்டுகின்றன.

இந்த சாத்தியத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் மதங்களுக்கு இடையேயான சகவாழ்வை ஊக்குவிக்கும் முயற்சிகள், FoRB ஐப் பாதிக்கும் முக்கிய கவலைகளை நிவர்த்தி செய்யும் அதேவேளை, மத சமூகங்களுக்கிடையேயான உறவுகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இலங்கையில் தேசிய சமாதானப் பேரவை மற்றும் சர்வோதயா உள்ளிட்ட பல அமைப்புகள், சமூக அடிப்படையிலான குழுக்கள் மற்றும் உள்ளூர் அரசாங்கத்துடன்[416] ஒன்றிணைந்து இந்தப் பகுதியில் உள்ள மத சமூகங்களுடன் தொடர்ந்து பணியாற்றி வருகின்றன.

கடந்த ஆண்டு புலம்பெயர்ந்தோர் தமிழ் அமைப்பான உலகத் தமிழர் பேரவை மற்றும் அமைதி மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பௌத்த மதகுருமார்களின் சிறந்த இலங்கைக்கான சங்கம் என்பன இணைந்து ‘இமய மலைப் பிரகடனத்தை’ முன்வைத்தன. இந்தப் பிரகடனம் ஆறு சுருக்கமான அறிக்கைகளைக் கொண்டுள்ளது. முதலாவது “எந்தவொரு சமூகமும் தனது அடையாளத்தையும் இடத்தின் பெருமையையும் இழப்பதால் அச்சுறுத்தலுக்கு ஆளாகாத நாட்டின் பன்முகத்தன்மையை”[417] வலியுறுத்துகின்றது. 2024 ஆம் ஆண்டில் அவர்கள் சர்வ மதக் குழுக்களுடன் இணைந்து பணியாற்றினர், மேலும் சர்ச்சைக்குரிய மதத் தளங்களில உள்ள பிரச்சினைகள் குறித்துப் பேசினர். பதட்டம் ஏற்படக்கூடிய இடங்களைப் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் பேசினர்.[418]

இருப்பினும், பல ஆண்டுகளாக மதங்களுக்கு இடையேயான பணிகளை ஆதரித்து வரும் சிவில் சமூகம், ஆழமாக வேரூன்றிய சார்புகள் சவாலாக அமையக்கூடும் என்பதைக் குறிப்பிடுகின்றது. உதாரணமாக, குழுக்களுக்கு இடையேயான பதட்டங்கள் காரணமாக சுவிசேஷகர்கள் இருக்கும் மன்றங்களில் கத்தோலிக்க மதகுருமார்கள் பெரும்பாலும் பங்கேற்கத் தயங்குகின்றார்கள் என்று தேசிய சமாதானப் பேரவையின் கலாநிதி ஜெஹான் பெரேரா குறிப்பிடுகின்றார் (பிரிவு 2 மற்றும் 3.1 ஐப் பார்க்கவும்).[419] உண்மையான அதிகாரமின்மை, அதிகார இழப்பு மற்றும்

---

415 சுலோச்சனா பீரிஸ், இலங்கையில் மத பன்மைத்துவத்திற்கான ஒரு அறிமுகம், (இன்டர்நியூஸ் ஸ்ரீலங்கா, மார்ச் 2019), https://internews.org/sites/default/files/2020-01/SriLanka_Handbook_Religious_Freedom_English_2020.pdf; பவானி பொன்சேகா, இலங்கையில் சர்ச்சைக்குரிய மத தளங்கள் குறித்த சுருக்கமான ஆய்வு, (மைனர்மேட்டர்ஸ். நவம்பர், 2023), 8-9

416 கலாநிதி வின்யா ஆரியரத்ன (தலைவர், சர்வோதய சிரமதான இயக்கம்) உடனானஜோவிடா அருளானந்தத்தின் நேர்காணல், அக்டோபர் 12, 2024, கொழும்பு் கலாநிதி ஜெஹான் பெரேரா (நிறைவேற்றுப் பணிப்பாளர், இலங்கை தேசிய சமாதானப் பேரவை) உடனான ஜோவிடா அருளானந்தத்தின் நேர்காணல். அக்டோபர் 08, 2024, கொழும்பு

417 உலகத் தமிழர் பேரவை, “தேசிய உரையாடலின் ஆரம்பம்: ஒவ்வொரு பிரஜையும் கண்ணியத்துடனும், நம்பிக்கையுடனும், பயம் அல்லது சந்தேகம் இல்லாமல் அமைதியாக வாழக்கூடிய, சம உரிமைகளை அனுபவிக்கக்கூடிய ஒரு இலங்கை”, 7 டிசம்பர் 2023, https://www.globaltamilforum.org/media/press-releases/start-of-a-national-conversation-a-sri-lanka>-where-every-citizen-can-peacefully-with-dignity>-trust>-and-no-fear-or-suspicion>-enjoying-equal-rights.aspx.; உலகத் தமிழர் பேரவை, “இமயமலை பிரகடனம்”, 7 டிசம்பர் 2023, https://www.globaltamilforum.org/media/press-releases/himalaya-declaration.aspx

418 புத்திக சமரவீர, “பன்முகத்தன்மை கொண்ட இலங்கைக்காக: ‘இமயமலைப் பிரகடனம் தொடங்குகின்றது’ பற்றிய கலந்துரையாடல்”, தி மார்னிங், 12 பிப்ரவரி 2024, https://www.themorning.lk/articles/SUQbiTEEgnZoYWykoBLW; உலகளாவிய தமிழ் மன்றம், “இலங்கையில் சமீபத்திய நிகழ்வுகள் குறித்து சிறந்த இலங்கைக்கான சங்கம் (SBSL) மற்றும் உலகத் தமிழர் பேரவை (GTF) அளித்த அறிக்கை”, 30 மார்ச் 2024, https://www.globaltamilforum.org/media/press-releases/statement-by-the-sangha-for-better-sri-lanka-(sbsl)-and-the-global-tamil-forum-(gtf)-on-recent-events-in-sri-lanka.aspx.

419 கலாநிதி ஜெஹான் பெரேரா, நேர்காணல்

அரசு சாரா நிறுவனங்களின் நிதியைச் சார்ந்திருத்தல் ஆகியவை சர்வ மதக் குழுக்களின் செயல்திறனைப்[420] பாதிக்கும் என்பது குறித்த கவலைகளையும் ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது. 'இமயமலை' முயற்சியும் அதன் மோசமான பிரதிநிதித்துவம் மற்றும் "மந்தமான மற்றும் தெளிவற்ற"[421] அறிவிப்புக்காக சிவில் சமூகத்தின் சில பிரிவுகள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் இருந்து விமர்சனங்களை எதிர்கொண்டது. ஆனால் அந்த நேரத்தில் பௌத்த தலைமைகளிடம் இருந்து[422] அதற்கு எந்த எதிர்ப்பும் வரவில்லை.

இந்தக் கவலைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் சர்வ மதக் குழுக்களின் செயல்திறனைப் பாதிக்கலாம் என்றாலும், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்வதில் மதங்களுக்கு இடையேயான முயற்சிகள் முக்கிய பங்கு வகிப்பதாகக் கூறப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் சமூகத்தால் தலைமைதாங்கப்படும் குழுக்கள் உள்ளூர் காவல்துறையுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதன் மூலம் பதட்டங்களைத் தணித்துள்ளதுடன் வன்முறைகளைக் கட்டுப்படுத்தியுள்ளனர். மேலும், குறிப்பாக மத மாற்றம் அல்லது தங்களைத் தாங்களே போதகர்களாக அறிவித்துக் கொள்பவர்கள் (பார்க்க: பிரிவு 2 மற்றும் 5) தொடர்பான பிரச்சினைகளில் புதிய சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்துவதை விட, இவ்வாறான சர்வ மத மன்றங்கள்[423] விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்களுக்குப் பொருத்தமானதாக இருக்கலாம்.

420 மட்டக்களப்பில் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் நிலை 2023-2024, 22

421 "ஒரு கண்துடைப்பு", தமிழ் கார்டியன், 13 டிசம்பர் 2023, https://www.tamilguardian.com/content/whitewash-0; மார்க். எஸ். கோகன், "இமயமலைப் பிரகடனம் இலங்கைத் தமிழ் குழுக்களிடையே ஆழமான பிளவை ஏற்படுத்துகின்றது", தி டிப்ளமேட், 3 ஜனவரி 2024, https://thediplomat.com/2024/01/himalayan-declaration-lays-bare-deep-divide-among-sri-lankan-tamil-groups/

422 சஹ்றான் தென்னகோன், "GTF - தேரர்கள் இமயமலை பிரகடனம்: அஸ்கிரி பீடம் துல்லியமற்ற ஆனால் முற்போக்கான நோக்கங்களை ஆதரிக்கின்றது", தி மார்னிங், 19 டிசம்பர் 2023 https://www.themorning.lk/articles/E95KWqkbVpWW3IBQCO3g

423 நவாஸ் முகமது மற்றும் கெல்சி ஹாம்ப்டன், பகிரப்பட்ட நம்பிக்கைகள் மூலம் இலங்கையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான வாய்ப்புகள், (பொதுவான தளத்திற்கான தேடல், ஜூன் 2024), https://www.sfcg.org/wp-content/uploads/2024/10/Opportunities-for-peace-and-reconciliation-in-Sri-Lanka-June-2024.pdf; கலாநிதி வின்யா அரியரத்ன, நேர்காணல்.

# மதிப்பெண் மற்றும் RAG கணிப்பீடு

ஒவ்வொரு துணைக் குறிகாட்டியும் 1-10 என்ற அளவில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. திரட்டப்பட்ட மதிப்பெண்களின் சராசரி ஒவ்வொரு முக்கிய குறிகாட்டிக்கும் மதிப்பெண்ணைத் தீர்மானிக்கின்றது. (மேலதிக விபரங்களுக்கு பிரிவு 2 இல் 'குறிகாட்டிகள் மற்றும் மதிப்பெண்/ஆராய்ச்சி முறையை' பார்க்கவும்).

| குறியீடு | மதிப்பெண் | விளக்கம் | RAG கணிப்பீடு |
|---|---|---|---|
| **குறிகாட்டி 1: மத வெறுப்பு அல்லது சார்பினால் தூண்டப்பட்ட பாகுபாடு, மிரட்டல் மற்றும் வன்முறை சம்பவங்கள் உட்பட வகுப்புவாத மோதல்கள்.** | | | |
| 1. புறக்கணிப்புகள் அல்லது துன்புறுத்தல்/மிரட்டல் உள்ளிட்ட குற்றங்கள்/தீங்கிழைக்கும் செயல்கள் நடந்துள்ளனவா? | 6 | சமூகத்தால் நடத்தப்பட்ட புறக்கணிப்புகள் பற்றிய எந்த அறிக்கையும் இல்லை என்றாலும் ஜபுறக்கணிப்புகளை ஊக்குவிக்கும் சமூக ஊடக பிரச்சாரங்களுக்கான அத்தியாயம் 4, பிரிவு 2 ஐப் பார்க்கவும்ஸ, பிரிவு 1 இல் விவரிக்கப்பட்டுள்ள சம்பவங்கள் களுத்துறை, கொழும்பு, அம்பாந்தோட்டை, குருநாகல், கண்டி மற்றும் காலி ஆகிய இடங்களில் சமூக உறுப்பினர்களால் மிரட்டப்பட்ட பல சம்பவங்களை சுட்டிக்காட்டுகின்றன. அத்தியாயம் 2, பிரிவு 4 இல் விவாதிக்கப்பட்டபடி, காவல்துறை மற்றும் உள்ளூர் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பெரும்பாலான சம்பவங்கள் (அதாவது, குறிப்பாக சுவிசேஷ வழிபாட்டுத் தலங்களின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்துதல்) பல சந்தர்ப்பங்களில் சமூக எதிர்ப்பால் தூண்டப்பட்டுள்ளன.<br><br>அத்தியாயம் 2, பிரிவு 2, சர்ச்சைக்குரிய மதத் தலங்களுக்கு இந்து பக்தர்கள் செல்வதைத் தடுப்பதில் பௌத்த மதகுருமார்களின் வலுவான ஈடுபாட்டையும் சுட்டிக்காட்டுகின்றது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், வழிபாட்டுத் தலங்களை அசுத்தப்படுத்துதல் மற்றும் வேண்டுமென்றே அவமதிப்புக்கு ஆளாக்குதல் போன்ற சம்பவங்கள் நடந்துள்ளனவா? | 5 | கொழும்பு, புத்தளம், மன்னார், குருநாகல் மற்றும் கம்பஹா ஆகிய இடங்களில் குறைந்தது ஐந்து கிறிஸ்தவ நிறுவனங்கள் மீது உடல் ரீதியான மோதல்கள் அல்லது தாக்குதல்களை ஹோநுயுளுடு பதிவு செய்துள்ளது.<br>அத்தியாயம் 2 (பிரிவு 2) இல் விவரிக்கப்பட்டுள்ள மத சின்னங்களை அவமதிப்பது சமூக உறுப்பினர்களை உள்ளடக்கியதா அல்லது அரச தரப்பினால் மேற்கொள்ளப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. | |
| 3. | உடல் ரீதியான தாக்குதல், கொலைகள், கடத்தல்கள், வீடுகளில் இருந்து வெளியேற்றம் அல்லது குழு வன்முறை சம்பவங்கள் நடந்துள்ளனவா? | 6 | மத மோதல்கள் தொடர்பாக கடத்தல்கள் அல்லது கொலைகள் நடந்ததாக எந்த அறிக்கையும் இல்லை என்றாலும், குழு வன்முறை மற்றும் ஒரு தாக்குதலை சுட்டிக்காட்டும் சம்பவங்கள் நடந்துள்ளன. விவாதிக்கப்பட்டபடி (பிரிவு 1.2), குருநாகலில் உள்ள ஒரு தேவாலயம் பதிவு செய்யவோ அல்லது சேவைகளை நிறுத்தவோ கட்டாயப்படுத்தப்பட்டதால், கற்கள் வீசப்பட்ட சம்பவங்கள் உட்பட தொடர்ச்சியான சம்பவங்களை எதிர்கொண்டது. ஒரு சந்தர்ப்பத்தில் கிராமவாசிகள் தேவாலயத்திற்கு செல்லும் சாலையைத் தடுத்தனர், அவர்கள் சபையினரும் போதகரும் உள்ளே நுழைவதைத் தடுத்தனர். ஜூலை மாதம், கம்பஹாவின் வத்தளையில் உள்ள ஒரு தேவாலயத்தில் வழிபாட்டு சேவையின் போது, அயலவர்கள் உரத்த இசை மற்றும் ஆபாச வார்த்தைகளைப் பயன்படுத்தி இடையூறு செய்தனர். அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வாக்குவாதத்தில் போதகரின் மனைவி தாக்கப்பட்டார். | |
| 4. | பொது இடங்கள் மற்றும் வளங்களைப் பயன்படுத்துவதை சமூக உறுப்பினர்கள் மறுத்த சம்பவங்கள் ஏதேனும் உண்டா? | 6 | கிறிஸ்தவ நம்பிக்கை அல்லது சமீபத்திய மதமாற்றத்தின் விளைவாக இறுதிச் சடங்கு சங்கத்திலிருந்து பொதுவான வளங்களை அணுக மறுப்பது அல்லது கட்டுப்படுத்துவது தொடர்பான குறைந்தது இரண்டு சம்பவங்களை மாத்தளை மற்றும் குருநாகலில் NCEASL பதிவு செய்தது. இந்த அறிக்கைகளுக்கு அப்பால், சமூக மட்டத்தில் அணுகல் மறுக்கப்பட்ட வேறு எந்த சம்பவங்களும் பதிவாகவில்லை. | |

| குறிகாட்டி 2: சமூகங்களுக்கு உள்ளேயும் இடையேயுமான மோதல்களைப் பாதிக்கும் சமூக மட்டத்திலான போக்குகள் மற்றும் மத நடைமுறைகள் | | | |
|---|---|---|---|
| 1. இனவழிச் சிறுபான்மையினர் உட்பட மதப் போக்குகள் மற்றும் நடைமுறைகள், மதங்களுக்குள்ளேயும், மதங்களுக்கு இடையேயும் மோதலைத் தூண்டுவதற்கான சான்றுகள் உள்ளதா? | 4 | விவாதிக்கப்பட்டபடி, சுவிசே' சமூகத்தின் பிரிவுகளிடையே "ஆக்கிரமிப்பு மதமாற்றம்" மற்றும் தீவிரம் (பிரிவு 2 மற்றும் 3.1) ஆகியவை சமூகங்களுக்குள்ளும் இடையிலும் பதட்டங்களை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றன. பிற மதங்களை அவமதிக்கும் வகையில் பிரசங்கம் மற்றும் நடைமுறைகள் சமூகத்தின் சில பிரிவுகளுடன் தொடர்புடையதாக உள்ளன. இந்தப் போக்கு சுவிசேஷ தேவாலயங்கள் மற்றும் பரந்த கிறிஸ்தவ சமூகத்தின் பாதிப்பை அதிகரித்துள்ளது என்ற கவலை உள்ளது. இதேபோல், இந்துத்துவா செல்வாக்கு பாரம்பரிய இந்து பழக்கவழக்கங்களை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதன் மூலம் இந்து சமூகத்திற்குள் பிளவுகளை ஊக்குவிக்கின்றது என்பதற்கான சில சான்றுகள் உள்ளன (பிரிவு 3.2). இருப்பினும், அத்தியாயம் 2, பிரிவு 5 இல் குறிப்பிடப்பட்டவாறு, அவர்களின் செல்வாக்கு பிரபல்யம் அடையவில்லை. மேலும் அரசியல் நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் அவர்கள் பின்னடைவுகளைச் சந்தித்துள்ளனர். | |
| 2. சமூகத்தில் குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட பாதிக்கப்படக்கூடிய குழுக்களை புறக்கணிக்கும் மதப் போக்குகள் மற்றும் நடைமுறைகள் இருப்பதற்கான சான்றுகள் உள்ளதா? | 5 | வஹாபிசத்தின் செல்வாக்கில் வெளிப்படையான சரிவு இருந்தபோதிலும், பரந்த முஸ்லிம் சமூகத்தில் உள்ள பழமைவாத நிலைப்பாடுகள் MMDA போன்ற விதிகளில் சீர்திருத்தங்களை எதிர்ப்பதில் பங்களித்துள்ளன. அதே நேரத்தில் கிராமப்புறங்களில் வசிக்கும் சமூகத்தின் ஒரு பகுதியினர் பெண் பிறப்புறுப்பு சிதைப்பு போன்ற தீங்கு விளைவிக்கும் நடைமுறைகளை தொடர்ந்து ஆதரித்து வருகின்றனர். | |

| குறிகாட்டி 3: பொது வாழ்வில் மத விதிமுறைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மத சகிப்பின்மைக்கான சான்றுகள் | | | |
|---|---|---|---|
| 1. மதக் குழுக்கள் அரசாங்க அதிகாரத்தைப் பயன்படுத்துவது உட்பட, பொது வாழ்வில் தங்கள் 'அறநெறி' பற்றிய கருத்துக்களைத் திணிக்க முயற்சிப்பதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா? | 4 | சில மதத் தலைவர்கள் முற்போக்கானவர்களாக இருந்தாலும், இலங்கையின் முக்கிய மதத் தலைவர்கள் இன்னும் LGBTQI+ நபர்களையும் பெண்களையும் ஒதுக்கி வைக்கும் கருத்துக்களைக் கொண்டுள்ளனர். பாலின சமத்துவச் சட்டமூலம், பெண்கள் வலுவூட்டல் சட்டமூலம் மற்றும் தண்டனைச் சட்டக்கோவை திருத்தம் ஆகியவற்றுக்கு அவர்கள் சமீபத்தில் எதிர்ப்புத் தெரிவித்திருப்பது இதைத் தெளிவாகக் காட்டுகின்றது. | |
| 2. மதக் கோட்பாட்டின் அடிப்படையில் மனித உரிமைப் பிரச்சாரகர்கள் மற்றும் ஆர்வலர்கள் துன்புறுத்தப்பட்டதற்கும் மிரட்டப்பட்டதற்கும் ஆதாரங்கள் உள்ளதா? | 6 | விவாதிக்கப்பட்டபடி, புலம்பெயர்ந்தோர் உட்பட முஸ்லிம் சமூகத்தின் ஒரு பகுதியினர், MMDA சீர்திருத்தத்தை எதிர்ப்பதுடன் தொடர்ந்து ஆர்வலர்களைத் தனிமைப்படுத்தி குறிவைத்து வருகின்றனர்.<br><br>இதைத் தவிர, இதுபோன்ற வேறு எந்த சம்பவங்களும் பதிவாகவில்லை. | |
| 3. மதக் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகள் மீதான சகிப்புத்தன்மையின்மை தற்போதைய நிலையை சவால் செய்வதாகக் கருதப்படுவதற்கான சான்றுகள் உள்ளதா? | 6 | விவாதிக்கப்பட்டபடி, அரசியலமைப்பு பாதுகாப்புகள் இருந்தபோதிலும், மத மாற்றம் பொதுவாக தனியார் மட்டத்திலும் பரந்த சமூகத்தாலும் எதிர்க்கப்படுகின்றது.<br><br>மதத் தலைவர்கள் மதங்களை, குறிப்பாக பௌத்தக் கோட்பாட்டை 'சிதைக்க' நினைப்பவர்களைக் கட்டுப்படுத்த சட்டம் இயற்ற வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளனர்.<br><br>இருப்பினும், மதகுருமார்கள் மற்றும் சிவில் சமூகத்தின் பிற உறுப்பினர்கள் புதிய சட்டங்களுக்குப் பதிலாக அதிக சகிப்புத்தன்மை மற்றும் விவாதத்திற்கு அழைப்பு விடுக்கும் மாற்றுக் கருத்துக்களுக்கு ஊக்கமளிக்கின்றனர். | |

| குறிகாட்டி 4: மதங்களுக்கு இடையேயான சகவாழ்வு மற்றும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள். | | | |
|---|---|---|---|
| 1. மத ஒற்றுமையை எடுத்துக்காட்டும் மதத் தலங்கள், திருவிழாக்கள் மற்றும் மரபுகள் இருப்பதற்கான சான்றுகள் உள்ளதா? | 7 | அரச அல்லது சமூக மட்டத்தில் தூண்டப்படும் மதங்களுக்குள்ளேயான மற்றும் மதங்களுக்கு இடையேயான மோதல்கள், இலங்கையில் பகிரப்பட்ட சடங்குகள் மற்றும் பண்டிகைகளைக் கடைப்பிடிப்பதையும், பொதுவான மதத் தலங்களில் வழிபடுவதையும் கணிசமாகப் பாதித்ததாகத் தெரியவில்லை. | |
| 2. மதங்களுக்கு இடையேயான சகவாழ்வு மற்றும் உரையாடலை ஊக்குவிக்கும் முயற்சிகளுக்கு வாய்ப்புகள் உள்ளதா? | 7 | வரம்புகள் மற்றும் நியாயமான கவலைகள் இருந்தபோதிலும், சர்வ மத வலையமைப்புகளுக்கான செயல்பாடு மற்றும் ஆதரவு, இலங்கையில் புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்துவதை விட விவாதம் மற்றும் கலந்துரையாடல் சாதகமாக இருக்கும்போது அத்தகைய மன்றங்கள் தளங்களாக செயல்படுவதற்கான வாய்ப்புகளை எடுத்துக்காட்டுகின்றன. | |



## அத்தியாயம் 4:

# பொது மக்களும் ஊடக உணர்வும்

இலங்கையில் பன்முகத்தன்மை மற்றும் மத சுதந்திரம் குறித்து மக்கள் எவ்வாறு உணர்கின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்ள பல்வேறு இன - மதக் குழுக்கள் பற்றிய வெறுப்புப் பேச்சு மற்றும் சமூக ஊடகக் கருத்துகளின் கண்ணோட்டம்.

## முக்கிய அவதானிப்புகள்

- 2021 முதல் இந்த ஆண்டு வரை, குறிப்பாக இன மத சிறுபான்மையினர் பற்றிய தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தை ஆன்லைனில் பரப்புவதில் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்பட்டுள்ளது.

- 2024 ஆம் ஆண்டில் சமூக ஊடக உள்ளடக்கம் நேரடியாக வன்முறையைத் தூண்டியது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றாலும், வடக்கு மற்றும் கிழக்கில் சர்ச்சைக்குரிய மதத் தலங்கள் தொடர்பான சர்ச்சைகளை அதிகரிப்பதில் அது பங்களித்திருந்தது.
- சமூக ஊடகங்களில் அதிகம் குறிவைக்கப்பட்ட மதக் குழுவாக முஸ்லிம்கள் உள்ளனர். மக்கள்தொகை மாற்றம் குறித்த ஆழமான அச்சங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் கதைகள், இஸ்லாமிய பழக்கவழக்கங்களை அரக்கத்தனமாகச் சித்தரித்தல் மற்றும் இஸ்லாத்தை பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்துதல் ஆகியவை இந்த ஆண்டு பரவலாக உள்ளன.
- தேர்தல் பிரச்சாரத்தின்போது மத உணர்வைத் தூண்டும் பேச்சுகள் மற்றும் வெறுப்புப் பேச்சுகள் ஒட்டுமொத்தமாகக் குறைந்திருந்தாலும், சிலர் சமூக ஊடகங்களில் பயத்தை அடிப்படையாகக் கொண்ட பிரச்சாரத்தை முன்னெடுத்திருந்தனர். தேர்தல் முடிவுகள் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களை குறிவைத்து தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தையும் தூண்டின. சில அந்த சமூகத்தில் இருந்தும் வந்தன.
- பாரம்பரிய ஊடகங்கள் செல்வாக்கு மிக்கவை என்பதால், ஊடகங்கள் யாருக்குச் சொந்தமானவை, ஊடகப் பிரிவினை மற்றும் சில இன மதக் குழுக்களைக் குறிவைப்பது பற்றிய கவலைகள், மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் பற்றிய பிரச்சினைகளை மக்கள் எவ்வாறு பார்க்கின்றார்கள் என்பதைப் பாதிக்கலாம்.

இன - மதக் குழுக்களைக் குறிவைக்கும் தீங்கு விளைவிக்கும் பேச்சு தொடர்பான முறைப்பாடுகள் குறைந்துள்ள போதிலும், சில சம்பவங்கள் கண்டறியப்படாமல் போகலாம். மேலும், சில தீங்கு விளைவிக்கும் பேச்சின் வடிவங்கள் இன்னும் தொடர்கின்றன. இவற்றில் முஸ்லிம் எதிர்ப்பு மற்றும் கிறிஸ்தவ எதிர்ப்பு உணர்வை ஊக்குவிக்கும் கதைகள், மாற்று பௌத்த போதகர்களின் இருப்பு குறித்த விவாதம் மற்றும் தேர்தல்களின் போது பயம் சார்ந்த பிரச்சாரம் ஆகியவை அடங்கும். இந்தக் கதைகளில் பல சமூக அரசியல் மற்றும் சமூக மட்டத்தில் இடம்பெறும் சம்பவங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன (அத்தியாயங்கள் 2 மற்றும் 3 ஐப் பார்க்கவும்). குழசுடீ தொடர்பான விடயங்களில் பொதுமக்களின் கருத்தை அளவிடுவதில் சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும் கருத்துகள் பயனுள்ளதாக இருக்கும் அதேவேளை, இந்த விடயங்களில் செல்வாக்குச் செலுத்துவதில் பாரம்பரிய ஊடகங்களின் பங்கை செய்தி ஆதாரமாக அவற்றின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு கவனத்தில் கொள்வதும் அவசியம் ஆகும்.

# 1. இன மத சமூகங்கள் மற்றும் நம்பிக்கை மற்றும் மத சுதந்திரத்தை (FoRB) பாதிக்கும் வெறுப்புப் பேச்சு

ஜனவரி 2024 தொடக்கத்தில், 18 வயதுக்கு மேற்பட்ட ,லங்கையர்களில் 47 சதவீதமானவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தினர்.[424] சிலர் 'வெறுக்கத்தக்க பேச்சு' அல்லது இன - மத சமூகங்களைக் குறிவைக்கும் உள்ளடக்கத்துடன் பங்கேற்றனர்.

சில வகையான வெறுப்புப் பேச்சுகள் பாகுபாடு, விரோதம் மற்றும் வன்முறைக்கு வழிவகுப்பதுடன் சட்டத்தினால் தண்டிக்கப்படுவதை[425] நியாயப்படுத்தும். 2014 ஆம் ஆண்டு களுத்துறை (மேற்கு) பகுதியில் அளுத்கம, பேருவளை மற்றும் தர்கா ஆகிய இடங்களில் நடந்த முஸ்லிம் எதிர்ப்பு கலவரங்களில், சமூக ஊடகங்கள் தவறான தகவல்களையும் எரிச்சலூட்டும் உள்ளடக்கங்களையும் பரப்புவதில் முக்கிய பங்கு வகித்ததுடன் மேற்சொன்ன தீங்கினை எடுத்துக்காட்டுகின்றது. இதேபோல், 2018 முஸ்லிம் எதிர்ப்பு கலவரத்தில் சிங்களவர்களைக் கருத்தடை செய்ய முஸ்லிம்கள் சதி செய்வதாக ∴பேஸ்புக்கில் வெளியான தவறான கதை அம்பாறையில் (கிழக்கு) வன்முறைக்கு வழிவகுத்தது. இதன் காரணமாக ∴பேஸ்புக் மன்னிப்பு [426]கேட்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

வெறுப்புப் பேச்சு சில நேரங்களில் 'சட்டபூர்வமானது'[427] எனக் கருதப்படலாம் - இது சில குழுக்களைப் புண்படுத்தலாம், வெறுப்பைப் பரப்பலாம் மற்றும் சமூக உறவுகளுக்கு தீங்கு விளைவிக்கலாம். ஆனால் அது எப்போதும் நேரடியாக பாகுபாடு அல்லது வன்முறையைத் தூண்டாது.[428] (அத்தியாயம் 1, பிரிவு 2.4 மற்றும் அத்தியாயம் 2, பிரிவு 3 ஆகியவற்றைப் பார்க்கவும்) இந்த அத்தியாயம் அத்தகைய பேச்சு குறித்தும் கவனம் செலுத்துகின்றது. ஏனெனில் அது அவமரியாதை மற்றும் சகிப்புத்தன்மையின்மை சூழலை உருவாக்கி மக்கள் தங்கள் மதம் அல்லது நம்பிக்கைகளை சுதந்திரமாகப் பின்பற்றுவதைக் கடினமாக்கும்.

2021 ஆம் ஆண்டு முதல் குறிப்பாக இந்த ஆண்டில் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தின் பரவலில் ஊக்கமளிக்கும் சரிவு ஏற்பட்டுள்ளதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, 2024 ஆம் ஆண்டில் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கம் ஆண்டுக்கு ஆண்டு ஒப்பீட்டளவில் 32% குறைந்துள்ளது. இதற்கு பெரும்பாலும் இன மற்றும்

---

424 சைமன் கெம்ப், "டிஜிட்டல் 2024: இலங்கை," டேட்டா ரிப்போர்டல், பிப்ரவரி 23, 2024, https://datareportal.com/reports/digital-2024-sri-lanka

425 ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம், தேர்தல் சூழலில் வெறுப்புப் பேச்சு மற்றும் வெறுப்பைத் தூண்டுதல், (ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள், உயர்ஸ்தானிகர் அலுவலகம், மே, 2024) https://www.ohchr.org/sites/default/files/2024-05/information-note-hate-speech-incient-hatred-in-electoral-context.pdf

426 வெரிட்டே ரிசேர்ச், சமூக ஊடகங்களில் வெறுப்புப் பேச்சைக் கட்டுப்படுத்துதல்: அதனைக் கட்டுப்படுத்துவதற்கு நற்பெயரைப் பயன்படுத்தும் திட்டம், (வெரிட்டே ரிசேர்ச், ஜூலை, 2021), https://www.veriteresearch.org/wp-content/uploads/2021/07/VR_ENG_RB_Jul2021_Better-Moderation-of-Hate-Speech-on-Social-Media.pdf, 5-7,15-16; மார்க்-ஆண்ட்ரே ∴பிராஞ்ச், "வெறுக்கத்தக்க பேச்சு மற்றும் தவறான தகவல்களை எதிர்த்துப் போராடுவதன் மூலம் ஜனநாயகத்தைப் பாதுகாத்தல்.", ஐக்கிய நாடுகள் சபை, 7 ஏப்ரல் 2024, https://srilanka.un.org/en/265414-safeguarding-democracy-combatting-hate-speech-and-disinformation.

427 ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள், உயர்ஸ்தானிகர் அலுவலகம், தேர்தல் சூழலில் வெறுப்புப் பேச்சு மற்றும் வெறுப்பைத் தூண்டுதல்

428 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி, சமூக ஊடகங்களில் மத சிறுபான்மையினருக்கு எதிரான தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கம்: நவம்பர் 2022 - ஆகஸ்ட் 2024, வெளியிடப்படாத அறிக்கை, (NCEASL, 22 ஜனவரி 2025), 20-21

மத சிறுபான்மையினரை[429] இலக்காகக் கொண்ட உள்ளடக்கத்தில் 52% சரிவு ஏற்பட்டது காரணமாகின்றது. 2024[430] ஆம் ஆண்டில் அயல் நாடான இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சு 74.4% அதிகரித்ததைக் கருத்தில் கொள்ளும்போது இந்தச் சரிவு குறிப்பிடத்தக்கது. காசாவில்[431] நடக்கும் போரின் பின்னணியில் முஸ்லிம் மற்றும் யூத சமூகங்களைக் குறிவைத்து குற்றங்கள் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

பிளவுபடுத்தும் மதச் சொல்லாட்சிகள் மீதான அதிகரித்து வரும் கண்டனங்கள் (அத்தியாயம் 2, பிரிவு 7 ஐப் பார்க்கவும்), பொருளாதார நெருக்கடிகள் குறித்த அக்கறை மற்றும் வெறுப்புப் பேச்சைத் தள்ளிவிட்டு அதற்கு எதிரான பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள் ஆகியவை இந்த மாற்றத்திற்குப் பங்களித்திருக்கலாம். 2024 ஆம் ஆண்டில் நல்லிணக்கம் மற்றும் ஜனநாயகம் குறித்த பொதுமக்களின் கருத்தின் பகுப்பாய்வு, இந்தச் சூழலில் முன்னேற்றங்களை அடையாளம் காண்கின்றது. இனங்களுக்கிடையேயான தொடர்புகளில் நேர்மறையான மாற்றங்கள், இன அடிப்படையிலான பாகுபாடு குறித்த சிறுபான்மையினரின் கருத்து மற்றும் பிற இனக்குழுக்கள் பற்றிய பொது அறிவு[432] ஆகியவற்றைக் காரணமாகக் குறிப்பிடுகின்றது. இருப்பினும், சில வகையான தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கம் கண்டறியப்படாமல் போகலாம் என்ற கருத்தைக் கவனிக்க வேண்டியது அவசியம். கடந்த ஒரு வருடமாக சமூக ஊடகப் பயனர்கள் நையாண்டி மற்றும் கேலிச்சித்திரம்[433] போன்ற மாற்று முறைகளுக்குத் திரும்பியுள்ளதாக ஊடக ஆய்வாளர்கள் கவனிக்கின்றனர்.

இன மதக் குழுக்களைக் குறிவைத்து ஆவணப்படுத்தப்பட்ட தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தில் ஒட்டுமொத்த சரிவு ,ருந்தபோதிலும், ∴பேஸ்புக், டிக்டொக் மற்றும் யூடியூப்பில் இருந்து பெறப்பட்ட உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஹேஷடேக் ஜெனரேஷன் தரவுகளின் பகுப்பாய்வு, முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்களை[434] குறிவைக்கும் கவலையளிக்கும் கதைகளை வெளிப்படுத்துகின்றது. இந்த ஆண்டில், மாற்று பௌத்த மதப் பிரச்சாரகர்களும் பின்னடைவைச் சந்தித்துள்ளனர்.

429 மார்க்-ஆண்ட்ரே ∴பிராஞ்ச், “வெறுக்கத்தக்க பேச்சு மற்றும் தவறான தகவல்களை எதிர்த்துப் போராடுவதன் மூலம் ஜனநாயகத்தைப் பாதுகாத்தல்”; “இலங்கையில் தீங்கு விளைவிக்கும் பேச்சு” ஐக்கிய நாடுகள் சபை இலங்கை, செப்டம்பர் 2024, https://srilanka.un.org/sites/default/files/2024-09/ENG%20Harmful%20Speech%20Bulletin.pdf


430 “2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சு 74மூ அதிகரிப்பு: ஆய்வு”, இந்தியா வெறுப்பு ஆய்வகம், பிப்ரவரி 25, 2025, https://indiahatelab.com/2025/02/25/scroll-74-rise-in-anti-minority-hate-speech-in-india-in-2024-study/

431 பீட்ரிக்ஸ் இம்மென்காம்ப், “வெறுக்கத்தக்க பேச்சு மற்றும் வெறுப்பு குற்றம்: செயல்பட வேண்டிய நேரம் இது?” ஐரோப்பிய நாடாளுமன்ற ஆராய்ச்சி சேவை, செப்டம்பர் 2024, https://www.europarl.europa.eu/RegData/etudes/BRIE/2024/762389/EPRS_BRI(2024)762389_EN.pdf, 2-3

432 பிரதீப் பீரிஸ் நிபுனிகா ஓ. லகம்வசம், மாறிவரும் அலைகள்: இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் ஜனநாயகம் குறித்த பொதுக் கருத்தின் போக்கு பகுப்பாய்வு, (கொள்கை மாற்றுகளுக்கான மையம் - சமூகக் குறிகாட்டி, மார்ச், 2024) https://www.cpalanka.org/wp-content/uploads/2024/04/Shifting-Tides_A-Trend-Analysis-of-Public-Opinion-on-Reconciliation-and-Democracy-in-SL_FINAL_FF.pdf

433 கொழும்பை தளமாகக் கொண்ட சிரேஷ்ட பத்திரிகையாளர்/ஊடக ஆலோசகருடனான அமாரா நிலா∴ப்தீனின் நேர்காணல், 12 டிசம்பர் 2024, கொழும்பு நாலக குணவர்தன, (ஊடக ஆய்வாளர் மற்றும் தொடர்பாடல் ஆலோசகர்) உடனான அமாரா நிலா∴ப்தீனின் தொலைதூர நேர்காணல், 5 டிசம்பர், 2024.

434 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷடாக் ஜெனரேஷனின் மாதாந்த அறிக்கை, https://dashboard.hashtaggeneration.org/, (சந்தாதாரர்களுக்கு மட்டும் அணுகல்)




| | January | February | March | April | May | June | July | August | September | October | November | December |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Buddhists | 0 | 3 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 |
| Christians | 7 | 20 | 4 | 7 | 10 | 2 | 1 | 5 | 2 | 8 | 6 | 6 |
| Hindus | 0 | 0 | 4 | 1 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 7 | 0 |
| Muslims | 9 | 3 | 11 | 24 | 22 | 10 | 13 | 5 | 12 | 17 | 27 | 32 |
| Other Religions | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| Atheists | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |

2024 ஆம் ஆண்டில் ஹாஷ்டாக் ஜெனரேஷனால் சேகரிக்கப்பட்ட ஆன்லைன் சம்பவங்களின் விளக்கம், மாதம் மற்றும் மதக் குழு அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது.

## 2. இஸ்லாமிய வெறுப்பு மற்றும் முஸ்லிம் எதிர்ப்பு உள்ளடக்கங்கள்

சமூக ஊடகங்களில் முஸ்லிம் சமூகத்தினரே அதிகம் குறிவைக்கப்பட்ட மதக் குழுவாக உள்ளனர். இலங்கையில் ஒருங்கிணைந்த முஸ்லிம் எதிர்ப்பு பிரச்சாரங்களும், இஸ்லாமிய வெறுப்பு உள்ளடக்கத்தின் அதிகரிப்பும் புதியவை அல்ல (அத்தியாயம் 2, பிரிவு 6 ஐப் பார்க்கவும்). சமீப ஆண்டுகளில் ஆன்லைனில் முஸ்லிம் எதிர்ப்பு உள்ளடக்கத்தின் பரவலான அதிகரிப்பிற்கு முஸ்லிம் எதிர்ப்பு பிரச்சாரங்கள் மற்றும் கலவரங்கள் மட்டுமல்லாமல், தேசிய நிகழ்வுகள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் கோவிட்-19 தொற்றுநோய் போன்ற சமீபத்தைய நிகழ்வுகளும் காரணமாக உள்ளன. கோவிட்-19 தொற்றுநோய் போன்ற நிகழ்வுகளால் தூண்டப்பட்ட வெறுப்புப் பேச்சு, சமூக ஊடகங்களில்[435] நீடித்து வரும் முஸ்லிம்களுக்கு எதிரான நீண்டகாலமாகத் தொடரும் கட்டுக்கதைகள் மற்றும் தவறான தகவல்களைப் பிரதிபலிப்பதாகவும் அறியப்பட்டது.

இந்த ஆண்டு முஸ்லிம்கள் மீதான ஆன்லைன் தாக்குதல்கள் குறித்த பகுப்பாய்வும் இதேபோன்ற வடிவத்தைப் பிரதிபலிக்கின்றது. விபரிப்புகள் மூன்று பரந்த பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. மக்கள் தொகை மாற்றம், இஸ்லாமிய பழக்க வழக்கங்கள் மற்றும் நடைமுறைகள் பற்றிய தவறான தகவல்கள் மற்றும் பயங்கரவாதத்துடன் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் தொடர்புபடுத்துவது குறித்த ஆழமான அச்சங்களைப் பயன்படுத்திக் கொள்வதை மையமாகக் கொண்ட கதைகளாக இவை உள்ளன. “தம்பி”, “நானா” மற்றும் “ஹம்பயோ” உள்ளிட்ட

435 தொற்றுநோய் காலத்தில் இலங்கையில் வெறுப்பு பேச்சு, (மைனர்மேட்டர்ஸ், 2022), https://minormatters.org/wp-content/uploads/2024/08/Hate-Speech-in-Sri-Lanka-during-the-Pandemic.pdf

இழிவான சொற்கள் இந்தக் கதைகளில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டன[436].

## 2.1 மக்கள்தொகை மாற்றம் குறித்த அச்சம்

முஸ்லிம் உணவகங்கள் உணவில் கருத்தடை மாத்திரைகளைக் கலப்பதாகவும், முஸ்லிம் விற்பனையாளர்கள் உணவைப் பரிமாறுவதற்கு முன்பு மூன்று முறை எச்சில் துப்புவதாகவும் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் மக்கள்தொகை மாற்றம்[437] குறித்த அச்சங்களைப் பயன்படுத்திக் கொண்டன. இந்தக் கதைகள் பெரும்பாலும் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் போது ஏப்ரல் மாதத்தில் வெளிப்படையாகத் தெரிந்தன. அப்போது இனிப்புகள் தயாரிப்பதும் புதிய ஆடைகளை வாங்குவதும் ஒரு முக்கிய பாரம்பரியமாகும். முஸ்லிம் வணிகங்களைப் புறக்கணிப்பதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்தப் பதிவுகள் பகிரப்பட்டதாகப் புரிந்து கொள்ளப்படுகின்றது.

மேலும், தெஹ்ரான் உதவியுடன் அமைக்கப்பட்ட[438] நீர்மின் திட்டத்தைத் திறந்து வைக்க ஏப்ரல் மாதம் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இலங்கைக்கு விஜயம் செய்தபோது, மக்கள் தொகை மாற்றம் குறித்த அச்சமூட்டும் கருத்துக்கள் அவதானிக்கப்பட்டன. அவரது வருகை 150 ஆண்டுகளுக்குள் இலங்கையை முஸ்லிம் பெரும்பான்மை நாடாக[439] மாற்றும் என்ற இஸ்லாமிய வெறுப்பு மீம்களுக்குத் தூண்டியது.

இதேபோன்று, டிசம்பரில் மியான்மரில் இருந்து ரோஹிங்கியா அகதிகளின் வருகை (அத்தியாயம் 2, பிரிவு 8 ஐப் பார்க்கவும்) முஸ்லிம் எதிர்ப்பு உணர்வைத் தூண்டியது. அவர்களை நாடு கடத்த வேண்டும் என்ற பதிவுகளும், முஸ்லிம் மக்கள்தொகை வளர்ச்சி குறித்து சில அச்சமூட்டும் பதிவுகளும்[440] வெளியிடப்பட்டன.

## 2.2 இஸ்லாமிய பழக்கவழக்கங்களை அரக்கத்தனமாகச் சித்தரித்தல்

பலதார மணம், ஷரியா சட்டம், ஹிஜாப் மற்றும் இஸ்லாமிய விருத்தசேதன நடைமுறை பற்றிய விவாதங்களில், இஸ்லாமிய பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான அரக்கத்தனமான சித்தரிப்பு மற்றும் தவறான தகவல்கள் குறிப்பிடப்பட்டன. இந்தக் கருத்துக்களில் பெரும்பாலானவை ஜூன் மாதத்தில் ஹஜ் பண்டிகையின் போது காணப்பட்டன. இதன்போது மனிதாபிமானமற்ற மொழியைப் பயன்படுத்தும் பதிவுகள் மற்றும் ஹிஜாப் தொடர்பான பாலியல் மீம்கள் அதிகமாக இருந்தன. இஸ்லாமிய மத வெளிப்பாட்டை[441] மையமாகக் கொண்ட உள்ளூர்

436 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹேஷ்டேக் ஜெனரேஷனின் மாதாந்த அறிக்கை ஷமாரா வெட்டிமுனி, இலங்கையில் இஸ்லாமிய வெறுப்பு அவதூறுகளின் காலனித்துவ வரலாறு, (வரலாற்றுப் பயிற்சி பட்டறை, செப்டம்பர் 7, 2020), https://www.historyworkshop.org.uk/empire-decolonisation/colonial-history-islamophobia/

437 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹேஷ்டேக் ஜெனரேஷனின் மாதாந்த அறிக்கை

438 அதிகரித்து வரும் பதட்டத்திற்கு மத்தியில் ஈரான் ஜனாதிபதி இலங்கைக்கு வருகை தருகின்றார், உமா ஓயா திட்டத்தைத் தொடங்கி வைக்கின்றார்," எகானமி நெக்ஸ்ட், 15 ஏப்ரல், 2024, https://economynext.com/iran-president-to-visit-sr-lanka-amid-rising-tension-inaugurate-uma-oya-project-158564/

439 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனரேஷனின் மாதாந்த அறிக்கை

440 மேற்சொன்னபடி

441 மேற்சொன்னபடி

சம்பவங்களில் சமூகங்களுக்கு இடையிலான பதட்டங்கள் சமூக ஊடகங்களிலும் வெளிப்பட்டன. திருகோணமலை ஹிஜாப் சர்ச்சையில் (அத்தியாயம் 2, பிரிவு 6 ஐப் பார்க்கவும்), முஸ்லிம் மற்றும் தமிழ் குழுக்கள் ஒருவரையொருவர் அவமதிக்கும்[442] மீம்கள் மற்றும் பதிவுகளைப் பரிமாறிக் கொண்டதில் இது தெளிவாகத் தெரிந்தது.

## 2.3 தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்துடன் இஸ்லாத்தின் தொடர்பு

இந்தக் கதைகளுடன் மிகவும் கவலையளிக்கும் விதமாக, இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்தும் பதிவுகள் இருந்தன. முஸ்லிம் வர்த்தகர்கள் வெடிகுண்டு விற்பனையாளர்கள், இஸ்லாம் ஒரு "சாத்தானிய" மதம், முஸ்லிம்கள் இயல்பாகவே வன்முறையாளர்கள் என்ற கூற்றுகளும் இதில் அடங்கும். இந்த உள்ளடக்கத்தின் பெரும்பகுதி உலகளாவிய நிகழ்வுகளின் பின்னணியில் அதிகரித்தன. சர்வதேச[443] அளவில் பரவும் இஸ்லாமிய வெறுப்பு இடுகைகளை இலங்கையில் உள்ள மக்கள் பகிர்ந்து கொண்டதைக் காண முடிந்தது.

செப்டம்பர் மாதம் பங்களாதேஷில் இட ஒதுக்கீடு சீர்திருத்த இயக்கத்தின் போராட்டங்களின்[444] போது பௌத்தர்கள் மீதான தீவிரவாதத் தாக்குதல்கள், அங்கு இஸ்லாமிய தீவிரவாதிகளால் பௌத்த மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் கதைகளைத் தூண்டின. "ஆகமிக த்ரஸ்தவாதய" (மத பயங்கரவாதம்) போன்ற சொற்கள் இஸ்லாமியத் தீவிரவாதம்[445] குறித்த அச்சங்களை அதிகரித்தன.

காசாவில் நடந்த போரின் பின்னணியிலும் இதேபோன்ற கதைகள் காணப்பட்டன. போரை ஒரு "மத மோதல்" என்று சித்தரிக்கும் பதிவுகள், முஸ்லிம் சமூகத்தை "பர அந்தவாதீன்" (சாதி மற்றும் தீவிரவாத சொற்களை இணைக்கும் ஒரு அவதூறு) என்று குறிப்பிடுவது, காசாவில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் நடவடிக்கைகளைக் கொண்டாடுவது, காசா மற்றும் ஏமனில் உள்ள முஸ்லிம் மக்களுக்கு எதிராக வன்முறையை ஆதரிப்பது போன்ற பதிவுகள் இருந்தன. டிசம்பரில், ஏமன் விமான நிலையம் மீதான இஸ்ரேலின் தாக்குதலை[446] பெருமைப்படுத்தும் பதிவுகளை ஹேஸ்டேக்கின் சமூக ஊடகக் கண்காணிப்பாளர்கள் டிக்டொக்கில் அவதானித்தனர்.

காசாவில் நடந்த போருடன் தொடர்புடைய, அறுகம்பே சம்பவம் (அத்தியாயம் 2, பிரிவு 8 ஐப் பார்க்கவும்) முஸ்லிம் எதிர்ப்பு சொல்லாட்சிக்கான மையப் புள்ளியாக மாறியது. நியாயமற்ற முறையில் முஸ்லிம்கள் மீது பழியைப் போட்டு, அந்தச் சமூகத்தை விபரிக்க "புற்றுநோய்" போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டன. அறுகம்பே பகுதிகளில் தாக்குதல்கள்

442 மொஹமட் ஃபைரூஸ் (தமிழ் மொழிப் பத்திரிகையின் ஆசிரியர்) உடனான அமாரா நிலாஃப்தீன் நேர்காணல். 24 நவம்பர், 2024, கொழும்பு

443 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை

444 ஹரிந்த்ரினி கொரியா மற்றும் நாசியா எரம், "பங்களாதேஷில் ஒதுக்கீட்டு சீர்திருத்தப் போராட்டங்களில் என்ன நடக்கின்றது?", 29 ஜூலை 2024, https://www.amnesty.org/en/latest/news/2024/07/what-is-happening-at-the-quota-reform-protests-in-bangladesh/

445 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை

446 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை "ஏமனின் சனா விமான நிலையம், ஹொடைடா மின் உற்பத்தி நிலையத்தை இஸ்ரேல் தாக்குகின்றது," அல்ஜசீரா, 26 டிசம்பர் 2024, https://www.aljazeera.com/news/2024/12/26/israel-strikes-yemens-sanaa-airport-other-key-sites-reports

நடத்தப்படலாம் என்ற அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் எச்சரிக்கைகளைத் தொடர்ந்து, சமூக ஊடகங்களில் இஸ்லாமிய வெறுப்பு பேச்சுக்கள் அதிகரித்தன. சில கருத்துக்கள் முஸ்லிம்களை "பயங்கரவாதிகள்" மற்றும் "தீவிரவாதிகள்" என்று அழைத்தன, மேலும் இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் உலகளாவிய ஜிஹாதி திட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பதாக தவறான கதைகள் கூறின. "தம்பி" மற்றும் "ஹம்பயோ" போன்ற சொற்கள் பொதுவாக அந்தச் சமூகத்தை இழிவுபடுத்தப் பயன்படுத்தப்பட்டன.[447]

மார்ச் மாதம் இலங்கை மாலுமிகளை ஏற்றிச் சென்ற கப்பல் மீது ஹவுதி ஏவுகணைத் தாக்குதல் மற்றும் ஜூலை - ஆகஸ்ட்[448] மாதங்களில் இங்கிலாந்தில் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான தீவிர வலதுசாரி கலவரங்கள் பற்றிய தவறான தகவல்கள் ஆகியவை சமூக ஊடகங்களில் இதேபோன்ற கதைகளைத் தூண்டிய ஏனைய சம்பவங்களாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு[449] முந்தைய நாட்களிலும், அதன் ஆண்டு நிறைவிலும் முஸ்லிம் சமூகத்தை வன்முறையாளர்கள் அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள் என்று எதிர்மறையாகக் கூறும் பதிவுகள் காணப்பட்டதாக சமீபத்திய ஆய்வு காட்டுகின்றது.

## 3. கிறிஸ்தவ எதிர்ப்புக் கதைகள்

ஹாஷ்டாக் தரவுகளின்படி, சமூக ஊடகங்களில் இரண்டாவது அதிகம் இலக்கு வைக்கப்பட்ட குழு கிறிஸ்தவர்கள் ஆகும். சம்பவங்களின் பகுப்பாய்வு முக்கிய நபர்களை நோக்கிய தாக்குதல்களை எடுத்துக்காட்டுகின்றது. ஆனால் அடிப்படையான தப்பெண்ணங்களைப் பிரதிபலிக்கின்றது. "கள்ளத்தோணி" ('சட்டவிரோத' குடியேறியைக் குறிக்கும் தமிழ் வார்த்தை, ஆனால் சிங்களவர்களால் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது), "பள்ளி காக்கா" (சர்ச் காகம்), மற்றும் "பள்ளியே நிறலா" (சர்ச் நாத்திகர்கள்) போன்ற இழிவான சொற்களின் பயன்பாடு சமூக ஊடகங்களில் பரவலாகக் காணப்பட்டது மற்றும் கிறிஸ்தவர்களை, குறிப்பாக கிறிஸ்தவப் பாதிரியார்கள் மற்றும் பிரபலமான நபர்களைக் குறிவைக்கப் பயன்படுத்தப்பட்டது. இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான கார்டினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, தொண்டு செயல்களில் ஈடுபடும் ரோமன் கத்தோலிக்க சகோதரர் சார்லஸ் தோமஸ் மற்றும் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ (அத்தியாயம் 3, பிரிவு 3.1 ஐப் பார்க்கவும்)[450] ஆகியோர் இதில் அடங்குவர்.

447 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை முகதாசா அப்துல் வாஹித் (ஆசிரியர், சகோதரத்துவ முன்முயற்சி / ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளர்) உடனான அமாரா நிலாஃப்தீனின் நேர்காணல், 15 நவம்பர், 2024, கொழும்பு

448 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை "ஏமன் கப்பலில் ஹவுதிகள் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு மீட்கப்பட்ட பணியாளர்களில் இலங்கையர்களும் உள்ளனர்," அத தெரண, 7 மார்ச் 2024, https://www.adaderana.lk/news.php?nid=97803

449 இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி, சமூக ஊடகங்களில் மத சிறுபான்மையினருக்கு எதிரான தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கம்: நவம்பர் 2022 - ஆகஸ்ட் 2024,17

450 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை

## 3.1 கிறிஸ்தவ செல்வாக்கிற்கு எதிரான வன்முறை மற்றும் நடவடிக்கைக்கான அழைப்புகள்

(அத்தியாயம் 1, பிரிவு 3.5 மற்றும் அத்தியாயம் 3, பிரிவு 2 ஆகியவற்றைப் பார்க்கவும்) குறிப்பிட்டவாறு, இலங்கையில் FoRB களத்தில் மிகவும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளில் ஒன்றாக மதத்தைப் பரப்புதல் உள்ளது. அத்தியாயம் 3, பிரிவு 2 இல் காட்டப்பட்டுள்ளபடி, 2024 ஆம் ஆண்டில் தேசிய சமாதானப் பேரவை நடத்திய FoRB பற்றிய கணக்கெடுப்பில் மதக் குழுக்களிடையே 'மதமாற்றம்' ஒரு முக்கிய கவனத்திற்குரிய விடயமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதற்குக் காரணமாக சுயாதீன திருச்சபைகள்[451] மீதே அதிக பழி சுமத்தப்படுகின்றது. இந்தக் கருத்தைப் பிரதிபலிக்கும் வகையில், மத மாற்றங்கள் மூலம் இலங்கை சமூகத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும், கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்களுக்கு[452] எதிரான வன்முறையை ஊக்குவிப்பதாகவும் சமூக ஊடகக் கதைகள் காணப்பட்டன.

பிப்ரவரியில் கிறிஸ்தவர்களைக் குறிவைத்து இணையத்தில் வெறுப்புப் பேச்சு அதிகமாகக் காணப்பட்டதுடன், குறைந்தது 20 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த உள்ளடக்கத்தின் பெரும்பகுதி, பௌத்தர்களை கிறிஸ்தவர்களாக மாற்றியதாக சகோதரர் தோமஸை நோக்கி முன்வைக்கப்பட்டிருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் சகோ. தோமஸ் அநுராதபுரத்தில் (வட மத்திய) ஒழுங்குசெய்த ஒரு நிகழ்வில் கலந்துகொண்ட பௌத்த தேரர்களும் வெறுப்பு பேச்சை எதிர்கொண்டனர். சேத்தியகிரி விகாரையின் தலைவரான வண. குடா ஹும்மில்லாவே வணரதன தேரர் நிகழ்வை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டார்.[453]

2023 ஆம் ஆண்டு மதங்களை அவமதித்ததாகக் கூறப்படும் போதகர் பெர்னாண்டோவின் (அத்தியாயம் 2, பிரிவு 3 ஐப் பார்க்கவும்) அறிக்கைகள், அதிகளவான பதில் உள்ளடக்கத்திற்கு வழிவகுத்தன. சிலர் போதகர் பெர்னாண்டோவின் போதனைகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என்றும், ஏனையவர்கள் அவர் தீவிரமான முறையில் செயல்படுவதாகவும் குற்றஞ்சாட்டினார்கள்[454] என்றும் சமீபத்திய அறிக்கை சுட்டிக்காட்டியது. டிசம்பரில் பௌத்த பிக்கு போன்ற ஒருவர் வழிபாடுகளில் கலந்து கொண்டதாகக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து (அத்தியாயம் 3, பிரிவு 3.1 ஐப் பார்க்கவும்), வகுப்புவாத வன்முறையைத் தூண்டியதற்காக முன்னர் கைது செய்யப்பட்ட தீவிர சிங்கள - பௌத்த தேசியவாதியான டான் பிரியசாத், போதகர் பெர்னாண்டோவை அச்சுறுத்தும் டிக்டொக் வீடியோ ஒன்றை வெளியிட்டார். "பறையா" ("தாழ்ந்த" சாதி மக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு வார்த்தையிலிருந்து உருவானது) போன்ற இழிவான வார்த்தைகளைப் பயன்படுத்தி, போதகர் பெர்னாண்டோ பௌத்தத்தை அவமதிப்பதாகக்[455] கூறினார்.

451 தேசிய சமாதானப் பேரவை, மத சுதந்திரம் குறித்த கணக்கெடுப்பு 2024, வெளியிடப்படாத அறிக்கை, NPC, டிசம்பர் 2024, 19,22

452 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை

453 மேற்சொன்னபடி

454 சமூக ஊடகங்களில் மத சிறுபான்மையினருக்கு எதிரான தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கம்: நவம்பர் 2022 - ஆகஸ்ட் 2024, 31

455 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை

மேலும், டிசம்பர் மாதம் யூடியூப் சேனல் மூலம் வன்முறையைத் தூண்டுவதற்கும் வெறுப்புப் பேச்சைப் பரப்புவதற்கும் பெயர் பெற்ற பௌத்த துறவி வண. ராஜாங்கனே சத்தா ரதன தேரர், “போதகர் பெர்னாண்டோவைக் கொல்வதற்கு அதிக நேரம் எடுக்காது” என்று கூறி, பௌத்தர்கள் தங்கள் மதத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஒரு காணொளியை வெளியிட்டார். சமூக ஊடகக் கண்காணிப்பாளர்களின் அவதானிப்புகளை அடிப்படையாகக் கொண்ட ஹேஷ்டேக், தேரரின் கருத்துக்கள் போதகர் பெர்னாண்டோவுக்கு எதிராக[456] நிஜ உலகில் தீங்கிழைக்கும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கின்றது.

## 3.2 இந்துத்துவா கதைகள் மற்றும் கிறிஸ்தவ எதிர்ப்புப் பேச்சுகளின் எழுச்சி

ஏற்கனவே விவரிக்கப்பட்டபடி (அத்தியாயம் 2, பிரிவு 5 ஐப் பார்க்கவும்), வடக்கு மற்றும் கிழக்கில் கிறிஸ்தவ எதிர்ப்பு உணர்வு இந்துத்துவாவை ஊக்குவிக்கும் அரசியல் - மத அமைப்புகளால் வழிநடத்தப்படுகின்றது. சர்வதேச மத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணைக்குழு அதன் 2024 புதுப்பிப்பில், சமூக ஊடகத் தளங்களில் முஸ்லிம் எதிர்ப்பு மற்றும் கிறிஸ்தவ எதிர்ப்பு உணர்வு வடக்கு மற்றும் கிழக்கில்[457] மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக வளர்ந்து வருவதாகக் குறிப்பிடுகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள கிறிஸ்தவக் குழுக்களை இலக்காகக் கொண்ட நிகழ்வுகள் மற்றும் முன்னேற்றங்களுடன் தொடர்புடைய ஆன்லைன் விபரிப்புகள் அவற்றில் பிரதிபலித்தன. புதிதாக நியமிக்கப்பட்ட யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியேற்ற பிறகு இந்து தெய்வங்களின் படங்களை அகற்றியதற்கு எதிரான எதிர்வினை (அத்தியாயம் 2, பிரிவு 5 ஐப் பார்க்கவும்) அத்தகைய ஒரு சம்பவமாகும்.[458]

## 3.3 கத்தோலிக்கர்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சு மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நீதிக்கான பிரச்சாரங்கள்

கத்தோலிக்கர்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சு பெரும்பாலும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் கார்டினல் மல்கம் ரஞ்சித் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் விசாரணைகளை அரசியலாக்குவதில் அவரது பங்கைக் கருத்தில் கொண்டு வழிநடத்தப்படுவதாகத் தெரிகின்றது.

தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவது குறித்து அப்போதைய அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்து இந்த உள்ளடக்கத்தில் பெரும்பாலானவை பகிரப்பட்டன. கார்டினலை “கள்ளத்தோணி வுர்கய” (கத்தோலிக்க சமூகத்தைக் குறிக்கும் ஒரு இழிவான சொல், கார்டினலை “தீயவர்” என்று சித்தரித்தல்) என்று குறிப்பிட்டு, தாக்குதல் நடத்தியவர்களுக்கு “நன்றி” தெரிவித்து, கத்தோலிக்கர்களுக்கு

456 மேற்சொன்னபடி

457 இலங்கையில் மத சிறுபான்மையினருக்கான இடம் சுருங்கிவருகின்றது, சேமா ஹசன், (சர்வதேச மத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணைக்குழு, இலங்கையின் நாடு புதுப்பிப்பு, ஜூன் 2024), https://www.uscirf.gov/sites/default/files/2024-06/2024%20Sri%20Lanka%20Country%20Update.pdf, 3-4

458 மேற்சொன்னபடி

எதிரான மேலும் வன்முறைக்கு[459] அழைப்பு விடுத்து பதிவுகள் வெளியாகின.

மே மாதத்தில் கொண்டாடப்படும்[460] வெசாக்கிற்கான ஏற்பாடுகளை பௌத்தர்கள் செய்யும்போது, ஏப்ரல் மாதத்தில் கிறிஸ்தவர்களும் "நாத்திகர்களும்" வெசாக் விளக்குகளை "இருட்டாக்குவதை"[461] தடுக்குமாறு சமூக ஊடகப் பதிவுகள் வலியுறுத்துவதைக் காண முடிந்தது. வெசாக் கொண்டாட்டங்களில் வண்ணமயமான விளக்குகள் காட்சிப்படுத்தப்படுவதுடன் வெசாக்கிற்கான ஏற்பாடுகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் ஆண்டு நிறைவோடு ஒத்துப்போகின்றன. 2022 அரகலய[462] போராட்டங்களின் போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காததைக் குறிக்கும் வகையில் கறுப்பு நிற விளக்குகள் காட்சிப்படுத்தப்பட்டன.[463]

வட கிழக்கில் உள்ள தமிழ் கத்தோலிக்க பாதிரியார்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறி அவர்கள் மீதான தாக்குதல்களிலும் கத்தோலிக்க தேவாலயத்தை குறிவைக்கும் உள்ளடக்கம் காணப்பட்டது. போரின் இறுதிக் கட்டத்தில் கொல்லப்பட்ட பொதுமக்களை தமிழர்கள் நினைவுகூரும் மே மாதத்தில் (அத்தியாயம் 2, பிரிவு 3 ஐப் பார்க்கவும்) இந்தப் பதிவுகளில் பல அவதானிக்கப்பட்டன.[464] இந்தக் கதை சொல்லும் வடிவத்தைப் பற்றி விவாதிக்கும் சமீபத்திய ஆய்வு, கத்தோலிக்க மதகுருமார்கள் விடுதலைப் புலிகளின் ஒரு பிரிவாகவும், ஆயுத மோதலின்[465] போது கிறிஸ்தவ மதகுருமார்களும் சமூகமும் ஒரு தனி அரசை உருவாக்குவதை ஆதரித்ததாகவும் கூறும் உள்ளடக்கத்தையும் எடுத்துக்காட்டுகின்றது.

## 4. இந்து - பௌத்த பாரம்பரியம் தொடர்பான மோதல்

சமூக - அரசியல் மட்டத்தில் இந்து சமூகத்தை நோக்கி இயக்கப்படும் வன்முறை மற்றும் அச்சுறுத்தலின் முக்கிய வடிவங்களைப் பிரதிபலிக்கும் வகையில், சமூக ஊடக உள்ளடக்கமும் பெரும்பாலும் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சர்ச்சைக்குரிய மத தளங்களை மையமாகக் கொண்டிருந்தது. அத்தியாயம் 2 இல் குறிப்பாக சொல்லப்பட்டபடி, மேலே குறிப்பிடப்பட்ட FoRB கணக்கெடுப்பு, பௌத்தர்கள் மற்றும் இந்துக்கள்[466] இருவரிடையேயும் மத தொல்பொருள் தளங்களின் பாதுகாப்பை ஒரு முக்கிய கவனத்திற்குரிய விடயமாக அடையாளம் கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சிங்கள பயனர்கள் "பௌத்தர்களுக்கு எதிரான கலாசார இனப்படுகொலை"

---

459 மேற்சொன்னபடி

460 புத்தரின் பிறப்பு, ஞானம் பெற்ற நாள் மற்றும் இறப்பு ஆகியவற்றை நினைவுகூரும் புத்த மத நாட்காட்டியில் குறிப்பிடத்தக்க நாள்.

461 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை

462 'போராட்டம்' என்பதற்கான சிங்கள வார்த்தை. 2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கும் அதன் பொருளாதாரக் கையாளுகைக்கும் எதிரான தொடர்ச்சியான மக்கள் போராட்டங்கள்.

463 மேற்சொன்னபடி

464 மேற்சொன்னபடி

465 சமூக ஊடகங்களில் மத சிறுபான்மையினருக்கு எதிரான தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கம்: நவம்பர் 2022 - ஆகஸ்ட் 2024, 25

466 தேசிய சமாதானப் பேரவை, மத சுதந்திரம் குறித்த கணக்கெடுப்பு 2024, 5,14

குறித்த அச்சங்களை எழுப்பினர். சர்ச்சைக்குரிய இடங்களில்[467] இந்து மத நடைமுறைகள் மற்றும் நிகழ்வுகளை எதிர்க்க சிங்கள சமூகத்தை அணிதிரட்டினர். மறுபுறம், தமிழ் பதிவுகள் ‘தமிழர் தாயகம்’[468] என்று அழைக்கப்படும் தமிழர் உரிமைகள் குறித்த செய்திகளைப் பகிர்ந்துகொண்டன.

சர்ச்சைக்குரிய இடங்களான வவுனியாவின் வெடுக்குநாறி மற்றும் முல்லைத்தீவில் உள்ள குருந்தூர்மலை ஆகியவற்றில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் முன்னேற்றங்கள் இந்த ஆண்டு ஆன்லைனில் அதிக கவனம் பெற்றிருந்தன (அத்தியாயம் 2, பிரிவு 2 ஐப் பார்க்கவும்).

பிப்ரவரி மாதம் வெடுக்குநாறிக்கு பௌத்த பிக்குகள், சிங்களக் கல்வியாளர்கள் மற்றும் இராணுவ வீரர்கள் மேற்கொண்ட வருகையை முன்னிலைப்படுத்தும் சமூக ஊடகப் பதிவுகள் தமிழ் பயனர்களிடமிருந்து விமர்சனங்களைப் பெற்றன. புத்த பிக்குகள் செருப்பு அணிந்திருப்பதும், அந்த இடத்தின் புனிதத்தை அவமதிப்பதும் குறித்து கவலைகள் எழுப்பப்பட்டன. அதே நேரத்தில் மத மாற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுகளும் எழுந்தன. சிங்கள பயனர்கள் இந்தக் கருத்துக்களை தமிழ் சமூகத்தின் ஆக்கிரமிப்பு[469] குற்றச்சாட்டுகளுடன் எதிர்த்தனர்.

மார்ச் மாதம் வெடுக்குநாறியில் சிவராத்திரி அனுசரிப்பு சீர்குலைந்ததை எடுத்துக்காட்டும் சமூக ஊடகப் பதிவுகள் மற்றும் யூடியூப் நேரடி ஒளிபரப்பு (அத்தியாயம் 2, பிரிவு 2 ஐப் பார்க்கவும்), தமிழ் பயனர்களிடமிருந்து எதிர்ப்புகளையும் தமிழ் சமூகத்தை நோக்கிய வெறுப்புப் பேச்சுகளையும் தூண்டியது. மேலும், மார்ச் மாதத்தில் சிங்கள சமூகம் “வெடுக்குநாறியை மீண்டும் கைப்பற்ற” வலியுறுத்தும் ஒருங்கிணைந்த முயற்சிகள் சமூக ஊடகங்களில் காணப்பட்டன.[470]

இதேபோன்று, குருந்தூர்மலையில் உள்ள சர்ச்சைக்குரிய இடம் குறித்த விவாதம், குறிப்பாக பௌத்தர்களும் இந்துக்களும் அங்கு தனித்தனியாக மத நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக முன்னிலைப்படுத்தப்பட்டது.[471]

## 5. புதிய பௌத்த ஆசிரியர்களும் பௌத்தத்தின் திரிபும்

முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமூகங்களைக் குறிவைக்கும் பேச்சுக்கள் முந்தைய ஆண்டுகளில் காணப்பட்டாலும், தங்களைத் தாங்களே பௌத்த மத போதர்களாக அறிவித்துக் கொள்ளும் நபர்கள் பற்றிய ஆன்லைன் உள்ளடக்கம் மிக சமீபத்திய போக்காக உள்ளது. இந்தச் சமூக ஊடகப் பதிவுகள் பெரும்பாலும் அத்தகைய நபர்கள் பௌத்த போதனைகளைத் தவறாக சித்தரிப்பதாகக் கூறி விமர்சிக்கின்றன (அத்தியாயம் 3, பிரிவு 5 ஐப் பார்க்கவும்).

467 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை

468 ராம்குமார் ரவிச்சந்திரசர்மா (சிரேஷ்ட பத்திரிகையாளர்) உடனான அமாரா நிலா.ஃப்தீனின் நேர்காணல். 28 அக்டோபர், 2024, கொழும்பு

469 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை

470 மேற்சொன்னபடி

471 ஹாஷ்டாக் ஜெனரேஷன் கவனக் குழு, அம்மாரா நிலா.ஃப்தீனுடன் கலந்துரையாடல், 23 அக்டோபர், 2024, கொழும்பு

2024 ஆம் ஆண்டில், புத்த மத நம்பிக்கைகளை அவமதித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட, தன்னைத் தானே துறவி என அறிவித்துக் கொண்ட விஸ்வ புத்தாவைச் சுற்றி சர்ச்சை எழுந்தது. புத்த மதத்தை அவமதிக்கும் உள்ளடக்கத்தை பதிவிட்டதற்காக அவர் டிசம்பர் 2023 இல் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். மேலும் நீதிமன்ற உத்தரவுகளை மீறி தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்ததற்காக ஜனவரி 2024 இல் மீண்டும் கைது செய்யப்பட்டார்.[472] ஆதரவாளர்கள் இது பேச்சு சுதந்திரத்தை மீறுவதாகக் கூறினர், அதே நேரத்தில் தீங்கு விளைவிக்கும் செய்திகளைத் தடுக்க அவரது கைது அவசியம் என்று விமர்சகர்கள் நம்பினர்.[473]

ஜனவரியில் நடந்த மற்றொரு சம்பவத்தில், மஹிந்த கொடித்துவக்கு என்பவரை வழிபடும் வீடியோக்கள் இணையத்தில் வெளிவந்தன. அவர் தன்னை மகாயான பௌத்தத்துடன் முதன்மையாகத் தொடர்புடைய தெய்வமான "அவலோகிதேஸ்வர போதிசத்வா" என்று கூறிக்கொண்டார். தெய்வ நிந்தனை குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டது தீவிர விவாதத்திற்குத் தூண்டியது. அவரது ஆதரவாளர்கள் அவரது மத உரிமைக்காக வாதிட்டனர். அதே நேரத்தில் விமர்சகர்கள் அவரைக் கண்டித்ததுடன் வன்முறைக்கு அழைப்பு விடுத்தனர்.[474]

மே மாதத்தில், கெகிராவே சுதாசன தேரர் என்றழைக்கப்படும் ஒருவர், புத்தர் இலங்கைக்கு ஒருபோதும் வரவில்லை என்று கூறினார். இந்தக் கூற்று சமூக ஊடகங்களில் கடும் எதிர்ப்பைத் தூண்டியது, சில பயனர்கள் வன்முறைக்கு அழைப்பு விடுத்து, அவர் தடை செய்யப்படவேண்டும் எனக் கோரினர்.[475]

## 6. அரசியல் மற்றும் தேர்தல் பசப்புரை

மேலே விவாதிக்கப்பட்டதைப் போன்ற கதைகளை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையில் தேர்தல் பிரச்சாரங்களும் விவாதங்களும் பெரும்பாலும் ஆதரவைப் பெறுவதற்காக "பிளவுபடுத்தும் பிரச்சினைகளைப் பயன்படுத்துகின்றன", அரசியல் ஆதாயத்திற்காக பயமுறுத்துதல், பலிக்கடா ஆக்குதல் மற்றும் களங்கப்படுத்தல்களைப் பயன்படுத்துகின்றன.[476]

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல் பிரச்சாரங்களின் போது இன மற்றும் மதக் குழுக்களை குறிவைத்து வெறுப்புப் பேச்சு மற்றும் பிரிவினைவாதப் பேச்சுக்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளன. தேர்தல் கண்காணிப்பு அமைப்பான PAFFREL இன் கூற்றுப்படி, "இனம், மதம் அல்லது இனக்குழுவின் அடிப்படையில் வாக்காளர்களை

---

472 தர்ஷன சஞ்சீவ பாலசூரிய, "சர்ச்சைக்குரிய பிக்கு விஸ்வ புத்தா மீண்டும் சிஐடியினரால் கைது," டெய்லி மிரர், 21 ஜனவரி 2024, https://www.dailymirror.lk/breaking-news/Controversial-monk-Vishwa-Buddha-arrested-again-by-CID/108-275424

473 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனரேஷனின் மாதாந்த அறிக்கை

474 மேற்சொன்னபடி

475 மேற்சொன்னபடி

476 ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம், தேர்தல் சூழலில் வெறுப்புப் பேச்சு மற்றும் வெறுப்பைத் தூண்டுதல்

செல்வாக்கு செலுத்துவதற்கான முயற்சிகள்”[477] மிகக் குறைவாகவே இருந்தன. அரசியலில் மதத்தைப் பயன்படுத்துவதில் குறைவான ஆர்வம், பொருளாதாரப் பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்துதல் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் வலுவான விதிகள் போன்ற பல காரணங்களால் இந்தச் சரிவு ஏற்பட்டிருக்கலாம் (அத்தியாயம் 2, பிரிவு 7 ஐப் பார்க்கவும்).

ஒட்டுமொத்தச் சரிவு இருந்தபோதும், தேர்தல்களின் போது சில வேட்பாளர்களை[478] ஆதரிப்பதில் இருந்து வாக்காளர்களைத் தடுக்க பிரிவினைவாத சொல்லாட்சிகள் முயன்றன. கூடுதலாக, தேர்தலுக்குப் பிந்தைய முடிவுகள் மற்றும் புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இன - மதக் குழுக்களை குறிவைத்து தீங்கு விளைவிக்கும் பேச்சுக்களைத் தூண்டின.

## 6.1 பயம் சார்ந்த பிரச்சாரம்

சில அரசியல்வாதிகள் மத மற்றும் கலாசார பதட்டங்களைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொண்டனர் (அத்தியாயம் 2, பிரிவு 7 ஐப் பார்க்கவும்) பலர் பாரம்பரிய ஊடகங்கள் மற்றும் வெளிப்படைத்தன்மை வழிமுறைகளைத் தவிர்த்து, சமூக ஊடகங்களை பெரிதும் நம்பியுள்ளனர். பாரம்பரிய ஊடக விளம்பரங்களை மட்டுப்படுத்திய புதிய பிரச்சார நிதிச் சட்டங்கள் தேர்தல்களின் போது பிளவுபடுத்தும் செய்திகளைக் குறைக்க உதவியிருக்கலாம் என்று ஊடக நிபுணர்கள் நம்புகின்றனர். ஃபேஸ்புக் போன்ற தளங்கள் வழங்கும்[479] வலுவான முறைப்பாட்டு வழிமுறைகள் டிக்டொக்கில் இல்லாததால், டிக்டொக் போன்ற தளங்கள் பிரபலமடைந்து வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சமூக ஊடகங்களில் தீவிரமான கருத்துக்களை ஊக்குவிக்கும் விளிம்புநிலை குழுக்கள் பெரும்பாலும் மத மற்றும் கலாசார பதட்டங்களைத்[480] தூண்டும் பிரிவினைவாத பிரச்சாரங்களை ஆதரிக்கின்றன. சில சிறுபான்மை அரசியல்வாதிகள், குறிப்பாக மட்டக்களப்பு போன்ற பகுதிகளில், இதுபோன்ற பிரிவினைவாத உள்ளடக்கத்தை ஆன்லைனில் உருவாக்கி பரப்ப இளைஞர்களை வேலைக்கு அமர்த்துவதாக நம்பப்படுகின்றது என்று ஊடக நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தப் பிரச்சாரங்கள் இனக்குழுக்களைக் குறிவைத்து தேர்தல்களின் போது வாக்காளர்களிடம்[481] செல்வாக்கு செலுத்த தவறான தகவல்களையும் வெறுப்புப் பேச்சையும் பயன்படுத்துகின்றன.

கொழும்பில், வலுவான சிங்கள - தேசியவாத நிலைப்பாட்டிற்கு பெயர் பெற்ற பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் சிங்கள அரசியல்வாதியுமான உதய கம்மன்பில, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளை அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்தியதாகவும், இணையத்தில் முஸ்லிம் விரோத உணர்வைத் தூண்டியதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றார்.

477 சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களுக்கான மக்கள் நடவடிக்கை (PAFFREL), “பாராளுமன்றத் தேர்தல் 2024, தேர்தல் நாள் அறிக்கை,” 14 நவம்பர் 2024, https://paffrel.com/images/2024/Media%20Releases/2024-11-14%20-%20REPORT%20ON%20ELECTION%20DAY.pdf

478 சமூக ஊடகங்களில் மத சிறுபான்மையினருக்கு எதிரான தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கம்: நவம்பர் 2022 - ஆகஸ்ட் 2024, 19

479 தமிழ் மொழி வலைதள ஆசிரியருடன் அம்மாரா நிலா்ஃப்தீனின் நேர்காணல், 12 நவம்பர், 2024, கொழும்பு முகமது ஃபைரூஸ், நேர்காணல் சிரேஷ்ட பத்திரிகையாளர்/ஊடக ஆலோசகர், நேர்காணல்.

480 முகதாசா அப்துல் வாஹித், நேர்காணல்

481 முகமது ஃபைரூஸ், நேர்காணல்

அரசாங்கம் பாரபட்சமான பாதுகாப்பு நியமனங்களைச் செய்து இரண்டு ஆணைக்குழு அறிக்கைகளை மறைத்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய உண்மைகளைத் திரித்துக் கூறியதாகவும் அவர் கூறினார். 2015 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியலில் இடம்பெற்றிருந்த முகமது இப்ராஹிம் என்ற முஸ்லிமைப் பாதுகாப்பதற்காக இது செய்யப்பட்டதாகவும், அவரது மகன்கள் தாக்குதல்களில் ஈடுபட்டதாகவும்[482] அவர் மேலும் குற்றஞ்சாட்டினார்.

கூடுதலாக, சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்று கருதப்படும் கொள்கைகளை ஆதரிப்பதாகக் கூறப்படும் சில வேட்பாளர்களை வாக்காளர்கள் ஆதரிப்பதைத் தடுக்கும் முயற்சிகளில், அச்சத்தின் அடிப்படையிலான பிரச்சாரமும் காணப்பட்டது. ஜனாதிபதியின் கூட்டணியான தேசிய மக்கள் சக்தியின் (NPP) முஸ்லிம் வேட்பாளர் ஒருவர், போதுமான ஆலோசனை இல்லாமல் LGBTQ+ நிகழ்ச்சி நிரலையும் MMDA திருத்தங்களையும் ஊக்குவித்ததாகக் கூறப்படுவது (அத்தியாயம் 3, பிரிவு 3.3 ஐப் பார்க்கவும்) காரணமாக, சமூக ஊடகங்கள் மூலம் சமூக உறுப்பினர்களால் குறிவைக்கப்பட்ட ஒரு வழக்கு இந்த விவாதங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டது.[483]

இதேபோன்று, செப்டம்பரில் அரசியலமைப்பில் பௌத்தத்திற்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாகவும், NPP உறுப்பினர்கள் மதச்சார்பின்மையை[484] ஊக்குவிப்பதாகக் கூறப்படும் அறிக்கைகளை மேற்கோள் காட்டி, ஃபேஸ்புக் பதிவுகள் அச்சங்களைத் தூண்டின. பெரும்பாலான பௌத்தர்கள் (90%) மற்றும் ஆச்சரியப்படும் விதமாக, ரோமன் கத்தோலிக்கர்களில் பாதி பேர் (50%) பௌத்தம் அரசியலமைப்பில் அதன் சிறப்பு இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று நம்புகின்றார்கள் என்று தேசிய சமாதானப் பேரவையின் கணக்கெடுப்பு காட்டுகின்றது. பௌத்தம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவது குறித்து மக்கள் கொண்டுள்ள கவலைகளை இது விளக்க உதவுகின்றது.[485]

## 6.2 தேர்தலுக்குப் பிந்தைய வெறுப்புப் போக்குகள்

தேர்தலுக்குப் பிந்தைய முடிவுகள் மற்றும் புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள், பரந்த தமிழ் சமூகம் உட்பட இன மத சிறுபான்மையினரை குறிவைத்து தீங்கு விளைவிக்கும் பேச்சுக்களைத் தூண்டின.

ஜனாதிபதித் தேர்தலின் முக்கிய வேட்பாளர்களில் ஒருவரான ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாச, இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் நடைபெற்ற வாக்குப்பதிவில் முதலிடத்தைப் பிடித்தார். மக்கள் ஆதரவு வேட்பாளர் அநுர குமார திசாநாயக்கவுக்கு வாக்களிக்க வேண்டாம் என்ற அவர்களின் முடிவு, அவர்களின் அரசியல்

482 ஹேஷ்டேக் ஜெனரேஷன், கவனக் குழு சாமிகர வீரசிங்க, "உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைப் பயன்படுத்திக் கொண்டதற்காக கம்மன்பில மீது கடும் விமர்சனம்," சண்டே அப்சேர்வர், 20 அக்டோபர் 2024, https://www.sundayobserver.lk/2024/10/20/news/35865/gammanpila-under-fire-for-exploiting-easter-attacks/; "வெளியிடப்படாத உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கைகள் குறித்து கம்மன்பில அதிர்ச்சியூட்டும் கூற்றுக்களை முன்வைக்கின்றார்," அத தெரண, https://www.adaderana.lk/news.php?nid=102835

483 முகதாசா அப்துல் வாஹித், நேர்காணல் முகமது ஃபைரூஸ், நேர்காணல்

484 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹேஷ்டேக் ஜெனரேஷனின் மாதாந்த அறிக்கை

485 தேசிய சமாதானப் பேரவை, 2024 மத சுதந்திரம் குறித்த ஆய்வு, 42

விழிப்புணர்வு மற்றும் விசுவாசத்தை கேள்விக்குள்ளாக்கும் வகையில் இணையத்தில் கேலி[486] செய்யப்பட்டது. “படிப்பறிவற்றவர்கள்”, “பசுக்கள்”, “கழுதைகள்”, “கொட்டி” (புலி - தமிழர்களை பயங்கரவாதிகள்/புலிகள் என்று குறிப்பிடுவது), “தெமல ஹௌத்த” (தமிழ் “தவறானவர்கள்”), “வத்துகர தெமலு” (மலையகத் தமிழ் சமூகத்தைக் குறிப்பிடுவது), மற்றும் “தம்பி” (முஸ்லிம்களைக் குறிவைப்பது) போன்ற இழிவான மற்றும் இனரீதியான அவதூறுகள் பரவலாகக் காணப்பட்டன.[487]

திசாநாயக்கவின் வெற்றியைத் தொடர்ந்து சமூக ஊடகங்களில் பரவசநிலை ஏற்பட்டதை விமர்சகர்கள் கவனிக்கின்றனர். சிங்கள வாக்காளர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் அதிகம் படித்தவர்களாகவும், நாட்டின் நலனில் கவனம் செலுத்துபவர்களாகவும் சித்தரிக்கப்பட்டனர். அதே நேரம் சிறுபான்மை வாக்காளர்களை அறிவில்லாதவர்கள் அல்லது சுயநலவாதிகள்[488] என்று நிராகரித்தனர்.

சில வெறுப்புப் பேச்சுக்கள் தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகளைக் குறிவைத்தும் காணப்பட்டது. மட்டக்களப்பில் முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பைத் தூண்டுவதில் முக்கிய பங்கு வகித்த பிள்ளையான் என்ற சிவநேசதுரை சந்திரகாந்தன் (அத்தியாயம் 2, பிரிவு 7 ஐப் பார்க்கவும்) மற்றும் வடக்கில் சில சிவில் சமூகம் மற்றும் அரசியல் குழுக்களால் “பொது தமிழ் வேட்பாளராக” நிறுத்தப்பட்ட பி. அரியநேத்திரன் ஆகியோர் இதில் அடங்குவர். முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோரும் “தம்பியா”[489] போன்ற அவதூறுகள் மூலம் குறிவைக்கப்பட்டனர்.

பாராளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதியின் கூட்டணியான NPP மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றதுடன் சிறுபான்மையினரின் வாக்களிக்கும் முறைகள் மாற்றத்தைப் பிரதிபலித்தன. இலங்கை வரலாற்றில் முதன்முறையாக, வடக்கின் பெரும்பான்மையான மக்கள் பெரும்பாலும் சிங்கள - பௌத்தர்களைக் கொண்ட ஒரு கட்சிக்கு வாக்களித்தனர். மலையகத் தமிழர்கள் அதிகம் வசிக்கும் மத்திய மாகாணத்திலும் தேசிய மக்கள் சக்தி குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றது.[490] இருப்பினும், பெரும்பான்மையினருடன் ஒத்துப்போகும் வகையில் சிறுபான்மையினர் வாக்களித்த விதத்தில் ஏற்பட்ட மாற்றம், முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் மீது அவர்களின் சொந்த சமூகங்களுக்குள் இருந்தவர்களிடமிருந்தும் கூட தாக்குதல்களுக்கு வழிவகுத்தது.

நவம்பர் மாதத்தில், சமூக ஊடகங்களில் வெறுப்புப் பிரச்சாரங்கள் வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள வாக்காளர்களைக் குறிவைத்து, பாரம்பரிய சிறுபான்மை கட்சிகளைப் பலவீனப்படுத்தியதாக அவர்களைக் குற்றம் சாட்டின. முஸ்லிம்கள் பெரும்பாலும்

486 நாலக குணவர்தன, நேர்காணல் முகதாசா அப்துல் வாஹித், நேர்காணல் ஹாஷ்டாக் ஜெனரேஷன், கவனக் குழு

487 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை

488 முகதாசா அப்துல் வாஹித், நேர்காணல் தேவக சேனாநாயக்க, “இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் பிராந்திய பிளவைப் பிரதிபலித்தது,” தி டிப்ளமோட், 19 அக்டோபர், 2024, https://thediplomat.com/2024/10/sri-lankas-presidential-election-reflected-a-regional-divide/

489 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை

490 ஆர்.கே. ராதாகிருஷ்ணன், “தேசிய மக்கள் சக்திக்கு வரலாற்று சிறப்புமிக்க அதிகப் பெரும்பான்மையை இலங்கை வழங்குகின்றது, திசாநாயக்கவின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை ஆதரிக்கின்றது,” தி இந்து, 15 நவம்பர் 2024, https://frontline.thehindu.com/news/sri-lanka-election-2024-npp-victory-dissanayake-reforms-tamil-support-parliament-majority-economic-agenda/article68871257.ece

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்ததற்காக விமர்சனங்களையும் எதிர்கொண்டனர், பின்னர் அந்தக் கட்சி அவர்களுக்கு அமைச்சர் பதவியை வழங்கத் தவறிவிட்டது[491]. இந்தப் பின்னடைவு முஸ்லிம் சமூகத்திற்குள்ளும் வெளியாட்களிடமிருந்தும் வந்தது. சில சமூக ஊடகப் பதிவுகள் முஸ்லிம் அமைச்சர்கள் இல்லாததைக் கொண்டாடின, இது இலங்கையின் வரலாற்றில் “தூய்மையான” அமைச்சரவை என்று அழைத்தன.[492]

தேர்தல்களைத் தொடர்ந்து பதட்டங்களை உருவாக்குவதில் தவறான தகவல்கள், வதந்திகள் மற்றும் பிரச்சாரங்கள் முக்கிய பங்கைக் கொண்டிருந்தன. பௌத்தத்திற்கு முன்னுரிமை அளிக்கும் அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளை நீக்குவது குறித்த வதந்திகள் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக ஆன்லைனில் வெறுப்புப் பேச்சு அலையை ஏற்படுத்தியதாகவும், பௌத்தர்கள் தங்கள் கலாசார முக்கியத்துவத்தை இழக்க நேரிடும்[493] என்ற அச்சத்தை வெளிப்படுத்தியதாகவும் ஊடக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதேபோல், மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை என்று கூறி, ஜனாதிபதி திசாநாயக்க கையொப்பமிடப்பட்டதாகக் கூறப்படும் ஒரு கடிதம் (அத்தியாயம் 2, பிரிவு 3 ஐப் பார்க்கவும்) மற்றும் கண்டி பெரஹரா இரத்து[494] செய்யப்பட்டதாக வதந்திகள் சமூக ஊடகங்களில் பரவி வந்தன. இது அரசாங்கத்தின் மீதான வெறுப்புப் பேச்சு மற்றும் விமர்சனத்தையும்[495] தூண்டியது.

## 7. ஊடகங்களில் இன - மதக் குழுக்களின் பிரதிநிதித்துவமும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளும்

சமூக ஊடகங்கள் மிகவும் பிரபலமடைந்து, மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் பற்றிய பொதுமக்களின் கருத்தை வெளிப்படுத்தினாலும், இலங்கையில் மக்கள் தங்கள் செய்திகளைப் பெறுவதில் பாரம்பரிய ஊடகங்கள் இன்னும் முக்கிய பங்கு வகிக்கின்றன. 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பு, 96% மக்கள் தொடர்ந்து செய்திகளுக்காக தொலைக்காட்சியைப்[496] பார்ப்பதாகக் காட்டியது. அச்சிடப்பட்ட பத்திரிகைகள் குறிப்பாக வயதானவர்கள், அதிகம் படித்தவர்கள் மற்றும் நகர்ப்புற வாசகர்கள்[497] மத்தியில் இன்னும் பிரபலமாக உள்ளன என்று 2024 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பு சுட்டிக்காட்டியது. பாரம்பரிய ஊடகங்கள் பொதுமக்களின் கருத்தை வலுவாகப் பாதிப்பதால், வெவ்வேறு மத மற்றும் இனக்குழுக்கள்

491 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை முகமது ஃபைரூஸ், நேர்காணல்

492 சமூக ஊடகங்களில் தீங்கு விளைவிக்கும் பேச்சு, ஹாஷ்டாக் ஜெனெரேஷனின் மாதாந்த அறிக்கை

493 ராம்குமார் ரவிச்சந்திரசர்மா, நேர்காணல்

494 புத்தரின் புனித பல் நினைவுச்சின்னத்தைக் கௌரவிக்கும் பௌத்த நாட்காட்டியில் ஒரு முக்கிய பண்டிகை.

495 முகமது ஃபைரூஸ், நேர்காணல்

496 நாலக குணவர்தன, இலங்கை ஊடகப் பார்வையாளர் ஆய்வு 2019: மோசமான காலங்களில் செய்தியைப் பெறுதல், (சர்வதேச ஊடக ஆதரவு, நவம்பர் 2020), https://www.mediasupport.org/wp-content/uploads/2021/02/Sri-Lanka-Media-Audience-Study-2019-Low-Res.pdf, 23-24

497 கயான் மதுஷங்கா மற்றும் பலர், இலங்கையில் அச்சு ஊடகங்களின் வாசகர் கணக்கெடுப்பு 2024: விசுவாசமான வாசகர் தளத்திற்கான மக்கள் பண்புகள், உள்ளடக்கம் தொடர்பான விருப்பங்கள் மற்றும் நடத்தைகள் குறித்த விபரங்கள், (இலங்கை வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு தொழில்நுட்பத் துறை, அக்டோபர் 2024), https://www.researchgate.net/publication/384928539_Print_Media_Readership_Survey_2024_in_Sri_Lanka_Demography_Content_Preferences_and_Behavioral_Insights_for_a_Loyal_Readership_Base> 19-22

மற்றும் FoRB தொடர்பான பிரச்சினைகளை அது எவ்வாறு சித்தரித்துள்ளது என்பதற்கான முக்கிய போக்குகளைப் பார்ப்பது அவசியமாகும்.

## 7.1 ஊடக உரிமை, பன்முகத்தன்மை மற்றும் பாரபட்சமற்ற தன்மை

சமூக ஊடகங்களில் இன மத சமூகங்களைக் குறிவைத்து வெறுப்புப் பேச்சு குறைந்து வருவதைப் பிரதிபலிக்கும் வகையில், அரசியல் விவாதங்கள் மற்றும் ஊடகங்களில் வெறுப்புப் பேச்சு குறைந்து வருவதை[498] ஊடக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த நேர்மறையான மாற்றம் இருந்தபோதிலும், இலங்கையில் ஆழமாக வேரூன்றிய ஊடகப் போக்குகள் - இன மதக் குழுக்களின் ஒரே மாதிரியான கருத்துக்கள் மற்றும் தப்பெண்ணங்களை நிலைநிறுத்தியதாகக் கருதப்படுகின்றன - FoRB தொடர்பான விடயங்களில் பொறுப்பான அறிக்கையிடலைத் தொடர்ந்து தடுக்கின்றன.

இலங்கையில் ஊடக உரிமையின் தன்மை, பன்முகத்தன்மை மற்றும் பாரபட்சமற்ற தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் மற்றும் ஆழமான சார்புகளை ஊக்குவிக்கும்[499] ஆற்றலுடன் ஒரு முக்கிய கவலையாக ஊடக கண்காணிப்பு அமைப்புகளால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதை எடுத்துக்காட்டும் வகையில், 2018 ஆம் ஆண்டு வெரிட்டே ஆய்வில் இலங்கை பிரஜைகளில் ஐந்தில் ஒருவருக்கும் குறைவானவர்களே அரசியல் கட்சிகளால் செல்வாக்குச் செலுத்தப்படாத ஊடகங்களை[500] அணுகுவதாக முடிவுக்கு வந்தது. அரசாங்கத்திற்குச் சொந்தமான ஊடகங்கள் இந்தத் துறையில் ஆதிக்கம் செலுத்துகின்றன. மேலும் அவை பொதுவாக ஆளும் கட்சியின் விளம்பரக் கருவிகளாகக் கருதப்படுகின்றன. பத்திரிகையாளர்களுக்கு மிகக் குறைந்த சுதந்திரம்[501] உள்ளது. இதேபோல், தனியார் ஊடக நிறுவனங்களும் தங்கள் உரிமையாளர்களால் விரும்பப்படும் உள்ளடக்கத்தை வெளியிடுகின்றன. அது அரசாங்கத்திற்கு ஆதரவானதாக இருந்தாலும் சரி அல்லது எதிர்க்கட்சிக்கு ஆதரவானதாக இருந்தாலும் சரி. தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான தொலைக்காட்சி வலையமைப்புகள் தான் அதிக எண்ணிக்கையிலான தொலைக்காட்சி பார்வையாளர்களைக்[502] கொண்டிருப்பதாகக் கருதப்படுவதால் இது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் ஊடகங்கள் பெரும்பாலும் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் மற்றும் ஆன்லைன் ஊடகங்கள் போன்ற பல தளங்களை வைத்திருக்கும் ஒரு சில சக்திவாய்ந்த குழுக்களால்[503] கட்டுப்படுத்தப்படுகின்றன என்று ஊடக நிபுணர்கள் கூறுகின்றனர். அச்சு ஊடகங்களில் முதன்மையான நான்கு

498 அமந்த பெரேராவின் "பழைய அரசியல் தலைவர்கள் போன்று இலங்கையின் பாரம்பரிய ஊடகங்களும் கைவிடப்படும் அபாயத்தில் உள்ளன" என்ற கட்டுரையில் தீபாஞ்சலி அபேவர்தனவை மேற்கோள் காட்டியுள்ளார், ஹிமால் சவுத் ஏசியன், 4 டிசம்பர் 2024, https://www.himalmag.com/politics/sri-lanka-media-freedom-politics-memes-aragalaya-protests-election

499 ஊடகத்தின் நிலை: இலங்கை 2024" எல்லைகளற்ற நிருபர்கள், ஜனவரி 25 அன்று அணுகப்பட்டது, https://rsf.org/en/country/sri-lanka

500 "ஊடக உரிமை கண்காணிப்பு இலங்கை - 20180," வெரிட்டே ரிசேர்ச், 8 நவம்பர் 2018, https://sri-lanka.mom-gmr.org/

501 அமந்த பெரேரா, "பழைய அரசியல் தலைவர்கள் போன்று இலங்கையின் பாரம்பரிய ஊடகங்களும் கைவிடப்படும் அபாயத்தில் உள்ளன"

502 "இலங்கை ஊடக வழிகாட்டி", பிபிசி செய்திகள், 4 அக்டோபர் 2024, https://www.bbc.com/news/world-south-asia-12000330

503 ஹாஷ்டாக் ஜெனரேஷன் கவனக் குழு ராம்குமார் ரவிச்சந்திரசர்மா, நேர்காணல்

உரிமையாளர்கள் மொத்த வாசகர்களில் 75 சதவீதமானவர்களைக் கொண்டுள்ளனர்.[504] இது அவர்களுக்கு பொதுமக்களின் கருத்தில் செல்வாக்கைச் செலுத்தவும், செய்திகளில் வேறான கோணங்களைக் கட்டுப்படுத்தவும், பக்கச்சார்பான அறிக்கையிடலுக்கான[505] வாய்ப்புக்களையும் வழங்குகின்றது.

இந்த வடிவங்கள் புலம்பெயர் ஊடகங்களிடையேயும் தெளிவாகத் தெரிவதுடன், அவற்றில் சில குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரல்களுடன்[506] ஒத்துப்போகும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு புலம்பெயர்ந்த தமிழர்கள் நிர்வகிக்கும் செய்தி தளங்களின் சுருக்கமான கண்ணோட்டம், போர்க்கால நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான அழைப்புகள் மீது வலுவான முக்கியத்துவத்தையும், மக்களிடையே தமிழ் தேசியத்தின் பிரபலத்தை எடுத்துக்காட்டும் வகையில் செய்தி வெளியிடுவதையும் காட்டுகின்றது. இதில் விடுதலைப் புலிகளின் தலைவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் மற்றும் போருடன் தொடர்புடைய தமிழர் நினைவு நிகழ்வுகள் பற்றிய விரிவான செய்திகளும் அடங்கும்.

முஸ்லிம் புலம்பெயர்ந்தோர் ஆதரவு பெற்ற தளங்கள் MMDA சீர்திருத்தங்களை எதிர்ப்பதையும், ஆர்வலர்களை இஸ்லாத்தின் துரோகிகள் என்று அழைப்பதையும், பொதுக் கருத்தை வடிவமைக்க பயத்தைப் பயன்படுத்துவதையும் காணலாம். (அத்தியாயம் 3, பிரிவு 3.3 ஐப் பார்க்கவும்). பல செயற்பாட்டாளர்களின் ஒழுக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கி, அவர்கள் மேற்கத்திய சித்தாந்தங்களைத் திருப்திப்படுத்துவதாகக் குற்றஞ்சாட்டும் அவதூறு பிரச்சாரங்களால் அவர்கள் குறிவைக்கப்பட்டுள்ளனர்.[507]

## 7.2 பிரிக்கப்பட்ட ஊடகங்கள்

ஊடக உரிமையாளர்களின் சார்புகளைத் தவிர, இலங்கை ஊடகங்களும் மொழி, பிராந்தியம் மற்றும் பார்வையாளர்[508] நலன்களால் பிரிக்கப்பட்டுள்ளன என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. இது மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் தொடர்பான பிரச்சினைகளில் அவர்கள் எவ்வாறு அறிக்கையிடுகின்றார்கள் என்பதைப் பாதிக்கின்றது.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சர்ச்சைக்குரிய மதத் தலங்கள் குறித்து ஊடகங்கள் எவ்வாறு செய்தி வெளியிடுகின்றன என்பதில் இந்த நிலைமை காணப்படுகின்றது. சில பிராந்திய மற்றும் புலம்பெயர்ந்தோர் நிதியளிக்கும் நிறுவனங்கள் பெரும்பாலும் முழுமையற்ற அல்லது மிகைப்படுத்தப்பட்ட செய்திகளை வெளியிடுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர். இதற்கிடையில்,

504 ஊடக உரிமை கண்காணிப்பு இலங்கை - 2018," வெரிட்டே ரிசேர்ச்

505 தீபாஞ்சலி அபேவர்தன (ஊடக ஆய்வுக் குழுவின் தலைவர், வெரிட்டே ரிசேர்ச்) உடனான அமாரா நிலா.ஃப்தீனின் நேர்காணல், 29 அக்டோபர் 2024; நாலக குணவர்தன, நேர்காணல்

506 ஹாஷ்டாக் ஜெனரேஷன் கவனக் குழு ராம்குமார் ரவிச்சந்திரசர்மா, நேர்காணல்

507 முகதாசா அப்துல் வாஹித், நேர்காணல் "முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டத்தை ஆராய்தல்: ஆன்லைன் கருத்துகள் மற்றும் உரையாடலை வழிநடத்துதல்," ஹாஷ்டாக் ஜெனெரேஷன், 2 ஏப்ரல் 2024, https://hashtaggeneration.org/exploring-the-muslim-marriage-and-divorce-act-navigating-online-discourse-and-dialogue/

508 நாலக குணவர்தன, "இலங்கை ஊடகப் பார்வையாளர் ஆய்வு 2019: மோசமான காலங்களில் செய்திகளைப் பெறுதல்" ; "இலங்கை ஊடகங்களில் இனம் மற்றும் மொழியைப் பயன்படுத்தி பிளவுபடுத்துதல்: "எதிக்ஸ் ஐ" மற்றும் "தி டிவைட்" ஆகியவற்றால் முன்னிலைப்படுத்தப்பட்ட ஒரு சிக்கல், வெரிட்டே ரிசேர்ச், செப்டம்பர் 2021, https://www.veriteresearch.org/wp-content/uploads/2021/09/VR_RB_ENG_Sep2021_Racial-Profiling-and-Language-Polarisation-in-Sri-Lankan-Media-1.pdf

சிங்கள ஊடகங்கள் இன்னும் தேசியவாதக் கருத்துக்களை ஊக்குவிக்கவும், கோட்டாபய ராஜபக்'வின் ஆட்சிக் காலத்திலிருந்தே கருத்துக்களை மீண்டும் மீண்டும் வெளியிடவும் முனைகின்றன (அத்தியாயம் 2, பிரிவு 2 ஐப் பார்க்கவும்).[509]

வவுனியாவில் சர்ச்சைக்குரிய இடத்தில் சீர்குலைந்த மகா சிவராத்திரி நிகழ்வு குறித்து சிங்கள மற்றும் தமிழ் பத்திரிகைகள் செய்தி வெளியிட்ட விதம் குறித்த வெரிட்டே மீடியாவின் பகுப்பாய்வு இதைப் பிரதிபலிக்கின்றது (அத்தியாயம் 2, பிரிவு 2 ஐப் பார்க்கவும்) சிங்களப் பத்திரிகையான லங்காதீப, இந்த நிகழ்வை "ஆத்திரமூட்டும் வகையில் நடந்து கொண்ட" "தமிழ் அரசியல்வாதிகள் குழுவால்" ஏற்பாடு செய்யப்பட்ட "அங்கீகரிக்கப்படாத விழா" என்று குறிப்பிட்டது. அதே நேரம் தமிழ் பத்திரிகையான வீரகேசரி, ஏற்பாட்டாளர்களை "ஐந்து தலைமுறைகளாக ஆதி லிங்கேஸ்வரரை வணங்கும்" மற்றும் "பக்தியுடன் மத அனுஷ்டானங்களில் ஈடுபடும்" பக்தர்கள் என்று குறிப்பிட்டதுடன் அவர்கள் காவல்துறையினருடன்[510] "பணிவுடன்" நடந்துகொண்டதாகக் குறிப்பிட்டது.

இந்த ஆண்டு, MMDA பற்றிய ஊடக அறிக்கைகள் இதேபோன்ற வடிவங்களைக் காட்டின. சில சிங்கள மற்றும் தமிழ் அரச தொலைக்காட்சி அலைவரிசைகளைப் பற்றிய வெரிட்டே பகுப்பாய்வில், அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் இந்தச் சட்டத்தை அரசாங்கம் மாற்றாது என்று (அத்தியாயம் 3, பிரிவு 3.3 ஐப் பார்க்கவும்) கூறியபோது, தமிழ் தொலைக்காட்சிகள் மட்டுமே அதை வெளியிட்டன, அதேநேரம் சிங்களத் தொலைக்காட்சிகள் [511] அதைச் செய்யவில்லை என்பதைக் கண்டறிந்தது. இது முஸ்லிம்கள் பற்றிய பிரச்சினைகளை வெளியிடுவதில் சிங்கள ஊடகங்கள் குறைந்த ஆர்வம் காட்டக்கூடும் என்பதைக் குறிக்கின்றது.

## 7.3 இன - மத அடிப்படையில் மதிப்பிடுதல்

ஊடகத் துறை நீண்டகாலமாக ஒரு சார்பு நிலையைக் கொண்டுள்ளது, இது மக்களை அவர்களின் இனம் மற்றும் மதத்தின் அடிப்படையில் மதிப்பிடுவதற்கு வழிவகுத்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பிறகும் கோவிட்-19 தொற்றுநோய்[512] காலத்திலும் இது அதிகரித்தது. இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தால் வகுக்கப்பட்ட நெறிமுறைகள், பத்திரிகையாளர்கள் "செய்திக்கு நேரடியாகப் பொருத்தமானவையாக இல்லாவிட்டால் இனம், நிறம், மதம்... பற்றிய பாரபட்சமான அல்லது இழிவான குறிப்புகளைத் தவிர்க்க வேண்டும்"[513] என்று குறிப்பிடுகின்றது. இருப்பினும், இலங்கை ஊடகங்கள் பெரும்பாலும் சிறுபான்மை அடையாளங்களில் எதிர்மறையான வழியில் கவனம் செலுத்துகின்றன, அது பொருத்தமற்றதாக

509 ராம்குமார் ரவிச்சந்திரசர்மா, நேர்காணல் நாலக குணவர்தன, நேர்காணல்

510 "வவுனியாவில் சர்ச்சைக்குள்ளான புனிதத் தலம், தி டிவைட், வெரிட்டே மீடியா, https://media.veriteresearch.org/features/the-divide/contested-sacred-site-in-vavuniya-contested-coverage/, பிப்ரவரி 2025 அணுகப்பட்டது,

511 "முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு, தி டிவைட், வெரிட்டே மீடியா, https://media.veriteresearch.org/features/the-divide/governments-stance-on-the-muslim-marriage-divorce-act-mmda/, பிப்ரவரி 2025 அணுகப்பட்டது.

512 இலங்கை ஊடகங்களில் இனம் மற்றும் மொழியைப் பயன்படுத்தி பிளவுபடுத்துதல், வெரிட்டே ரிசேர்ச்

513 "இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தின் தொழில்முறை நடைமுறை விதிகள் (நெறிமுறைகள் விதிகள்)," 2016, https://www.fmmsrilanka.lk/wp-content/uploads/2019/05/2016-Code-of-Professional-Practice_Eng.pdf

இருந்தாலும் கூட என்று ஆய்வுகள் காட்டுகின்றன.[514]

சமீப ஆண்டுகளில் இந்த நடைமுறையில் ஊக்கமளிக்கும் சரிவு ஏற்பட்டுள்ள போதிலும், சில நிகழ்வுகள் ஊடகங்களின் சில பிரிவுகளிடையே இந்தப் போக்கு தொடர்கின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

ஊடக நெறிமுறை மீறல்களைச் சரிபார்க்கும் வெரிட்டேயின் "எதிக்ஸ் ஐ", சிங்கள தேசியவாத கருத்துக்களுக்குப் பெயர் பெற்ற சிங்களப் பத்திரிகையான திவயின, அறுகம்பே சம்பவத்தை (பிரிவு 2 ரூ அத்தியாயம் 2, பிரிவு 8 ஐப் பார்க்கவும்) "இஸ்லாமிய பயங்கரவாதக் குழு" இலங்கையில் இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளது போன்று செய்தி வெளியிட்டதாகக் கண்டறிந்தது. ஆனால் அரசாங்க விசாரணைகள் இந்தச் சம்பவம் பயங்கரவாதத்துடன் தொடர்புடையது அல்ல, என்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்துடன்[515] தொடர்புடையது என்றும் குறிப்பிட்டது.

FoRB தொடர்பான பிரச்சினைகளின் உள்ளடக்கம், உரிமையாளர் சார்பு மற்றும் ஆர்வமின்மையால் மட்டுமன்றி வளங்கள், பயிற்சி மற்றும் தொழில்முறை பற்றாக்குறையாலும் பாதிக்கப்படுகின்றது. உண்மைச் சரிபார்ப்புக் குழுக்களில் பெரும்பாலும் போதுமான ஊழியர்கள் அல்லது விரைவான பதில் அமைப்புகள் இல்லை என்று ஊடக நிபுணர்கள் கூறுகின்றனர், எனவே திருத்தங்கள் செய்யப்படுவதற்கு[516] முன்பு தவறான தகவல்கள் பரவுகின்றன. இது அறிக்கையிடலின் தரம் மற்றும் நியாயத்தைக் குறைத்து சார்புக்கு[517] வழிவகுக்கின்றது. இருப்பினும், புதிய NPP அரசாங்கம் ஊடகப் பிரச்சினைகளைச் சரிசெய்வதில் சிறிது ஆர்வம் காட்டியுள்ளது. அவர்களின் தேர்தல் அறிக்கையானது, சார்புடைய வெகுஜன ஊடகங்களை விமர்சித்தது மற்றும் பத்திரிகையாளர்களின் தொழில்முறை நேர்மையைப்[518] பாதுகாப்பதாக உறுதியளித்தது.

பாராளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து, அரசாங்கத்தால் நடத்தப்படும் அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஆ.ஃப் சிலோன் லிமிடெட், அதன் பத்திரிகைகளுக்கு தலைமை ஆசிரியர் பதவிகளை நிரப்ப விண்ணப்பங்களைக் கோரியதாகக் கூறப்படுகின்றது. கடந்த காலங்களில் இந்தப் பதவிகள் பொதுவாக அரசியல் நியமனங்களால்[519] நிரப்பப்பட்டன. மேலும் உத்தியோகபூர்வ ஊடக அடையாள அட்டைகளை வழங்கும் செயல்முறையை ஒழுங்குபடுத்துவதில் அரசாங்கமும் தொழில்துறை குழுக்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று பத்திரிகையாளர்கள் வலியுறுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது. பல ஆண்டுகளாக இந்த அங்கீகாரங்கள் அவற்றின்

---

514 இலங்கை ஊடகங்களில் இனம் மற்றும் மொழியைப் பயன்படுத்தி பிளவுபடுத்துதல், வெரிட்டே ரிசேர்ச்

515 வெரிட்டே மீடியா (@media.veriteresearch), "அக்டோபர் 23 அன்று, #lka இல் உள்ள #ArugamBay பகுதியில் தாக்குதல் நடத்தப்படும் என்ற நம்பகமான அச்சுறுத்தல் காரணமாக பல வெளிநாட்டு தூதரகங்கள் பயண ஆலோசனையை வெளியிட்டன. இதை "இஸ்லாமியத் தாக்குதல்" என்று எந்தச் சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது என்பதைப் பார்க்க ஸ்வைப் செய்யவும்", அக்டோபர் 26, 2024, https://www.instagram.com/p/DBlpjMrouPv/?utm_source=ig_web_copy_link&igsh=MzRlODBiNWFlZA%3D%3D&img_index=1

516 முகமது ஃபைரூஸ், நேர்காணல்;

517 முகமது ஃபைரூஸ், நேர்காணல்; சுயாதீன ஊடகங்களை ஆதரிக்கும் இலாப நோக்கற்ற நிறுவனத்தின் முக்கிய உறுப்பினருடன் அமாரா நிலாஃப்தீனின் நேர்காணல், 18 நவம்பர், 2024

518 தேசிய மக்கள் சக்தியின் (NPP இலங்கை) தேர்தல் அறிக்கை, ஒரு செழிப்பான தேசம், ஒரு அழகான வாழ்க்கை, (NPP இலங்கை, ஆகஸ்ட் 2024), https://www.npp.lk/up/policies/en/npppolicystatement.pdf, 1 செப்டம்பர் 2024 அன்று அணுகப்பட்டது

519 அமந்த பெரேராவின் "பழைய அரசியல் தலைவர்கள் போன்று இலங்கையின் பாரம்பரிய ஊடகங்களும் கைவிடப்படும் அபாயத்தில் உள்ளன" கட்டுரையில் தீபாஞ்சலி அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்

நம்பகத்தன்மையை இழந்தன. ஏனெனில் அடுத்தடுத்த அரசாங்கங்கள் ஊடகவியலாளர்கள் என்ற அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல்[520] தங்கள் ஆதரவாளர்களுக்கு ஊடக அடையாள அட்டைகளை வழங்கியதாக அறியப்படுகின்றது.

மத மற்றும் இன சிறுபான்மையினர் குறித்து சிறந்த செய்திகளை வெளியிடுவதற்கு மாற்று சிங்கள ஊடக நிறுவனங்கள் அழுத்தம் கொடுப்பது நேர்மறையான முன்னேற்றமாகக் கருதப்படுகின்றது.[521] சிங்கள ஊடகவியலாளரான தரிந்து ஜெயவர்தனவால் 2019 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மீடியாஎல்கே (MediaLK) புலனாய்வு அறிக்கையிடலில் கவனம் செலுத்தும் அவ்வாறான ஒரு ஊடகமாகும். ஊழல், மனித உரிமை பிரச்சினைகள் மற்றும் இன மத சிறுபான்மையினரைப் பாதிக்கும் விடயங்கள் பெரும்பாலும் பரந்த சிங்கள ஊடகங்களால்[522] கவனிக்கப்படுவதில்லை.

இந்த நடவடிக்கைகள் மற்றும் தளங்களுக்கான ஆதரவு, இன மத சமூகங்கள் மற்றும் FoRB உட்பட சமநிலையான அறிக்கையிடலுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கக்கூடும்.

520 அமந்த பெரேரா, "பழைய அரசியல் தலைவர்கள் போன்று இலங்கையின் பாரம்பரிய ஊடகங்களும் கைவிடப்படும் அபாயத்தில் உள்ளன"

521 நாலக குணவர்தன, நேர்காணல்

522 அமந்த பெரேரா, "பழைய அரசியல் தலைவர்கள் போன்று இலங்கையின் பாரம்பரிய ஊடகங்களும் கைவிடப்படும் அபாயத்தில் உள்ளன"

# மதிப்பெண் மற்றும் RAG கணிப்பீடு

ஒவ்வொரு துணைக் குறிகாட்டியும் 1-10 என்ற அளவில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. திரட்டப்பட்ட மதிப்பெண்களின் சராசரி ஒவ்வொரு முக்கிய குறிகாட்டிக்கும் மதிப்பெண்ணைத் தீர்மானிக்கின்றது.

(மேலதிக விபரங்களுக்கு பிரிவு 2 இல் "குறிகாட்டிகள் மற்றும் மதிப்பெண்/ஆராய்ச்சி முறையை" பார்க்கவும்).

"இன - மதக் குழுக்களின் பிரதிநிதித்துவம் மற்றும் பிரதான ஊடகங்களின் கவலைகள்" தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட தரவு கிடைப்பதன் காரணமாக அந்தக் குறிகாட்டிக்கான மதிப்பீட்டையோ மதிப்பெண்ணையோ இந்த அத்தியாயம் வழங்கவில்லை. (மேலும் விபரங்களுக்கு 'வரம்புகள்/ஆராய்ச்சி முறை' குறித்த பிரிவு 3 ஐப் பார்க்கவும்)

| குறியீடு | மதிப்பெண் | விளக்கம் | RAG கணிப்பீடு |
|---|---|---|---|
| **குறிகாட்டி 1: சமூக ஊடக உள்ளடக்கங்கள், சமூகங்களை அணிதிரட்டி, ஒரு இன - மதக் குழுவிற்கு எதிராக நேரடி நடவடிக்கை எடுக்க அழைப்பு விடுப்பதற்கான சான்றுகள்.** | | | |
| 1. இன - மத குழுக்களுக்கு எதிரான பிரச்சாரங்களை உள்ளடக்கம் திட்டமிட்டதற்கான ஆதாரங்கள் உள்ளதா? | 6 | 2024 ஆம் ஆண்டு சமூக ஊடக உள்ளடக்கம், வவுனியாவின் வெடுக்குநாறி மற்றும் முல்லைத்தீவின் குருந்தூர்மலையில் உள்ள சர்ச்சைக்குரிய மதத் தளங்கள் தொடர்பாக மட்டுமே FoRB ஐ பாதிக்கும் ஒருங்கிணைந்த பிரச்சாரங்களைக் குறிக்கின்றது. | |
| 2. மத நம்பிக்கைகள் அல்லது அடையாளத்திற்காக குழுக்கள் அல்லது தனிநபர்களுக்கு எதிராக வன்முறையை ஊக்குவிக்கும் உள்ளடக்கம் இருப்பதற்கான ஆதாரம் உள்ளதா? | 5 | கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்களுக்கும், புத்த மதத்தை திரிபுபடுத்துவதாகக் கருதப்படும் பௌத்த மத போதகர்களுக்கும் எதிராக வன்முறைக்கு அழைப்பு விடுக்கும் சில உள்ளடக்கங்கள் தெளிவாகத் தெரிகின்றன. கூடுதலாக, வண. ராஜாங்கனே சத்த ரதன தேரர் உட்பட, போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராகவும் வன்முறைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. | |
| 3. சட்டப்பூர்வமான வழிபாட்டுக் கூட்டம் அல்லது மதச் சடங்குகளுக்கு உடல் ரீதியான இடையூறு விளைவிக்கும் உள்ளடக்கத்திற்கான ஆதாரம் உள்ளதா? | 6 | சமூக ஊடகங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட பிரச்சாரம் பதட்டங்களை அதிகரித்ததற்கு பங்களித்திருக்கலாம் என்பதற்கான சில அறிகுறிகள் காணப்படுகின்றன. குறிப்பாக வவுனியாவின் வெடுக்குநாறியில் இந்து பக்தர்களின் வழிபாட்டுக்கான அணுகலைப் பாதித்தது. இருப்பினும், இது எந்த அளவிற்கு நடந்தது என்பது தெளிவாகத் தெரியவில்லை. | |

| | | | |
|---|---|---|---|
| 4. வன்முறை அல்லது வகுப்புவாத கலவரங்களுக்கு வழிவகுக்கும் உள்ளடக்கத்திற்கான ஆதாரம் உள்ளதா? | 9 | வன்முறை அல்லது வகுப்புவாத கலவரங்களுக்கு வழிவகுக்கும் உள்ளடக்கத்திற்கான எந்த ஆதாரமும் இல்லை. | |
| **குறிகாட்டி 2: இன - மத அடையாளத்திற்காக தனிநபர்கள் அல்லது குழுக்களை குறிவைத்து வெறுப்பு பேச்சு பரப்பப்பட்டதற்கான சான்றுகள்.** | | | |
| 1. தீங்கிழைக்கும் நோக்கத்துடன் ஒரு இனக்குழுவை கேலி செய்யும் அல்லது விமர்சிக்கும் உள்ளடக்கம் இருப்பதற்கான ஆதாரம் உள்ளதா? | 4 | முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான வெறுப்புப் பேச்சு (பிரிவு 2) மற்றும் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ சமூகம் மீதான தாக்குதல்கள் (பிரிவு 3), குறிப்பாக இழிவான மொழியைப் பயன்படுத்துவது என்பன இதைப் பிரதிபலிக்கின்றன. தேர்தல் முடிவுகள் குறித்து சிறுபான்மை இன மதக் குழுக்களை நோக்கிய வெறுப்புப் பேச்சு (பிரிவு 6.2) குறிப்பிடத்தக்கது. | |
| 2. ஒரு குறிப்பிட்ட இன - மதக் குழுவுடன் தொடர்புடைய கலாசார நடைமுறைகள் மற்றும் நம்பிக்கைகளை இழிவுபடுத்தும் உள்ளடக்கம் இருப்பதற்கான சான்றுகள் உள்ளதா? | 5 | குறிப்பாக இஸ்லாமிய பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் முஸ்லிம் சமூகத்தைக் குறிவைக்கும் வெறுப்பு பேச்சுகள் தெளிவாகத் தெரிகின்றன (பிரிவு 2.2). | |
| 3. அரசியல் ரீதியாக நோக்கம் கொண்ட வெறுப்புப் பேச்சு அரசியல் விளைவை ஏற்படுத்துவதற்கு ஆதாரம் உள்ளதா? | 8 | இது தொடர்பான ஒரு சில அறிக்கைகள், குறிப்பாக பிராந்திய மட்டத்தில் (பிரிவு 6.1) உள்ளன. ஆனால் அரசியல் ரீதியாகத் தூண்டப்பட்ட வெறுப்புப் பேச்சு பற்றிய அறிக்கைகளில் குறிப்பிடத்தக்க சரிவு காணப்படுகின்றது. | |



# முக்கிய பரிந்துரைகள்

## மதத் தலைவர்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மத அடிப்படையிலான அமைப்பு

1. சமூகத்திற்குள் மத போதகர்கள் மற்றும் ஆசிரியர்களின் பிளவுபடுத்தும் மற்றும் தீங்கு விளைவிக்கும் சொல்லாட்சிகளைச் சவால் செய்யவும், மற்றும் மதத்தைப் பின்பற்றுபவர்களிடம் அத்தகைய நடைமுறைகளுக்கு எதிராகப் பேச வாய்ப்புகளைத் தேடவும். (அனைத்து நம்பிக்கைகள்)

    - ஏனைய மதங்களைக் குறிவைத்து கருத்துக்களைப் பரப்பும் அல்லது பாகுபாடு அல்லது வன்முறையை ஊக்குவிக்கும் கடும்போக்குவாத மதக் குழுக்களுக்கு எதிராக முற்றிலும் சகிப்புத்தன்மையற்ற நிலைப்பாட்டை எடுக்கவும். (அனைத்து நம்பிக்கைகள்)

2. சிறிய குழுக்கள் மற்றும் புதிய இயக்கங்கள் உட்பட, ஒரு மதத்தைப் பின்பற்றுவதற்கான பல்வேறு வழிகளை சமூகத்தில் ஏற்றுக்கொள்ள ஊக்குவிக்கவும். மதம் மாறும் மக்களுக்கு மரியாதை, அவ்வாறு செய்வதற்கான அவர்களின் உரிமை மற்றும் கலாசாரத்தை மதிக்கும் வகையில் மதக் குழுக்கள் தங்கள் நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொள்வதற்கான ஆதரவை வழங்கவும். (அனைத்து நம்பிக்கைகள்)

3. ஒலி மற்றும் ஒலிபெருக்கிகளின் பயன்பாடு குறித்த விதிமுறைகளை மதிக்கும் கலாசார மற்றும் சுற்றுச்சூழல் உணர்திறன் கொண்ட வழிபாட்டு நடைமுறைகளை ஊக்குவிக்கவும். (அனைத்து நம்பிக்கைகள்)

4. கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ சமூகங்களுக்குள் சுவிசேஷ மற்றும் பிரதான தேவாலயங்களுக்கு இடையிலான மோதல்களைத் தீர்ப்பதற்கும் மரியாதை மற்றும் புரிதலை வளர்ப்பதற்கும் முயற்சிகளை ஊக்குவிக்கவும். (பரந்த கத்தோலிக்க/கிறிஸ்தவ சமூகம்)

5. சுயாதீன சபைகள் குறிவைக்கப்படுவதற்கான உண்மையான மற்றும் உணரப்பட்ட நோக்கங்களைப் புரிந்துகொள்ள ஆய்வை நடத்தவும் மற்றும் சுவிசேஷ சமூகத்திற்கு எதிரான தாக்குதல்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் போதகர்கள் மற்றும் சபையினரின் நடைமுறைகள் மற்றும் நடத்தைகளை மதிப்பாய்வு செய்யவும். (சுவிசேஷ சமூகம்)

6. உள்ளூர் கலாசாரத்தை மதிக்கும் வழிபாட்டைப் பயிற்சி செய்ய சுவிசேஷ போதகர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கவும். சமூகம் ஏற்றுக்கொள்ளும் பகுதிகளில் தேவாலயங்களை அமைப்பதை ஊக்குவிக்கவும், அவர்களின் மதத்தைப் பரப்புவதற்குத் தெளிவான வரம்புகளை நிர்ணயிக்கவும். (சுவிசேஷ சமூகம்)

### சர்வதேச சமூகம்

7. இனம் அல்லது மதத்தை அடிப்படையாகக் கொண்ட தீங்கு விளைவிக்கும் மற்றும் பிளவுபடுத்தும் கருத்துக்களை சவால் செய்ய, தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்கள் உட்பட அரசியல், சமூக மற்றும் மதத் தலைவர்களுடன் பேசுவதற்கான வாய்ப்புகளைப் பெறவும்.

8. உள்ளூர் சமூகங்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்தும் மற்றும் உள்ளூர் ஆர்வலர்களை ஆபத்தில் ஆழ்த்தும் தீங்கு விளைவிக்கும் செய்திகள் மற்றும் செயல்களை நிவர்த்தி செய்ய வெளிநாடுகளில் உள்ள முஸ்லிம் மற்றும் தமிழ் குழுக்கள் உட்பட புலம்பெயர் சமூகங்களுடன் ஈடுபடவும்.

### அரசாங்கம்

9. தொல்பொருள் திணைக்களம் எவ்வாறு நிதி பெறுகின்றது என்பதைச் சரிபார்த்து, செயல்முறையைத் தெளிவாகவும் நியாயமாகவும் ஆக்கவும். அரசியலால் அது பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளவும். முக்கியமான தொல்பொருள் தளங்கள் புறக்கணிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய நிதி செயல்முறைகளை நெறிப்படுத்தவும். நிதி எவ்வாறு வழங்கப்படுகின்றது மற்றும் பயன்படுத்தப்படுகின்றது என்பதை மதிப்பாய்வு செய்ய சுயாதீன நிபுணர் ஒருவரை நியமிப்பதைப் பற்றி பரிசீலிக்கவும். (புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு / தொல்பொருள் திணைக்களம்)

10. சிறுபான்மை சமூகங்களுடன் தொடர்புடைய பாரம்பரிய தளங்களை நிர்வகிப்பது குறித்த பேச்சுவார்த்தைகள் மற்றும் முடிவுகளில் சிறுபான்மை சமூகங்களின் நிபுணர்களைச் சேர்க்கவும். (புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு / தொல்பொருள் திணைக்களம்)

11. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் மாணவர்கள் போன்ற உள்ளூர் நிபுணர்களை ஈடுபடுத்தவும். (புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு / தொல்பொருள் திணைக்களம்)

12. சிறிய பிரிவுகள் உட்பட அனைத்து மதக் குழுக்களின் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றி, புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு மற்றும் அதன் மதத் திணைக்களங்களில் மாற்றங்களைச் செய்து, இந்தச் சிறிய குழுக்களின், குறிப்பாக பாகுபாட்டை எதிர்கொள்ளும் கவலைகளை அங்கீகரித்து நிவர்த்தி செய்யவும். (புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு)

13. 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து முஸ்லிம் சமூகத்தின் மீது விதிக்கப்பட்ட, இறக்குமதி செய்யப்படும் இஸ்லாமிய இலக்கியங்கள் மீதான விகிதாசாரமற்ற சிக்கலான சரிபார்ப்பு செயல்முறை உட்பட, கட்டுப்பாடுகளை மதிப்பாய்வு செய்து நிவர்த்தி செய்யவும். (புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு /முஸ்லிம் மத மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்)

14. வழிபாட்டுத் தலங்களைப் பதிவு செய்வது தொடர்பான விதிமுறைகளின் தேவை மற்றும் அவசியத்தை மறுபரிசீலனை செய்யவும்.

- எந்தவொரு புதிய நடவடிக்கைகளும் மதக் குழுக்களின் உள்ளீடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக பதிவு விதிகளால் பெரும்பாலும் நியாயமற்ற முறையில் குறிவைக்கப்படுபவர்களின் கருத்துகளைப் பெற வேண்டும்.
- விதிகள் தெளிவாகவும், சீரானதாகவும், மதம் அல்லது வழிபாட்டுத் தலத்தின் நிலையைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் சமமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.
- அறிமுகப்படுத்தப்பட்டால், விதிமுறைகள் புரிந்துகொள்ள எளிதாகவும், பொதுவில் பகிரப்படவும், மக்கள் அவற்றைப் பின்பற்ற போதுமான நேரத்தை வழங்கவும் வேண்டும். (புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு)

15. FoRB குறித்த SLHRC இன் பரிந்துரைகளுக்குத் தேவையான ஒப்புதலையும் ஆதரவையும் வழங்குவதுடன், அரச அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கவும்.

- ICCPR ஐப் பயன்படுத்துவதில் SLHRC ஆல் வகுக்கப்பட்ட பரிந்துரைகளை மறுபரிசீலனை செய்தல், காவல்துறை அதிகாரிகள் பொருத்தமான சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு போதுமான அறிவு மற்றும் திறன்களைக் கொண்டுள்ளனர் என்பதை உறுதி செய்தல். (இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு)

16. சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டிற்கு இணங்க, சட்ட அமுலாக்க அதிகாரிகள் பாரபட்சமற்ற மற்றும் பாகுபாடற்ற முறையில் வகுப்புவாதத் தகராறுகளைத் தீர்ப்பதை உறுதி செய்ய வேண்டும். இதில் சர்ச்சைக்குரிய பாரம்பரிய தளங்கள் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகளைச் சமமாகவும் பாகுபாடற்றதாகவும் பயன்படுத்துவது அடங்கும். (பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு)

## சிவில் சமூகம்

17. மத சுதந்திரத்தைப் பாதுகாக்கும் சர்வதேச மற்றும் உள்ளூர் சட்டங்கள் குறித்த பயிற்சி, குறிப்பாக நம்பிக்கைகளைப் பகிர்தல், மதம் மாறுதல், மதத்தைப் பின்பற்றுதல் மற்றும் பகிரப்பட்ட இடங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் மதச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பயிற்சியை மதங்களுக்கு இடையேயான சகவாழ்வுத் திட்டங்கள் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

18. வடக்கு மற்றும் கிழக்கில் மட்டுமல்ல, நாடு முழுவதும் சர்ச்சைக்குரிய மதத் தளங்களைச் சுற்றியுள்ள பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள ஆராய்ச்சியைத் தொடங்கவும்.

19. இந்துத்துவா சார்ந்த குழுக்களுக்கும் சுவிசேஷ கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான பதட்டங்கள் தொடர்பான சம்பவங்கள் பரிந்துரைக்கும் பகுதிகளை மலையகத்தில் ஆராயவும். மேலும், முக்கிய பிரச்சினைகளை அடையாளம் காண, சுவிசேஷகர்களுக்கும் உள்ளூர் சமூகங்களுக்கும் இடையிலான மோதல்கள் அதிகமாகக் காணப்படும் (தெற்கு உட்பட) பகுதிகளையும் ஆய்வு செய்யவும்.

20. இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தால் உருவாக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் உட்பட, இன மதக் குழுக்கள் பற்றிய செய்திகளை வெளியிடுவது தொடர்பில் ஏற்கனவே உள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் இலக்கியங்கள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் கொண்டு செல்வதைக் கருத்தில் கொள்ளவும். இது செய்திகளை பொறுப்புடன் நுகர்வதை ஊக்குவிக்கவும், பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு போன்ற நிறுவனங்களுடன் ஈடுபடவும், பொறுப்பற்ற மற்றும் தீங்கு விளைவிக்கும் செய்திகளைத் தடுக்கவும் உதவும்.



# பின்னிணைப்பு 1

RTI 04

## Decision to Provide Information

Registration Number of the Request – ARCH/INFO/281
Date Request Received – 15th November 2024
Name of the Public Authority – Ms. jovita Arulanantham

1. This is to inform you that in accordance with section 25 (1) of the act we have decide to provide you with the information/part of the information requested by you through application dated **15th November 2024** with the registration number of **ARCH/INFO/281** (in case if the decision is to provide only part of the information, The information should clarified the reasons in detail and under which clause/s of the section 5 the exception was made)

   **I am kindly submitting herewith the information sent by the Excavation Division of the Department of Archaeology. I will send if I get any other information as soon as I receive them.**

2. ~~We have decided to withhold the following parts of the requested information because they are considered as exempted information under the section 5 (………………) of the RTI act due to the detailed reasons given below …………………………………………………………………~~

3. In order to provide the Information please pay the necessary fee of **Rs. 00.00** by cash, bank draft or pay order or postal order or postage stamps to our office.

4. We will provide you with the information within 14 days of payment of the required fee. We will also inform you within the same period (with reasons) if there is any extension needed to the time period in which to provide the information.

5. If you have not satisfied with the time frame mention in the section 04 you may submit and appeal to the designated officer within two weeks by RTI 10 form. Name and address of the designated officer is given below.

Designated Officer

Name – [redacted]
Designation – [redacted]
Address – [redacted]
Contact details – [redacted]

Date- 2024/12/12

Yours,
Faithfully,

……………………………………
Information Officer
(Sign, Name & Designation)

[redacted]
Acting Director (Promotions)
Department of Archaeology
Sir Marcus Fernando Mawatha,
Colombo - 07.

RTI 04

## தகவல் வழங்குவதற்கான தீர்மானம்

கோரிக்கையின் பதிவு இலக்கம் - ARCH/INFO/281
கோரிக்கை கிடைத்த திகதி - நவம்பர் 15, 2024
பகிரங்க அதிகாரசபையின் பெயர் - ஜோவிடா அருளானந்தம்

1. தங்களின் **நவம்பர் 15, 2024** திகதியிடப்பட்ட **ARCH/INFO/281** ஆம் பதிவிலக்கத்தைக் கொண்ட விண்ணப்பத்தின் மூலம் சட்டத்தின் பிரிவு 25(1) இற்கு இணங்க கோரப்பட்ட தகவலை/தகவலின் ஒரு பகுதியை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம் (தகவலின் ஒரு பகுதியை மாத்திரம் வழங்குவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பின், அதற்கான காரணங்களை விபரமாகவும் பிரிவு 5 இன் எந்த வாசகத்தின்/வாசகங்களின் கீழ் விதிவிலக்கு மேற்கொள்ளப்பட்டது என்பதையும் விளக்குதல் வேண்டும்).

   தொல்பொருள் திணைக்களத்தின் அகழ்வு பிரிவு அனுப்பிய தகவல்களை நான் இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். வேறு ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் அவற்றையும் உடனடியாக அனுப்பி வைப்பேன்.

2. ~~கீழே விபரிக்கப்பட்ட காரணங்களினால், சுவுஜ சட்டத்தின் பிரிவு 5(......) இன் கீழ் தகவலின் பின்வரும் பகுதிகள் விலக்களிக்கப்பட்டவையாகக் கருதப்படுவதால் அவற்றை வழங்காமல் இருப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்:..................................~~

3. தகவல்களை வழங்குவதற்காக அதற்கு அவசியமான கட்டணம் **ரூபா.00.00**வை காசாக, வங்கி உண்டியலாக அல்லது கொடுப்பனவுக் கட்டளையாக அல்லது தபால் கட்டளையாக அல்லது தபால் முத்திரையாக எமது அலுவலகத்தில் செலுத்தவும்.

4. கோரப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி 14 நாட்களுக்குள் தகவல்களை நாம் வழங்குவோம். தகவலை வழங்குவதற்கான காலப்பகுதிக்கு ஏதேனும் நீடிப்பு தேவைப்படின், அதையும் அதே காலப்பகுதியினுள் நாம் (காரணங்களுடன்) தெரிவிப்போம்.

5. 4 ஆவது பந்தியில் குறிப்பிட்டவாறு தேவையான தகவல்கள் உங்களுக்குக் கிடைக்காவிடின் அந்தக் காலம் முடிவடைந்து இரண்டு வாரங்களுக்குள் உங்களுக்குக் கீழ் குறிப்பிட்ட பெயர் விலாசமுடைய அலுவலரிற்கு சுவுஜ 10 விண்ணப்பப்படிவத்தின் மூலம் அல்லது கடிதத்தின் மூலம் மேன்முறையீடு செய்யலாம் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நியமிக்கப்பட்ட அலுவலர்

பெயர் -
பதவி -
முகவரி -

தொடர்புகொள்ளுவதற்கான விபரங்கள் -

திகதி

தங்கள் உண்மையுள்ள,

தகவல் அலுவலர்,
(ஒப்பம், பெயரும் பதவியும்)

24/3112

File No: D.Arch/HO/Exc/06/07
Assistant Director (Excavation)

2024.12.03

04/DEC 2024

Director (Promotion)

**Providing information under 24(3) of the Right to Information Act No. 12 of 2016**

The letterNo ARCH/INFO/281, dated 15.11.2024requested information about the excavation activities requested by the applicant under No. 5 is attached to this letter.

**As a government department, the Department of Archaeology of Sri Lanka does not carry out excavation work based on religion, ethnicity or other specialities, and only archaeological heritage sites are subjected to excavation work.**

Section 11 of Amendment No. 24 of 1998 relating to the Antiquities Act, of 1940 defines it as follows:

> *"Archaeological heritage" means that part of the material heritage of mankind in respect of which archaeological methods provide primary information and includes all vestiges of human existence and places relating to all manifestations of human activity abandoned structures and remains of all kinds (including subterranean and underwater sites), together with all the portable cultural material associated with them:..."*

Considering the number of archaeological heritage sites in Sri Lanka, the amount allocated annually to the Sri Lanka Department of Archaeology is not sufficient for the necessary excavations. As a result, excavations are carried out by the Sri Lanka Department of Archaeology with external provisions, and the majority of the excavations indicated in this list were accomplished in this manner.

I am kindly informed that if any party needs to carry out excavations in archaeological heritage sites on external provision, after a field test, the relevant estimates will be given to the concerned party and the relevant excavation work will be carried out according to regulations of the Department of Archaeology.

கோப்பு இல.: D.Arch/HO/EXC/06/07
உதவிப் பணிப்பாளர் (அகழ்வு)
2024.12.03

**<u>2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இல. தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 24(3) இன் கீழ் தகவல் வழங்குதல்</u>**

15.11.2024 திகதியிடப்பட்ட ARCH/INFO/281 இலக்கக் கடிதத்தில் இல. 5 இன் கீழ் விண்ணப்பதாரரினால் கோரப்பட்ட அகழ்வுப் பணிகள் தொடர்பான தகவல்கள் இந்தக் கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

**அரச திணைக்களம் என்ற வகையில், இலங்கை தொல்பொருள் திணைக்களம் அகழ்வுப் பணிகளை மதம், இனம் அல்லது வேறு சிறப்புகளை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுப்பதில்லை என்பதுடன் தொல்பொருள் மரபுரிமை தளங்கள் மட்டுமே அகழ்வுப் பணிகளுக்கு உட்படுத்தப்படும்.**

1940 ஆம் ஆண்டின் தொல்பொருள் சட்டம் தொடர்பான 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இல. திருத்தத்தின் பிரிவு 11 பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

> *"புதைபொருளியல் பாரம்பரியம்" என்பது மனிதவர்க்கத்தின் திட மரபுச் சொத்தின் எப்பாகம் தொடர்பாக புதைபொருளியல் வழிமுறைகள் பூர்விக தகவல்களைக் கொடுக்கின்றதோ அப்பாகம் எனப் பொருளாவதுடன், மனிதன் உயிர் வாழ்ந்தமைக்கான சகல தடயங்களையும் எல்லா மனித செயற்பாட்டையும் வெளிப்படுத்துவது தொடர்பான இடங்களையும் கைவிடப்பட்ட கட்டமைப்புகளையும் (நிலத்துக்குக் கீழான மற்றும் அடி நீர்ப்பரப்பு அமைவிடங்கள் உட்பட) எல்லா வகையான எஞ்சு பொருட்களையும் அவற்றோடு உறவுபட்ட காலத்தகு கலாசாரப் பொருள்கள் எல்லாவற்றுடனும் சேர்ந்த பொருட்கள் யாவற்றையும் உள்ளடக்கும்..."*

இலங்கையிலுள்ள தொல்பொருள் மரபுரிமை தளங்களின் எண்ணிக்கையைக் கருத்தில்கொள்ளும்போது, இலங்கை தொல்பொருள் திணைக்களத்திற்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதி தேவையான அகழ்வுப் பணிகளுக்குப் போதுமானதாக இல்லை. இதன் விளைவாக, வெளிப்புற நிதியுதவிகளுடன் இலங்கை தொல்பொருள் திணைக்களம் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கின்றது. அத்துடன் இந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அகழ்வுகளில் பெரும்பாலானவை அவ்வாறான முறையிலேயே நிறைவேற்றப்பட்டுள்ளன.

தொல்பொருள் மரபுரிமை தளங்களில் வெளிப்புற நிதியுதவியுடன் அகழ்வுகளை முன்னெடுக்க ஏதேனும் தரப்பு விரும்பினால், கள சோதனைக்குப் பின்னர் பொருத்தமான மதிப்பீடுகள் சம்பந்தப்பட்ட தரப்பிடம் வழங்கப்படும். அத்துடன் தொடர்புடைய அகழ்வுப் பணி தொல்பொருள் திணைக்களத்தின் விதிமுறைகளுக்கு அமைய முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உதவிப் பணிப்பாளர் (அகழ்வு)

## 2023 - Excavation List

| | Name of the Project | Provision Type | District | Province | Excavation Period |
|---|---|---|---|---|---|
| 01 | Pabbatharama Sapumalgaskada Excavation , East Enrance | External Provision | Wauniya | North | |
| 02 | Excavation of Stupa & Maluwa of Dathusena R.M.V | | Kurunegala | North West | |
| 03 | Rajanganaya - No 06 Sudarshana Stupa Excavation | External Provision | Anuradhapura | North Central | |
| 04 | Kegalle Rockhill Test Excavation | External Provision | Kegalle | Sabaragamuw a | |
| 05 | Papiliyana Sunethradevi Purana Viharaya Excavation | External Provision | Colombo | Western | April - May |
| 06 | Samangala Stupa Excavation | External Provision | Ampara | East | February - December |
| 07 | Deegavapiya Stupa Excavation | External Provision | Ampara | East | October - December |
| 08 | Dehiwatta Mandalagiri Vihara Stupa | External Provision | Trincomalee | East | October - December |
| 09 | Happoruwa Raja Maha Viharaya Stupa Excavation | External Provision | Monaragala | Uva | |
| 10 | Mihinthale Anulathisa Stupa Excavation | External Provision | Anuradhapura | North Central | |
| 11 | Sapumalgaskada pabbatharamaya Excavation | External Provision | Wauniya | North | |
| 12 | Kuragala Research Excavation | Department Provision | Rathnapura | Sabaragamuva | |
| 13 | Mahagal Kanda Old Road Excavation | Department Provision | Western | Kaluthara | |

## 2023 - அகழ்வு பட்டியல்

| | திட்டத்தின் பெயர் | நிதியின் வகை | மாவட்டம் | மாகாணம் | அகழ்வு காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | பபதராம சப்புமல்கஸ்கட அகழ்வு, கிழக்கு வாசல் | வெளிப்புற நிதி | வவுனியா | வடக்கு | |
| 02 | தாதுசேன R.M.V தூபி மற்றும் முற்றத்தின் அகழ்வு | | குருநாகல் | வட மேல் | |
| 03 | ராஜாங்கனை - இல. 6 சுதர்ஷன தூபி அகழ்வு | வெளிப்புற நிதி | அனுராதபுரம் | வட மத்தி | |
| 04 | கேகாலை ராக்ஹில் சோதனை அகழ்வு | வெளிப்புற நிதி | கேகாலை | சப்ரகமுவ | |
| 05 | பப்பிலியா சுனேத்திராதேவி புரான விகாரை அகழ்வு | வெளிப்புற நிதி | கொழும்பு | மேல் | ஏப்ரல் - மே |
| 06 | சுமங்களா தூபி அகழ்வு | வெளிப்புற நிதி | அம்பாறை | கிழக்கு | பெப்ரவரி - டிசம்பர் |
| 07 | தீகவாபி தூபி அகழ்வு | வெளிப்புற நிதி | அம்பாறை | கிழக்கு | அக்டோபர் - டிசம்பர் |
| 08 | தெஹிவட்ட மண்டலகிரி விகாரை தூபி | வெளிப்புற நிதி | திருகோணமலை | கிழக்கு | அக்டோபர் - டிசம்பர் |
| 09 | ஹப்பொருவ ரஜ மகா விகாரை தூபி அகழ்வு | வெளிப்புற நிதி | மொனராகலை | ஊவா | |
| 10 | மிகிந்தலை அனுலாதிஸ்ஸ தூபி அகழ்வு | வெளிப்புற நிதி | அனுராதபுரம் | வட மத்தி | |
| 11 | சப்புமல்கஸ்கட பபதராமய அகழ்வு | வெளிப்புற நிதி | வவுனியா | வடக்கு | |
| 12 | குருநாகல் ஆராய்ச்சி ஆய்வு | திணைக்கள நிதி | இரத்தினபுரி | சப்ரகமுவ | |
| 13 | மகாகல் கந்த பழைய வீதி அகழ்வு | திணைக்கள நிதி | மேல் | களுத்துறை | |

## 2024 - Excavation List

| | Name of the Project | Provision Type | District | Province | Excavation Period |
|---|---|---|---|---|---|
| 01 | Bandarawela Pre Historic Sites Excavation | External Provision | Badulla | Uva | January - December |
| 02 | Nagadeepa, Image House Excavation | External Provision | Badulla | Uva | January - December |
| 03 | Weerakatiya Ovagiriya Rajamaha Viharaya ruins | External Provision | Hambanthota | South | January - December |
| 04 | Dambulla, Eraulla, AIA | External Provision | Matale | Central | February - March |
| 05 | Dedarangamuwa Old Ruins | Department Provision | Rathnapura | Sabaragamuva | January-May |
| 06 | Seethawaka Rajasinghe Palace & Datch Foteress | Department Provision | Kegalle | Sabaragamuwa | January-November |
| 07 | Deegavapiya Oluwill road Excavation | Department Provision | Ampara | East | February - April |
| 08 | Alankulama Test Excavation | Department Provision | Ampara | East | February - December |
| 09 | Excavaton Of Deegawapiya Stupa Maluwa | Department Provision | Ampara | East | March - December |
| 10 | Colombo fort Baternburg Rampart | External Provision | Colombo | West | June - June |
| 11 | Samangala Stupa Maluwa Excavation | External Provision | Ampara | East | |
| 12 | Vessagiriya Archaeological Site | Department Provision | Anuradhapura | North Central | October - November |
| 13 | Public toilet Complex - AIA | External Provision | Galle/Matara | | |
| 14 | Rockhillwatta, Private land (AIA) Excavation | External Provision | Kegalle | Sabaragamuwa | August - December |
| 15 | Galewala Pathkolagolla Stupa Excavation | External Provision | Matale | Central | |
| 16 | Asha Mineral Test Excavation | External Provision | Kurunagala | North West | |
| 17 | Punchi Halmillawa Kirimatiyava Excavation | Department Provision | Anuradhapura | North Central | |

## 2024 - அகழ்வு பட்டியல்

| | திட்டத்தின் பெயர் | நிதியின் வகை | மாவட்டம் | மாகா ணம் | அகழ்வு காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | பண்டாரவளை வரலாற்றுக்கு முந்தைய தளங்களின் அகழ்வு | வெளிப்புற நிதி | பதுளை | ஊவா | ஜனவரி - டிசம்பர் |
| 02 | நாகதீப, சிலை அறை அகழ்வு | வெளிப்புற நிதி | பதுளை | ஊவா | ஜனவரி - டிசம்பர் |
| 03 | வீரகத்தி ஓவகிரிய ரஜமகா விகாரை எச்சங்கள் | வெளிப்புற நிதி | அம்பாந்தோட்டை | தென் | ஜனவரி - டிசம்பர் |
| 04 | தம்புள்ளை, எரவுல்லா, AIA | வெளிப்புற நிதி | மாத்தளை | மத்தி | பெப்ரவரி - மார்ச் |
| 05 | தெதரங்கமுவ பழைய எச்சங்கள் | திணைக்கள நிதி | இரத்தினபுரி | சப்ரகமுவ | ஜனவரி - மே |
| 06 | சீதாவாக்கை ராஜசிங்க மாளிகை மற்றும் டச்சு கோட்டை | திணைக்கள நிதி | கேகாலை | சப்ரகமுவ | ஜனவரி - நவம்பர் |
| 07 | தீகவாபி ஒலுவில் வீதி அகழ்வு | திணைக்கள நிதி | அம்பாறை | கிழக்கு | பெப்ரவரி - ஏப்ரல் |
| 08 | ஆலங்குளம் சோதனை அகழ்வு | திணைக்கள நிதி | அம்பாறை | கிழக்கு | பெப்ரவரி - டிசம்பர் |
| 09 | தீகவாபி தூபி மற்றும் முற்றம் அகழ்வு | திணைக்கள நிதி | அம்பாறை | கிழக்கு | பெப்ரவரி - டிசம்பர் |
| 10 | கொழும்பு கோட்டை பட்டர்ன்பேர்க் கோட்டை | வெளிப்புற நிதி | கொழும்பு | மேல் | ஜுன் - ஜுன் |
| 11 | சமனகல தூபி முற்றம் அகழ்வு | வெளிப்புற நிதி | அம்பாறை | கிழக்கு | |
| 12 | வெஸ்ஸகிரிய தொல்பொருள் தளம் | திணைக்கள நிதி | அனுராதபுரம் | வட மத்தி | அக்டோபர் - நவம்பர் |
| 13 | பொதுக் கழிப்பறை வளாகம் - AIA | வெளிப்புற நிதி | காலி/மாத்தறை | | |
| 14 | ராக்ஹில்வத்தை, தனியார் காணி (AIA) அகழ்வு | வெளிப்புற நிதி | கேகாலை | சப்ரகமுவ | ஆகஸ்ட் - டிசம்பர் |
| 15 | கலேவெல பத்கொலகொல்லா தூபி அகழ்வு | வெளிப்புற நிதி | மாத்தளை | மத்தி | |
| 16 | ஆஷா கனிம சோதனை அகழ்வு | வெளிப்புற நிதி | குருநாகல் | வட மேல் | |
| 17 | புஞ்சி ஹிமிலாவ கிரிமத்தியாவ அகழ்வு | திணைக்கள நிதி | அனுராதபுரம் | வட மத்தி | |